# எங்கும்நிறை பொற்சுடரே

உமா பாலகுமார்



★ எங்கும்நிறை பொற்சுடரே ★ உமா பாலகுமார் ★

எங்கும்நிறை பொற்சுடரே

உமா பாலகுமார்



Ph: 2797708
தேவகி [illegible]
514, 515, [illegible]
[illegible]
திருச்சி - 620 002.
விற்பனை செய்தவை மாற்ற இயலாது

# எங்கும்நிறை பொற்சுடரே!

உமா பாலகுமார்

அருண் பதிப்பகம்
107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : எங்கும்நிறை பொற்சுடரே! |
| ஆசிரியர் | : உமா பாலகுமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஜூலை, 2008 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 240 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருண் பதிப்பகம்<br>107/8, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்<br>சென்னை-14. ✆:28480166 |


# எங்கும்நிறை பொற்சுடரே!

# எங்கும்நிறை பொற்சுடரே!

## 1

அந்த விடியலில்... பனிச்சால் வையை, பூமிப் பெண்ணின் மேல் காதலுடன் போர்த்தி, குளிரச் செய்து கொண்டிருந்தது வானம்!

சாமுத்ரிகா லட்சணம் பொருந்திய பெண்ணின் அழகிய இடையைப் போல், வளைவுப் பாதைகளோடு தெரிந்த அந்த மலைப் பாதையில், ஊட்டி ரயில் மெதுவாக ஊர்ந்து செல்ல ஆரம்பித்தது.

மலை மகள், மொத்த அழகையும், ரம்யத்தையும் தன் மடியில் சுமந்து, அவர்களை மதி மயங்கச் செய்து கொண் டிருந்தாள்.

சுற்றுப்புறத்தின் பசுமை அழகும், தேகம் தீண்டிச் செல்லும் மெல்லிய பனி படர்ந்த குளிர்ச்சியும், சிவாத்மி காவை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தின.

ஆனாலும் மனதோரம் சிறு நெருடலாய் சுந்தரின் நினைவு!

உடனே அவள் முகம் சுருங்கிவிட, "என்னாச்சு சிவி! திடீர்னு டல்லாயிட்டே?" அத்தை உஷாதான் வினவினார்.

"ஒண்ணுமில்லைத்தை... ஏதோ பழைய ஞாபகங்கள்!" ஒரு பெருமூச்சுடன் கூறினாள்.

"எனக்கும் புரியுது. காலேஜில இந்த வருஷம்தானே கடைசி வருஷம்! மூணு வருஷமாப் பழகின நண்பர் களைப் பிரியறதுன்னா சும்மாவா? ரொம்பக் கஷ்டம்தான்! அதை, நானும் ஒரு காலத்துல அனுபவிச்சிருக்கேன்!"

சிறு ஏக்க முறுவலுடன் பகர்ந்தவரையே பார்த்த வளுக்குள், செல்லக் கிசுகிசுப்பாய் சுந்தரின் நினைவு!

அவனும் இப்படித்தானே அவளுடைய உணர்வுகளை எளிதாகப் புரிந்து பழகுவான்!

முதலில் நல்ல நண்பனாக இருந்து இப்போது முதல் காதலை அவள் மனதிற்குள் அறிமுகம் செய்திருப்பவன் அவன்.

கல்லூரியில் அவளுக்கு சீனியர்... அவள் பி.எஸ்ஸி யில் சேரும்போது அவன் எம்.காம். முதல் வருடத்திலிருந் தான்.

இப்போது படிப்பு முடிந்து ஒரு வருடமாக வேலை தேடிக் கொண்டிருக்கிறான்.

எந்த வேலையும் அவனுடைய புத்திசாலித் தனத்திற்கு தீனி போடுவதாக இல்லை... அதனால் கிடைத்த வேலையி லிருந்து மாறிக் கொண்டே இருப்பான்.

அவள்தான் அவனுக்காக மிகவும் பரிதாபப்படுவாள்... அவன் பி.காம்., எம்.காம் இரண்டு பட்டப் படிப்பிலுமே கோல்ட் மெடல் வாங்கியவன்!



ஆனால் வாழ்க்கையின் எதார்த்தத்தை உணர மறுக் கிறானோ என்று கூட சில சமயங்களில் அவளுக்குத் தோன்றும்.

ஒரு பெருமூச்சுடன் ஜன்னல் புறம் அவள் திரும்ப, அத்தை மகன் அருணுடைய குரல் அவளைக் கலைத்தது.

"ஏன் சிவிக்கா! சினிமாவிலெல்லாம் காமிக்கற மாதிரி காலேஜுன்னா ரொம்ப ஜாலியா இருக்குமா? டெய்லி ஒரே டான்ஸும் கூத்தும்தானா? படிக்கவே மாட்டீங்களா?" ஆவலுடன் கேட்டான்.

உடனே அவனுடைய சிகையை செல்லமாகக் கலைத்து விட்டவள், "அதெல்லாம் இல்லை... அங் கேயும் படிக்கணும் ஃப்ரீ அவர்லே வேணா மரத்தடியில் உக்காந்து அரட்டை அடிக்கலாம்! எப்பவுமே சினிமாவில காட்டறதெல்லாம் நிஜத்திலே சாத்தியமில்லே அருண்!

"டெய்லி லைஃப்லே நாம எல்லாரும் மரத்தை சுத்தி சுத்தி ஓடி டூயட் பாடிட்டிருக்கோமா என்ன... ம்...?" வாஞ்சையுடன் வினவினாள்.

"இல்லை..!" குழப்பத்துடன் மொழிந்தவனை அணைத்துக் கொண்டாள் அவள்.

"அதே மாதிரித் தான்டா! இண்டர் டிபார்ட்மெண்ட் காலேஜ் ஃபங்ஷன் இண்டர் காலேஜ் ஃபெஸ்டிவல் அப்ப, நீ கேட்ட மாதிரி ஒரே கோலாகலமா இருக்கும்! நீயும் காலேஜ் போவே இல்லை... அப்போ தெரிஞ்சுப்பே!"

யோசனையுடன் திரும்பி வெளிப்புற இயற்கைக் காட் சியை ரசிக்கத் துவங்கிய அருணுக்கு பதிமூன்று வயது!

அவர்கள் மூவரும் விடுமுறைக்கு தாத்தாவின் எஸ் டேட்டிற்கு சென்று கொண்டிருக்கின்றனர்.

* * *

அவளுடைய தாத்தா வேதநாயகத்திற்கு மூன்று பிள்ளைகள்!

மூத்தவர் சிவகடாட்சம் சென்னையில் பொதுப்பணித் துறையில் உயர் அதிகாரியாகப் பணிபுரிகிறார்.

அவருடைய ஒரே மகள்தான் சிவாத்மிகா... அந்தக் குடும்பத்திற்கு ஒரே பெண் வாரிசு என்பதால் மிகவும் செல்லம்!

இரண்டாவது மகன் சிவமுருகன்.. அவர் தந்தையுடனே எஸ்டேட்டில் தங்கியிருந்து காபி, தேயிலைத் தோட்டங்களை நிர்வகிப்பவர்!

அவருக்கு சுஜய் என்று ஒரே மகன்.

மூன்றாவது பெண் உஷா! அவரும் சென்னையில் தான் இருக்கிறார்...

அவருடைய கணவர் நாராயணன் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வருகிறார். அவர்களின் ஒரே மகன்தான் அருண்!

தாத்தா, பாட்டி, சித்தப்பா என்று குடும்பத்தினரைப் பார்க்கப் போகின்ற மகிழ்ச்சி இருவர் முகத்திலும் உயிரோட்டமாய் கசிய, தேவதை போல் அமர்ந்திருந்தவளை வாஞ்சையுடன் ரசித்தாள் உஷா.

அழகிய மலர் போன்ற முகத்தில் கருவண்டுகளாய் இரு விழிகள் துறுதுறுக்க, தோள் வரை விரிந்த கூந்தலும், குழிந்த கன்னங்களுமாய் தந்தச் சிற்பம் போல் இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தாள் அவள்.

திடீரென்று திரும்பியவள், "என்னத்தை? என்னையே இப்படி உத்துப் பாத்துட்டிருக்கீங்க?" ஆர்வமாகக் கேட்டாள்.



"ம்! எங்க வீட்டு ராஜகுமாரியை... எங்க குடும்பத்து அழகு தேவதையை நான் ரசிக்க யாரைக் கேக்கணும்? இந்த செல்லத்தை யார் வந்து குதிரையில தூக்கிட்டுப் போகப் போறாங்களோன்னு யோசிச்சிட்டிருந்தேன்."

"போதும்ப்பா, உங்க தேவதை புராணம்! ஏற்கெனவே ரொம்ப 'சில்லு'ன்னு இருக்கு கிளைமேட்... எனக்கு கோல்ட் பிடிச்சிக்கப் போகுது!"

சலுகையாகச் சிணுங்கியபடி யோசித்தபோது, சுந்தரின் உருவம் குதிரையில் வர, சற்றும் பொருந்தாமலிருந்த அந்தத் தோற்றம் சட்டென்று புன்னகையை வரவழைப்பதாய்!

"என்ன சிவி? திடீர்னு உனக்குள்ளே சிரிச்சிக்கிறே? உன்னோட ராஜகுமாரனை நினைச்சா?

"யாரையாவது லவ் பண்றியா சிவிம்மா..."

அவளையே பார்த்தபடி குறும்புடன் அவர் கேட்க விதிர்த்துப் போய் நிமிர்ந்தவள், பதட்டத்துடன் "இல்லை," என்று தலையசைத்தாள்.

## 2



ரயிலிலிருந்து இறங்கியபோது, சிவமுருகனும், டிரைவர் சாமிநாதனும் அவர்களை ஆவலுடன் வரவேற்றனர்.

சூட்கேஸ்களையும் 'ஏர்பேக்'களையும் இருவரும் எடுத்துக் கொள்ள, பரஸ்பரம் நல விசாரிப்பிற்குப் பிறகு, சாமிநாதன் தான் அவளைக் கேலி செய்தார்.

"என்ன பாப்பா? கூடிய சீக்கிரமே கல்யாண சாப்பாடு தானா?"

அவர் ஆர்வத்துடன் கேட்க, "நீங்க என்னை பாப்பான்னு கூப்பிடற வரைக்கும் நான் கல்யாணமே செஞ்சுக்க மாட்டேன் சாமி அங்கிள்! குட்டிப் பாப்பாவுக்கு எங்கே யாவது கல்யாணம் நடக்குமா? ஏன்டா அருண்?

அவள் கேட்க, ''ஊஹூம்... நடக்காது'' என்று பெரிய மனிதனாய் தலையசைத்தான் அவன்.

''அப்போ நானும் இனிமே உங்களை சிவிம்மான்னே கூப்பிடறேன்'' என்றார் சாமிநாதன்.

''அது சரி, அண்ணாவும் அண்ணியும் எப்ப வராங்க சிவி?'' ஆவலுடன் விசாரித்தார் சிவமுருகன்.

''தெரியலை சித்தப்பா! அப்பாவுக்குதான் வேலையை விட்டுட்டு வரதுன்னா பெரிய கஷ்டமாச்சே! அங்கே அம்மா மாட்டிக்கிட்டாங்க... நான் உங்களை எல்லாம் பாக்க ஓடி வந்திட்டேன்... ஒரு மாசம் கழிச்சிதான் வரு வாங்கன்னு நினைக்கிறேன்!''

''ம்... அப்பா முக்கியமா ஒரு விஷயத்தைப் பத்தி அண்ணாவோட நேரிலே பேசணும்ணாங்க! சரி...'' என்றவர் தங்கையிடம் திரும்பினார்.

''என்ன உஷா? இந்த முறையும் மாப்பிள்ளை வர லையா?'' அவர் கேட்டவுடன், ''உங்களுக்குதான் நல் லாத் தெரியுமே அண்ணாவே தேவலாம்... இவர் தொழிற் சாலையை விட்டு அங்கே இங்கே நகர மாட்டாரே!'' சிறு முறுவலுடன் கூறினார் உஷா.

பிறகு வீட்டிற்குச் சென்று இறங்கியபோது, முன்புற மிருந்த பெரிய தோட்டமும், கம்பீரமான குட்டி அரண் மனை போன்ற தோற்றத்துடன் எதிரில் நின்றிருந்த அந்த எஸ்டேட் பங்களாவும் அவர்களை ரம்யமாக வரவேற்றன.



வாசலுக்கே வந்து ஆவலுடன் வரவேற்ற பாட்டி கோதை நாயகியை ஆவலுடன் அணைத்துக் கொண்டாள் அவள்.

"வாடா என் செல்லமே! அப்பாவும் அம்மாவும் நல்லா இருக்காங்களா? உங்களுக்காகத்தான் தாத்தா சாப்பிடாமக் கூடக் காத்திட்டிருக்காரு!''

அனைவரையும் வாஞ்சையுடன் உள்ளே அழைத்துச் சென்றார் கோதை.

"ஹாய்! சிவி அக்காவும் அருணும் வந்தாச்சு.''

உற்சாகமாக ஆர்ப்பரித்தபடி வந்த சுஜயை தாவி யணைத்துக் கொண்டாள் சிவி!

அப்போது ''வாங்க அண்ணி! வா சிவி! அருண்... எப்படிடா இருக்கே?'' விசாரித்தபடி வந்து இணைந்து கொண்டார் சித்தி பாமா!

எல்லோருமாகச் சேர்ந்து வேதநாயகத்தின் அறைக்குச் சென்றபோது, அவர் படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண் டிருந்தார்.

போன வருடம், 'ஸ்ட்ரோக்' வந்து உடல்நிலை சரி யானதிலிருந்து, அவர் வெளியே எங்கேயும் செல்வ தில்லை. பாதி நேரம் ஓய்வில்தான் இருப்பார்.

தன் மகளையும், பேரப்பிள்ளைகளையும் கண்டதும் புத்துணர்வுடன் எழுந்தவர், அன்று முழுவதும் ஓய் வெடுக்கவேயில்லை.

குடும்பத்தினர் பலர் ஒன்றாக இணைந்ததில், நேரம் சிறகு கட்டிச் செல்ல சிவாத்மிகாவை தன் அருகிலேயே வைத்துக் கொண்டார் வேதநாயகம்!

அதிக புத்திசாலியாக பாசம் நிறைந்தவளாய் இருக்கின்ற தன் பேத்தியை அவருக்கு மிகவும் பிடிக்கும்...

அவருக்கு தாத்தா என்கிற பதவியை முதலில் அளித்தவள் அவளென்பதும் வீட்டிற்கு ஒரே பேத்தி என்பதும் அவளை உயிராய் விரும்ப முக்கியக் காரணங்களாய் அமைந்திருந்தன.

* * *

அன்றிரவு, படுக்கச் சென்றபோது தான் தனிமை, அவளை மிகவும் வாட்ட, உஷாவின் அறைக்குச் சென்று அவருடன் படுத்துக் கொண்டாள் சிவி.

சுந்தரின் நினைவுகள் மனதில் நிழலாட, இப்போது அவன் என்ன செய்து கொண்டிருப்பானோவென்ற எண்ணம் வந்தது.

அவனுடைய படிப்புத் திறமையிலும், புத்திசாலித்தனத்திலும், வெகுவாக ஈர்க்கப்பட்டாலும், வாழ்க்கையின் எதார்த்தத்தை உணராமல், வீணாக வறட்டுப் பிடிவாதம் பிடித்து ஒருவரிடமும் அனுசரித்து வேலை செய்யத் தெரியாத அவனிடம் சிறு கோபமும் வருவதாய்!

ஒரு பெருமூச்சுடன் திரும்பிப் படுத்து உறங்க ஆரம்பித்தாள் அவள்.

மறுநாளைய விடியல், இதமான குளிருடன் அவளை உசுப்ப காதருகில் சுஜயின் குரல் கிசுகிசுவென்று எழுப்பியது.''

''சிவிக்கா! வாக்கிங் போகலாமா?'' அருகில் படுத்திருந்த அத்தை உஷாவின் உறக்கத்தைக் கலைக்காமல் அழைத்தவனிடம் ''ஒரு நிமிஷம்!'' என்றபடி குளியலறைக்குள் ஓடினாள்.



பல் துலக்கி முடித்து வெளியில் வந்தபோது, அருணுடன் சுஜயையும் காணவில்லை.

சிறு புன்னகையுடன் ஜீன்ஸையும் டாப்பையும் ஸ்வெட்டரையும் அணிந்தவள், காலை நேர வாக்கிங்கிற்குத் தயாரானாள்.

ஹாலுக்கு வந்தபோது, சுஜயும், அருணும் ட்ராக் சூட்டும் ஸ்வெட்டருமாய் அவளுக்காகக் காத்திருந்தனர்.

ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த கோதை அவளைக் கண்டதும், இண்டர்காமை உயிர்ப்பித்தார்.

மறுமுனையில் சமையல் செய்யும் பாக்கியம் எடுக்க, ''சிவி எழுந்திரிச்சிட்டா! அவளுக்கு உடனே காபி குடுத்தனுப்பும்மா!'' என்று பணித்தார்.

''பாட்டிம்மா! வந்து குடிக்கிறேனே!'' என்ற பேத்தியிடம் ''ஊஹூம்... வெறும் வயித்தோட போகக் கூடாது.. ரொம்ப டயர்டாயிடும்... பாத்து போயிட்டு வாங்க'' என்று முடித்து விட்டார்.

காபியை எடுத்து வந்த வேலைக்காரி வனஜாவிடம் நன்றி கூறி விட்டுப் பருகியவள், உடனே தம்பிகளுடன் கிளம்பி விட்டாள்.

இருள் பிரிந்தும் பிரியாத அந்த விடிகாலைப் பொழுதில், மலைமகள் குளிருக்குப் போர்வையாய் மேகங்களைப் போர்த்தியிருக்க, இரு கன்னங்களிலும் கைகளைப் பதித்து ரசித்தபடி, நடக்க ஆரம்பித்தாள் சிவி!

''லீவுக்கு நீ வரப்பதான் இந்த மாதிரி எர்லி மார்னிங் வாக் எல்லாம்! மத்த நாளெல்லாம் குளிரிலே நடுங்கிட்டே ஸ்கூலுக்குப் போகணும். அதனால இந்த மாதிரி சம்மர் வெகேஷனை எதிர்பாத்துட்டே இருப்பேன் சிவிக்கா!

"நீயும் அருணும் வந்தாதான் ஜாலி... என்னை யாரும் கண்ட்ரோல் பண்ணவே மாட்டாங்க!"

குஷியாகக் கூறிய சுஜயை இழுத்து முத்தமிட்டு அணைத்துக் கொண்டாள் அவள்.

எப்போதும் போல், பச்சைப் பசுமையுடன் வண்ணப் பாய் விரித்திருந்த தேயிலைத் தோட்டத்தை ரசித்தபடி வளைந்து நெளிந்து தெரிந்த ஒற்றையடிப் பாதையில் மூவரும் நடக்க ஆரம்பித்தனர்.

## 3



எஸ்டேட்டின் எல்லைக்கு வந்த போது, பக்கத்து எஸ்டேட் பங்களா 'கவிதா நிவாஸ்' கண் முன்னே வெண்ணிறப் பளிங்குக் கோட்டை போல பனி மூட்டத்தின் நடுவே கம்பீரமாகத் தெரிய ஆரம்பித்தது.

எப்போதும் போல் வெளி கேட்டருகே, வாட்ச் மேன் ஜோசப் தாத்தா அமர்ந்திருப்பது தெரிந்தது.

அவர்களைக் கண்டதுமே உற்சாகத்துடன் எழுந்து வந்து "வாங்க பசங்களா... வாங்க சிவிம்மா! நல்லாருக்கீங்களா?" பெரும் வாஞ்சையுடன் வரவேற்றார்.

"ஹாய் ஜோசப் தாத்தா! எப்படி இருக்கீங்க? ரொம்ப டல்லாத் தெரியறீங்க? உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம் இல்லைம்மா! நீங்க உள்ளே போய் பூப்பறிச்சுக்கங்க!" என்று அனுப்பிவிட்டு வாசலிலிருந்த ஸ்டூலில் அமர்ந்தார்.

பரந்து விரிந்த தோட்டத்தில் நிறைந்திருந்த அபூர்வ வகை மலர்களான ஃப்ளாக்ஸ், ஆந்தோரியம், பான்சி,



ஆர்க்கிட், டேலியா என்று ஒவ்வொரு செடியிலிருந்தும் மலர்களைப் பறிக்க ஆரம்பித்தனர், அருணும், சுஜயும்!

"ஏய்... பசங்களா போதும் வாங்க போகலாம்!"

அவள் அழைக்கும்போதே "ஏய்... யார் நீங்க மாடர்ன் திருடங்களா?" ஆழ்ந்த குரல் ஒன்று சீற்றத்துடன் கர்ஜித்தது.

பதட்டத்துடன் அவள் திரும்பியபோது, ஒரு உயரமான மனிதன் பெரும் அதிகார மிடுக்குடனும் ஆளுமைத் தனத்துடனும் அங்கு நின்றிருந்தான்.

அவனைக் கண்டதும் கையிலிருந்த பூக்களை பயத்துடன் சிதறடித்தபடி இருவரும் ஓட, அவளுக்குள் தாங்க முடியாத சீற்றம் வந்தது.

"மிஸ்டர் கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க. இங்கே யாரும் திருட வரலை!" அழுத்தமாகக் கூறினாள்.

"ஓ! இன்னொருத்தர் வீட்டுத் தோட்டத்துல புகுந்து பூவைத் திருடறதுக்கு உங்க டிக்ஷனரியில என்ன பெயராம்? நீதான் இந்த கேங் லீடரா?" நக்கலும், அலட்சியமுமாகக் கேட்டான்.

"சே! இது எங்க அங்கிள் வீடு! ஆன்ட்டிக்கு நான் ரொம்ப 'பெட்' தெரியுமா? இந்த வீட்டிலே எனக்கு எல்லா சுதந்திரமும் உண்டு. அவங்களைப் போய் கேளுங்க! அப்ப தெரியும் உண்மை!"

"ம்... அப்புறம்? வேற என்ன இருக்கு? முதல்லே திருட்டு... அப்புறம் பொய் இன்னும் மிச்சமிருக்கறதெல்லாம் எடுத்து விட வேண்டியதுதானே?"

"சாரி சார்! நான் உங்ககிட்டே பேசத் தயாரா இல்லை... நீங்க யாருன்னே தெரியாதப்ப, நான் எதுக்கு உங்களுக்கு

விளக்கம் சொல்லணும்! நான் ஆன்ட்டிகிட்டே பேசிக் கிறேன்."

வேகமாக முன்னே சென்றவளை சொடக்குப் போட்டு அழைத்தான் அவன்.

"அங்கே யாரும் இல்லை... அப்படி அவங்ககிட்டே பேசணும்னா மேலே போய்தான் பேசணும்! இந்த ஜோசப் எங்கே."

கையை உயர்த்தி வானை நோக்கி அவன் காட்டியபடி திரும்ப, புரியாமல் அவள் விழிக்கும்போதே, "எஜமான் எஜமான்..." என்று அழைத்தபடி ஜோசப் ஓடி வந்தார்.

பின்னாலேயே ஓடி வந்து சுஜயும், அருணும் மூச்சு வாங்க நின்றனர்.

"எஜமான்! நம்ம பக்கத்து எஸ்டேட் பிள்ளைங்கதான் இவங்க! அய்யாவுக்கும் அம்மாவுக்கும் இவங்களை ரொம்பப் பிடிக்கும்! அதுவும் சிவிம்மான்னா அம்மா பிரியமா இருப்பாங்க... எப்பவுமே லீவுக்கு வரும்போது, சுதந்திரமா இங்கே வந்து பூப்பறிச்சிட்டுப் போவாங்க அதான்!" தயக்கத்துடன் முடித்தார்!

சட்டென்று அவன் விழிகள் இடுங்கின.

"ஓ! ஆனா, அது அம்மா இருந்த வரைக்கும்தான்!

"இப்போ என்னோட ப்ரைவசி பறிபோக நான் விடமாட் டேன்... இனிமே... இவங்களை எல்லாம் உள்ளே விட்டீங் கன்னா, அப்புறம் நான் உங்களைத்தான் வேலையை விட்டு டிஸ்மிஸ் செய்ய வேண்டி இருக்கும்!"

கடுமையாக எச்சரித்து விட்டு அவன் கம்பீர நடை யுடன் விரைவாக உள்ளே செல்ல, பிள்ளைகளிருவரும் முகம் வெளிறி அவளிடம் ஒட்டிக் கொண்டனர்.



உடனே, ஜோசப்பிடம் திரும்பியவள், "இந்தத் திமிர் பிடிச்ச ஆளு யாரு தாத்தா?" கசந்த குரலில் கேட்டாள்.

"சிவிம்மா! அப்படிச் சொல்லாதீங்கம்மா! அவர்தான் எங்க சின்ன எஜமான்! பெரியய்யா, அம்மாவோட ஒரே பிள்ளை!" பவ்யமாகக் கூறினார்.

"அங்கிளும், ஆன்ட்டியும் எங்கே தாத்தா? அவர் என்னென்னவோ சொல்றாரு?"

சிறு பயத்துடன் அவள் வினவ, "உனக்கு விஷயமே தெரியாதா சிவிம்மா! போன முறை நீ வந்துட்டுப் போனப் புறம் பெரியய்யா ஒரு ஆக்சிடென்ட்டில இறந்திட்டாங்க... அந்த அதிர்ச்சியைத் தாங்காம அம்மாவும் அன்னிக்கு சாயந்திரமே உயிரை விட்டுட்டாங்களே!"

தொண்டை அடைக்க நிறுத்தினார்.

உடனே இதயம் கனத்துப் போக, எதிர்பாராத அதிர்ச்சி யில் ஒரு கணம் சிலையாகி நின்று விட்டாள், அவள்.

"கடவுளே! அங்கிளும் ஆன்ட்டியும் இப்ப இல்லையா? பாவம்... அவங்களுக்கு ஏன் இந்த நிலைமை?"

தனக்குள் முணுமுணுக்கும்போதே அவள் இமையோரம் இரு கண்ணீர்த் துளிகள் ஜனித்தன.

"அப்போ இவரு...?"

அவள் கேட்க, "அவங்களோட ஒரே மகன்! மெட்ராஸில ஒரு கம்பெனி நடத்திட்டிருந்தாரு! அதை வித்துட்டு இங்கேயே வந்திட்டாரு... ரொம்பக் கோபக்காரரு! என்னை மன்னிச்சிடுங்கம்மா!

"அவர் குணம் தெரிஞ்சும், உங்களை எச்சரிக்காம உள்ளே அனுப்பினது என் தப்புதான்!"


கைகளைப் பிடித்தபடி இறைஞ்சினாள்.

"சரி! விடுங்க தாத்தா! ஆன்ட்டியையும் அங்கிளையும் நினைச்சா ரொம்பக் கஷ்டமா இருக்கு!"

பாரமாய் கனத்த இதயத்துடன் கூறி விட்டு, அவரிடம் விடை பெற்றாள்.

திரும்பிச் செல்லும்போதும் அனைவரிடம் மௌனமே பாஷையாகி இருக்க, அவளுக்குள் இங்கு போனமுறை, தான் வந்து சென்ற நினைவுகள்!

## 4



சாலமனும், கவிதாவும், காதல் மணம் புரிந்து கொண்ட தம்பதிகள்!

சாலமன், கணிதத்தில் பி.ஹெச்டி முடித்து டாக்டர் பட்டம் பெற்றவர்! ஒரு பல்கலைக்கழகத்தில் புரொபசராக இருந்து துறைத் தலைவராக ஓய்வு பெற்றவர்.

மூன்று வருடங்களுக்கு முன்பு தான் இந்த எஸ்டேட்டை வாங்கி, இருவரும் அங்கு குடி வந்தனர்.

டீ, காபி தோட்டங்கள், நீலகிரித் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை என்று தொழிலை விஸ்தரித்திருந்தனர்.

ஒரு முறை, இதுபோல் அவர்கள் வாக்கிங் வரும்போது, அவர்களிருவரும் எதிரில் வர அன்புடன் விசாரித்து பிள்ளைகளை வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

அன்றிலிருந்து, பெண் குழந்தை இல்லாததாலேயோ என்னவோ, கவிதாவிற்கு அவளை மிகவும் பிடித்துப் போனது.



சிவியுடைய புத்திசாலித்தனமும், துறுதுறுப்பும், கலகலவென்றிருக்கும் சுபாவமும் அவரை மிகவும் கவர, அவர்களுக்கு செல்லப் பெண்ணாய் ஆகிப் போனாள் அவள்.

தினமும் வாக்கிங் வரும்போது, அவர்களைப் பார்க்காமல் அவள் செல்வதில்லை!

அவளுக்கென்று ஏதாவது, ஜூஸ், பிஸ்கட், கேக் எனத் தயாராக வைத்துக் காத்திருப்பார் கவிதா.

அவளும், 'பி.எஸ்.ஸி மேத்ஸ்' என்பதால் சாலமனிடம் ஏதாவது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்வாள்.

கற்பூர புத்தியுடன் சட்டென்று புரிந்து கொள்ளும் மாணவியாய் அவளைக் கண்ட சாலமனுக்கும், அவள் மீது தனி ப்ரியம் உண்டு!

அவ்வளவு உயிராய் பாசம் வைத்திருந்த இருவரும் திடீரென்று இறந்து போனது அவளை வெகுவாகப் பாதித்தது.

'இதைப்பற்றி ஒருவருமே ஏன் கூறவில்லை?' என்ற எண்ணம் மனதிற்குள் முள்ளாய் நெருடுவதாய்!

அவர்கள் மூவரும் வீட்டிற்குள் நுழையும்போதே கோதை அவளை கவனித்து விட்டார்,

முகம் சுருங்கி வேதனையுடன் வந்தவளைக் கண்டதுமே நடந்ததைப் புரிந்து கொண்டார்.

"என்னடா சிவிம்மா! பக்கத்து எஸ்டேட் பங்களாவுக்குப் போயிருந்தீங்களா?" தாழ்ந்த தொனியில் கேட்டார்.

உடனே கவிதாவின் நினைவில் கண்களில் நீர் நிறைய "ஏன் பாட்டிம்மா சொல்லலை! ஜோசப் தாத்தா

சொன்னப்ப ரொம்பக் கஷ்டமா இருந்தது. எதிர்பார்க்க வேயில்லை!''

அவள் குரல் பெரிதும் உடைந்திருந்தது.

''சாரிடா! வந்தவுடனே உன் சந்தோஷத்தை கலைக்க எனக்கு மனசு வரலை! அதான் மெதுவா சொல்லலாம்னு இருந்தேன்!'' அவளுடைய தலையை வருடியபடி வருத் தத்துடன் கூறினாள் கோதை!

ஏனோ அன்று முழுவதும் நெஞ்சை அடைப்பது போன்ற ஒரு உணர்வுடன் இறுகிப் போயிருந்தாள் அவள்.

மறுநாள் காலையில், ஏனோ அந்தப் பக்கம் செல்லவே மனம் வரவில்லை.

வேறு வழியில் சென்றபோதும், நெஞ்சம் சோக மூட்டத் துடனிருந்தது.

அன்பும் பாசமும் சொறிந்த அந்தத் தம்பதிகளை மறக் கவே இயலவில்லை!

அவர்கள் தங்களின் மகனைப் பற்றிப் பேசிய நினை வும் இல்லை!

தன் எண்ணங்களிலேயே மூழ்கியபடிச் சென்றவள் எதிரில் வந்தவனை கவனிக்கவில்லை.

யார் மீதோ மோதி விட்டு ''சாரி!'' என்றபடி தர்ம சங்கடத்துடன் நிமிர்ந்த போதுதான், ஒற்றைப் புருவம் உயர்த்தியபடி எளனத்துடன் நின்றிருந்தான், நேற்று சந்தித்த அந்த உயரமான மனிதன்!

''என்ன? என்னையே சுத்தி சுத்தி வரே! தினமும் என் பார்வையிலப் பட்டா என்னைக் கவர்ந்திடலாம்னா?''

குத்தலாகக் கேட்டவனையே நம்ப முடியாமல் ஏறிட் டவள், ''ஏன் மிஸ்டர் உங்களுக்கு நல்லதே தெரியாதா?



சாலமன் அங்கிளும், கவிதா ஆன்ட்டியும் எவ்வளவு நல்லவங்க! அவங்களுக்குப் போய் இப்படி ஒரு பையனா? இன்கிரெடிபிள்!'' சலிப்புடன் தலையசைத்தபடி விலகிச் சென்றாள்.

தோளைக் குலுக்கியபடி தன்னுடைய ஜாகிங்கைத் தொடர ஆரம்பித்தான் அவன்.

''இவனுடைய பெயர் என்னவாக இருக்கும்...''

யோசித்தபடி முன்னே சென்றவனைத் தொடர்ந்தனர் சுஜயும், அருணும்!

'ஏன் இவன் இவ்வளவு கோபமாய், அகங்காரம் பிடித்தவனாய் இருக்கிறான்?' என்று நினைக்கும்போதே சுந்தரின் நினைவு வந்தது.

அவன்தான் எவ்வளவு அமைதியான சுபாவம் படைத் தவனென்று தோன்றும்போதே சில விஷயங்களில் அவனுடைய பிடிவாதமும் ஞாபகம் வருவதாய்!

''என்னக்கா! அந்த அங்கிள் எப்பப் பாரு நம்மகிட்டயே ஏன் ப்ராப்ளம் பண்றாரு!'' எரிச்சலுடன் கேட்டான் சுஜய்!

''விடுங்கடா! சிலர் அப்படித்தான்! அதுவும் அந்த ஆளுக்கு ரொம்பத் திமிர்... இவர் பர்சனாலிட்டியா இருந்தா எல்லாப் பொண்ணுங்களும் காலிலே விழுந்திடுவாங் களா என்ன? சரியான ஹிப்போ க்ரைட்!''

சினத்துடன் மொழிந்தபடி அவள் முன்னே நடந்த போது அவனுடைய பங்களா தூரத்தில் தெரிந்தது.

எதிரே ஒரு பெண்மணி கையில் சிறு குழந்தையுடன் பதட்டமாய் ஓடி வருவதும் தெரிந்தது.

அந்தக் குழந்தையின் தலையிலிருந்து ரத்தம் கோடாய் வழிய, பதைப்புடன் என்னவென்று விசாரித்தாள் அவள்.

"ஜென்னிக்கு கீழே விழுந்து அடிபட்டுடுச்சிம்மா! ஐயாவும் வீட்டிலே இல்லை! பக்கத்துல இருக்கற ஆஸ்பத்திரிக்கு போறதுக்காகத்தான் எடுத்துட்டு ஓடி வந்தேன்" மூச்சு வாங்க முடித்தாள்.

உடனே தன் கையிலிருந்த கர்ச்சீப்பால் குழந்தையின் தலையில் ஒரு கட்டைப் போட்டவள், தூரத்தில் ஒரு ஜீப் மலைப்பாதையில் வருவதைக் கண்டாள்.

சுஜயும், அருணும் ஓடிச் சென்று வழி மறிக்க, ஜீப் உடனே நின்றது.

என்னவென்று விசாரித்த டிரைவர், அவர்களை உடனே ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றார்.

அங்கு சென்று மருந்து தடவி கட்டுப் போட்டு ஊசி போட்ட டாக்டர் இனி பயமில்லை என்றதும்தான் அவளால் ஒழுங்காகவே மூச்சுவிட முடிந்தது.

உடனே வீட்டிற்கு போன் செய்து விபரம் சொல்லி விட்டுக் காரை உடனே அனுப்பும்படி சித்தப்பாவிடம் கூறினாள்.

அவரும் டிரைவருடன் தானே வருவதாகக் கூறி வைத்தார்.

குழந்தை அடிபட்ட வலியிலும், பயத்திலும் உறங்கி விட, அதை மார்பில் சாய்த்து அணைத்தபடி ஹாஸ்பிடல் ரிசப்ஷனில் அமர்ந்திருந்தாள் அவள்.

அருகிலிருந்த பெண்மணி பயத்துடன் அழைத் துவங்கினார்.

"ஏம்மா அழறீங்க? அதான் டாக்டர் ஒன்னுமில் லேன்னு சொல்லிட்டாங்களே பயப்படாதீங்க!"



அவள் தேறுதல் கூறியவுடன் கண்களைத் துடைத்து நிமிர்ந்தவர், "ஐயாதான் என்ன சொல்வாங்களோன்னு பயமாருக்கு!" நடுக்கத்துடன் கூறினார்.

"இந்தக் குழந்தையோட அம்மா எங்கே?"

ஆர்வத்துடன் கேட்டவளையே பரிதாபமாக நோக் கியவர், "அம்மா டெலிவரியிலேயே இறந்து போயிட்டாங் கம்மா! இப்ப ஐயா மட்டும்தான் வளக்குறாரு! அதனால தான் நான் கிராமத்துலருந்து வந்து குழந்தையை பாத் துக்கறேன்!" என்றபடி நிமிர்ந்தவரின் விழிகள் குத்திட்டு நின்றன.

என்னவென்று அவள் நிமிர்ந்தபோது, எதிரே அவர்கள் அனைவரையும் குள்ளமாக்கிக் கொண்டு, சிவந்த விழிகளில் குழந்தையையே வெறித்தபடி, அந்த உயர மான மனிதன் வந்து கொண்டிருந்தான்.

சட்டென்று உள்ளே ஒரு விதிர்ப்பு ஓடத் திரும்பினால், ஆயா பயத்துடன் கைகளைப் பிசைந்தபடி எழுந்தார்.

"ஆயா, குழந்தைக்கு என்னாச்சு? அவளைப் பாத்துக் கறதை விட்டுட்டு என்ன செஞ்சிட்டிருந்தீங்க?" கோபமாக இரைந்தான்.

"இல்லீங்கய்யா! தூங்கிட்டுருந்ததுன்னு குளிக்கப் போனேன்! தொட்டியிலிருந்து கீழே விழுந்துடுச்சிங்கய்யா! தெரியாம நடந்து போச்சு இனிமே இப்படி நடக்காமப் பாத்துக்கறேன்."

கண்ணீருடன் இறைஞ்சியவரை ஒரு பொருட்டாக மதிக்காமல் குழந்தையை அவளிடமிருந்து வெடுக் கென்று பிடுங்கியவன், நேரே ட்யூட்டி டாக்டரின் அறைக் குச் சென்றான்.

அவனைக் கண்டதும் வாசலில் அமர்ந்திருந்த பையன் எழுந்து சலாம் வைக்க, அவன் இங்கு மிகவும் பழக்க மானவனென்று தோன்றியது.

அப்போது சிவமுருகனும் வந்துவிட, ஆயாவிடம் விடைபெற்று அவர்கள் கிளம்பினர்.

மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்ததற்கு ஒரு நன்றி கூடக் கூறாமல் குழந்தையை பிடுங்கிச் சென்ற வனின் மேல் வெறுப்புச் சதவிகிதம் அதிகரித்துக் கொண்டே போவதாய்!

"குழந்தைக்கு இப்ப பரவாயில்லைதானே?" சிவ முருகன் அவளை விசாரித்தபடி உடன்வர, "சார் ஒரு நிமிஷம்!" என்ற குரல் அவரை நிறுத்தியது.

யாரென்று திரும்பினால், அங்கு குழந்தையுடன் அவன் நின்றிருந்தான்.

"ஓ! நீங்களா! எப்படி இருக்கீங்க? அசோசியேஷன் மீட்டிங்லே பாக்கறதோட சரி! எனிவே தேங்க்யூ!" என் றான் அவள் புறம் திரும்பாமலே!

"எங்க பசங்க தான் கொண்டு வந்து அட்மிட் செஞ்சிருக்காங்க! அவங்களை அழைச்சிட்டுப் போகத் தான் வந்தேன்! ஜாக்கிரதையா குழந்தையப் பாத்துக்கங்க! நைஸ் மீட்டிங் யூ! பை விக்டர்!"

அவனிடம் கை குலுக்கியபடி அவர் விடை பெற்ற போதுதான், அவன் பெயர் விக்டர் என்பதே தெரிந்தது.

உதட்டை சுழித்தபடி அவள் நடக்க, அந்தக் கணம் அவளுடைய அலட்சிய பாவனையை உணர்ந்தவனது புருவங்கள் நெறிந்தன.

இவன் தான் ஜென்னியின் தந்தையாவென்று உள்ளூர எழுந்த கேள்வியை, உதடுகள் கேட்டுவிட்டன!



"ஆமாம்மா! அப்படித்தான் சொல்றாங்க! ஆனா, விக் டருக்கு கல்யாணம் இங்கே நடக்கலை.. சாலமன் அங்கிள் இறந்தப்புறம், மூணு மாசம் கழிச்சி அவர் மட்டும் இங்கே வந்து செட்டிலானாரு.

அப்புறம் திடீர்னு இந்தக் குழந்தையோட வந்தாரு. அதோட அம்மா டெலிவரியில இறந்துட்டதா சொன் னாங்க! அவ்வளவுதான் தெரியும்."

அவர் கூறியவுடன் பெரும் பரிதாபம் வர, அவன் ஏன் தன்னைப் பார்த்தாலே நெருப்பாய்க் காய்கிறான் என்ற கேள்வியும் கூடவே வருவதாய்!

தோளைக் குலுக்கி அதை விலக்கியவள், காருக்கு வெளியே பார்வையைச் செலுத்தினாள்

வெள்ளைப் பூக்களுடன் குத்துச் செடிகளாய் காப்பித் தோட்டம் பசுமையாய் பரவித் தெரிந்தது.

அந்தக் குழந்தை ஜென்னியின் அழகு முகம் நினைவுப் பரப்பில் முகிழ்ந்து பெரிதும் இம்சித்தது.

வீட்டிற்குச் சென்றதும், விசாரித்த அனைவரிடமும் பதில் கூறுவதற்குள், அவளுக்குப் போதும் என்றாகி விட்டது.

"அந்தப் பையன் விக்டர், ரொம்பத் திமிர் பிடிச்சவன், அதோட மூடி டைப்புன்னு எல்லாரும் பேசிக்கறாங்களே அப்படியா சிவிம்மா?"

கோதை கேட்டபோது, "ஆமாம் பாட்டியம்மா! இன் னிக்கு அந்தக் குழந்தையைக் கொண்டு போய் அட்மிட் பண்ணினதுக்கு ஒரு தேங்க்ஸ்கூட சொல்லலைன்னா பாத்துக்கங்களேன்!" சலிப்புடன் கூறினாள்.

"இனிமே அந்தப் பக்கமே வாக்கிங் போகாதீங்கடா! நம்ம எஸ்டேட்டுலேயே சுத்தி வாங்க. எதிர்ப் பக்கம் முழுக்க நம்ம தோட்டம்தானே. ஒரு நாள் முழுக்க சுத்திப் பாக்கலாமே!"

அனுசரணையாகக் கூறிய பாட்டியிடம் தலையசைத்து விட்டு அறைக்குச் சென்றபோது, ஏனோ உடனே சுந்தரிடம் பேச வேண்டும் போல் ஒரு உணர்வு!

கதவை மூடி விட்டு அவன் செல்லுக்கு தொடர்பு கொண்ட போது ஏனோ அவன் எடுக்கவே இல்லை!

வெகு நேரம் கழித்து எடுத்தவன், "சிவி! நான் ரொம்ப பிசியா இருக்கேன், வெளிநாட்டுல எனக்கு வேலை கிடைச்சிருக்கு! இப்பப் போனா ரெண்டு வருஷம் கழிச்சித்தான் வரமுடியும்! வேணும்னா ஒரு வருஷம் முடிஞ்சவுடனே கேட்டுப் பாக்கலாம்! அடுத்த வாரமே போறேன்!" அவசரமாகக் கூறினான்.

அவன் கூறிய விஷயம் பெரும் மகிழ்ச்சியை அளித்தாலும், தன்னிடம் இது பற்றி அவனாக ஒன்றுமே கூறவில்லையே என்ற தவிப்பும் எழுவதாய்!

"ஏன் சுந்தர்.. இது பத்தி என்கிட்டே ஒரு வார்த்தை கூட சொல்லலை?" ஆதங்கத்துடன் கேட்டாள்.

"நான்தான் ரொம்ப பிசியா இருந்தேன்னு சொன்னேனே சிவி! ஏஜெண்ட் கிட்டே பணம் கட்ட, பாஸ் போர்ட் விசா எடுக்கன்னு ஒரே அலைச்சல்! அதான் கிளம்பறப்போ சொல்லலாம்னு இருந்தேன்!"

சிறு சோர்வுடன் வந்த குரல், அவளை சமாதானப் படுத்தியது.



"சாரி சுந்தர்! உங்க கஷ்டம் புரியாம கேட்டுட்டேன்! ஆல் தி பெஸ்ட்! கிளம்புறப்ப கட்டாயம் போன் பண்ணுங்க! நான் உங்களை ரொம்பவே மிஸ் பண்றேன்" மெல்லிய குரலில் முடித்தாள்.

"சரி சிவி! நான் வைக்கிறேன்!" அவசரமும் அலைப் புறுதலுமாய் அவன் வைத்தபோது ஏனோ சுரீரென்றது.

இவன் ஏன் எதிலும் பிடிப்பும் பற்றுமின்றி விட்டேத்தியாகவே இருக்கிறானென்ற கேள்வியும் எழுவதாய்!

ஒரு வேலையில் சேர்ந்து வாழ்க்கையைப் புரிந்து கொண்டவுடன் நிச்சயமாக அவன் மாறி விடுவானென்றும் தோன்றியது.

காலேஜில் படிக்கும்போதிருந்த அவனுடைய புத்திக் கூர்மையும், துடிப்பும் இப்போது வெகுவாகக் குறைந்து போயிருப்பது போன்ற பிரமையெழ, உடனே அதை அடக்கினாள்.

"என்ன சிவி! இங்கே வந்து தனியா உக்காந்திருக்கே!" கேட்டபடி வந்தார் பாமா.

"ஒன்னுமில்லை சித்தி! அந்தக் குழந்தையை பத்தி நினைச்சிட்டிருந்தேன்!"

மெல்லிய குரலில் உணர்வுகளை மறைத்தபடிக் கூறினாள்.

"அதிருக்கட்டும்! நாளைக்கு எஸ்டேட் அதிபர்களெல்லாம் சேர்ந்து ஒரு 'கெட் டு கெதர்' நடத்தறாங்க. ஒவ்வொரு வருஷமும் நடக்கறதுதான்... இந்த தடவை கொஞ்சம் தள்ளிப் போயிடுச்சி! நாம எல்லோருமே

போறோம்! ஏதாவது டிசைனர் சாரி மாதிரி எடுத்திட்டு வந்திருக்கியா சிவி?'' ஆவலுடன் கேட்டார்.

''ம்! ஒண்ணே ஒண்ணு இருக்கு சித்தி! நான் வேண்டாம்னு சொல்லியும் கேக்காம அம்மாதான் எடுத்து வச்சாங்க! ஆனா... நான் அவசியம் வரணுமா?''

இழுத்தாற் போலக் கேட்டவளை, உடனே அடக்கினார் பாமா!

''ஆமாம்! தாத்தா சொல்லிட்டாங்க! எல்லா எஸ்டேட் ஓனர்களும் குடும்பத்தோட வருவாங்க! சின்னப் பசங்க பாட்டு, டேன்ஸ் எல்லாம் இருக்கும். பெரியவங்களுக்கும் ரன்னிங் ரேஸ், ம்யூசிகல் சேர், பாசிங் தி பார்சல், தம்போலா, இன்னும் நிறைய கேம்ஸ் இருக்கும்... ஜாலியா என்ஜாய் பண்ணலாம்!'' குதூகலத்துடன் ஆர்ப்பரித்தாள்.

''சரி சித்தி! அது மாதிரி ப்ரோக்ராம்ஸ் இருக்கும்போது புடவை வசதியில்லையே! பட்டுல டிசைனர் சுடிதார் இருக்கு அதைப் போட்டுக்கறேன்.''

''சரி! அதான் சொல்லலாம்னு வந்தேன்... சிவி அதோட உன்கிட்டே ஒரு விஷயம் கேக்கணும்... பர்சனல்! தப்பா நினைச்சிக்க மாட்டியே?'' தயங்கியபடி கேட்டார்.

''என்ன சித்தி இவ்வளவு பில்டப் குடுக்கறீங்க... அப்படி என்ன பர்சனல் மேட்டர்... கேளுங்க!''

''ம்! தாத்தாவும், சித்தப்பாவும் நேத்து பேசிட்டிருந்தாங்க... இந்தத் தடவை உங்கப்பா வந்ததும் உன் கல்யாண விஷயமா ஒரு முடிவு செஞ்சிடணும்னு! அதான்!''

சட்டென்று உள்ளே ஒருவிதக் குளிர் பரவ, ''என்ன சித்தி சொல்றீங்க?'' விதிர்ப்புடன் கேட்டாள்.



''அதனாலதான் கேக்கறேன்... அவங்க யாரும் உன்னைக் கேப்பாங்களான்னு தெரியலை! நீ யாரையாவது லவ் பண்றியா சிவிம்மா?''

எதிர்பாராத அந்தக் கேள்வியில் ஒரு கணம் உறைந்து போனவள், ''ஊஹூம்... இல்லை சித்தி!'' தன் மனதை மறைத்து மெதுவாக முணுமுணுத்தாள்.

''சரி! நீ ரெஸ்ட் எடுத்துக்க... நான் வரேன்'' என்றபடி அவர் சென்றதும்தான் சுந்தரைப் பற்றி அவரிடம் கூறியிருக்கலாமோவென்று தோன்றியது.

ஆனால், தன்னை மீறி எதுவும் நடந்து விடாதென்ற தைரியத்தில் துவைத்து வந்திருந்த துணிகளை எடுத்து அடுக்கி வைக்க ஆரம்பித்தாள்.

## 5

மறுநாள் மாலையில் பட்டு சுடிதாரணிந்து தயாராகி அவள் கீழே வந்தபோது, குடும்பத்தினர் ஒவ்வொருவராகக் கிளம்பி ஹாலில் ஒன்று சேர ஆரம்பித்தனர்.

பிறகு எண்டேவரில் கிளம்பி அந்த நண்பருடைய எஸ்டேட் பங்களாவை அடைந்தபோது, அங்கு உற்சாகமும் கொண்டாட்டமும் ஆரம்பமாகியிருந்தன.

ஒருவருக்கொருவர் அறிமுகம் முடிந்தபோது, அனைவரும் லானில் ஒன்று கூடினர்.

அப்போதுதான் விக்டரைக் கவனித்தாள் சிவி!

இறுகிய முகத்துடனும் அலட்சிய பாவனையுடனும், இந்தக் கொண்டாட்டத்திற்கும் தனக்கும் சம்பந்தமே

இல்லை என்பதுபோல் ஓரமாகப் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றில் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

ஏன் இவன் எப்போதுமே விரக்தியும், ஆளுமைத் தனமுமாகவே இருக்கிறான் என்ற கேள்வி எழும்போதே, ஒரு குரல் அவளைக் கலைத்தது.

''ஹாய் ப்யூட்டி! ஐயம் சஞ்சீவ்... பக்கத்து எஸ்டேட் எங்களுதுதான்! எம்பிஏ பண்ணிட்டிருக்கேன். இது வரைக் கும் உங்களை இந்த மாதிரி ஃபங்ஷன்லே நான் பார்த் ததே இல்லை!

வியப்புடன் விசாரித்தபடி கை நீட்டியவனிடம் இயல்பாகக் கை குலுக்கினாள் அவள்.

''மே ஐ நோ யுவர் நேம் ப்ளீஸ்?'' அவன் ஆர்வமாகக் கேட்டான்.

''சிவாத்மிகா... சிவின்னு எல்லாரும் கூப்பிடுவாங்க.''

அவள் சிறு முறுவலுடன் பகர்ந்தாள்.

''ரொம்ப வித்தியாசமான பெயர்! ஆனா அழகாருக்கு! வாங்க... நாம எல்லா கேம்ஸ்லேயும் கலந்துக்கலாம்!''

அவன் உற்சாகத்துடன் அழைக்க, அவள் தயங்கும் போதே பாமா அருகில் வந்தார்.

''ஹாய் சஞ்சீவ்! எப்படி இருக்கீங்க.'' என்று விசாரித் தார்.

''ஃபைன் ஆன்ட்டி!'' என்றவன், அவள் புறம் திரும்பி னான்.

''என்னங்க... என் கூட வர பயமா? ஆன்ட்டி... கொஞ்சம் சொல்லுங்களேன்... ஐயாவோட பெருமையப் பத்தி!'' இல்லாத காலரை உயர்த்தியபடி கூறினான்.



''இவ யார் தெரியுமா சஞ்சீவ்? எங்க பொண்ணு! சிவமுருகன் அங்கிளோட அண்ணா மக! எங்க வீட்டு ராஜகுமாரி... பத்திரம்!'' பாமா ஒற்றை விரலைக் காட்டி போலியாக எச்சரித்தார்.

''ஆன்ட்டி... அவங்களை பத்திரமா உங்ககிட்டே ஒப்படைச்சிடறேன்...''

அவன் முடிக்கும் முன்பே, ''இருங்க நானும் உங்க ளோட வரேன்'' என்றபடி பாமாவும் உடன் வந்தார்.

பிறகு கடந்த பொழுதுகள் சிறகு கட்டிப் பறந்தன.

ம்யூசிகல் சேர், தம்போலா, ரன்னிங் ரேஸ் என்று எல்லாவற்றிலும், அவளே வெற்றி பெற்றாள். விக்டரும் எல்லாவற்றிலும் பங்கு பெற, அவளுக்கு அதிசயமாய்!

ஆனால் ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும் அவளை அனைவரும் பாராட்டும்போது, பார்வை அவனிடம் திரும்ப, அவனோ ஏளனமும் வெறுப்புமாய் அவளையே ஊடுருவிக் கொண்டிருந்தான்.

ஒரு அலட்சியத்துடன் திரும்பியவளுக்குள் ஏனோ சுந்தரின் நினைவு!

இப்போது அவன் என்ன செய்து கொண்டிருப்பான் என்று நினைக்கும்போதே உஷா அவளை இழுத்துச் சென்றார்.

அந்தாக்ஷரியில் அவன் ஒருபுறமும், சஞ்சீவ் மறு புறமும் அமர, ஆண்கள் பெண்களுக்கு இடையேயான போட்டியில் அந்த இடமே களை கட்டியது.

இறுதியில் அதிலும் பெண்கள் அணியே வெற்றி பெற அனைவரும் அவளைப் பாராட்டினர்.

ஏனோ விழிகள் அவன் திசையில் பெருமிதத்துடன் பயணித்தன...

ஆனால், அங்கு அவனுடைய ஏளனமான உதடு சுழிப்பையும், சீற்றத்தையும் வெறுப்பையும் உமிழும் இடுங்கிய விழிகளையும் கண்டவுடன், அலைப்புறுதலுடன் தழைந்தன.

ஏன் இவன் இப்படி ஒரு திமிர் பிடித்தவனாக, தலைக் கனம் நிறைந்தவனாக இருக்கிறானென்ற சஞ்சலமும் வருவதாய்!

உடனே தன்னை அமைதிப்படுத்தியபடி நிமிர்ந்த போது, எதிரில் அவன் நின்றிருந்த இடம் வெற்றிடமாய்!

ஏனோ, அவளை ஏளனம் செய்தவன் வாயாலேயே பாராட்டைப் பெற வேண்டும் என்று உள்ளம் விழைந்தது.

இதுவரை, இதுபோல் யாருமே அவளைப் புறக்கணித்ததும் இல்லை... உதாசீனப்படுத்தியதுமில்லை!

பிறகு, அனைவரும் சாப்பிடும் போதும், சஞ்சீவ் அவளுடனே சுற்றிக் கொண்டிருந்தான்.

ஆனால் விக்டரைத்தான் எங்குமே காண முடியவில்லை!

இவனுடன் எப்படித்தான் ஒரு பெண் வாழ்ந்தாளோ என்ற நினைவில் மனதில் பரவிய வெப்பம், ஒரு பெருமூச்சாய் வெளிவந்தது.

''என்ன சிவி... இப்படி ஒரு பெருமூச்சு விடறே! என்ன... யாரையாவது நினைச்சிட்டிருந்தியா? எனக்கு பயமாருக்கு!''

திடீரென்று கூறிய சஞ்சீவையே ஏறிட்டவள், ''நான் யாரையாவது நினைச்சா நீங்க ஏன் பயப்படணும் சஞ்சீவ்? ப்ளீஸ்... நாம நல்ல ஃப்ரெண்ட்ஸாவே இருக்கலாமே!'' தலை சரித்துக் கெஞ்சினாள்.



''ம்... ஒரு அழகான பொண்ணு இவ்வளவு கெஞ்சும் போது ஒகே... ப்ரெண்ட்ஸ்!'' என்றபடி அவன் கை நீட்ட அதில் மெதுவாகத் தன் விரல்களைப் பதித்தாள் அவள்.

அன்றைய விழா இனிமையாக முடிந்து வெளியே வந்தபோது விக்டருடைய பார்வையும் முகபாவனையும் நினைவில் ஊசியாய் அவளை உரசிக் கொண்டே இருந்தன.

அன்றிரவு உறங்கும் வரை அது தொடர, எவனோ ஒருவனுடைய புறக்கணிப்பும், வெறுப்பும் தன்னை இனி பாதிக்க விடக்கூடாதென்ற உறுதியுடன் உறங்க ஆரம்பித்தாள் அவள்.

* * *

மறுநாள் காலையில் வாக்கிங் செல்ல முடியாமல் அலுப்பாக இருக்கவே, மாலையில் மூவரும் கிளம்பினர்.

இயற்கையை ரசித்தபடி அவள் மெதுவாக நடந்து வர, கிரிக்கெட்டைப் பற்றி காரசாரமாக விவாதித்தபடி முன்னே சென்று கொண்டிருந்தனர், சுஜயும் அருணும்!

திடீரென்று ஒரு குதிரையின் குளம்பொலிகள் பின் புறம் பலமாக ஒலிக்க, திடுக்கிட்டுத் திரும்பியவள், தடுமாறி பக்கவாட்டு மலைத் திட்டில் சரிந்தாள்.

'அக்கா'வென்ற அலறலுடன் சுஜயும் அருணும் ஓடி வந்து அவளைத் தூக்கி நிறுத்த, உதட்டில் ஏளன வளைவுடன், ஒரு அரசகுமாரனைப் போல் கம்பீரமாக குதிரையில் ஆரோகணித்திருந்தான் விக்டர்.

''என்ன பசங்களா? உங்க அக்காவுக்கு குதிரைன்னா இவ்வளவு பயமா? என்னவோ பேயைப் பாத்த மாதிரி பயப்படறாங்க!''

நக்கலாகக் கேட்டுவிட்டு லாவகத்துடன் குதிரையைத் திருப்பி வேகமாக ஓட்டிச் சென்று விட்டான்.

அப்போதுதான், இங்கு வரும்போது உஷா கூறியது நினைவிற்கு வருவதாய்!

''உன்னை எந்த அரசகுமாரன் வந்து குதிரையில தூக்கிட்டுப் போகப் போறானோ''வென்ற அவரின் வரிகள் விதிர்ப்பை விதைத்தன.

ஒரு கணம் உறைந்து நின்றவள், ''பெரிய ராஜகுமாரன்னு நினைப்பு! சே!'' என்றபடி நடையைத் தொடர்ந்தாள்.

வீட்டிற்கு வந்தபோது, சஞ்சீவின் தாயும் தந்தையும் வந்திருந்தனர்.

அவர்களை வரவேற்று விட்டு உள்ளே சென்ற போதுதான், பாமா அவளைத் தேடி வந்தார்.

''சிவி! அவங்க எதுக்கு வந்திருக்காங்க தெரியுமா?'' குறும்புடன் வினவினார்.

''ம்.. தாத்தாவைப் பாக்க வந்திருப்பாங்க சித்தி...''

விட்டேத்தியாகக் கூறியவளையே ஒரு கணம் ஏறிட்டவர், ''ஊஹூம்... உன்னைப் பெண் கேட்டு வந்திருக்காங்க! எங்க எல்லாருக்கும் சம்மதம்! சஞ்சீவும் நம்ம மாதிரி தான்... வீட்டுக்கு ஒரே பையன்! உங்கப்பா அம்மா வோடப் பேசணும் அதான் அடுத்தது!''

அவர் பேசிக் கொண்டே செல்ல திகைப்பும், விதிர்ப்புமாய் சிலையாய் சமைந்து நின்றவள், உடனே கலைந்தாள்.



''சித்தி... ப்ளீஸ்... என்னைக் கேக்காம எந்த முடிவும் எடுக்க வேண்டாம்...'' என்றவள் உடனே வெளியே வந்தாள்.

''தாத்தா... ஒரு நிமிஷம்'' என்றபோது, தன் காதலை இப்போது வெளியிட வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு தான் தள்ளப் பட்டதை உணர்ந்தாள் அவள்.

''என்னம்மா! இங்கே வந்து உக்காருடா செல்லம்! இவங்க உன்னைப் பாக்கத்தான் வந்திருக்காங்க!''

கோதை வாஞ்சையுடன் அழைக்க, பவ்யமாக அருகில் அமர்ந்தாள்.

''என்னம்மா! எப்படி இருக்கே? எங்க சஞ்சீவுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்காம்! அவனுக்கு எதிலயும் அவசரம்தான்! உடனே போகச் சொன்னான் அதான் வந்தோம்!''

அவனுடைய அம்மா கூறியபோது, என்ன சொல்வதென்று புரியாமல் பெரும் பரிதாபமே வருவதாய்!

''சாரி ஆன்ட்டி நான் இப்ப கல்யாணத்துக்குத் தயாரா இல்லை. அதோட நான்... வேற ஒருத்தரை விரும்பறேன்.''

அவள் தர்ம சங்கடத்துடன் முடிக்க, அனைவரும் பதைப்புடன் அவள்புறம் திரும்பினர்.

''சிவிம்மா!'' பாட்டி தவிப்புடன் இரைய, ''தயவு செஞ்சு இனிமே என் கல்யாணப் பேச்சை எடுக்காதீங்க!''

கெஞ்சிய விழிகளுடன் கையெடுத்துக் கும்பிட்டு அனைவரையும் யாசித்தவள், சட்டென்று திரும்பி அறைக்குள் ஓடி விட்டாள்.

மறு நிமிடமே, சஞ்சீவியின் தாயும் தந்தையும் மெதுவாக எழுந்து செல்ல, உறைபனியாய் அங்கு ஒரு வித நிசப்தம் நிறைவதாய்!

தாத்தாவும் பாட்டியும் வியப்பும் சஞ்சலமுமாய் அசையாது அமர்ந்திருக்க, சிவமுருகன் கோபத்துடன் வெளியே சென்றார்.

பாமாவும், உஷாவும் ஒருவரை ஒருவர் பார்த்து தர்மசங்கடத்துடன் விழித்தபடி சிவியைத் தேடிச் சென்றனர்.

## 6

ஜன்னலோரம் நின்று மலை முகட்டை வெறித்தபடி நின்றிருந்தவளை யோசனையுடன் அணுகினர்.

"என்ன சிவிம்மா? இப்படி அவங்க எதிரிலேயே சொல்லிட்டு வந்திட்டே?" ஆதங்கத்துடன் கேட்டார் உஷா.

"சித்தி! ஆரம்பத்துலயே இந்த விஷயத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கறதுதான் நல்லதுன்னு எனக்குத் தோணுச்சி! இன்னிக்கு இவங்க... நாளைக்கு இன்னொருத்தர் வருவாங்க... தேவையில்லாத குழப்பம், வருத்தம் எல்லாம் வரும்... அதனாலதான் இப்படிப் பண்ணினேன்."

உறுதியாகக் கூறியவளையே வியப்பும் பயமுமாக ஏறிட்டார் உஷா.

"இது அண்ணாவுக்கும் அண்ணிக்கும் தெரியுமா சிவி?" சந்தேகத்துடன் கேட்டார்.

"தெரியாது அத்தை! ஆனா இன்னிக்குத் தெரிஞ்சிடும்!"

"என் உணர்வுகளையும் புரிந்து கொள்ளுங்களேன் ப்ளீஸ்!" என்ற தவிப்பும், யாசிப்பும் அவள் விழிகளில் கசிய, வேகமாய் வந்து அணைத்துக் கொண்டார் அவர்.



வெளியே சிவமுருகன் இரைவது சத்தமாகக் கேட்டது. "அப்பா! நான் அண்ணாவுக்கு போன் செஞ்சிட்டேன்... இன்னிக்கு நைட்டு ரெண்டு பேரும் கிளம்பி வரேன்னிருக்காங்க!"

நிலைமை விபரீதமாகச் செல்வதும், தான் மீள முடியாத ஒரு இக்கட்டில் மாட்டிக் கொண்டு விட்டதையும் அவள் உணரும்போதே, பெரியவர்கள் இருவரும் வெளியே சென்றனர்.

அப்போதுதான், உடனே சுந்தரிடம் பேச வேண்டிய நேரம் வந்து விட்டதையும் உணர்ந்தாள் அவள்.

அவசரமாக அவனுடைய செல்லுக்குத் தொடர்பு கொண்டபோது, முதலில் வேறு யாரோ எடுத்தார்கள்.

"ஹலோ இது சுந்தரோட செல் நம்பர்தானே... அவர் இருக்காரா?" பதட்டத்துடன் கேட்டாள் அவள்.

"ஒரு நிமிஷம்!" என்ற பிறகு செல் கைமாற சுந்தர் பேசினான்.

"ஹலோ! சிவியா?" என்றவனுடைய குரல் பெரிதும் ஓய்ந்து தெரிந்தது.

முன்பிருந்த ஆர்வமும் அவள் குரலைக் கேட்டவுடன் ஜனிக்கும் மகிழ்ச்சியும், கிளர்ச்சியும், தொலைந்து போனது போல்!

"ஆமாம் சுந்தர்! எப்படி இருக்கீங்க? இங்கே ஒரு சின்ன ப்ரச்னை. நம்ம விஷயத்தை வீட்டில சொல்ல வேண்டிய நேரம் வந்துடிச்சி" தவிப்புடன் கூறினாள்.

"ஓ!" என்றவன், "சிவி! நான் அடுத்த வாரமே கிளம்பி துபாய் போறேன். ஏஜெண்ட் கிட்டே பணமெல்லாம் கட்டி பாஸ்போர்ட் எல்லாம் ரெடி பண்ணியாச்சு! எப்படியாவது சமாளிச்சிக்கயேன்... ப்ளீஸ்!" மெல்லிய குரலில் கெஞ்சினான்.

அவனுடைய சோர்வுக்குக் காரணம் புரிந்து விட, ''சுந்தர்! நான் ஒண்ணு சொல்லவா? இந்த வேலை இல்லைன்னாக் கூட எங்கப்பாவால வேற ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு பண்ண முடியும்!'' தயக்கத்துடன் நிறுத்தினாள்.

முன்பு ஒரு முறை இதுபோல் கூறி அவனிடம் திட்டு வாங்கியதும், அதைப் பொருட்படுத்தாமல் தன் நண்பன் என்று கூறி, அவருடைய நண்பரின் கம்பெனியில் வேலை வாங்கித் தந்ததும் நினைவு வந்தது.

''ம்.. எது? போன தடவை மாதிரியா? ஒரு கம்பெனியில சேத்துவிட்டு என்னை என்னவோ ஒண்ணும் தெரியாதவன் மாதிரி பொய்க் கணக்கு எழுதச் சொல்லிக் குடுத்து அந்த ஆள் எப்பப் பாரு தொண தொணத்தானே... உன் வேலையும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம்னு அவன் மூஞ்சியிலேயே விட்டெறிஞ்சுட்டு வந்தேனே... மறந்து போச்சா?'' படபடவென்று பொரிந்தான்.

''சரி... அதை விடு! இப்ப மட்டும் ஏஜெண்ட்கிட்ட பணம் கட்டி வேலைக்குப் போறியே... அதுக்கு எப்படி ஒத்துக்கிட்டே?'' கூர்மையாகக் கேட்டாள்.

''ம்... அது எங்க அம்மா செஞ்ச வேலை! குருவி சேக்கற மாதிரி கொஞ்சம் கொஞ்சமா என் தங்கை கல்யாணத்துக்காக அவங்க சேத்து வெச்சிருந்த ரெண்டு லட்சத்தை அவசரப்பட்டுக் கட்டிட்டு வந்திட்டாங்க! என்னால மறுக்கவும் முடியலை பணத்தை திருப்பி வாங்கவும் முடியாது. நான் போய்த்தான் ஆகணும்.

''ஒரு வருஷம் கழிச்சி எப்படியாவது வரப் பார்க்கறேன்.''



சோர்வும், வேதனையுமாக கூற, அவன் மீது பெரும் பரிதாபமே வந்தது.

நல்ல படிப்பு, உயர்ந்த கொள்கைகள் என்று வளர்ந்திருந்தாலும் வாழ்க்கையின் யதார்த்தங்கள் நெளிவு சுளிவுகளை அவன் பழகவில்லை.

அந்த வட்டத்திற்குள் வாழவும் அவனுக்குப் பிடிக்கவில்லை...

பணம் கொடுத்து வேலை வாங்குவது... ரெகமண்டேஷனில் வேலை கிடைப்பது... லஞ்சம் வாங்குதல்... எல்லாமே தவறென்று ஒரு ஒழுக்கமான கொள்கைப் பிடிப்புள்ள தந்தையால் வளர்க்கப்பட்டவன் அவன்.

முதன் முதலாக ஒரு ஏஜெண்ட்டின் மூலமாகப் பணம் கட்டி குடும்பத்தின் நிலையறிந்து வேலைக்குச் செல்லப் போகிறான்.

இந்த நிலையில் அவனை அதை விட்டு விட்டு எனக்காக வாவென்று கூறுவதும் முறையில்லையென்பது புரிவதாய்!

இங்கு எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்ற உறுதியும் மனத் தெளிவும் வர, அவன் போனை வைத்து விட்டது புரிந்தது!

ஒரு பெருமூச்சுடன் அமர்ந்து இந்த ப்ரச்னையை எப்படிச் சமாளிக்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தாள் சிவி.

* * *

அன்று முழுவதும் வீட்டில் ஒரு மயான அமைதி நிலவ, இரவு அவளுடைய நித்திரை எதனாலோ தடைபட்டது.

விழித்துப் பார்த்தால் அருகில் படுத்திருந்த உஷாவைக் காணவில்லை.

வெளியே ஏதோ புரியாத சப்தங்கள் கேட்க, பதட்டத்துடன் எழுந்து கீழே வந்தாள்.

பாட்டியின் அறையில் விளக்கெரிய, வேலைக்காரர்கள் பதட்டத்துடன் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தனர்.

உள்ளே எட்டிப் பார்த்தபோது பாட்டி நினைவின்றிப் படுத்திருக்க, கவலை சுமந்த முகங்களுடன் அனைவரும் சுற்றிலும் நின்றிருந்தனர்.

அவளைக் கண்டதும், வேதநாயகம் வாஞ்சையுடன் கை நீட்ட ஓடிச் சென்று கட்டிலில் அமர்ந்தவளுக்கு, தொண்டையை அடைப்பது போல்!

"என்னாச்சு தாத்தா?" மெதுவாகக் கேட்டாள்.

"எப்பவுமே வர தலைவலிதான்! இன்னிக்கு மருந்து தடவியும் சரியாகலை! தாங்க முடியாம அழ ஆரம்பிச்சிட்டா! திடீர்னு நினைவு போயி மரக்கட்டையா விழுந்திட்டா! டாக்டருக்கு போன் பண்ணியிருக்கோம்! இப்ப வந்திடுவாரு!"

கவலையுடன் அவர் கூறியதும் ஆதரவாகக் கைகளைப் பற்றி அமர்ந்தபோது, ஏதோ ஒரு குற்றவுணர்ச்சி உள்ளே நெருடுவதாய்!

பிறகு குடும்ப டாக்டர் வந்து பார்த்து விட்டு உடனே பாட்டியை ஹாஸ்பிடலில் அட்மிட் செய்ய வேண்டுமென்று கூற கோயம்புத்தூரிலிருந்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது.

சிவமுருகனும், உஷாவும் உடன் செல்ல, மற்றவர்கள் கவலையுடன் அவரவர் அறைக்கு வந்தனர்.



வெகு நேரத்திற்குப் பிறகு கவலையும் உறுத்தலுமாய் உறங்க ஆரம்பித்தவளை திடீரென்று இரு பிஞ்சுக் கரங்கள் உலுப்பின.

சிரமப்பட்டு கண் விழித்தால் எதிரே சுஜய் நின்றிருந்தான்.

"அக்கா" பெரியப்பாவும் பெரியம்மாவும் வந்துட்டாங்க! உங்களை அழைச்சிட்டு வரச் சொன்னாங்க!"

உடனே எழுந்தவளுக்குள் பயமும், விதிர்ப்பும் போட்டி போட்டுக் கொண்டு வர, பல் தேய்த்து முகம் கழுவி வெளியே சென்றாள்.

தாத்தாவின் அறையில் கோபத்துடன் காத்திருந்தனர்... அவளுடைய தந்தை சிவகடாட்சமும் அருகிலேயே அவளுடைய தாய் மாலதியும்!

என்ன சொல்வதென்று புரியாமல் ஒரு மௌனத் தலையசைப்புடன் அவள் தாத்தாவுக்குப் பக்கத்தில் அமர்ந்த போது கட்டெரிக்கும் விழிகளுடன் அவளை சாட ஆரம்பித்தார் சிவகடாட்சம்!

"உன் மனசுல நீ என்ன நினைச்சிட்டிருக்கே சிவி? யாரையோ லவ் பண்றேன்னு சொன்னியாமே! ஏன் எங்களுக்குத் தெரியாதா? உன் வாழ்க்கைய எப்படி அமைச்சுத் தரணும்னு...? இப்ப பாட்டி வேற உடம்பு சரியில்லாம படுத்திட்டாங்க பாரு! சே!"

கோபாவேசத்துடன் இரைந்தார்.

"ப்ச்! கடாட்சம்... உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லாமப் போனதுக்கும், இவளுக்கும் சம்மந்தமில்லை! சும்மா அவளைத் திட்டாதே!

"கோதைக்கு எப்பவுமே வர தலைவலி! ஒரு வருஷமா இருந்திட்டுதான் இருக்கு! இப்ப அதிகமாகி மயக்க மாயிட்டா! ஹாஸ்பிடல்லே சேர்த்துருக்கோம்! எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடறே?"

அவளுக்கு ஆதரவாகப் பேசியவர், பேத்தியின் கையைப் பிடித்து மெல்ல அழுத்தினார்.

"என்னப்பா! நீங்களும் இவளுக்கு சப்போர்ட் பண்ணிக் கிட்டு! வீட்டுக்கு ஒரே பேத்தின்னு ரொம்ப செல்லம் குடுத்துத்தான், இவ குட்டிச் சுவராப் போயி நிக்கறா!" தந்தையிடம் சீறினார் அவர்!

"ஏங்க! கொஞ்சம் பொறுமையா இருங்க! ஏற்கெனவே அத்தைக்கு உடம்பு சரியில்லை! மாமாவை வேற ஏன் டென்ஷனாக்குறீங்க?"

மெல்லிய குரலில் மாலதி உரைக்க, வேகமாகத் திரும்பிய சிவகடாட்சம் எதிர்பாராத விதமாக மனைவியைப் பளாரென்று அறைந்தார்.

"எல்லாம் உன் தப்பு! உன் வளர்ப்பு சரியாயிருந்தா, இவ இப்படி செஞ்சிட்டு வந்து நிப்பாளா?" கர்ண கடூரமாக உறுமினார்.

"கடாட்சம்! என்ன பழக்கம் இது! முதல்லே உன் வெறித் தனத்தை நிறுத்து! என்னவோ இந்த வீட்டுல நடக்காத ஒரு விஷயம் நடந்திட்ட மாதிரி ஏன் படபடக்கிறே?

"உன் தம்பி பாமாவை லவ் பண்ணிட்டு வந்தப்போ, என் கிட்டே வந்து சப்போர்ட் பண்ணிப் பேசினது நீதானே! அப்ப எனக்கு எப்படி இருந்திருக்கும்!

"எனக்குத் தெரியாம அவன் கல்யாணமே பண்ணிட்டு வந்தான்... குழந்தை பிறந்தவுடனே சேத்துகிட்டோம்...



இப்ப என்ன கெட்டுப் போச்சு.... நல்லாத்தானே இருக் கான்! ஆனா அவனும் உன்னை மாதிரித்தான் குதிக் கிறான்."

"சரி! இப்ப உங்களுக்கு சந்தோஷம் தானே! நீங்க பத்து வருஷத்துக்கு முந்தி அனுபவிச்சதை நான் இப்ப அனுபவிக்கிறேன்... விடுங்க!"

"கடாட்சம்! நான் அதைச் சொல்லலைப்பா! உன் தம்பிக்குன்னா ஒரு நியாயம்.. என் பேத்திக்குன்னா வேறயான்னு கேட்டேன். வேற ஒண்ணுமில்லை! முதல்லே போய் குளிச்சிட்டு டிபன் சாப்பிட வாங்க... அப்புறமாப் பேசுவோம்!" என்று அந்த ப்ரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்தார் அவர்.

பிறகு சிவகடாட்சம் கோபமாக வெளியேற, மாலதி அவரைப் பின் தொடர்ந்தார்.

ஆனால் அனைவரும் டிபன் சாப்பிட்டு முடிக்கும் போதே மருத்துவமனையிலிருந்து பதட்டத்துடன் போன் செய்தார் சிவமுருகன்.

கோதைக்கு மூளையில் பெரிய கேன்சர் கட்டி ஒன்று இருப்பதாக சி.டி. ஸ்கேனில் தெரிவதாகவும், இந்த வயதில் ஆபரேஷன் இயலாத காரியமென்று டாக்டர் கூறிய தாகவும் அவர் கூற, வீடே ஸ்தம்பித்துப் போனது.

உடனே கிளம்பி சிவகடாட்சமும் மாலதியும், பாமாவும் அங்கு விரைய, சிவி தாத்தாவிற்கு துணையிருந்தாள்.

டாக்டர்கள் கைவிரித்து விட்ட நிலையில், ஓரளவு நினைவு வந்து, மறு நாளே வீட்டிற்கு அழைத்து வரப் பட்டார் கோதை.

இன்னும் இரண்டு மாதங்கள்தான் அவருடைய ஆயுட் காலமென்று தெரிந்தபோது, அனைவரும் அதிர்ந்து போயினர்.

வேதநாயகம் இந்தத் தகவலறிந்து நிலை குலைந்து போனார்.

கோதையிடம் மட்டும் எதுவும் கூறாமல், மருந்து மாத்திரைகளை கொடுத்து, ஆயுட் காலத்தை நீடிக்க முடிவு செய்தனர்.

ஒரு ஆயாவையும் இருபத்து நாலு மணி நேரமும் அவருக்குத் துணையாக இருக்கும்படி நியமித்தனர்.

கோதை இப்போது மெதுவாகப் பேச ஆரம்பித்தாலும், அவரால் எழுந்து நடக்க இயலவில்லை.

* * *

ஒருநாள் வேதநாயகம் அனைவரையும் ஒரு முடிவுடன் தன் அறைக்கு அழைத்தார்.

கோதை இருக்கும்போதே சிவிக்கு திருமணத்தை முடித்து, அதைக் கண் குளிரப் பார்க்கும் கடைசி வாய்ப்பை அவருக்கு அளிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்.

சிவிக்குத்தான் பெரும் தவிப்பாய்... இப்போது சுந்தரும் வர முடியாது... என்ன செய்வதென்று பெரிதும் குழம்பிப் போனாள் அவள்.

சிவகடாட்சமும், மாலதியும் மலைத்து நிற்க, வேத நாயகமே பேத்தியிடம் பேசினார்.

"சிவி! நீ விரும்பின அந்தப் பையன் யாருன்னு சொல்லுடா! உங்க பாட்டிக்காகவாவது சொல்லு! அவ உன் கல்யாணத்தை கண் குளிரப் பாத்த நிம்மதியில யாவது அமைதியாப் போகட்டும்!"



கலங்கிய கண்களுடன் கேட்டவருக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் அவள் பதறி விழித்தாள்.

உடனே "ஏய்... எல்லாத்துக்கும் நாங்க இறங்கி வந்தா இப்படி முழிக்கிறே? ஏதாவது தப்பு செஞ்சு நம்ம குடும்பத்துக்கு தீராப் பழியைக் கொண்டு வந்திட்டியா?"

உயர்த்திய கரங்களுடன் அவளருகில் வந்த அண் ணனைப் பாய்ந்து வந்து தடுத்தார் சிவமுருகன்!

நிலைமை விபரீதமாகிப் போவதையும், தன்னால் எதுவுமே செய்ய முடியாத இயலாமையும் இதயத்தை இறுகப் பிசைய, தவித்துப் போய் ஊமையாய் உறைந்து நின்றாள் அவள்.

சுந்தரிடம் மீண்டும் பேசியபோது, அவள் பேசுவ தையே கேட்காமல் நிர்த்தாட்சண்யமாக மறுத்து விட் டான் அவன்.

எக்காரணத்தை முன்னிட்டும் அவன் தனக்காக துபாயிலிருந்து வருவானென்று தோன்றவில்லை!

அப்படியே வந்தாலும் தன் தந்தை அளிக்கக்கூடிய பணத்தையும் வேலையையும் நிராகரிப்பானே ஒழிய, ஏற்றுக் கொள்வதற்கு அவனுடைய பிடிவாதமும் தன் மானமும் நிச்சயம் இடம் தராது.

இந்த நிலையில் நான் என்ன செய்யப் போகிறேன்... மனதிற்குள் மறுகியபடி மாடிக்கு ஓடிச் சென்று அறைக் கதவை மூடிக் கொண்டாள்.

பெரியவர்களின் முகத்திலோ புரியாத புதிராய் பல கேள்விகள்!

தாங்களே இறங்கி வந்து அவளின் காதலை ஏற்றுக் கொள்ள முடிவு செய்யும்போதும், இவள் ஏன் இப்படிப் பதறுகிறாள் என்ற ஆராய்ச்சி!

''என்னப்பா இவ? எதுவுமே சொல்லாம அழுதுட்டே ஓடறா? இவளுக்கு என்ன ப்ரச்னை? அந்தப் பையன் யாருன்னு சொல்ல வேண்டியதுதானே?''

வேதநாயகம் குழப்பத்துடன் கேட்க இரு கைகளிலும் தலையைத் தாங்கியபடி சோபாவில் சரிந்தார் சிவகடாட்சம்!

மற்றவர்கள் சிலையாய் உறைந்து நிற்க, அதே நேரம் பதைப்புடன் சுந்தருக்குத் தொடர்பு கொண்டாள் சிவி!

வெகுநேரம் கழித்து எடுத்தவன், ''என்ன சிவி? புரிஞ்சிக்காம தொந்தரவு பண்றே? என்ன வேணும் உனக்கு?'' எரிச்சலுடன் கேட்டான்.

''இல்லை! இங்கே வீட்டில பாட்டிக்கு ரொம்ப உடம்பு முடியலை சுந்தர்! அதனால கல்யாணத்துக்கு ரொம்ப வற்புறுத்தறாங்க! என்ன செய்யறதுன்னு புரியலை!'' கண்ணீருடன் கூறினாள்.

''ப்ச்! இங்கேயே நான் ஏகப்பட்ட ப்ரச்னையில மாட்டிட்டிருக்கேன்! என்னால இப்ப எதைப் பத்தியும் நினைக்க முடியாது! புரியுதா?''

''ப்ளீஸ் சுந்தர்! என்னைப் பத்தியும் கொஞ்சம் நினைச்சிப் பாரு! நான் என்ன செய்யறது?''

''வேற யாரையாவது உன் காதலன்னு சொல்லி எப்படியாவது சமாளியேன்! ஒரு வருஷம் கழிச்சி நான் வந்திட்றேன்! இப்ப விசாவுக்கு அலைஞ்சிட்டுருக்கேன். மூச்சு முட்டுது! எப்படியாவது மேனேஜ் பண்ணிக்க சிவி! நீதான் புத்திசாலியாச்சே'' கூறிவிட்டு சட்டென்று போனை வைத்து விட்டான்.

''கடவுளே! இப்போது என்ன செய்வது?'' என்ற பரிதவிப்புடன் அவள் அமர்ந்திருந்தபோது, உஷா மெதுவாக உள்ளே நுழைந்தார்.



''சிவிம்மா! எல்லாரும் ரொம்ப டென்ஷனா இருக்காங்க! ஏன் பதில் சொல்லாம ஓடி வந்துட்டே! நீ யாரை விரும்பறேன்னு சொல்லிட வேண்டியதுதானே? எனக்கு ஒரு சந்தேகம்! நான் கெஸ் பண்ணட்டுமா?'' யோசனையுடன் கேட்டார் அவர்.

புரியாமல் விழித்தபடி அவள் நிமிர, ''நம்ம பக்கத்து எஸ்டேட் விக்டர் ராபின்சன் தானே அது? அருண் சொல்லிட்டே இருந்தான்... நீங்க போற வழியிலெல்லாம் அந்தப் பையன் வந்து ஏதாவது வம்பு பண்றதா? அன்னிக்கு உன்னையும் அந்தப் பையனையும் ஃபங்ஷன்லே நான் கவனிச்சிட்டேதான் இருந்தேன்.

''அவனுக்கும், உனக்கும் ஏதோ ஊடல்னு நினைக்கிறேன். ரெண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் கோபமா பார்வையாலேயே *சீண்டிட்டிருந்தீங்க*.

''நம்ம ஊருக்கு வரும்போது நான் கேட்டப்ப நீ யாரையுமே விரும்பலைன்னு சொன்னே... அப்போ இங்கே வந்தப்புறம்தானே காதலிக்க ஆரம்பிச்சிருக்கணும்! நான் யூகிச்சது சரிதானே?'' பெருமையுடன் கேட்டார்.

திக்கென்று அவள் அதிர்ந்து நிமிர, அவள் மறுப்பதற்குள்ளேயே உற்சாகத்துடன் வெளியே ஓடினார் அவர்.

''அத்தை... நான்..'' அவளுடைய வார்த்தைகள் காற்றில் கரைந்தன.

வேகமாக அவள் கீழே இறங்கி வந்தபோது, அவர் எல்லோரிடமும் தான் யூகித்த விபரத்தைக் கூறி விட்டிருந்தார்.

ஒவ்வொருவர் முகத்திலும் விதவிதமான உணர்வுகள் வர்ண ஜாலம் காட்டின.

உஷா கூறியதை மறுக்கவும் முடியாமல், செய்வதறியாது அவள் உறைந்து நிற்கும்போதே, கையை நீட்டி பேத்தியை 'வா...'வென்று அழைத்தார் வேதநாயகம்.

அவள் இயந்திரம் போல் அருகில் செல்ல, தன் அருகே அவளை அமரும்படி சைகை செய்தார் அவர்.

''சிவி! யாராயிருந்தாலும் சரி.. நான் தடை சொல்லப் போறதில்லை. கிறித்தவர்னா என்ன... அவரும் மனுஷர் தானே! உன் பாட்டியோட நிம்மதி... உன் சந்தோஷம் தான் இப்ப எனக்கு முக்கியம்! இதுதான் என் முடிவு!'' என்றவர் மூத்த மகனிடம் திரும்பினார்.

''கடாட்சம்! என்ன இருந்தாலும் அவ உன் மக! நான் என் விருப்பத்தை சொன்னாலும் இறுதியா முடிவெடுக்க வேண்டியவன் நீ! யோசிச்சு ஒரு நல்ல முடிவா எடு!'' என்றார் முடிவாக!

மாலதியும், பாமாவும் தவிப்புடன் நிற்க, சிவமுருகனுடைய முகம் சுருங்கி இருண்டிருந்தது.

உஷா மட்டுமே இயல்பாக நிற்க, சிவகடாட்சம் மிருகமாய் உறுமியபடி இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார்.

கடவுளே பார்த்து இந்த இக்கட்டிலிருந்து தப்புவதற்கான ஒரு வழியை அளித்தது போல் தோன்ற, மௌனமாக நின்றிருந்தாள் அவள்.

''பாத்தீங்களாப்பா? எவ்வளவு அழுத்தமா நிக்கறா பாருங்க! நீங்க சம்மதிச்சிட்டீங்க... என்ன ப்ரச்னை வந்தாலும் துணையிருப்பீங்கன்ற திமிரு! இவளுக்கு நம்ம மதத்திலே எவனுமே கிடைக்கலையான்னு கேளுங்க.''

''கடாட்சம்! இப்பதானே சொன்னேன்... அவங்களும் மனுஷங்கதானே! மூத்த தலைமுறையில இருக்கற நானே



இதை மனசைப் பக்குவப்படுத்திட்டு ஏத்துகிட்டேன். உங்க பெருந்தன்மையை நிரூபிக்க வேண்டிய ஒரு கட்டாயத்துல இப்ப நீயும் உன் தம்பியும்தான் இருக்கீங்க!

''இதே அவன் லவ் பண்ணினப்ப தப்பில்லைன்னு என்கிட்ட வாதாடினே! இப்போ அதையே பொண்ணு செஞ்சா தப்பா? நல்லா யோசிச்சி எல்லாருக்கும் சாதகமான ஒரு முடிவா எடுங்க!''

அழுத்தமான குரலில் கூறிவிட்டு பின்புறம் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டார்.

எதிர்பாராத ஒரு விஷயம் நடந்து விட்ட தவிப்பிலும், இதிலிருந்து எப்படி வெளிவரப் போகிறோமென்ற யோசனையிலும், உணர்வுகள் ஊழிக்காற்றில் அகப்பட்ட படகாய் தத்தளிக்க உறைந்து போய் அமர்ந்திருந்தாள் சிவி!

ஒவ்வொருவராய் அங்கிருந்து வெளியேற, ஆயா சொர்ணம் அவளைத் தேடி வந்தார்.

''சிவிம்மா..... பாட்டி உங்களோட ஏதோ பேசணுமாம்! அழைச்சிட்டு வரச் சொன்னாங்க!'' என்றாள்.

''சிவி! போய் என்னன்னு கேட்டுட்டு வாடா! முடிஞ்சா அவளோட கடைசி ஆசையை எல்லாரும் நிறைவேத்துங்க!'' வேதனையுடன் கூறிவிட்டு சாய்ந்து கொண்டார் வேதநாயகம்!

இதயம், குற்றக் குறுகுறுப்பிலும் பதட்டத்திலும் வாய்க்கு வந்து துடித்தது.

மெதுவாக எழுந்து சென்றவளின் நிம்மதி, அங்கும் தொலைந்து போனது.

அவளைக் கண்டதுமே கண்கள் மின்னத் தலையசைத்து கோதை வரவேற்க, சொர்ணம் இங்கிதத்துடன் வெளியேறினார்.

"சிவி! உன் கல்யாணத்தைப் பாத்துட்டுத் தான் கண் மூடணும்னு ரொம்ப ஆசையா இருக்கு! இந்தப் பாட்டியோட கோரிக்கையை நிறைவேத்துவியா?"

திக்கித் திணறியபடி அவர் கேட்க அவளால் ஏனோ மறுக்கவே முடியவில்லை.

விழியோரம் நீர் துளிர்த்துவிட, அவருடைய நிலை முகத்திலறைய, மெதுவாகத் தலையசைத்து சரியென்றாள்.

"உன் குழந்தையையும் பார்க்கணும்னு ஆசைதான்! ஆனா கடவுள் என்ன முடிவு செஞ்சிருக்காரோ! அப்படி இல்லேன்னா உனக்கே குழந்தையா வந்து பிறந்து நம்ம குடும்பத்துலயே வளரணும்... எல்லாரும் ஒண்ணா இருக்கணும்!" மூச்சு வாங்க நிறுத்தினார்.

உடனே அவருடைய வாயை மெதுவாக மூடினாள்.

"பாட்டி இப்படி எல்லாம் பேசினா எனக்குப் பிடிக்காது! நீங்க இன்னும் நிறைய வருஷம் இருந்து அருண், சுஜய் கல்யாணத்தை எல்லாம் பாக்கத்தான் போறீங்க, பாருங்க!" மனதில் பொங்கிய வேதனையை மறைத்து தைரியம் கூறினாள்.

"ம்... இல்லைடா! எனக்குத் தெரிஞ்சிடுச்சி! இன்னும் கொஞ்ச நாள் தான்! அதனாலதான் உன்கிட்டே இப்படி ஒரு கோரிக்கையை வெச்சேன்!"

அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை!

அவர் கண் மூடி உறங்கத் தொடங்கியதும் மெல்ல வெளியே வந்தபோது, உடனே கல்யாணத்திற்கு சம்மதிக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தாள் அவள்.

உடனே உஷா கூறியதை உண்மை என்று நம்பி, விக்டர் தான் அவளுடைய காதலன் என்று எல்லோரும் நினைப்பதை எண்ணும்போது பெரும் பயம் கிளர்வதாய்!



இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்ற கடவுளாக அமைத்துக் கொடுத்த ஒரு நல்ல வழியோ இதுவென்றும் தோன்ற, விக்டரை நினைத்தாலே உள்ளூர சிறு நடுக்கம் ஓடியது.

வீட்டுப் பெரியவர்கள் அவனிடம் சென்று ஏதாவது பேசி விடும் முன்பு, தானே அவனிடம் எல்லா உண்மைகளையும் கூறுவது நல்லதென்று பட்டது!

உடனே மனம் ஒரு உறுதியுடன் இறுகியது.

## 7

அன்று மாலையே, வாக்கிங் செல்வதாகக் கூறிவிட்டு, விக்டரின் எஸ்டேட்டை நோக்கி, சிவி தனியே நடக்க ஆரம்பித்தாள்.

அவனிடம் எப்படி ஆரம்பிப்பது... எப்படிப் பேசுவது... என்ன வேண்டுவது... பெரும் குழப்பத்துடன் யோசித்தபடி அவள் நடக்க அவளுடைய எண்ணங்களின் நாயகனே எதிரில் குதிரையில் வந்து கொண்டிருந்தான்.

சட்டென்று மனதில் பொங்கிய உற்சாகமெல்லாம் உடனே வடிந்து, இதயம் உலர்ந்து போனது.

அவளைக் கண்டதும் அலட்சியமாக உதடு சுழித்து கடந்து செல்ல முயன்றவனைக் கை நீட்டித் தடுத்து வழி மறித்தாள் அவள்.

"மிஸ்டர் ராபின்சன்... ஒரு நிமிஷம்! நான் உங்களோட கொஞ்சம் பேசணும்."

தயக்கமும் யோசனையுமாக வழி மறித்தவளைக் கண்டவன், இடுங்கிய கண்களுடன் கூர்ந்தபடி, லாவகமாக ஒரே தாவலில் கீழே குதித்தான்.

அழகிய கருப்பு நிறத்தில் பளபளவென்று நின்ற அந்த உயர்ந்த ஜாதி அரேபியக் குதிரை அவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு கம்பீரமாக சிலிர்த்து நின்றது.

அதன் அழகில் கட்டுண்டு ரசித்தபடி நின்றிருந்த வளை அவனுடைய கம்பீரமான கனைப்பு சத்தம் ஈர்த்தது.

மெல்ல திரும்பினால், இதழோரம் ஏளன வளைவுடன், விழிகள் ஊசியின் கூர்மையுடன் உள்ளிறங்க, அசையாது ஒரு போர்வீரன் போல் நின்றிருந்தான் அவன்.

உள்ளூர ஒருவித உதறலும், உறுத்தலுமாய் விழிகளை தழைத்து ஒரு கணம் உறைந்து நின்றவள், உடனே நிமிர்ந்தாள்.

உடனே, என்னவென்பது போல் அவனுடைய ஒற்றைப் புருவம் உயர, வார்த்தைகள், தொண்டைக் குழிக்குள் துடித்தன.

''நான்...'' அவள் தயங்க, ''ப்ச்... என்ன பேச வந்தியோ, அதை உடனே சொல்லு... எனக்கு வேலை இருக்கு. சீக்கிரம் போகணும்!'' அவன் அலட்சியமாக் மொழிந்தான்.

"அது... ரொம்ப பர்சனல்... எனக்காக நீங்க கொஞ்சம் டைம் ஒதுக்க வேண்டியிருக்கும் ப்ளீஸ்..''

அவள் மென் குரலில் இறைஞ்சியபோது, வியப்புடன் அவளையே ஏறிட்டவன், "உம்... உன் பர்சனல் விஷயம் எனக்கு எதுக்கு பெண்ணே? நானும் நீயும் சந்திச்சது... ரெண்டு மூணு தடவை இருக்குமா? அதிலே நமக்குள்ளே பேசறதுக்கு எந்த பர்சனல் மேட்டரும் இருக்கறதா எனக்குத் தோணலை... ஹூம்!'' கூறிவிட்டு உதடு பிதுக்கி தோளைக் குலுக்கி நக்கலாக தலை சரித்து சிரிக்க ஆரம்பித்தான்.



'கடவுளே! இவனிடம் எப்படி அந்த உண்மையைக் கூறப் போகிறேன்' மனம் பதறித் தவித்தது.

அப்போது அவன் குரல் அவளைக் கலைத்தது.

''ஓகே! அப்படிப்பட்ட ஒரு விஷயம்... உன்னை இவ்வளவு சஞ்சலப்படுத்தற அந்த விஷயம் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''உங்களுக்கு ஆரம்பத்திலிருந்து சொன்னாத்தான் புரியும்...''

அவளை சட்டென்று இடைமறித்தான் அவன்...

''சாரி! எனக்கு உன் சுயசரிதையெல்லாம் கேக்க நேரமில்லை. சம்மந்தமுமில்லை... வேலையிருக்கு... உன் மாதிரி வெட்டியா சுத்தற ஆள் நான் இல்லை!'' முகத்திலறைந்தாற்போல் பதில் வந்தது.

''இல்லை... சம்மந்தமிருக்கு!''

அவள் கூறியவுடன் வேகமாகத் திரும்பியவனுடைய முகம் பெரும் சீற்றத்தை சுமந்திருந்தது.

விழிகள் உடனே சிவந்து விட, ''சம்மந்தமா... என்ன உளறுறே?'' மிருகமாய் கர்ஜித்தான்.

உள்ளூர ஓடிய நடுக்கத்தையும், மிரட்சியையும் உடனே சமன் படுத்தியவள், மெல்ல நிமிர்ந்தாள்.

''நான்... உங்களை விரும்பறதா எங்க வீட்டில் பொய் சொல்லிட்டேன்!''

அவள் முடித்தவுடன், அந்த உலகமே அசைவின்றிப் போனதைப் போன்ற தோற்றத்துடன் இறுகி நின்றவன், மறு கணமே சுதாரித்தான்.

''ஏய்... உன் மனசுல நீ என்ன நினைச்சிட்டிருக்கே? நீ என்ன வேணாலும் செய்வே... மத்தவங்க அதைப்

பொறுத்துப் போகணும்னா? என்கிட்டே உன் வித்தை யெல்லாம் செல்லுபடியாகாது பெண்ணே! போ! இப்பவே போய் உண்மையைச் சொல்லு... இல்லே...'' இடுங்கிய கண்களுடன் சீறினான்.

''முடியாது!''

அவள் உறுதியாகக் கூறவும் வேகமாக அருகில் வந்தவன் ''எவ்வளவு திமிர்...'' என்றபடி பளாரென்று கன்னத்தில் அறைந்து விட்டான்.

இடி போல் இறங்கிய அறையால் தடுமாறி நின்றவள் உயிர்ப்பதற்குள், லாவகமாகத் தாவி குதிரையின் மேல் ஏறியவன், நிற்காமல் வேகமாக ஓட்டிச் சென்று விட்டான்.

''அக்கா! உனக்கும் விக்டர் சாருக்கும் என்ன ப்ரச்னை?''

திடீரென்று ஒலித்த அருணுடைய குரலில் மெல்லக் கலைந்தாள் அவள்.

விழிகளிலிருந்து கோடாய் உற்பத்தியாகிய நீரோடை விரைந்து வழிந்து மார்பில் விழ்ந்தது.

''ஏன்க்கா அழறே?'' என்றபடி அருகில் வந்து கைகளைப் பிடித்து கொண்டான் சுஜய்.

அவளைக் காணோமென்று இருவரும் தேடி வந்திருந் தனர்.

மெதுவாக நடந்தபடி முகத்தைத் துடைத்து சீர் செய்த பிறகு, வீட்டிற்கு மூவரும் வந்தனர்.

ஆனால், மாலையில் நடந்த அந்த விஷயம் இரவில் அந்த வீட்டில் பெரும் புயலை உருவாக்கப் போவதை அவள் அறியவில்லை.

* * *



அன்றிரவு... சிவி சீக்கிரமே உறங்கச் சென்று விட, எப்போதும் போல், பெரியவர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது மெதுவாகக் கண்களைக் கசக்கியபடி சுஜய் அங்கு வர, பாமா ஓடிப்போய் சமாதானம் செய்ய ஆரம் பித்தார்.

''என்னடா? ஏதாவது கனவு கண்டு பயந்திட்டியா? வா... நானும் கூட வந்து படுத்துக்கறேன்.'' என்று அணைத்துக் கொண்டார்.

''இல்லை! இன்னிக்கு சாயந்திரம் வாக்கிங் போனப்ப, அந்த விக்டர் சார், சிவிக்காவை ஓங்கி அறைஞ்சிட்டாரு... அக்கா பாவம் அழுதிட்டே வந்தாங்க...'' தேம்பியபடி கூறினான்.

அதைக் கேட்டு அந்த அறையிலிருந்த அனைவரும் ஒரு கணம் ஸ்தம்பித்து விட, முதலில் பேசியது வேத நாயகம்தான்!

''ஓ! அதான், சாயந்திரம் வெளியே போயிட்டு வந்ததிலிருந்து, சிவியோட முகமே சரியில்லையா? நானும் அவளா ஏதாவது சொல்லுவான்னு பாத்தேன்... பாவம்மா குழந்தை!'' மெதுவாகக் கூறினார்.

''அவன் ஏன்ப்பா நம்ம வீட்டுப் பொண்ணை அடிக் கணும்! எவ்வளவு திமிர் இருக்கணும். இதை சும்மா விடக் கூடாது'' பாய்ந்து எழுந்தார் சிவமுருகன்!

உடனே தலையைக் கையால் தாங்கியபடி சோர்ந்து அமர்ந்து விட்ட, தன் பெரிய மகனையும், கலங்கிய விழி களுடன் அருகில் நின்றிருந்த மருமகளையும் கண் கொண்டு காண முடியாமல் தவித்துப் போனார் வேத நாயகம்!

''ப்ச் முருகா! முதல்லே அமைதியா யோசிப்போம்! இந்த விஷயம் இதுக்குள்ளே வெளியே தெரிய வேண்டாம்னு அந்தப் பையன் நினைச்சிருக்கலாம்!

''கடாட்சத்தைப் பாரு... அவன் எவ்வளவு ஓய்ஞ்சு போயிட்டான்னு! இதை என்கிட்டே விடுங்க... நான் பேசி ஒரு முடிவெடுக்கறேன்... ஆனா, உங்களுக்கு சம்மதமான்னு மட்டும் எனக்குத் தெரியணும்!'' உறுதியான குரலில் வினவினார்.

''எம்ப்பா இவளுக்கு இப்படி புத்தி போச்சு... அதுவும் கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறவனைப் போய் சே!'' சுசப்புடன் சீறினார் கடாட்சம்!

''சரி... விடு... காதல் இதெல்லாம் பாத்து வரதில்லை... முருகன் மட்டும் மலை ஜாதிப் பொண்ணை விரும்பினப்ப, ஜாதி என்னப்பா பெரிசுன்னு வாதாடி பாமாவை நீதானே சேத்து வெச்சே! நம்ம பொண்ணு சந்தோஷமா இருக்கணும்... அதான் இப்ப முக்கியம்!''

''எனக்கென்ன... என்னவோ செஞ்சு தொலைங்க... நான் அவ வாழ்க்கையை எப்படி எப்படியோ கற்பனை செஞ்சு வச்சிருந்தேன். இதான் அவ தலையெழுத்துன்னா அதை மாத்தவா முடியும் சே!'' என்றபடி கடாட்சம் எழுந்து உள்ளே செல்ல, கண்களைத் துடைத்தபடி மாலதியும் பின் தொடர்ந்தார்.

பாமா இறுகிய முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்த சுஜயை தூக்கிச் செல்ல உஷாவும் சிவமுருகனும் மட்டும் யோசனையுடன் அமர்ந்திருந்தனர்.

''சரி... எல்லாரும் போய்ப் படுங்க! நாளைக்குக் காலையிலே நானே அந்தப் பையனைப் பாத்து நேராப் பேசறேன்!'' கூறிவிட்டு தளர்வுடன் எழுந்து தன் அறைக்குச் சென்றார் வேதநாயகம்.



## 8



மறு நாளைய பொழுது, எப்போதும் போல் பட்சிகளின் உற்சாக ஆர்ப்பரிப்புடன் புலர ஆரம்பித்தது.

இரவு சரியாக உறக்கமில்லாததால் விடியலில் உறங்க ஆரம்பித்த சிவியால் எழவே முடியவில்லை.

முதல் நாளைய அதிர்ச்சியிலும், அலைப்புறுதலும் அவளைப் பெரிதும் சோர்வடையச் செய்திருந்தன.

இதுவரை தன் நினைவு தெரிந்த நாளிலிருந்து யாருமே தன்னைக் கை நீட்டி அடித்ததில்லை என்ற உண்மையும் உறுத்துவதாய்!

படுக்கையிலேயே ஓய்ச்சலாகப் புரண்டவளை மெதுவாக சுரண்டியது ஒரு பிஞ்சுக் கரம்.

யாரென்று அவள் திரும்ப, சுஜய் அங்கு நின்றிருந்தான்.

''நேத்து, நான் அம்மா கிட்டே அந்த விக்டர் சார் உன்னை அடிச்சதை சொல்லிட்டேன்க்கா.''

அவன் கூறியதும் பதறி எழுந்தவள், ''ஏன்டா இப்படி செஞ்சே?'' அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க!'' தவிப்புடன் கேட்டாள்.

''எல்லாரும் என்னவோ பேசிக்கிட்டாங்க. எனக்கு தூக்கம் தூக்கமா இருந்ததா? என்ன பேசினாங்கன்னு தெரியலை.. தூங்கிட்டேன்.'' மெதுவாகக் கூறினான்.

''சரி.. சரி... நீ போ. நான் பாத்துக்கறேன்!'' என்றாள் யோசனையுடன்.

பிறகு எழுந்து குளித்துக் கீழே வந்தபோது, எப்போதும் தாத்தா அமர்ந்திருக்கும் அந்த சாய்வு நாற்காலி காலியாக இருந்தது.

உடனே பாட்டியிடம் சென்று சிறிது நேரம் அமர்ந் திருந்தபோது, அவரும் அவளுடைய திருமணத்தைப் பற்றியே பேச ஆரம்பித்தார்.

அவர் திருப்தியுறும் வகையில் பதிலளித்து சீக்கிரமே திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து விட்டு, வீட்டின் பின்புறம் சென்றாள்.

தொலைதூரம் வரை விரிந்து பரந்திருந்த தேயிலைத் தோட்டம் ரம்யமாகக் காட்சியளித்தது.

தொடுவானம் வரை அழகிய பசுமைப் படிக்கட்டு களாய் பச்சைப்பட்டு விரிப்பாக விரவியிருந்த தேயிலைத் தோட்டமும், இடையிடையே அரணாய் உயர்ந்திருந்த மரங்களும் அழகிய ஓவியமாய் சூரிய ஒளிபட்டு ஜொலித்தன.

எறும்புகள் சாரை சாரையாக ஊர்வது போல் தோட்டப் பணியாளர்கள் எஸ்டேட்டின் நடுவே வேலைக்குச் செல்வது புலப்பட்டது.

புல்வெளிக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தோட் டக்காரன் ராமையா வாஞ்சையுடன் அருகில் வந்தார்.

"என்ன சிவிம்மா கொஞ்ச நாளாவே ரொம்ப ஓய்ஞ்சு தெரியறீங்க.. பாட்டி நினைப்பா? பெரியம்மாவுக்கு சரியாயிடும்... கவலைப்படாதீங்க..." மெதுவாக ஆறுதல் கூறினார்.

சிறு முறுவலுடன் அமைதியாக அங்கிருந்து நகர்ந்த வளுக்குள் பெரும் போராட்டம்!



"இந்த சுந்தரை ஏன் விரும்பினோம்... அவனால் தானே இவ்வளவு குழப்பங்கள்!" மனம் சோக வலை பின் னியது.

புல்வெளியில் மெதுவாக நடந்தபடி சுற்றுப்புறத்தைப் பார்வையிட்டபோது, எப்போதும் உற்சாக ஊற்றாய் பீறிட்டு எழுகின்ற சந்தோஷ உணர்வுகள் தொலைந்து இன்று சோக சாம்ராஜ்யமாய் மாறி இருந்தது உலகம்!

## 9



அதே நேரம், விக்டரின் வீட்டிலிருந் தார் வேதநாயகம்!

எதிர்பாராத விருந்தாளியாய் காலையி லேயே எண்டேவரில் வந்து இறங்கிய வரை, விக்டர் எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை அவன் முகபாவமே கூறியது.

ஆனாலும் வீட்டிற்கு வருபவரை வரவேற்கும் வித மாகப் புன்னகைத்து கைகுலுக்கி உள்ளே அழைத்துச் சென்றான்.

ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்ததுமே அவனிடம் திரும்பினார்.

"நான் உங்களோட கொஞ்சம் தனியாப் பேசணுமே? இப்ப உங்களுக்கு நேரம் இருக்குமில்லையா?"

மென்மை கலந்த அழுத்தத்துடன் வந்தது அவர் குரல்!

உடனே இரு புருவங்களும் இடுங்கிவிட, ஏதோ யோசனையுடன் முன்புறமிருந்த தன்னுடைய ஸ்டடி ரூமிற்கு அவரை அழைத்துச் சென்றான் அவன்.

அங்கிருந்த சோபாவில் அவரை அமர வைத்து விட்டு, எதிரே உட்கார்ந்தவனுடைய முகம் இறுகி இருந்தது.

அவனுடைய உணர்வுகளை உடனே வாசித்த வேத நாயகம், மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

''தம்பி! உங்களுக்கும் என் பேத்தி சிவிக்கும் நடு விலே என்ன ப்ரச்னைன்னு எனக்குப் புரியலை... அவளை நீங்க ஏன் அடிச்சீங்கன்னும் நான் கேட்க மாட்டேன்...''

அவர் முடிக்கும் முன்பே, "சார்... அது..." அவன் தயக் கத்துடன் பேச ஆரம்பித்தான்.

''விக்டர்... ஒரு நிமிஷம்! நான் என் பக்கத்து நியா யத்தை சொல்றேன்... அப்புறமா நீங்க உங்க நிலையைச் சொல்லலாம்!" என்றவர், தொடர்ந்து பேசத் துவங்கினார்.

''எங்க வீட்டுக்கு சிவி ஒரே பேத்தி... ரொம்ப செல்லம்...! எங்கு குடும்பத்து ராஜகுமாரின்னுகூட சொல்லலாம்! லீவுக்கு அவ இங்கே வரப்போ, அந்த ஒரு மாசத்துக்காக நான் ஏங்கிக் காத்திட்டிருப்பேன்...

''உங்கம்மாவுக்கும், அப்பாவுக்கும் கூட அவளை ரொம்பப் பிடிக்கும்... எல்லாரையும் தன் அன்பாலயும் பழகுற தன்மையாலயும் உடனே வசீகரிச்சிடற சக்தி படைச்சவ அவ!

''இந்த வருஷம் அவ படிப்பு முடிஞ்சிடுச்சி... அவ ளோட சம்மதத்தோட மாப்பிள்ளை பாக்கலாமின்னு நாங்க முடிவு செஞ்சிருந்தோம்.

"ஆனா எங்க குடும்ப நண்பரோட பையன்... சஞ்சீவைத் தான் உங்களுக்குத் தெரியுமே... அவன்தான் சிவியை கட்டிக்க ஆசைப்பட்டான்!



''அவங்களும் முறையா வந்து பொண்ணு கேட்டாங்க... அப்பதான், சிவி தான் வேற ஒருத்தரை விரும்பறேன்னு உண்மையைச் சொன்னா! அப்பவுமே அது யாருன்னு சொல்ல மறுத்தா!

''ஒருவேளை உங்களுக்கு முன்னாடியே கல்யாணம் முடிஞ்சி நீங்க ஒரு விடோயர்னு தெரிஞ்சா நாங்க ஒத்துக்க மாட்டோம்னு நினைச்சாளோ... இல்லை... நீங்க வேற மதம்கிறதாலே நாங்க மறுப்போம்னு பயந்தாளோ தெரி யலை.

''அன்னிக்கே என் மனைவிக்கு ரொம்ப முடியாம போய் அட்மிட் பண்ற மாதிரி ஆயிடுச்சி... அவளுக்கு அப்பப்ப பயங்கரமா தலைவலி வரும்... மருந்து சாப்பிடுவா அவ்வளவுதான்!

''ஆனா, அன்னிக்குத் தான் தெரிஞ்சுது... அவளுக்கு ப்ரெயின் ட்யூமர்னு...! அது கேன்சருன்னும் இன்னும் ரெண்டு மாசம் தான் அவ உயிரோட இருப்பான்னும் டாக்டர்ஸ் சொல்லிட்டாங்க.

''இந்த வயசில சர்ஜரியும் பண்ண முடியாது... அதனால, வெளிநாட்டிலிருந்து மருந்துகளை வரவழைச்சி அவ வாழப்போற நாட்களை அதிகப்படுத்த முயற்சி செய்ய றோம்!''

அதற்கு மேல் பேச முடியாமல் குரல் உடைந்து விட, அவருடைய கண்களில் கண்ணீர் கசிய ஆரம்பித்தது.

உடனே வேகமாக எழுந்து அருகில் வந்து அமர்ந்தவன் அவருடைய கையை மெதுவாக அழுத்தி ஆறுதல் படுத்தினான்.

சிறிது நேரம் கழித்து, கண்களைத் துடைத்து நிமிர்ந் தவர் மீண்டும் பேசத் துவங்கியபோது, அவனுடைய முகம் சற்று இளகியிருந்தது.

"இப்போ... என் மனைவியோட கடைசி ஆசையே, தன் பேத்தியோட கல்யாணத்தைப் பாக்கணும்கிறதுதான்!

"அப்போதான் கொஞ்சம் வற்புறுத்தி சிவிகிட்டே என் மக பேசியிருக்கா. அவளுக்கு உண்மை தெரிஞ்சிடுச்சி!

"உடனே எங்ககிட்டே வந்து சொல்லிட்டா... வீட்டிலே ஒரே பூகம்பம், பிரளயம் எல்லாமே வந்தது... நீங்களும் என் பேத்தி சிவியும் விரும்பறது தெரிஞ்சதும்!

"அவளோட அப்பாவும் சித்தப்பாவும் பேயாட்டம் ஆடினாங்க.. கத்தினாங்க! நான் தான் அவங்களை சமா தானப்படுத்தி ஒரு வழிக்கு கொண்டு வந்தேன்.

"திடீர்னு நேத்து என் பேரன் சுஜய் வந்து சொல்றான். நீங்க சிவியைக் கோபமா அறைஞ்சதாவும், அவ அழு திட்டே வந்ததாவும்!"

"அதைக் கேட்டவுடனே எனக்கு அப்படியே ஆடிப் போச்சு!

"உடனே உங்ககிட்டே இதைப் பத்தி பேசணும்னு தான் நான் ஓடி வந்தேன்! சிவிக்கு நான் இங்கே வந்ததே தெரியாது... அப்படி என்னப்பா ப்ரச்னை உங்க ரெண்டு பேருக்கும் நடுவிலே?"

ஆதங்கத்துடன் கேட்டுவிட்டு அலைப்புறுதலுடன் அமர்ந்திருந்த பெரியவரைப் பார்க்கும் போது, ஏனோ அவனுக்குத் தன் தந்தையின் நினைவே வருவதாய்!

இதயத்தை ஏதோ ஒரு இனம் புரியாத பயம் இறுக்கிப் பிசைய சிறிது நேரம் மவுனமாக அமர்ந்திருந்தான் அவன்.

"அந்தப் பெண், ஏன் தன்னை அவளுடைய காதல னென்று பொய் கூற வேண்டும்... ஒரு வேளை தன்னை அவள் உண்மையாகவே விரும்பியிருப்பாளோ?"



மனம் பலவித வினாக்களில் மூழ்க, இல்லையென்று அடித்து சத்தியம் செய்தன... அவனது அனுபவமும், பெண்களைப் பற்றிய கணிப்பும், தான் பொய் கூறினே னென்று அவள் உரைத்ததும்!

பணத்திற்காகவென்றால் அவள் அந்த சஞ்சீவையே மணந்திருக்கலாமே... அவனும் தன்னைப் போலவே நல்ல பணம் படைத்தவன்... ஒரு எஸ்டேட் அதிபர்... ஒரே மகனும் கூட!"

ஆனால், இந்த முடிவிற்குப் பின்னால் வேறு ஏதோ ஒரு பெரிய காரணம் இருக்க வேண்டுமென்று தோன்றும் போதே, அது என்னவாக இருக்குமென யோசிக்க விடாமல் பெரியவரின் குரல் அவனைக் கலைத்தது.

"தம்பி! உங்க ரெண்டு பேருக்குள்ளே என்ன மனஸ் தாபம்னு எனக்குத் தெரியாது.. காதலர்களுக்குள்ளே சின்னச் சின்ன சண்டைகள், ஊடல் வர்றது சகஜம்தான்! அதையெல்லாம் பெரிசு பண்ணாம, அந்த சாகப்போற ஜீவனோட கடைசி ஆசையை நீங்க ரெண்டு பேருமா சேர்ந்து நிறைவேத்தணும்!" கைகூப்பி இறைஞ்சினார்.

அவனுக்கோ என்னவோ போலாகி விட்டது.

"ப்ளீஸ்! நீங்க ஏன் என்கிட்டே இப்படிக் கெஞ்சறீங்க... தாத்தா! உங்க பேத்திகிட்டயே கேக்க வேண்டியது தானே?" மெதுவாகக் கேட்டான்.

"அவ எதுவுமே சொல்ல மறுக்கிறாளே! அதான் தம்பி உங்ககிட்டே வந்தேன். சாட்சிக்காரன் கால்லே விழறதை விட சண்டைக்காரன் கால்ல விழலாமில்லையா?

உடைந்த குரலில் அவர் கூற, உடனே தன்னையறி யாமல், "அவளை அனுப்பி வைங்க... நானும் அவளுமாப்

பேசி ஒரு முடிவெடுக்கிறோம்!'' சட்டென்று கூறி விட்டான்.

''ரொம்ப நன்றி தம்பி! இன்னொரு கோரிக்கை! அவளை எந்தக் காலத்திலயும் இனிமே நீங்க அடிக்கக் கூடாது! எடுத்துச் சொன்னா புரிஞ்சுப்பா! என் உயிரே அவதான்... ரொம்ப நல்லவப்பா சிவி! நான் கிளம்பறேன்.'' அவர் குரல் தழுதழுத்தது.

உடனே அவருடைய தோளை பற்றி ஆதரவாக அழுத்தியவன், ''ம்! ஏதாவது சாப்பிட்டுட்டுப் போங்க!'' என்றபடி இண்டர்காமை அழுத்தினான்.

சிறிது நேரத்தில் காபியும் கேக்கும் வர, காபியை மட்டும் பருகி விட்டு அவர் விடைபெற்றார்.

வாசல் வரை வந்து அவரைக் காரில் வழி அனுப்பிய வனுக்குள், ஏன் இந்தப் பொய்யை அவள் கூறினாளென்று பெரும் யோசனை!

அதே கவனத்துடன் உள்ளே வந்தபோது குழந்தை ஜென்னி ஆயாவிடமிருந்து அவனிடம் தாவ மெதுவாகத் தூக்கி அணைத்தபடி தன் அறைக்கு வந்தான்.

## 10

அன்று மாலையில், அவன் தன் னுடைய ஸ்டடி ரூமில் அமர்ந்து எஸ்டேட் அக்கௌண்ட்ஸை சரி பார்த்தபடி இருந்தபோது, அறைக்கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

''யெஸ்.. கம்மின்!'' என்றபடி பைலில் ஆழ்ந்திருந்த போது, புதுவிதமான நறுமணம் நாசியை வருட யோசனை யுடன் திரும்பினான்.



மேனேஜரை எதிர்பார்த்திருந்தவனுக்கு அங்கு சிவி நின்றிருந்தது எதிர்பாராத ஒன்றாய்!

உடனே காலையில் வேதநாயகத்திடம் தான் கூறியது நினைவு வர பொறுமை இழந்த ஒரு மூச்சுடன் எழுந்தான்.

லாங் ஸ்கர்ட்டும் அழகிய லேஸ் டாப்புமாய் ஒரு தேவதை போல் நின்றிருந்தவளுக்குள், புதிதாய் ஒருவித பயமும் மிரட்சியும்!

அவனிடம் எப்படிச் சொல்லித் தன்னைப் புரிய வைப் பது என்றெண்ணும்போதே காலையில் தாத்தா அவளைத் தனியே அழைத்துப் பேசியது நினைவு வந்தது.

விக்டரிடம் தான் எல்லா விஷயங்களையும் பேசி விட்டதாகவும், இனி அவள் போய்த்தான் தங்களுடைய ஊடலை, இடைவெளியைச் சரி செய்ய வேண்டு மென்றும் கூறியபோது, அழுவதா சிரிப்பதா என்று புரியாமல் தான் குழம்பி நின்றதும் ஞாபகம் வருவதாய்!

அதற்குள் அவன் குரல் அவளைக் கலைத்தது.

''இவ்வளவு தூரம் வந்தப்புறம் இப்படிக் கதவுல சாய்ஞ்சு அட்டையாட்டம் ஒட்டிட்டிருந்தா என்ன அர்த்தம்? பேச வந்ததை ஆரம்பிக்க வேண்டியதுதானே?'' ஙைக் குரலில் வினவினான்.

சட்டென்று பரவிய விதிர்ப்பில் தூக்கி வாரிப்போட அவள் நிமிர்ந்தபோது, ''ஏன்... என்னப் பாத்தா அவ்வளவு பயமாவா இருக்கு? இப்படித் தூக்கிப் போடுது! அந்த பயம் இருக்கிறவ எப்படி என்னைக் காதலிக்கிறதா தைரியமா ஒரு பொய்யைச் சொன்னே?'' கூர்மையுடன் கேட்டான்.

முதன் முதலாக ஒரு ஆணிற்கு முன் கட்டுண்டவள் போல் நாவடக்கி நின்ற நிலை பெரும் வேதனையைத் தர

தவிப்புடன் ''சாரி...'' என்று மென்குரலில் முணுமுணுத்தாள்.

''எதுக்கு? இப்படி என் டைமை வேஸ்ட் பண்றியே அதுக்கா? இல்லை... என்னை காதலிக்கறதா பொய் சொன்னியே அதுக்கா?''

''ரெண்டுக்கும்தான்!''

துணிந்து கூறியவளை, ஒற்றைக் கையசைவில் அழைத்து சோபாவில் அமரும்படி சைகை செய்தான் அவன்.

மெதுவாக அமர்ந்தவளுக்குள், தான் இப்படி எதற்காகவுமே பயந்து பணிந்ததில்லையே என்ற குற்றவுணர்வு!

''ம்.. இப்ப சொல்லு! ஏன் என்னைக் காதலிக்கிறதா வீட்டில சொன்னே? அது பணத்துக்காகன்னு நான் நினைக்கலை.. ஏன்னா சஞ்சீவும் எனக்கு சமமான ஒரு எஸ்டேட் அதிபர்தான்!

''இப்ப கல்யாணம் வேண்டாம்னா வீட்டில சொல்லி இருக்கலாம்... சஞ்சீவைப் பிடிக்கலைன்னாலும் மறுத்திருக்கலாம்... வேற மாப்பிள்ளை பார்த்திருப்பாங்க... அப்போ அந்தக் காரணமும் இல்லை!

''எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்! நீ யாரையோ விரும்பியிருக்கே... அவன் உன்னை விட்டுட்டு ஓடிட்டான்... அதான் எவன் இளிச்ச வாயன் மாட்டுவான்னு காத்திட்டிருக்கே... என் பேரைச் சொல்லி இருக்கே! சரிதானே?''

அலட்சியமாக அவன் கேட்க,

''இல்லை! நான் ஒருத்தரை விரும்பினது மட்டும் உண்மை! அவர் என்னை விட்டு ஓடிப் போகலை!



ரெண்டு வருஷ காண்ட்ராக்ட்டுல துபாய்க்கு வேலைக்குப் போயிருக்காரு!'' மெதுவாக முணுமுணுத்தாள்.

''அப்ப அதை வீட்டில சொல்லிட வேண்டியது தானே?'' அடிக் குரலில் சீறினான் அவன்.

''இல்லை! முடியாது! பாட்டியோட நிலைமை உங்களுக்குத் தெரியும்ன்னு நினைக்கிறேன். அதனால உடனே ஒரு மாசத்துக்குள்ளே கல்யாணம் நடந்தாகணும். வீட்டிலே எல்லாரும் அவசரப்படறாங்க!''

''சரி! அதை உன் ஆசைக் காதலன் கிட்டே சொல்லி வரச் சொல்ல வேண்டியதுதானே?''

''சுந்தர் இதுக்கு ஒத்துக்க மாட்டாரு! அவர் நார்மல் மிடில் கிளாஸ்தான். ரெண்டு வருஷமா, பல வேலை மாறி மாறி இப்பதான் ஒரு ஏஜெண்ட் மூலமா பணம் கட்டி துபாய்க்குக் கிளம்பி இருக்காரு! அதை விட்டுட்டு எனக்காக வர முடியாது!''

''ஏன்? உங்க தாத்தாகிட்டே இல்லாத பணமா? எடுத்துச் சொல்லி வரவழைக்க வேண்டியதுதானே? இங்கேயே கூட ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்யலாமே?'' கூர்மையுடன் கேட்டான்.

''செய்யலாம்! சுந்தர் அதுக்கெல்லாம் ஒத்து வராத ஒரு டைப்! குறுக்கு வழியில சம்பாதிக்கறது, லஞ்சம் குடுக்கறது, பொய்க்கணக்கு இதெல்லாம் அவருக்குப் பிடிக்காது!''

''இங்கே அதெல்லாம் யாரு செய்யச் சொன்னது? அந்த வேலையை வேண்டாம்னு ஒதுக்கிட்டு, உங்க தாத்தாவோட எஸ்டேட்டையே கவனிச்சிக்கலாமே!''

''அவருக்கு தன் கொள்கைகள்தான் முக்கியம்! மாமனார் வீட்டுப் பணத்திலே வாழ அவர் நிச்சயமா

ஒத்துக்க மாட்டாரு! தானா உழைச்சி சம்பாதிச்சு ஒரு வருஷம் கழிச்சி அவர் திரும்பி வர்ற வரைக்கும் என்னால காத்திருக்க முடியும். ஆனா வீட்டில அதுக்கு யாரும் தயாரா இல்லை!

''அதான்... இப்படி ஒரு பொய்! அதைக் கூட நான் சொல்லலை... எங்க உஷா அத்தை அண்ணிக்கு ஃபங் ஷன்ல நம்ம ரெண்டு பேரையும் வாட்ச் பண்ணிட்டே இருந்திருக்காங்க! நாம வெறுப்போட ஒருத்தரை ஒருத்தர் போட்டி போட்டுக்கிட்டதை தப்பாக் கணிச்சிட்டாங்க!

''நீங்கதான் நான் விரும்பறவருன்னு போய் எல்லார் கிட்டயும் அவசரப்பட்டு முடிவெடுத்து சொல்லிட்டாங்க.

''அந்த நிமிஷம் அதை என்னால மறுக்க முடியலை. வேற வழியும் தெரியலை!''

''ஏன்?'' சுள்ளென்று கேட்டான் அவன்.

''ஏன்னா...''

ஒரு கணம் தயங்கியவள் உடனே நிமிர்ந்தாள்.

''உங்களுக்கு என்னை... பொதுவாக பெண்களைப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும்!''

''அதுக்கும் இதுக்கும் என்ன சம்மந்தம்?'' கடும் சினத்துடன் இடுங்கி ஜொலித்த விழிகள், அவளையே ஊசியாய் உரசக் கேட்டான்.

''அதுதான் என்னை சரின்னு சொல்ல வச்சதே! அப்படியே, உங்களுக்கும் எனக்கும் ஒருவேளை கல் யாணம் நடந்தாக்கூட, சுலபமா ஒரு வருஷம் கழிச்சி அதிலருந்து என்னால விடுபட முடியும்! நீங்களும் அதுக்கு கட்டாயம் சம்மதிப்பீங்க!



''விரும்பாத பெண்ணை, இஷ்டமில்லாத திருமணத்தை யாரால பொறுத்துக்க முடியும்? ஆனா இதுவே சஞ்சீவை மணந்தா எல்லாமே வேற மாதிரி ஆயிடும்!

''அதனாலதான், உங்ககிட்டே பேசி ஒரு வருஷ ஒப்பந்தம் மாதிரி ஒரு திருமணத்துக்கு ஒத்துக்க வைக்கலாமான்னு நான் நினைச்சேன்.

''அதுக்கப்புறம் சுந்தர் வந்துருவாரு! நான் என் வழியில போயிடுவேன்!''

''அதை இப்பவே செய்யலாமே... வீட்டில எடுத்துச் சொல்ல வேண்டியதுதானே?''

''ஊஹூம் முடியாது! இப்ப இருக்குற சூழ்நிலையில யாருமே ஒத்துக்க மாட்டாங்க! பாட்டிக்காக அவசரமா உடனே என் கல்யாணம் நடந்தாக வேண்டிய ஒரு நிலைமை!

''சுந்தரும் வரமாட்டாரு! அதான், பொய்யா ஒரு கல்யாணம் செஞ்சு, ஒரு வருஷத்திலே அதிலேருந்து விடுபடணும்னு யோசிச்சி முடிவெடுத்தேன். என்னால உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வராது!''

மென் குரலில் இறைஞ்சினாள்.

''ஆனா, என்னால உனக்குக் கஷ்டம் வந்தா?''

கண்ணோரங்கள் இடுங்க ஏளனப் பார்வையுடன் கேட்டான்.

''ம்... என்ன மாதிரியான கஷ்டம்?''

அவளும் விடவில்லை.

''ம்.. ஒருவேளை, இப்ப கல்யாணம் செஞ்சுக்கிட்டு அப்புறமா நான் உன்கிட்டருந்து எதையாவது மனைவின்ற முறையில எதிர் பார்த்தா?''

''இல்லை... எதிர்பார்க்க மாட்டீங்க! உங்களுக்குப் பெண்கள்னாலே பிடிக்காதுன்னு எல்லாருமே பேசிக்கிட்டாங்க... அதுவும் என்னை... பிடிக்கவே பிடிக்காதுன்னு நல்லாத் தெரியும்!

''அதோட, இன்னொருத்தருக்கு உரிமையாகப் போற ஒரு பெண்ணை தப்பான முறையில அணுகுற அளவுக்கு நீங்க ஒண்ணும் மோசமானவர் இல்லைன்றதும் என் அபிப்ராயம்!''

''ஓ... அப்போ என்னை நல்லவன்றே? ம்...?''

குத்தலாகக் கேட்டான்.

''ஆமாம்! பெண்கள் விஷயத்துல நீங்க ரொம்ப நல்லவர்! சரியான முசுடும்கூட. அவங்களைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டீங்கன்னு சஞ்சீவே அன்னிக்கு ஃபங்ஷன்லே எதேச்சையா சொன்னாரு!

''நானும், நீங்க உங்க மனைவியாலே ரொம்ப பாதிக்கப்பட்டிருப்பீங்களோன்னு மனசுக்குள்ளே நினைச்சேன்!'' தயக்கமாக முடித்தாள்.

''ம்! இப்போ உன்னோட கோரிக்கை... உனக்கு பொய்யா கல்யாணம் நடத்த ஒரு மாப்பிள்ளை உடனே தேவை!

''ஆனா... அவன் எந்தவிதத்திலயும் எதையுமே, உன்கிட்ட எதிர்பார்க்காதவனா இருக்கணும். அதோட ஒரு வருஷத்துல நீ விரும்பற மண விடுதலையையும் தரணும்!''

''அதுக்கு நான் தான் பொருத்தமானவன்கிறது உன்னோட கணிப்பு! அதனால என்னைக் கேக்காமலே இதிலே என்னை மாட்டி விட்டுட்டே!



''எல்லாம் சரி! இந்தக் கல்யாணம் பொய்யின்னு... எந்த விதத்திலயும் களங்கப்படாதவள்னு உன் காதலன்... அவர் பேரென்ன சொன்னே... அந்த சுந்தர்... நம்பணுமே!'' அமர்த்தலாக வினவினான்.

''அவர் என்னை நிச்சயமா நம்புவாரு... எப்படியாவது இந்த இக்கட்டை சமாளிச்சிடு... ஒரு வருஷத்தில நான் வந்திடுவேன்னு சொல்லியிருக்காரு!'' உறுதியுடன் கூறினாள்.

## 11



''உனக்கு நம்பிக்கை இருக்கலாம்... ஆனா, இப்ப சரின்னு சொல்லிட்டு ஒரு வருஷம் கழிச்சி அவர் மறுத்தா எனக்கு தானே கஷ்டம்! என்ன காரணம் சொல்லி என்னை விட்டு நீ விலகுவே?''

ஒற்றைப் புருவம் உயரக் கேள்வியுடன் அவளையே ஏறிட்டான்.

ஒரு கணம் என்ன செய்வதென்று புரியாமல் தவித்தவள், ''ம்... அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்... நம்ம ரெண்டு பேருக்கும் ஒத்து வரலைன்னு சொல்லிடலாம்!'' அவள் தவிப்புடன் பகர்ந்தாள்.

''இல்லை.. இது போதாது. எனக்கு அந்த சுந்தர் கிட்டப் பேசணும். இந்தத் தற்காலிக ஏற்பாட்டைப் பத்திச் சொல்லணும்! அவர் இதுக்கு ஒத்துக்கிட்டா மட்டுமே, இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிப்பேன்'' அழுத்தமாக முடித்தான் அவன்.

அவளுக்கோ, என்ன செய்வதென்றே புரியாத ஒரு நிலை!

இப்போது சுந்தரைத் தொடர்பு கொள்ள முடியுமா... அவன் பேசுவானாவென்ற பெரும் பரிதவிப்பு!

"சரி! நான் இன்னிக்கே பேசிடறேன்..."

"போதாது... நான் பேசணும். அப்புறம் இன்னொரு விஷயம் இந்தக் கல்யாணம் மூலமா உனக்கு ஒரு பெரிய ரிலீஃப்! ஆனா எனக்கு..?" கேள்வியாக நிறுத்தினான்.

"உங்களுக்கு... நான்... என்ன தர முடியும்? எனக்குப் புரியலை!"

அவளுடைய குரலிலிருந்த அலைப்புறுதலை உணர்ந்தவனுடைய உடல் மௌனச் சிரிப்பில் குலுங்க, கண்ணோரங்கள் கூர்மையுடன் இடுங்கின.

"ஹூம்... உன் நம்பிக்கை அவ்வளவுதானா? அதுக்கு ஆயுட்காலம் ஒரு மணி நேரம் கூட இல்லை போலி ருக்கு!" நக்கலாக நிறுத்தினான்.

"இல்லை. அப்படி இல்லை! உண்மையாவே எனக்குப் புரியலை!"

"ஒரே ஒரு ஆப்ளிகேஷன் தான்! ஜென்னியை கொஞ்சம் பாசமாப் பாத்துக்கணும்! அவளுக்கு அம்மா இல்லை... பாவம்! முடிஞ்சா ஒரு மதர் ஃபிகரா... அவளுக்கு மட்டும்தான்... நடந்துக்க முடியுமா?"

அவளையே கூர்ந்தபடி கேட்டான்.

சட்டென்று இதயத்தை இறுகப் பிடித்திருந்த ஏதோ ஒன்று விலகிய நிம்மதியுடன் புன்னகைத்தாள் அவள்.

"நிச்சயமா! கரும்பு தின்னக் கூலி வேணுமா? எனக்கு குழந்தைங்கன்னா ரொம்பப் பிடிக்கும். அதுவும் ஜென்னி முதல் பார்வையிலேயே என்னை ரொம்ப கவர்ந்துட்டா! தேங்க்யூ!" உற்சாகம் கரை புரண்டோடியது அவள் குரலில்!



உடனே அவன முகமும் சற்று இளகி மென்மையை தத்தெடுக்க, "ம்... முக்கியமான விஷயத்தை மறந்திட வேண்டாம்! மிஸ்டர் சுந்தரோட நம்பர் என்ன?" விடாமல் கேட்டான்.

அவள் கூறியவுடனே தன் செல்லை உயிர்ப்பித்துத் தொடர்பு கொண்டவன், பொறுமையுடன் காத்திருந்தான்.

வெகு நேரம் கழித்து எதிர்முனையில் எடுத்தவுடன், அவளிடம் கொடுத்தான்.

மகிழ்ச்சிப் பெருக்குடன் செல்லை வாங்கியவள், உடனே பேசத் துவங்கினாள்.

"சுந்தர்! நான் சிவி பேசறேன்! எப்படி இருக்கீங்க?" உற்சாகத்துடன் விசாரித்தாள்.

அவன் குரலில் சிறு சலிப்பு தெரிவது போல்!

உடனே தனது பிரமை என அதை விலக்கியவள், "நம்ம பிரச்னைக்கு ஒரு தீர்வு கிடைச்சிருக்கு சுந்தர்..." என்றபடி பாட்டியின் உடல்நிலையில் ஆரம்பித்து, விக்டரிடம் பேசியது வரை சுருக்கமாக விவரித்தாள்.

சட்டென்று அவனிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரிவது போல், நிம்மதிப் பெருமூச்சொன்று கசிந்தது.

"சுந்தர்! ஒரு வருஷம் கழிச்சி எல்லாமே சுபமா முடியும்னு நான் சொன்னாலும், மிஸ்டர் ராபின்சன் உங்க கிட்டே கட்டாயம் பேசினப்புறம்தான் ஒரு முடிவுக்கு வர முடியும்னு சொல்றாரு! அவர் கிட்டே பேசறீங்களா?" என்றபடி செல்லைத் திருப்பித் தந்தாள்.

"மிஸ்டர் சுந்தர்! எனக்கு ஒரு உறுதி மொழி வேணும்! எந்தக் காலத்திலயும் உங்க காதலியை நீங்க சந்தேகப்

படக்கூடாது! இது ஒரு ப்ளேட்டோனிக் ரிலேஷன்ஷிப் தாங்கிறதை நீங்க முதல்லே புரிஞ்சிக்கணும்!

''இது ப்யூர்லி ஒரு பிசினஸ் டீலிங் மாதிரித்தான்!

''அக்ரீமெண்ட் முடிஞ்சவுடனே நாங்க ரெண்டு பேரும் பிரிஞ்சிடுவோம்! உங்க மனகல, எந்த செகண்ட் தாட்டும் வந்துடக்கூடாது. அதுக்காகத்தான் நான் உங்களோட கட்டாயம் பேசணும்னு சொன்னேன்!''

ஆழ்ந்த குரலில் முடித்தான்.

''தேங்க்யூ சார்! நான் என்னிக்குமே சிவியைத் தப்பா நினைக்க மாட்டேன்... அவ எடுத்த முடிவு சரியாத்தான் இருக்கும்! அவ ரொம்ப நல்லவ... அவனை அன்பாப் பாத்துப்பீங்கன்னு நினைக்கிறேன்!''

''ம்.... பத்திரமாப் பாத்துப்பேன்... ஏன்னா, ஒரு வருஷம் கழிச்சி எந்த மாற்றமும் இல்லாம உங்ககிட்டே அவங்களை ஒப்படைக்கணுமே!'' என்றபடி அவளிடம் செல்லைக் கொடுத்தவன், இங்கிதத்துடன் அங்கிருந்து வெளியேறினான்.

அவனுடைய நல்ல மனம் புரிந்து நன்றியுடன், செல்லைக் காதில் பொருத்தியபோது, தொடர்பு துண்டிக் கப்பட்டிருந்தது.

சட்டென்று விழிகளில் நீர் நிறைந்து விட, சில நிமிடங்கள் எடுத்து தன்னை சமாளித்து நிமிர்ந்தவள், மெதுவாக எழுந்து அந்த அறையை விட்டு வெளியே வந்தாள்.

ஹாலில் அமர்ந்து ஜென்னியுடன் விளையாடிக் கொண்டிருந்தவன், அறைக்கதவு திறந்ததும் சோம்ப லாகத் திரும்பினான்.



அவனருகே சென்று செல்லைக் கொடுத்தவளின் விழிகள் சிவந்திருந்ததை, அவனுடைய மனம் வாசித் தறிந்தது.

''தேங்க்யூ சார்!'' மென்மையாக அவள் முணுமுணுக்க, ''ம்... முதல்லே இதை நீ மாத்திக்கணும்! இந்த 'சார்'... இது நம்ம எதிர்காலத் திட்டத்துக்கு சரிப்பட்டு வராது!'' அடிக்குரலில் அழுத்தமாகக் கூறினான்.

''வேற எப்படி..?'' அவள் தவித்துத் திணறும்போதே,

''விக்டர்னு கூப்பிடலாமே! இல்லை வேற மாதிரி கூப்பிடத் தோணுச்சின்னா... அது உன் இஷ்டம்! ஆனா நான் உன்னை சிவின்னு கூப்பிடலாமில்லை?'' ஒரு மாதிரிக் குரலில் வினவினான்!

''ம்! எனக்கு ஒரு சந்தேகம்! என் மேல அவ்வளவு கோபமா இருந்த நீங்க சட்டுன்னு எப்படி இந்த... இந்த முடிவுக்கு சம்மதிச்சீங்க? நான் எதிர்பார்க்கவே இல்லை.''

நம்ப முடியாமல் பெரும் வியப்பும், நம்ப இயலாத தன்மையும், அவள் குரலில் தெரிந்தன.

ஏதோ நினைவில் அவன் முகம் கசங்கியது...

''ம்! அதுக்கு முக்கியக் காரணம், உன் தாத்தாவோட வேண்டுகோளை மறுக்க முடியாதது... உங்க பாட்டியோட உடல்நிலை! அப்புறம் எங்கம்மா... எங்கம்மாவுக்கும் உங்க பாட்டி மாதிரிதான்! ப்ரெயின் ட்யூமர்... அட்வான்ஸ் ஸ்டேஜில்தான் கண்டுபிடிச்சாங்க!

''ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கலாமின்னு முடிவு பண்ணி னப்ப, அப்பா ஆக்சிடெண்ட்டில இறந்திட்டாங்க! அந்த அதிர்ச்சியை அம்மாவால தாங்க முடியலை! அன்னிக்கு

சாயந்திரமே அவங்களும்..." அதற்கு மேல் அவனால் தொடர முடியவில்லை!

அவனுக்குள் இத்தனை சோகங்கள், பாதிப்புகள் இருக்குமென்பதை முதன் முதலாக உணர்ந்தபோது, அவளுக்குள்ளும் அந்த உணர்வுகள் பாரமாய் பரவின.

மெதுவாக ஜென்னியை அணைத்துத் தூக்கியவள்,

"தேங்க்யூ!" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் நன்றி உரைத்தாள்.

குழந்தை அவளிடம் பாசமாக ஒட்டிக்கொள்ள ஏனோ அவளுக்குள் பெரும் இதம் பரவியது.

வானத்தையே கையகப்படுத்திய பிரமிப்பும்... மெல்லிய மழைச் சாரலில் நனைந்த சுகானுபவமும் இணைந்து நிறைவதைப் போல்!

இறுகிய பாறையாய் அவனைப் பற்றிக் கணித்திருந்த எண்ணங்கள் மாறி, பாறையிலும் ஈரம் கசியும் என்பது புரிவதாய்!

அவளை வீட்டில் விட்டு விடுவதாகக் கூறி அவனும் உடன் கிளம்ப, ஏதோ ஒரு புது பலம் வந்ததைப் போல் உணர்ந்தாள் அவள்.

அவன் பார்வையில், துளி சலனம் கூடத் தெரியவில்லை... அதிலிருந்த தீட்சண்யமும் அலட்சியமும் அவளை யோசிக்க வைத்தன.

## 12

சிவியை அவளுடைய எஸ்டேட் பங்களாவில் இறக்கி விட்டவன், அவளுடனே உள்ளே வந்தான்.



ஹாலில் அமர்ந்திருந்த வேதநாயகம் இருவரையும் கண்டதும், மனம் நிறைந்த புன்னகையுடன் வரவேற்றார்.

அருகிலிருந்த கடாட்சம் யோசனையுடன் எழ, பாமா தான் அவனை அறிமுகப்படுத்தினார்.

"பெரியத்தான்! இவர்தான் மிஸ்டர் ராபின்சன்! நம்ம சிவி..."

அவர் தொடர்வதற்குள் கையமர்த்திய விக்டர், "போதும் ஆன்ட்டி! இனிமே நான் சொல்றேன்! ஹலோ அங்கிள்... ஐயம் விக்டர் ராபின்சன்... பக்கத்து எஸ்டேட் ஓனர்! சிவியை விரும்பி மணக்கக் கேட்டு வந்திருக்கேன்" அவளையே ஓரக்கண்ணால் கூர்ந்தபடி மொழிந்தான்.

அவரும் அரை மனதுடன் புன்னகைத்து கை குலுக்கி அவனை அருகில் அமரச் சொல்ல, அவன் கூறிய "விரும்பி மணக்க..." என்ற வார்த்தைகள் அவளுக்குள் பொய்யென்றாலும் பெரும் விதிர்ப்பை ஏற்படுத்தின.

மறுகணமே, அவன் வந்திருக்கும் விபரமறிந்து பாட்டியைத் தவிர அனைவருமே ஹாலில் கூடிவிட்டனர்.

என்ன பேசுவதென்று புரியாமல் அவர் தவித்திருக்க அந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொண்டான் அவன்.

"உங்க எல்லாருக்குமே ரெண்டு விஷயம் ரொம்ப உறுத்தலா இருக்கும்னு எனக்குப் புரியுது" மெதுவாக நிறுத்தினான்.

அனைவரும் அவனையே ஆவலுடன் பார்த்திருக்க, "ஒண்ணு... சிவி இங்கே வந்து ஒரு மாசம் கூட ஆகலை. அதுக்குள்ளே எங்க ரெண்டு பேருக்குள்ளே இது எப்படின்னு... எனக்கே அது தெரியலை...!

"அப்புறம் ரெண்டாவது... எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை. அப்போ இந்தக் குழந்தை யாருதுன்னு நீங்க கேக்கலாம். இவ... ஜென்னி... என் நண்பனோட குழந்தை... அவங்கப்பா, அம்மா ரெண்டு பேருமே இறந்திட்டாங்க... அதனால அவளை நான் தத்தெடுத்து வளத்துட்டு வரேன்!"

அவன் முடித்ததும், அங்கு ஒரு ஊசி விழுந்தால் கூடக் கேட்குமளவு அசாத்தியமான அமைதி!

சட்டென்று அந்த நிசப்தத்தைக் கலைத்தது மாலதி தான்!

"ஓ! தேங்க் காட்! இந்த ஒரு விஷயத்துக்காகத் தான் நாங்க நிறைய யோசிச்சோம்" பாரம் விலகிய நிம்மதியுடன் கூறினார்.

அனைவருடைய முகமும் ஒவ்வொரு உணர்ச்சியைப் பிரதிபலிக்க, சிவிக்கோ பெரும் ஆச்சர்யமும் மகிழ்ச்சியுமாய்!

இதை அவள் சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை, வியப்பில் ஒளிர்ந்த அவளுடைய விழிகள் கூறின.

அதைக் கண்டவனின் முகம் ஏனோ சற்று இறுகி விட, மீண்டும் பெரியவர்களிடம் திரும்பினான்.

"உங்க மனசுல வேற ஏதாவது பிடிக்காம இருந்தா, என்னைப் பத்தி நல்லா விசாரிச்சிக்கலாம்." ஆழ்ந்த குரலில் கூறினான்.

"இல்லை தம்பி! வேற மதம்கிறதுதான் எல்லாருக்கும் முதல் ப்ரச்னை! அதைப் பத்தி கவலைப்பட வேண்



டாம்... நமக்கு கடவுள் 'சிவன்'னா அவங்களுக்கு 'ஏசு'ன்னு, நானே இவங்ககிட்டே சொல்லிட்டேன்!

"அதைவிட முக்கியமான ப்ரச்னையா இருந்தது... ஒரு குழந்தையோட இருக்கற... முன்னாடியே திருமணமான ஒரு விடோயருக்கு பெண்ணைக் குடுக்கறதிலே என் மகனுக்கும் மருமகளுக்கும் கொஞ்சம் கூட விருப்பமில்லை.

'இப்ப அதையும் நீங்க சரி செஞ்சிட்டீங்க.. வேற என்ன வேணும்!

"உங்க குடும்பத்தைப் பத்தி எங்களுக்கு நல்லாத் தெரியும்! உங்களையும் ஒரு வருஷமாப் பாத்திட்டுதான் இருக்கோம்... எங்களுக்கு எந்த ஆட்சேபணையுமில்லை... இப்ப என் பையன்தான் முடிவு சொல்லணும்!" அழுத்தமாய் முடித்தார்

மறுகணமே நிலவிய ஆழ்ந்த நிசப்தத்தை சிறிது நேரம் கழித்துக் கலைத்தார் கடாட்சம்.

"மிஸ்டர் ராபின்சன்! என் மனசுல முள்ளா உறுத்திட்டிருந்தது நீங்க சொன்ன ரெண்டு விஷயம்தான்! ஆனா, நேத்து எங்கப்பா சொன்ன சில விஷயங்கள் என்னை ரொம்ப யோசிக்க வச்சிது!"

"மனுஷங்களுக்குள்ளே இருக்கற அந்தஸ்து, படிப்பு, குணம், வாழ்க்கை முறைங்கிற ஏற்றத் தாழ்வுகளைக் கூட சுலபமா நாம ஒதுக்கிடறோம்! ஆனா இந்த ஜாதி, மதம், இன வேறுபாட்டை மட்டும் நம்மால விடவே முடியறதில்லை. அது ஒன்னும் புதிர் இல்லை...

"நம்ம வளர்ப்பு முறைன்னு நினைக்கிறேன்! ஆனா, என் தம்பி காதலிச்சப்ப, பாமா வேற ஜாதின்னு தெரிஞ்

சும், அவனுக்காக வாதாடி எங்கப்பாவை ஒத்துக்க வச்சது நான்தான்

''இப்போ, மதம்கிற ஒண்ணு, ஒண்ணா இணை யணும்னு நினைக்கற ரெண்டு மனங்களை ஏன் பிரிக் கணும்னு அப்பா கேட்டாரு!

''அவருக்கு ஒரு நீதி... நமக்கு ஒரு சட்டமான்னு மனசுல யாரோ நல்லா அறைஞ்ச மாதிரி ஒரு உணர்வு!

''அதிலிருந்து தெளிஞ்சி ஒரு முடிவுக்கு நான் வந்தப்ப தடையா இருந்தது- நீங்க ஒரு 'விடோயர்'ங்கிறது தான்! என்னால அதை மட்டும் ஒத்துக்கவே முடியலை!

ராத்திரி எல்லாம் மாலதி கிட்டே புலம்பிட்டே இருந் தேன். இப்போ அதுவும் கிளியராயிடுச்சி! மனசு நிம்மதியா இருக்கு! எனக்கு எந்த அப்ஜெக்‌ஷனுமில்லை!'' தீர்க்கமாக முடித்தார்.

''அப்புறம் என்ன? அடுத்த முகூர்த்தத்திலேயே முடிச் சிக்கலாம்! ஆனா, உங்களுக்கு எப்படி விக்டர்? சர்ச் வெட்டிங்தான் வேணும்னு நீங்க விரும்பினா எங்களுக்கு ஓகே!

''ஆனா எங்க முறையிலயும் கோவில்ல வெச்சு. சிம்பிளா கல்யாணத்தை முடிச்சிட்டு, கிராண்டா ஒரு ரிசப்ஷன் குடுத்திடலாம்!''

வேதநாயகம் கூறியவுடன் திக்கென்று மனம் அதிர்ந்து விட பொய்யான ஒரு திருமணத்திற்கு. ஓராண்டு ஒப்பந் தத்திற்கு இவ்வளவு சடங்குகள் தேவையாவென்ற தவிப்புடன் நெஞ்சம் கலங்கி நின்றிருந்தாள் சிவி!

ஓரக்கண்ணால் அவளது உணர்வுகளைப் படித்தவன், ''பரவாயில்லை அங்கிள்! சர்ச் வெட்டிங்தான் வேணும்னு



நான் வற்புறுத்த மாட்டேன்! உங்க இஷ்டம் போலச் செய்ங்க!'' கூறிவிட்டு தோளைக் குலுக்கியபடி எழுந்தான்.

ஆண்களிடம் கைகுலுக்கி விடைபெற்றவன், அவ ளிடம் திரும்பி, ''பை சிவி!'' என்றபோது, மரத்துப் போன நிலையிலிருந்தாள் அவள்.

நம்ப இயலாத கனவிலிருந்து மீள முடியாமல் நிற்பவள் போல் உறைந்து நின்றிருந்தவளை கை கொடுத்து வாழ்த்தினார் உஷா.

''ஏய் சிவி! என்ன இப்படி ஃப்ரீஸ் ஆகி நிக்கறே? போய் மாப்பிள்ளையை வழியனுப்பிட்டு வா!'' குதூகலத்துடன் விரட்டி அனுப்பினார் பாமா.

அனைவருமே அவர்களுடைய ஜோடிப் பொருத் தத்தில் மகிழ்ந்திருக்க, சிவிக்கோ பெரும் குற்றவுணர் வாய்!

கல்யாணம் என்ற ஒன்றை எளிதாய் நடத்தி, மறு வருடமே சுலபமாகப் பிரிந்து விடலாமென்ற கணிப்பி லிருந்தவளை, அனைவரின் உற்சாகமும், ஈடுபாடும், விக்டரிடம் தெரிந்த வேறுபாடும் பெரிதும் கலக்கமுறச் செய்தன.

அவன் காரில் ஏறியதும், ஒரு பொம்மையைப் போல் தலையாட்டி இயந்திரத் தனமாய் விடை கொடுத்தவளை விக்டர் ஒரு கணம் நிதானித்து அளவிட்டான்.

''சிவாத்மிகா! நான் எப்படி சரியா நடிச்சேன் பாத்தியா? உங்க ஃபேமிலிக்கு எந்த சந்தேகமும் வரலை பாரு! ஆனா, இப்படி இருந்தீன்னா, எல்லாத்தையும் நீயே காட்டிக் குடுத்திடுவே போலருக்கு!''

''கொஞ்சம் என்னைப் பாத்து வெக்கப்படற புது மணப் பெண் மாதிரி, நிறைய சந்தோஷத்துல இருக்கற மாதிரி

இனியாவது நடிக்கப் பழகிக்க!'' ஆழ்ந்த குரலில் கூறி விட்டு விருட்டென்று காரைக் கிளப்பிச் சென்றான்.

## 13



மிறுநாளிலிருந்தே வீடு கல்யாணக் களை கட்ட ஆரம்பித்தது.

விஷயத்தைக் கேள்விப்பட்ட கோதைக்கோ மிகவும் சந்தோஷம்!

பேத்தி, பக்கத்து எஸ்டேட்டிலேயே வசிக்கப் போவதில் பெரும் நிம்மதி!

விக்டர் திருமணமாகாதவன்... ஜென்னி அவனுடைய வளர்ப்புக் குழந்தை என்று அறிந்ததும், வானையே வசப்படுத்திய உற்சாகம் அவரிடம்!

திருமணத்திற்கு ஒரு வாரமே இருக்க, எஸ்டேட்டிலேயே வரவேற்பு நடத்தவும், அருகிலுள்ள முருகன் கோவிலில் திருமணம் செய்யவும் முடிவு செய்தனர்.

ஒரே நாளில் அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு அனுப்பப்பட, கல்யாணப் புடவை, நகைகள் எடுக்கவென்று அனைவரும் கோயம்புத்தூருக்குச் சென்றனர்.

ஒருநாள், தன் பங்குப் பணமாக இரண்டு லட்ச ரூபாயை வேதநாயகத்திடம் அளித்தவன் தன் சார்பில் புடவையையும், நகைகளும் எடுத்து விடும்படிக் கூறினான்.

அவளுக்கோ பெரும் ஆச்சர்யம்! அவனிடம் கேட்க நிறைய கேள்விகள் இருந்தன.

ஆனால் திருமணத்திற்கு முன்பு அவனை சந்திக்கத்தான் இயலவில்லை!



திருமண தினத்தன்று காலையில், அவன் பட்டு வேட்டி, சட்டையணிந்து கோவிலுக்கு வர, அவளுக்குள் அந்தக் கல்யாணத்தின் பொய்மை குற்றக் குறுகுறுப்பாய்!

அப்சரஸ் போன்ற எழிலுடன் திருமண அலங்காரத்தில் அவள் நிற்க, அவன் விழிகள் உணர்ச்சியின்றி அவளிடம் பதிந்து விலகின.

முகமறியா ஒரு வழிப்போக்கனைக் கண்டு திரும்பிச் செல்வது போன்ற ஒரு பார்வை அவளை யோசிக்க வைத்தது.

''இந்தத் திருமண பந்தத்தை எப்படி ஏற்று தொடரப் போகிறோம்...? அவசரப்பட்டு தவறான முடிவெடுத்து விட்டோமோ?'' பல குழப்பங்கள் மனதின் ஓரம் அணி வகுத்தன.

ஆனால், காலம் எதற்கும் காத்திருக்கவில்லை.

கோதை வேதநாயகத்தின் ஆசீர்வாதத்துடன் திருமாங்கல்ய தாரணம் நடக்க ஏனோ அக்னியை மிதித்த உணர்வு அவளுள்!

திருமணம் என்ற வார்த்தை, கேட்க சாதாரணமாக இருந்தாலும், தொடர்ந்து நடந்த சடங்குகள்... அவளைப் பெரிதும் சஞ்சலத்தில் ஆழ்த்துவதாய்!

விக்டரும், எந்தவித எதிர்ப்புமின்றி இயல்பாக எல்லாச் சடங்குகளிலும் கலந்து கொள்ள, நெஞ்சம் எரிதழலாய்!

விருந்து முடிந்து மதியம் கிடைத்த தனிமையில் அடக்க முடியாமல் அவனிடம் கேட்டே விட்டாள்.

''மிஸ்டர் ராபின்சன்! உங்களாலே எப்படி இவ்வளவு இயல்பா எல்லா நேரமும் இருக்க முடியுது?'' யோசனையுடன் கேட்டாள்.

உடனே திரும்பியவன் "ஒரு நிமிஷம்! இப்ப என்னை எப்படிக் கூப்பிட்டே? மிஸ்டர் ராபின்சன்னா? யாராவது கேட்டிருக்கணும்... ஏன்... விக்டர்னு கூப்பிட வேண்டியது தானே?" எரிச்சலுடன் மொழிந்தான்.

உடனே தன் தவறை உணர்ந்து உதட்டைக் கடித்து குற்றவுணர்வுடன் நிமிர்ந்தாள் அவள்.

"சாரி! என்னால அப்படி இயல்பாக் கூப்பிட முடியலை! பழக்கம் இல்லையா... அதான்..."

அவள் முடிப்பதற்குள், "பழகிக்கோ! இனிமே நாம வாழப் போற ஒரு வருஷ கால வாழ்க்கைக்கு இது ரொம்ப முக்கியம்!" அடிக்குரலில் சீறினான்.

"ம்... ஆனா உங்களால எப்படி?" தவிப்புடன் கேட்டாள் அவள்.

"எந்த ஒரு காரியத்தையுமே செய்யணும்னு முடிவெடுத்துட்டா, அதை முழுமையா நடத்தி முடிக்கணும்! என் பாலிஸி அதுதான்! புலி வேஷம் போட்டாச்சு. கர்ஜனை பண்ணித்தான் ஆகணும்!

"நான் இந்தக் கேரக்டரை முழுமையா எனக்குள்ளே உள் வாங்கிட்டேன். இது உனக்காக நான் ஏத்துக்கிட்டது!

"நானே மாறிட்டேன் நடிக்கப் பழகிட்டேன்... உன்னால இதை ஏத்துக்க முடியாததுதான் பெரிய ஆச்சர்யம்!"

உதட்டோரம் ஏளன வளைவுடன் கூறினான்.

"அந்தப் பணம்... நகை... புடவைக்கு... அதை ஏன் குடுத்தீங்க?" மெதுவாகக் கேட்டாள்.

"அதுவும், செய்யற நடிப்பை நூறு சதவீதமாக்கறதுக்காகத்தான்..." என்றவனிடம், "நான் திரும்பிப் போகும்



போது இங்கேயே வெச்சிட்டுப் போயிடுவேன்!" என்றாள் வீம்பாக.

எதையுமே ஜீரணிக்க முடியாமல் தடுமாறும் போதே முதலிரவும் வந்து விட்டது.

அவனுடைய யோசனைப்படி, விக்டருடைய எஸ்டேட் பங்களாவிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தனிமையில் அவனுடன் அந்த அறையில் விடப்பட்டதும், இறுகி நின்றிருந்தவளை, உசுப்பியது அவன் குரல்!

"சிவி! அதோ அந்தக் கதவைத் திறந்தீன்னா, ஒரு ரூம் இருக்கு! எனக்கு குழந்தைகள் பிறந்தா பக்கத்திலேயே இருக்க வைக்க வசதியா இருக்கட்டும்னு அப்பாதான் இந்தக் கதவை புதுசாப் போட்டாங்க!

"இப்ப அது கூட நல்லாப் பயன்படுது! அது உன் அறை... இது என்னுது!

"இங்கே உள்ளே வந்தவுடனே நீ அங்கே போயிடலாம்... வெளி வெராந்தாவுக்கும் போக தனியா ஒரு கதவு இருக்கு... அதை நீ உபயோகப்படுத்திக்கலாம்..."

"ஆனா, நம்ம உறவு வெளியே தெரியாம நடந்துக்க வேண்டியது உன் பொறுப்பு... வேற ஏதும் கேக்கணுமா? உன் திங்க்ஸ் எல்லாம் அங்கேயே வச்சிக்க!"

நெறித்த புருவங்களுடன் இயல்பாகக் கேட்டான் அவன்.

"ஊஹூம்... தேங்க்ஸ்!" என்றபடி விழியோரங்கள் கசிய நின்றிருந்தவளை ஒரு கணம் ஏறிட்டான் அவன்.

பிறகு, "குட்நைட்" என்று கூறிவிட்டு, குளியலறைக்குச் சென்று விட்டான்.

என்ன செய்வதென்று புரியாமல், ஒரு கணம் உறைந்து நின்றவள், அந்த அறைக்கதவைத் திறந்து உள்ளே சென்றாள்.

அழகிய ஒற்றைக் கட்டிலுடன், எல்லா வசதிகளுடனு மிருந்தது அந்த அறை.

பெர்ஷியன் கார்ப்பெட்டும், விலையுயர்ந்த சாட்டின் திரைச்சீலைகளும், பூ ஜாடிகளும், அழகிய சுவரோவியங் களுமாய் எழிலுற மிளிர்ந்த அறையில் ரூம் ஹீட்டர் வசதியும் இருந்தது.

அங்கிருந்த வார்ட் ரோப்பில் தன்னுடைய சில பொருட் களை அவள் அடுக்கும்போதே, அடுத்த அறையில் விளக்கு அணைக்கப்பட்டது புரிந்தது.

இடையிலிருந்த கதவைத் தாளிட்டு விட்டு உடை மாற்றியவள், காலையிலிருந்து அனுபவித்த அசதியிலும், திருமணம் தந்த அதிர்ச்சியிலும், உடனே படுத்து விட்டாள்.

ஏனோ உறக்கமே வரவில்லை... இனி வரும் நாட்கள் எப்படிக் கழியப் போகிறதோவென்று எண்ணும் போதே சுந்தரின் செல்லுக்கு தான் தொடர்பு கொண்டபோது அவன் எடுக்கவில்லையே என்ற நினைவும் வந்தது.

காலையில் கட்டாயம் பேச வேண்டுமென்ற உறுதி யுடன் கண்களை இறுக மூடி உறக்கத்தை யாசிக்க ஆரம்பித்தாள் அவள்.

## 14

மறுநாளைய விடியல் இனிதாய்ப் புலர, ஏதோ ஒரு ஓசை அவளைக் கலைத்து விழிக்கச் செய்தது.



மெதுவாக எழுந்து அமர்ந்தபோது, மணி ஒன்பதாகி யிருக்க நன்றாக விடிந்து வெளிச்சம் தெரிவதாய்!

இடையிலிருந்த கதவு மென்மையாகத் தட்டப்பட்டது.

தன் நிலை புரிந்து ஓடிச் சென்று திறந்தபோது கார்ட்லெஸ் போனுடன், விக்டர் நின்றிருந்தான்.

''உங்கம்மா!'' என்றபடி கொடுத்துவிட்டு அந்த அறைக் கதவை மூடி விட்டுச் சென்றான்.

''என்னம்மா? குட்மார்னிங்'' என்றவளின் குரல் மாறி இருக்க, ''தூக்கம் இல்லையா கண்ணம்மா? குரல் ஒரு மாதிரியா இருக்கு?'' மெதுவாக விசாரித்தாள் மாலதி.

''புது இடமா தூக்கம் வரலை!'' கூறிவிட்டு உதட்டைக் கடித்தவள், ''இப்பதாம்மா எந்திரிச்சேன்... குளிச்சிட்டு அப்புறம் பேசவா?'' தயக்கத்துடன் கேட்டாள்.

ஆனால் அதை வேறுவிதமாகப் புரிந்து கொண்ட மாலதி, ''சரிம்மா! முதல்லே மாப்பிள்ளையை கவனி! நான் அப்புறம் பேசறேன்'' என்று வைத்து விட்டார்.

உடனே அந்த அறையிலிருந்த குளியலறைக்குள் நுழைந்தவள், தயாராகி வெளியே வந்தபோது, விக்டர் அவளுக்காகக் காத்திருந்தான்.

அவளைக் கண்டதும், ''நான் எஸ்டேட் ஆபீஸுக்குப் போறேன். உனக்கு ஏதும் வேணுமா?'' இயல்பாகக் கேட்டான்.

''இல்லை... எதுவும் வேண்டாம்! சாரி... எழுந்திருக்க லேட்டாயிடுச்சி'' குற்றவுணர்வுடன் கூறினாள்.

''இதுக்கு எதுக்கு சாரி எல்லாம்? இது உன் வீடு மாதிரி! லேட்டா எழுந்தா வீட்டில சாரி சொல்வாங்களா என்ன?

புது இடம்... ராத்திரி சரியா தூங்கியிருக்க மாட்டே! அதான்! அப்புறம் ஒரு விஷயம்!'' என்று நிறுத்தினான்.

என்னவென்பது போல் ஏறிட்டவளிடம், ''நான் என் பார்ட்டை சரியாத்தான் பண்றேன்னு நினைக்கிறேன்...'' உங்க வீட்டில இயல்பா எல்லார்கிட்டயும் நடிச்சதை சொன்னேன்! அது மாதிரி உனக்கும் இங்கே சில கடமைகள் இருக்கு!'' ஆழ்ந்த குரலில் நிறுத்தினான்.

''சொல்லுங்க! எனக்காக நீங்க எவ்வளவோ செஞ்சிருக்கீங்க! நான் என்ன செய்யணும்?''

நேர்ப் பார்வையுடன் கேட்டவளிடம், ''என் மனைவிங்கிற பேரில் வீட்டு அட்மினிஸ்ட்ரேஷன்லே கொஞ்சம் கவனம், ஜென்னியை அப்பப்ப கவனிக்கறது, வேலைக்காரங்க முன்னாடி சரியா நடிக்கிறது... இவ்வளவுதான்.'' தோளைக் குலுக்கிக் கைகளை விரித்தான்.

''நிச்சயமா செய்வேன் மிஸ்டர்... சாரி! நீங்க வருத்தப்படற மாதிரி நடந்துக்க மாட்டேன் விக்டர்!'' சிறு முறுவலுடன் பகர்ந்தாள்.

* * *

பிறகு இருவருமாக டிபன் சாப்பிட்டதும், ஜென்னியைத் தேடிப் போனபோது அவளும் பாசத்துடன் தாவ, விக்டர் புன்னகையுடன் அவளை ஏந்திக் கொண்டான்.

சிறிது நேரம் விளையாடிவிட்டு அவன் விடைபெற, வழியனுப்பி விட்டு ஜென்னியுடன் திரும்பவும் உள்ளே வந்தபோது, தொலைபேசி அழைத்தது.

எடுத்தபோது வீட்டிலிருந்து அனைவருமே பேசினர்.

தாத்தா அவர்களிருவரையும் அன்றிரவு விருந்திற்கு அழைத்தார்.



''சரி தாத்தா! விக்டர்கிட்டே சொல்றேன்! பாட்டி நல்லாருக்காங்களா?'' ஆவலுடன் விசாரித்தாள்.

''ம்... தூங்கிட்டிருக்கா! மாப்பிள்ளை எந்த ஃபார்மாலிட்டியும் வேண்டாம்னு ஸ்ட்ரிக்டா சொன்னதாலதான் உன்னை விட்டுட்டு நேத்து எல்லாருமே வந்திட்டாங்க! இங்கே வந்து ஒரு வாரம் ரெண்டு பேரும் தங்குங்களேன்'' ஏக்கத்துடன் அழைத்தார்.

''தாத்தா நான் என்ன ஃபாரினுக்கா போயிருக்கேன். ஒரு கிலோ மீட்டர் தூரத்துல இருக்கேன். இதிலே என்ன ஃபார்மாலிட்டீஸ்.

''காலையிலே விக்டர் எஸ்டேட் ஆபீஸ் போகும்போது நானும் ஜென்னியும் அங்கே வந்து இறங்கிக்கறோம். ஈவினிங் திரும்பி வந்திடறோம். அவ்வளவுதானே!'' இயல்பாக முடித்தாள்.

''இன்னிக்கேவா விக்டர் தம்பி வெளிய போயிட்டாரு! ரெஸ்ட் எடுத்திருக்கலாமேம்மா!''

''இல்லை தாத்தா! ஏதோ லேபர் மீட்டிங்காம். முக்கியமானதுனாலே கிளம்பிட்டாரு!''

ஏதோ வாய்க்கு வந்ததை உளறிக் கொட்டி விட்டு வைத்தாள்!

மறுகணமே அவளைத் தேடி வந்த சமையல்காரம்மா அன்றைய மெனுவைப் பற்றிக் கேட்டார்.

''அம்மா! இன்னிக்கு மதியம் என்ன செய்யட்டும்மா?''

''ம்... எப்பவும் எப்படி செய்வீங்களோ அதே மாதிரியே பண்ணிடுங்க! விக்டருக்கு என்ன பிடிக்குமோ அதையே செய்ங்க!''

எதேச்சையாக அவள் கூறியதன் அர்த்தம் அவருக்கு வேறு விதமாகப் புரிய, பெருமிதத்துடன் உள்ளே சென்றார்.

அவள் எவ்வளவு இனிய பெண்ணாக இருக்கிறாளென்ற பெருமையும் அந்த வீட்டு எஜமானி என்ற பந்தா சிறிது மின்றி பழகியதும், வேலையாட்களிடம் பெரும் மதிப்பை ஈட்டித் தரப் போவதை அவள் அறியவில்லை.

## 15



மதியம் ஜென்னிக்கு சாப்பாடு ஊட்டிக் கொண்டிருக்கும்போதே, விக்டர் வந்து விட்டான்.

அவனைக் கண்டதும் தாவிய குழந்தையின் கன்னத்தை மெதுவாகத் தட்டியவன், "ஜென்னி! ஃபைவ் மினிட்ஸ்... டாடி ட்ரெஸ் மாத்திட்டு வந்திடறேன்!" என்றபடி உடை மாற்றச் சென்றான்.

ஜீன்ஸ், டீ-சர்ட்டில் வந்தவன், இயல்பாக கார்ப்பெட்டில் அமர்ந்து குழந்தையுடன் விளையாட ஆரம்பித்தான்.

அவளுக்கோ பெரும் ஆச்சர்யமாய்!

ஒரு சர்வாதிகாரியைப் போல் முதன் முதலில் அறிமுகமாகியிருந்தவனுக்குள், இப்படி ஒரு மென்மையான மறு பக்கமாவென்று இதயம் ஸ்தம்பித்தது.

முதலில் அவனைப் பற்றி கணித்து வைத்திருந்த ஒரு எண்ணம், அவளுக்கு அவன் உதவ முன் வந்ததுமே சிறிது மாறி இருந்தது.

மற்றவர்களையும் மதிக்கின்ற, மனிதாபிமானமுள்ளவனாக அவனைப் பற்றி எண்ண ஆரம்பித்த நேரத்தி



லேயே ஜென்னியிடம் அவன் காட்டிய பாசமும், அக்கறையும், அவளுக்குப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த அதை மறைக்காமல் உடனே கூறி விட்டாள்.

"நான்... உங்களைப் பத்தி ரொம்பத் தப்பாக் கணிச்சிருந்தேன்..."

அவள் முடிப்பதற்குள் "எப்படி? பெரிய வில்லனாவா?" அவன் குரல் கேலியாக இடையிட்டது.

"ப்ச்... அப்படி எல்லாம் இல்லை! ரொம்ப முசுடு... பெண்களைப் பிடிக்காது... கோபக்காரர் அப்படின்னு!"

"ஓ! இப்ப அதெல்லாம் மாறிடுச்சின்னு நினைக்கிறியா?" ஆழ்ந்த குரலில் கேட்டான் அவன்.

அவள் பதில் கூற இயலாமல் விழிக்கும்போதே, "எதுவுமே மாறலை! இப்பவும் எனக்கு பெண்கள்னா அவ்வளவாப் பிடிக்காது... அவங்க மேலே பெரிசா எந்த மதிப்பும் கிடையாது! அதோட நான் ரொம்பக் கோபக்காரன்தான்!

"குழந்தை விஷயம் வேற...! அவங்ககிட்ட என்னால எப்பவுமே கோபப்பட முடியாது... அதோட, என்கிட்ட வேலை பாக்கற ஒர்க்கர்ஸ் மேலயும் எனக்கு நிறைய அக்கறை உண்டு! பெண்கள்... ப்ச்...!"

உதடு பிதுக்கினான்.

அவளுக்குள் பெரும் தவிப்பு... ஆனாலும் துணிந்து கேட்டு விட்டாள்.

"உங்க அம்மாவும் ஒரு பெண் தானே விக்டர்?" என்று!

"அம்மா ரொம்ப நல்லவங்க... அந்தக் காலத்துப் பெண்மணி! ஆனாலும் ரொம்ப முற்போக்கு சிந்தனையும்

உள்ளவங்க! முக்கியமா பணம்தான் பெரிசுன்னு மதிக்காத குணம் நிறைஞ்சவங்க. மனுஷன்தான் முக்கியம்னு நினைச்சவங்க.'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

''எல்லாப் பெண்களும் மோசமானவங்க இல்லை... சிலர் இருக்கலாம்...''

அவள் தொடர்வதற்குள், இடைமறித்து, கைகளால் தடுத்தவன் ''ஹூம்... என்னைப் பொறுத்தவரைக்கும் சிலர் மட்டும் தான் நல்லவங்களா இருக்கலாம். ஆனா, அவங்களைத் தேட எனக்கு விருப்பமில்லை... அது என் வேலையும் கிடையாது!

''போதும்... நான் பார்த்த பெண்கள் எல்லாருமே ரொம்ப சுயநலமா, மெட்டீரியலிஸ்டிக்கா, மாரல் வேல்யூஸ் பத்தின அக்கறை இல்லாதவங்களாத் தான் இருந் திருக்காங்க!'' அலட்சியத்துடன் மொழிந்தான்.

''நோ!'' என்றபடி பதறி எழுந்தவள், ''சாரி விக்டர் எனக்கு உங்க கருத்துல உடன்பாடில்லை... நானும் ஒரு பெண்... அதை மறந்துட வேண்டாம்!'' ஒரு வேகத்துடன் இயம்பினாள்.

''மறக்கலை! ஆனா நீ ஒண்ணை ஞாபகம் வச்சிக் கணும். நான் சந்திச்ச பெண்கள் அப்படி! என் அனு பவத்தைத்தானே நானும் சொல்ல முடியும்!''

உதட்டோர ஏளன வளைவுடன் கூறிவிட்டு எழுந்தான்.

''பசிக்குது... சாப்பிடலாமா? இன்னிக்கு ஒண்ணும் விரதம் ஏதும் இல்லையே?''

கிண்டல் கசிந்த அந்தக் கேள்விக்கு புன்னகையுடன் தலையசைத்தவள் தானும் எழுந்தாள்.



அவன் அறைக்குள் வந்ததுமே விலகிச் சென்றிருந்த ஆயாவை அழைத்து ஜென்னியை ஒப்படைத்தவள் அவனுடன் டைனிங் ஹாலுக்குச் சென்றாள்.

சாப்பிட ஆரம்பித்த பிறகுதான் அவனிடம் தான் கேட்க நினைத்த கேள்விகள் நினைவிற்கு வந்தன.

''விக்டர்! உங்களுக்கு என்ன சமையல் ரொம்பப் பிடிக்கும்... அது தெரிஞ்சா மெனு சொல்ல வசதியா இருக்கும்'' மெதுவாக விசாரித்தாள்.

''ம்... எல்லா நான்வெஜ் ஐடம்ஸும் பிடிக்கும்...''

இயல்பாகக் கூறி விட்டு சாப்பிடத் துவங்கியவனை ஏறிட்டபோது, இவன் மிகவும் வித்தியாசமானவனென்று தோன்றுவதாய்!

தான் சந்தித்த பெண்கள் என்று கூறினானே... அவனும் ஒரு வேளை காதலில் வீழ்ந்திருப்பானோ... மனம் பல கேள்விகளை எழுப்ப, அவனிடம் கேட்பதற்கும் தயக்க மாய்!

* * *

சாப்பிட்டு முடிக்கும்போது, இரவு டின்னருக்கு தாத்தா அழைத்தது நினைவு வந்தது.

''விக்டர்! இன்னிக்கு நைட், தாத்தா நம்ம ரெண்டு பேரையும் எங்க வீட்டுக்கு டின்னருக்கு கூப்பிட்டாங்க! போகலாமா?'' ஆவலுடன் கேட்டாள்.

அவளையே ஒரு கணம் கூர்ந்தவன், ''எனக்கு நோ ப்ராப்ளம்! நான் கரெக்டா நடிச்சிடுவேன்! ஆனா உனக்குத் தான் கஷ்டம்!'' அடிக்குரலில் கூறினான்.

''ஏன்? எதுக்கு நடிக்கணும்?'' புரியாமல் கேட்டாள் அவள்.

"ம். இங்கே பெரியவங்க யாருமில்லை. அதனால நீ இயல்பா இருக்கே. ஆனா, அங்கே எல்லாரும் இருக்கும் போது, நாம தம்பதிகளா நடிச்சாகணும்! எல்லாரும் நம்மையே கண்காணிக்கற மாதிரி இருக்கும்! நாம நடிக்கறது அவங்களுக்குத் தெரியக் கூடாது... பீ கேர்ஃபுல்!" என்றபடி கை கழுவ எழுந்தான்.

கைகழுவி முடித்தவுடன் துண்டை எடுத்து நீட்டியவள்,

"உங்க அளவுக்கு... ஆஸ்கார் வாங்கற அளவுக்கு இல்லேன்னாலும், என் நடிப்பும் நல்லாத்தான் இருக்கும்!" சிறு முறுவலுடன் அடிக்குரலில் கூறினாள்.

"ஓகே! ஆல் த பெஸ்ட்!" உணர்ச்சியற்ற குரலில் தோளைக் குலுக்கியபடிக் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான்.

அவனுடன்தான் எவ்வளவு இயல்பாகப் பேசி கேலி செய்ய முடிகிறதென்ற ஆச்சர்யம் உள்ளத்தில் கை கோர்ப்பதாய்!

உடனே சுந்தருக்கு காலையிலிருந்து போன் செய்யவில்லையே என்பதும் ஞாபகம் வந்தது.

தன் அறைக்குள் சென்றதும், செல்லை எடுத்துத் தொடர்பு கொண்டபோது, ஏனோ அவன் எடுக்கவேயில்லை!

ஒருவேளை வேலையில் மும்முரமாக இருக்கிறானோவென்ற தவிப்புடன், செல்லை அணைத்தாள்.

சுந்தரின் பிடிவாத குணமும், பெரிதும் கௌரவம் பார்க்கின்ற தன்மையும், உடனே நினைவிற்கு வந்தன.

அவன் மிகவும் நல்லவனென்றாலும், வாழ்க்கையை அதன் போக்கில் சென்று எதிர்கொள்ளத் தெரியாத ஒரு



வித்தியாசமான கேரக்டர் என்பதை அவனை விரும்பத் துவங்கிய பிறகே உணர ஆரம்பித்தாள் அவள்.

ஒரு எதார்த்தவாதியாக அவனை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் சில நேரங்களில் தவிடு பொடியாகி விடுமோ என்று கூட அவள் யோசிக்கத் துவங்கியிருந்த நேரம் அது!

சிறு கடு சொல்கூடத் தாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கின்ற வேலையை விட்டுவிட்டு உடனே வெளியேறும் தன்மை படைத்தவன் அவன்!

யாரிடமும் வளைந்து கொடுத்துப் பழக்கமில்லாதவன், இப்போது வெளிநாட்டில் எப்படி இருக்கிறானோவென்ற கவலையுடன் உறங்க ஆரம்பித்தாள் அவள்.

## 16



அன்று மாலையில் விக்டர் சீக்கிரமே வீடு வந்து விட்டான்.

தோட்டத்தில் ஜென்னியைத் தூக்கிக் கொண்டு நடந்து கொண்டிருந்த போது, காரில் வந்து விக்டர் இறங்குவது தெரிந்தது.

முகமலர்ச்சியுடன் வரவேற்றவளிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டவன், அவளுடைய உடை கண்டு புருவத்தைச் சுருக்கினான்.

சிம்பிளான ஒரு சுடிதாரில் நின்றிருந்தவளை ஊடுருவியவன், "என்ன ரெடியாகலையா? உங்க வீட்டுக்குப் போகணும்னு சொன்னேனே" மெல்லக் கேட்டான்.

"ம்! நீங்க வர எப்பவுமே ஏழு மணியாகும்னு ஆயாம்மா சொன்னாங்க! அதான் மெதுவா தயாராகலாம்னு இருக்

கேன்... ஒரே நிமிஷம்... இப்ப வந்துடறேன்'' வேகமாக உள்ளே செல்லத் திரும்பினாள்.

''ஒரு நிமிஷம்... என்ன உளவா?'' ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.

உடனே விதிர்ப்புடன் திரும்பியவள், ''இல்லை! நான் ஏன் உங்களை...'' திணறியபடி நிறுத்தினாள்.

உடனே இறுக்கம் குறைந்து இயல்பானவன், ''எனக்கு... வேலை செய்யறவங்ககிட்டே என்னைப் பத்தி நான் இல்லாதப்ப பேசறது பிடிக்கவே பிடிக்காது!'' அழுத்தமான குரலில் கூறிவிட்டு ஜென்னியுடன் உள்ளே சென்றான்.

''நான் தப்பா எதும் கேக்கலை...'' அவளுடைய குரல் காற்றலைகளில் கலந்து எதிரொலித்தது.

சட்டென்று வெப்பமாகிய உடலை எங்கிருந்தோ வந்து தழுவிய குளிர் காற்று குளிரச் செய்தது.

ஏதோ ஒரு இனம் புரியாத பாரம் இதயத்தில் நிறைய, அவனுடைய கோபம் அவளை வெகுவாகப் பாதிப்பதாய்!

கசங்கிய மனதுடன் திரும்பியபோது, எதிரே தெரிந்த பைன் மரக் காடுகள் காற்றுடன் ரகசியம் பேசி பறவைகளை கூட்டுக்குத் திரும்பும்படி அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தன.

வானம் செந்நிறமாய் மாறியிருக்க, சூரியன் மலைக்குப் பின்னால் மறையத் துவங்கியிருந்தான்.

மனம் எதிலுமே ஈடுபடாமல் பெரும் சஞ்சலத்தை தத்தெடுத்திருக்க, மெதுவாக உள்ளே வந்தாள் அவள்.

மாடியிலிருந்த தன்னுடைய அறைக்குள் நுழைந்த போது இந்த நடிப்பையும், தற்காலிகத் திருமணத்தையும்



இன்னும் எத்தனை நாட்கள் தொடர வேண்டுமோவென்ற ஆதங்கம் எழுவதாய்!

அடிவாரத்திலிருந்து மலையுச்சியை பிரமித்துப் பார்க்கும் நிலையிலிருந்தாள் அவள்.

* * *

முதல் நாளே சிறு சோர்வு எட்டிப் பார்க்க, இன்னும் ஒரு வருடத்தைக் கழிக்க வேண்டுமேவென்ற விதிர்ப்பும் தலை தூக்குவதாய்!

வார்ட் ரோபிலிருந்த சில்க் காட்டன் புடவையை எடுத்து உடுத்திக் கொண்டு கீழே வந்தபோது ஹாலில் காத்திருந்தான் அவன்.

சற்று முன்பு பேசியதே மறந்ததைப் போல், ''கிளம்பலாமா?'' இயல்பாகக் கேட்டான்.

''ம்... ஜென்னி?''

அவள் கேள்வியாக நோக்க, ''இல்லை... வேண்டாம்! ஆயாம்மாவைப் பாத்துக்கச் சொல்லிட்டேன். அவ சீக்கிரம் தூங்கிடுவா! தொந்தரவு பண்ண வேண்டாம்'' என்றபடி முன்னே சென்றான்.

ஜென்னியிடம் கையசைத்து விடைபெற்று காரின் முன்புறம் ஏறியபோது, இது உனக்கான இடமில்லை என்பதும் உறைப்பதாய்!

பெரும் சஞ்சலத்துடன் பயணித்தவளை, அவன் குரல் கலைத்தது.

''சுந்தருக்கு போன் செஞ்சி பேசினியா?''

''ம்... ஆனா அவர் எடுக்கலை!''

சோர்வுடன் கூறியவளைத் திரும்பி ஏறிட்டவன், எதுவும் பேசவில்லை.

யோசனையில் நெறிந்திருந்த புருவங்களுடன் பங்களாவிற்குள் காரைச் செலுத்தியவன், அதன் பிறகு எதுவுமே பேசவில்லை!

அனைவரும் புதுமணத் தம்பதியை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்க சுஜயும் அருணும் ஓடி வந்து இருபுறமும் கட்டிக் கொண்டனர்.

''அக்கா! காலையிலருந்து நீ வருவே வருவேன்னு வெயிட் பண்ணிட்டே இருந்தோம்.'' சலுகையுடன் கூறினர்.

சிறு முறுவலுடன் மௌனமாக இருவரையும் அவள் அணைத்துக் கொண்டபோது, பாமாதான் மிகவும் ஆச்சர்யப்பட்டார்.

''பாத்தீங்களாக்கா இவளை? ஒரே நாளிலே எப்படி அமைதியா மாறிட்டான்னு! போன வாரமெல்லாம் ஒரே ஆர்ப்பாட்டமும் கூத்துமா இருந்தா... பசங்களோட சேர்ந்து அவங்களுக்கு சரிசமமா ஒரே ஆட்டம்தான்!

''ஒரு மஞ்சள் கயிறு எப்படி மேஜிக் மாதிரி மாத்திடுச்சி பாருங்க...'' பெருமையுடன் ஆரம்பித்தார்.

''அக்கா! அப்ப இனிமே எங்க கூட நீ விளையாடவே மாட்டியா!'' இருவரும் ஏக்கத்துடன் கேட்டனர்.

அவள் பதில் சொல்வதற்குள் விக்டரே பேசினான்.

''ஏன் வரமாட்டா? நான் வெளியே போனப்புறம் உங்கக்கா அங்கே போரடிச்சிட்டுதானே இருப்பா! எப்ப வேணா வாங்க... ஜென்னியும் இருக்கிறதால, உங்களுக்கும் பொழுது நல்லாப் போயிடும்.''

''ஓ! தேங்க்யூ அங்கிள்!'' என்றபடி, அதுவரை அவனிடமிருந்த பயம் தெளிந்து மெதுவாக ஒட்ட ஆரம்பித்தனர்.



பிறகு பாட்டியிடம் சென்று பார்த்தபோது, அவரிடம் சிறு தெளிவு தெரிவது போல்!

அவன் நலம் விசாரித்து விட்டு வெளியில் சென்று விட, அவள் மட்டும் அருகிலேயே அமர்ந்திருந்தாள்.

மெதுவாகக் கண் விழித்த கோதையின் முகத்தில், அவளைக் கண்டதும் அளவிட முடியாத பிரகாசம்!

''சிவி! எப்படிடா இருக்கே? சந்தோஷமா இருக்கியா?'' நடுங்கும் குரலில் விசாரித்தார்.

''ம்! நல்லாருக்கேன் பாட்டி! மருந்தெல்லாம் ஒழுங்கா சாப்பிடறீங்களா? இப்ப தலைவலி எப்படி இருக்கு?''

''உன் கல்யாணத்தைப் பாத்த தெம்புல நல்லாருக்கேன்டா... தலைவலியே வரலை! உனக்கு ஒரு குழந்தையும் பிறந்து பாத்துட்டேன்னா நிம்மதியாக் கண்ணை மூடிடுவேன்'' விழிகள் ஏக்கத்தில் பளிச்சிட்டன.

மனம் கனத்துப் போய்விட. ''அப்படி எல்லாம் சொல்லாதீங்க பாட்டி! நீங்க நல்லா இருப்பீங்க...'' மெதுவாகக் கூறிவிட்டு. அவரின் கையைப் பிடித்து ஆதரவாக அழுத்தினாள்.

## 17



பிறகு சிவி வெளியே வந்தபோது விக்டர் குடும்பத்தினருடன் இயல்பாகப் பொருந்திப் போயிருந்தான்.

அனைவரின் கேள்விக்கும் சலிக்காமல் பதிலளித்தபடி அமர்ந்திருந்தான்.

அவளைக் கண்டதும் ஒற்றைத் தலையசைப்புடன் தான் அமர்ந்திருந்த சோபாவில் தள்ளி அமர்ந்தான்.

பிறருக்காக அவன் நடித்தாலும், அதில் பரிபூர்ணமாக ஒன்ற முடியாமல், சோபாவின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள் அவள்.

ஏதோ ஒரு இனம் புரியாத் தயக்கமும் விலகலும் ஆட்படுத்த, சிறிது நேரம் உறைந்து அமர்ந்திருந்த வளிடம், சுஜயும் அருணும் விடாமல் சளசளத்தனர்.

பிறகு சாப்பிட்டு முடித்து விடைபெறும்போது, மாலதி அவளைத் தனியே அழைத்தார்.

"சிவி! உனக்கும் மாப்பிள்ளைக்கும் நடுவிலே எந்தப் ப்ரச்னையும் இல்லையே! ஏன் இப்படி ஒதுங்கி உர்ன்னு உக்காந்திருந்தே! ஆனா மாப்பிள்ளை இயல்பாதான் இருந்தாங்க! அதான் கேட்டேன்."

தயக்கத்துடன் அவர் முடிக்க கிளம்பும்போது அவன் கூறியது நினைவில் வந்தது.

அவனுடைய பங்கை அவன் சிறப்பாகச் செய்துவிட, தான் மட்டும் எதிலுமே ஒன்ற முடியாமல் தவிப்பதும் புரிவதாய்!

உடனே தன் பதிலுக்காக தாய் காத்திருப்பது நினைவு வர, "அப்படியெல்லாம் எதுவும் இல்லம்மா! பாட்டியோட நிலைமை, உங்க எல்லாரையும் விட்டுப் பிரிஞ்சிருக் கறது... அதெல்லாம்தான் ரொம்பக் கஷ்டமா இருந்தது."

மனதை மறைத்து பொய்யுரைத்தாள்.

"அதானா? நான் பயந்தே போயிட்டேன்.

"உன் சந்தோஷம்தான் முக்கியம்கறதாலேதான் எல் லாருமே இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டோம்! இப்போ நீ ஒரு வேளை சந்தோஷமா இல்லையோன்னு பயம் வந்திடுச்சி!"



"அதெல்லாம் இல்லைம்மா! நான் அங்க ரொம்ப சந்தோஷமாத்தான் இருக்கேன். விக்டர் என்னை எவ் வளவு அன்பாப் பாத்துக்கறாரு தெரியுமா?" முயன்று வரவழைத்த புன்னகையுடன் கூறினாள்.

"சரி! ஆனாலும், எந்த ப்ரச்னைன்னாலும், மனம் விட்டு ரெண்டு பேரும் பேசிடணும்... நீதான் விட்டுக் குடுத்துப் போகணும்! மாப்பிள்ளையைப் பாத்தா கொஞ்சம் பிடிவாதக்காரரா தெரியுது!"

"ம்.. சரிம்மா!"

அவள் விழிகளைத் தழைத்து தலையசைத்ததும் "ஜென்னி எப்படி இருக்கா?" மெதுவாக விசாரித்தார்.

"நல்லாருக்கா! ஆயாம்மா எல்லாம் பாத்துக்கிறாங்க. அவ இருக்கிறதாலே எனக்கு நல்லாப் பொழுது போகுது! என்கிட்டே ஒட்டிக்கறா!"

"சரி வா... அங்கே மாப்பிள்ளை கிளம்பணும்னு உன்னைத் தேடப் போறாரு... போகலாம்!"

இருவரும் ஹாலுக்கு வந்தபோது, "என்ன! பொண்ணு கிட்டே பேசியாச்சா?" கிண்டலாகக் கேட்டார், கடாட்சம்.

சிறு முறுவலுடன் நிமிர்ந்தவளின் விழிகளில், அவ ளருகில் அமர்ந்திருந்த விக்டர் பட, உணர்ச்சிகளைத் தொலைத்த பார்வையுடன் அவளையே கூர்ந்திருந்தான் அவன்.

"நாம கிளம்பலாமா?" அவன் கேட்க, மெல்லத் தலையசைத்து அனைவரிடமும் விடைபெற்றாள்.

காரில் திரும்பி வரும்போது அமைதியாகவே வந்த வன், அறைக்குள் சென்றதும் அவளை, "ஒரு நிமிஷம்" என நிறுத்தினான்.

''என்ன... உங்கம்மாவுக்கு ஏதாவது சந்தேகம் வந்திடுச்சா? ஏன் இப்படி உம்முன்னு இருக்கேன்னு விசாரிச்சாங்களா?'' கூர்மையுடன் கேட்டான்.

உடனே திக்கென்று அதிர்ந்து நிமிர்ந்தவள் கேள்வியாக அவனையே நோக்க, ''எனக்கு எப்படித் தெரியும்னு பாக்கறியா? அங்கே நீ நடந்துக்கிட்ட விதம் அப்படித் தானே இருந்தது.

''யாரோ முகமறியா ஒருத்தன் பக்கத்துலே உக்காந்த மாதிரி, பயந்து ஒதுங்கி உக்காந்திருந்தே! முகத்திலே அப்படி ஒரு கவலை! அப்புறம் ஏன் சந்தேகம் வராது!'' குத்தலாக நிறுத்தினான்.

''சாரி... எனக்கு நடிக்க வரலை!'' வீம்பாகக் கூறியவளிடம்,

''சிவாத்மிகா! இந்தத் திட்டமே உனக்காகத்தான்! எனக்கு இதிலே எந்த லாபமும் இல்லை! நீ கேட்டேன்றதுக்காகவும், உன் பாட்டியோட உடல்நிலைக்கு பரிதாபப்பட்டும் தான் நான் இதுக்கு சம்மதிச்சேன்! இதை ஆரம்பிச்சு வச்சவ நீ... இப்படியே நடிக்கத் தெரியாதுன்னு வீம்பாப் போயிட்டிருந்தேன்னா, கூடிய சீக்கிரமே இந்தத் திட்டத்தை முடிச்சு வைக்க வேண்டியிருக்கும்''

ஒரு மாதிரிக் குரலில் கூறிவிட்டு இறுகிய முகத்துடன் ஜன்னல் புறம் திரும்பி வெளியே பார்வையைப் பதித்தான்.

''சாரி! இன்னிக்கு நீங்க கோபப்பட்டது... பாட்டியைப் பாத்தது... எல்லாமா சேர்ந்து ஏதோ ஒரு விதத்தில என்னைப் பாதிச்சு அப்செட் பண்ணிடுச்சி... அதான்!''

''நான் அதைக் கேக்கலை! என் பக்கத்துல வந்து உக்காந்ததுமே ஏதோ முள் மேல உக்காந்த அவஸ்தை தெரிஞ்சுது உன்கிட்டே!



''அதை நானே கவனிச்சேன் அப்படிங்கிறப்போ உங்கம்மாவுக்குத் தெரியாமலா இருந்திருக்கும்! அதை சொன்னேன்.

''நான் ஒண்ணும் உன் அருகாமையை ஆசையோட எதிர்பார்த்து, உன்னைப் பக்கத்துல உக்காரச் சொல்லலை... நீ விலகிப் போனா வித்தியாசமா இருக்குமேன்னு தான் கூப்பிட்டேன்!''

ஒரு வித விலகல் தன்மையுடன் கூறியவனையே குற்றவுணர்வுடன் ஏறிட்டவளால், எதுவுமே பேச முடியவில்லை!

தன் தவறு புரிந்தாலும், அவனிடம் இயல்பாய் வந்த ஒதுக்கத்தைத் தவிர்க்க முடியாதென்பதையும் உணர்ந்தாள்.

இருதலைக் கொள்ளி எறும்பாய் அவள் தவித்தபோது, ''இனிமேயாவது கேர்ஃபுல்லா நடந்துக்க...'' என்றபடி விக்டர் வெளியே சென்று விட்டான்.

உடனே, சுந்தருக்கு தொடர்பு கொண்டபோது செல் அணைக்கப்பட்டிருந்தது.

ஒரு பெருமூச்சுடன் திரும்பி அவளுடைய அறைக்குள்ளிருந்த பால்கனிக்கு வந்தபோது, சீறி வந்த பனிக் காற்று உடலைத் தழுவிக் கொண்டது.

சிலிர்ப்புடன் நிமிர்ந்தால், வானம் நட்சத்திரங்களின் ஆதிக்கமின்றி கரிய போர்வையாய்த் தெரிந்தது.

சில்லென்ற காற்றும், இரவின் அமானுஷ்ய அமைதியும் மனதை ஏதோ செய்ய, வேகமாக உள்ளே வந்தாள்.

இதயம் கனத்திருந்தது... அவசரப்பட்டு ஒரு செயலை செய்து விட்டு இப்போது கலங்கி நிற்கிறோமோவென்ற பயமும் குழப்பமும் வெகுவாய் ஆட்படுத்தின.

## 18

தொடர்ந்து வந்த நாட்கள் சல சலக்கும் நீரோடையாய் செல்ல, அந்த வீடும், மனிதர்களும், அவளுடன் பிரிக்க முடியாதபடி பிணைந்து போயினர்.

காலையில் எழுந்து விக்டர் எஸ்டேட் அலுவலகம் செல்லும் வரை உடனிருந்து கவனிப்பவள், பிறகு ஜென்னியுடன் விளையாட ஆரம்பித்து விடுவாள்.

சில நேரங்களில் மாலதிக்கு போன் செய்து கேட்டு புதிதாக ஏதாவது ஒரு சமையல் ரெசிபியை சமையல் செய்கின்ற மரியாவின் உதவியுடன் செய்து முடிப்பாள்.

இப்படியே பொழுது சிறகு கட்டிச் செல்ல, மதியம் ஒரு மணிக்கு விக்டர் சாப்பிட வந்து விடுவான்.

சிறிது ஓய்விற்குப் பிறகு அவன் கிளம்ப, அவள் படுத்து விடுவாள்.

மாலையில் ஜென்னியுடன் பொழுது கழிய விக்டரும் வந்து விடுவான்.

பிறகு ஹோம் தியேட்டரில் டி.வி. பேச்சு என்று பொழுது செல்லும்!

சில நாட்கள் தன் ஸ்டடி ரூமிற்குச் சென்று, தொழிலை கவனிப்பான் அவன்.

அப்படி ஒரு நாள் அவள் தனியே அமர்ந்து டி.வி பார்த்துக் கொண்டிருந்தபோதுதான், பக்கத்து சோபாவில் யாரோ வந்து அமர்வது கண்ணோரம் தெரியத் திரும்பினாள்.

விக்டர்தான் வேலை முடிந்து வந்திருந்தான்.

அவளிடம் அசைவை உணர்ந்தவன், ''உங்கம்மா அப்பா எப்ப ஊருக்குப் போறாங்க?'' மெதுவாகக் கேட்டான்.



''ம்.. பாட்டிக்காக தங்கிட்டு, அடுத்த வாரம் தான் போறாங்களாம்! அம்மா காலையில போன் செஞ்சிருந்தாங்க!''

''சரி! அப்ப இந்த வீக் எண்ட் அவங்க எல்லாரையும் நம்ம வீட்டுக்கு சாப்பிடக் கூப்பிடலாமா?'' ஆர்வத்துடன் கேட்டான்.

உடனே உற்சாகத்துடன் தலையசைத்தவள், ''தேங்க்ஸ்! எனக்கு இது தோணவே இல்லை பாருங்களேன்'' விழிகள் விரிய அதிசயப்பட்டாள்.

''அதுக்கெல்லாம்... இங்கே, மூளை மூளைன்னு சாம்பல் நிறப் பொருள் ஒண்ணு இருக்கணும்...''

அழுத்தமான குரலில் தலையைச் சுட்டிக் காட்டி அவன் கூற சட்டென்று சிரிப்பு வந்துவிட, சிவி உடனே சிரித்து விட்டாள்.

பிறகு சிணுங்கலாகத் திரும்பியவள், ''அப்ப எனக்கு மூளை இல்லைன்றீங்களா?'' சிறு கோபத்துடன் கேட்டாள்.

''தெரியலையே! அதை நீதான் சொல்லணும்'' என்றபடி தோளைக் குலுக்கி எழுந்தவன், ''நான் தாத்தாவுக்கு போன் பண்ணி சொல்லிடறேன். நீயும் பேசிடு.'' என்றபடி வெளியேறினான்.

* * *

அந்த ஞாயிறன்று காலையிலேயே அனைவரும் வந்து விட்டனர்.

பாட்டியையும் வீல்சேரில் வைத்து அமர்த்தி அழைத்து வந்திருந்தனர்.

பேத்தி வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த பிரம்மாண்டமான வீட்டை ரசித்துப் பார்த்தார் அவர்.

''ஒரு தடவை, கவிதா இருந்தப்ப வந்தது... அப்போவே... ம்...'' ஒரு பெருமூச்சுடன் பாதியிலேயே நிறுத்தினார்.

''என்ன பாட்டிம்மா! அப்பவேன்னா...'' அவள் தூண்ட, ''உன்னை அவங்க ரெண்டு பேருக்கும் அதான் சாலமனுக்கும் கவிதாவுக்கும் ரொம்பப் பிடிச்சிப் போயிடுச்சாம்! நாங்க மட்டும் வேற மதமா இல்லைன்னா, எங்க வீட்டுக்கு சிவியைத்தான் மருமகளாக்கியிருப்பேன்னு ஆதங்கப்பட்டாங்க.

''அப்போ அதை ஒரு விளையாட்டுப் பேச்சா நினைச்சி நானும் சிரிச்சேன்! ஆனா அவங்க விருப்பப்பட்டது நடந்துடிச்சி பாத்தியா?''

அவர் கூறியதும், அங்கிருந்த விக்டரின் முகத்தில் பெரும் சலனம்!

பார்வை உடனே சிவியிடம் செல்ல, அவளும் அவனையே நோக்கிக் கொண்டிருந்தாள்!

''இது... உண்மையா பாட்டிம்மா...?'' அவன் குரலில் சிறிது பிசிர் தட்டுவது போல்!

''நான் ஏன்ப்பா பொய் சொல்லப் போறேன். ரொம்ப ஜாதி மதம்னு பாக்கற இவங்க தாத்தா ஒத்துக்கிட்டதுக்கு முதல் காரணம் சிவியோட சந்தோஷம். ரெண்டாவது காரணம், இறந்து போன அந்த அன்பான மனுஷங்களோட கடைசி ஆசையை நிறைவேத்தணும்கிறதுதான்!''

அவர் வாஞ்சையுடன் கூற, வேதநாயகம் அவனுடைய தோளைப் பற்றியபடி புன்னகைத்து ஆமென்பதுபோல் தலையசைத்தார்.



அவனுக்குள் ஏதோ ஒரு நினைவு!

எப்போதோ ஒரு முறை போனில் பேசியபோது, அவன் திருமணத்திற்கு மறுப்பு சொல்ல, கவிதா அவனிடம் கூறியது ஞாபகம் வருவதாய்!

''நான் உனக்கு இங்கே ஒரு அருமையான, அற்புதமான, அழகான பொண்ணைப் பாத்து வெச்சிருக்கேன் விக்டர்! பக்கத்து எஸ்டேட் பொண்ணு! நீ மட்டும் அவளைப் பாத்தே மறுப்பே சொல்ல மாட்டே!''

''அம்மா! போதும். அதான், நான் நம்ம எஸ்டேட் பக்கமே வரதில்லை. ஆளை விடுங்க'' என்றபடி தான் போனை வைத்தும், மறக்க முடியாக் கனவாய்!

அது சிவியாக இருக்குமென்று இதுவரை அவன் கற்பனை செய்து கூடப் பார்த்ததில்லை!

ஆனால் அவனிடம் பேசி ஒரு வாரத்திற்குள், கவிதாவிற்கு உடல்நிலை சரியின்றிப் போனது.

அவன் விஷயம் கேள்விப்பட்டுப் பதறி ஊர் வந்து சேர, அவருக்கு ட்ரீட்மென்ட் ஆரம்பிப்பதற்குள், ஆக்சிடெண்டில் சாலமன் இறந்து விட்டார்.

அன்று மாலையே கவிதாவும் உயிர் துறக்க இணைமான்களாய் இருவரையும் அடக்கம் செய்து விட்டுத் தனியாளாய் தான் நின்ற நினைவு!

அவனுடைய முகத்திலேயே உணர்வுகளைப் புரிந்து அணைத்து சமாதானப் படுத்திய கடாட்சம், வீட்டை சுற்றிப் பார்க்க வேண்டுமென்றார்.

தன் மனதை மாற்றவே அவர் அப்படிக் கேட்பதை புரிந்து கொண்ட விக்டரும் உடன் சென்றான்.

பிறகு அனைவரும் வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு வர, சிவி மட்டும் பாட்டியுடனிருந்தாள்.

அவர் கூறியதைக் கேட்டதும், ஏதோ ஒரு தர்ம சங்கட உணர்வு அடிவயிற்றில் குளிராய்ப் பரவ, மௌனமாக அமர்ந்திருந்தாள்.

பிறகு அனைவரும் சாப்பிட்டு விட்டுக் கிளம்ப, அவளுக்குத்தான் சங்கடமாய்!

ஓரக் கண்ணால் அவளை கவனித்தவன், "நீ வேணும்னா அவங்களோடப் போயிட்டு வரியா? நான் நைட் வந்து அழைச்சிக்கறேன்" மெல்ல வினவினான்.

உடனே முகமெங்கும் கோடி சூர்யப் பிரகாசம் ஜனிக்க, துள்ளலுடன் சரியென்றபடி உள்ளே ஓடினாள் அவள்.


பிறகு அனைவருமாகக் கிளம்பி பாட்டி வீட்டிற்குச் சென்றபோது, அவளுள் உற்சாகம் கரை உடைப்பதாய்!

அன்று காலையில் செல்லில் பேசிய சுந்தரின் நண்பன் மணி அவளைக் கவலைப்படாமல் சந்தோஷமாக இருக்கச் சொல்லியிருந்தான்.

தன்னிடம் அவன் பேசுவதாகவும், இனித் தானே சுந்தரைப் பற்றிய தகவல்கள் தருவதாகவும் கூறினான்.

அதை எண்ணியபடியே உற்சாகமாக வீட்டிற்கு வந்தவள், மற்றதையெல்லாம் மறந்து போனாள்.

## 19



அன்று மாலையில், சுஜயும், அருணும் அவளை ஷட்டில் காக் விளையாட அழைத்தனர்.

உடனே, ஷார்ட்ஸும் பனியனுமாகத் தயாராகி வெளியே வந்தால், லானில் அனைவரும் கூடியிருந்தனர்.



உற்சாகத்துடன் விளையாடத் துவங்கும் போதே, ஒரு காரின் ஒலி அனைவரையும் கலைத்தது.

அங்கு போர்டிகோவில் வந்து நின்ற காரிலிருந்து கம்பீரமாக இறங்கிக் கொண்டிருந்தான் விக்டர்.

அவனை இவ்வளவு சீக்கிரமாக எதிர்பார்த்திராத சிவிதான் பெரிதும் தடுமாறிப் போனாள்.

தன்னுடைய ஷார்ட்ஸும் பனியனும் அவளை வெகுவாய் உறுத்த, அந்நியன் ஒருவன் முன்னால் அந்த உடையில் நிற்பது, தர்ம சங்கடமாய்!

"ஹாய் சுஜய்... அருண்! என்னை உங்களோட கேமிலே சேர்த்துக்க மாட்டீங்களா?"

கேட்டபடி வந்தவனை, அனைவரும் உற்சாகக் குரலில் ஆர்ப்பரித்து வரவேற்றனர்.

ஒருபுறம் அவனும் அருணும் அணி சேர, மறுபக்கம் சிவியும் சுஜயும் இணைந்து எதிர் கொண்டனர்.

ஆனால் ஒவ்வொரு முறையும் விக்டரே வெற்றி பெற, சுஜயும், சிவியும் பெரிதும் ஓய்ந்து போயினர்.

"போதும்... வேற ஏதாவது விளையாடலாம். ஷட்டில் வேண்டாம்" சிறு கோபத்துடன் சிணுங்கினான் சுஜய்!

"சரி! என்ன விளையாடலாம்...?"

விக்டர் கேட்க, "அந்தாக்ஷரி விளையாடலாமா?"

ஆர்வத்துடன் வினவினார் உஷா!

"ஓகே" என்று கூச்சலுடன் ஆண்களும், பெண்களும் தனித்தனியே லானில் அணிவகுத்தனர்.

வார்த்தைகள் மாற்றி மாற்றி வர, போட்டி சூடு பிடிக்க, இறுதியில் பெண்களே வென்றனர்.

"ஹோ.."வென்ற கூச்சலுடன் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் பொங்கியெழுந்து சிவி ஆர்ப்பரிக்க, விக்டரின் பார்வை ஒருவித வியப்புடன் அவளிடம் பதிந்தது.

சிறு குழந்தையாய் துள்ளியவளையே கூர்மையுடன் அளவிட்டவனை, செல்லிலிருந்து எழுந்த மணியோசை கலைத்தது.

அந்த ஆரவாரத்திலிருந்து சற்று விலகிச் சென்று செல்லை உயிர்ப்பித்தபோது, புதிய குரல் ஒன்று அவனை அழைத்தது.

பிறகு அவர் கூறிய விபரம் அவனைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்க, பார்வை அவனறியாமலே சிவியிடம் சென்றது.

பிறகு முழு விபரமும் அறிந்தவன், தானே அவளிடம் எல்லாவற்றையும் கூறி விடுவதாகக் கூறினான்.

"இல்லை சார்! சிவிக்கு இப்ப எதுவுமே தெரிய வேண்டாம்! நான் ஒரு பதினைஞ்சு நாளிலே நேரிலேயே வரேன். அப்ப சொல்லிக்கலாம்!" என்றது அந்தக் குரல்.

யோசனையுடன் செல்லை அணைத்தவனுக்குள் என்ன செய்வதென்று புரியாத அலைப்புறுதலும் தவிப்பும்

பிறகு, போனில் அவர் கூறியபடியே செயல்பட முடிவெடுத்தான்.

தலையைக் குலுக்கி தன்னை அமைதிப்படுத்தியபடி வந்தவனால், அதற்கு மேல் இயல்பாக எதிலுமே கலந்து கொள்ள முடியவில்லை.

"நாம கிளம்பலாமா?" மெதுவாக அவளிடம் கேட்ட போது, மறுக்காமல் உடனே கிளம்பி விட்டாள் அவள்.



அனைவரும் விடை கொடுக்க, வழியிலும் அவன் எதுவுமே பேசாமல் ஏனோ இறுகித் தெரிந்தான்.

எஸ்டேட்டில் ஏதாவது ப்ரச்னையாக இருக்குமோ வென்ற எண்ணத்துடன் அவளும் அமைதியாகவே வந்தாள்.

* * *

அன்றிரவு விக்டரால் உறங்கவே முடியவில்லை.

இந்த விஷயத்தை எப்படி அவளிடம் சொல்லிப் புரிய வைக்கப் போகிறோம் என்கிற பரிதவிப்பு!

அன்றிலிருந்து விக்டர் அவளிடமிருந்து பெரிதும் ஒதுங்க, அவளோ அவனுடைய பழகுகின்ற முறையால் ஈர்க்கப்பட்டிருந்தாள்.

அவனைப் பற்றிய கணிப்புகள் தவிடு பொடியாகி இயல்பான ஒருவனாய், பழகுவதற்கு இனிமையானவனாய் அவனை எண்ண ஆரம்பித்திருந்தாள்.

அந்த வாரக் கடைசியில் கடாட்சமும் மாலதியும் ஊருக்குக் கிளம்புவதால், அவளைத் தாத்தா வீட்டில் தங்கும்படி அவன் அனுப்பியிருந்தான்.

எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சி!

விக்டர், சிவியின் ஏக்கத்தைப் புரிந்து, தாய் தந்தையருடன் அவளை தங்க அனுமதித்ததில் மிகவும் பெருமைப் பட்டனர்.

தினமும் ஜென்னியுடன் அவளைப் பார்க்க வந்தாலும், உடனே கிளம்பி விடுவான் அவன்.

அவனுடனான தனிமையை அவன் தவிர்க்கிறானோ வென்று கூட அவளுக்குத் தோன்றும்.

அந்த வார இறுதியில் அவர்கள் கிளம்பியதும் அவன் விக்டரின் வீட்டிற்கு வந்துவிட, அப்போதுதான் அவனிடம் தெரிந்த வித்தியாசத்தை அவள் உணர்ந்தாள்.

ஆனால் அவனிடம் தெரிந்த ஒதுக்கத்திற்கான காரணத்தை மட்டும் அறிய முடியாமல் ஜென்னியிடம் அதிகமாக ஒட்ட ஆரம்பித்தாள்.

இப்போதெல்லாம், அவளிடம் அவன் நின்று ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை.

வேலை, வேலை என்று ஓடிக் கொண்டிருந்தவனைத் தொந்தரவு செய்யவும் மனதில்லை.

தினமும் அவனுக்குப் பிடித்தமான சமையலாக செய்து வைத்தாலும், அவனிடமிருந்து ஒரு பாராட்டு கூடக் கிடைக்காது.

இப்போதெல்லாம் அவன் வீட்டிற்கு வருவதே இரவு உறங்கும் நேரத்தில்தான்!

காலையிலும் சீக்கிரமே கிளம்பி விடுவான். மதியம் சில நேரங்களில் உணவு எஸ்டேட் அலுவலகத்திற்கே சென்று விடும்.

அவனுடைய விலகலுக்கான காரணம் புரியாமல் தவித்துப் போனவளுக்கு ஆறுதலாய் சுந்தரின் நண்பன் மணி, மறுநாள் வருவதாகப் போன் செய்திருந்தான்.

# 20

மறுநாள் காலையிலேயே எழுந்து குளித்து உற்சாகத்துடன் அவள் தயாராக மதியம்தான் மணி வந்து சேர்ந்தான்.



முகம் நிறைந்த தாடியுடன் சோகமாக நின்றவனை உற்சாகமாக வரவேற்றவள், ஸ்டடி ரூமிலிருந்த விக்டரிடம் அழைத்துச் சென்றாள்.

பரஸ்பரம் இருவரையும் அறிமுகம் செய்த பிறகு, "சுந்தர் எப்படி இருக்காரு மணி? வெளியே அவரைப் பத்தி விசாரிக்க முடியலை... வேலைக்காரங்க எல்லாரும் இருக்காங்களா... அதான்!" ஆர்வத்துடன் விசாரித்தாள்.

"சிவி! சுந்தர் வெளிநாட்டுக்கு வேலைக்குப் போகலை!"

மெதுவாக முதல் இடியை அவன் இறக்க, "அப்போ பணம் கட்டி எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டிருந்தாரே... அது?" பதைப்புடன் கேட்டாள்.

"ம்! அதெல்லாம் உண்மைதான்! பிரயாணத்தை ஒரு மாசம் தள்ளிப் போட்டிக்கறதா ஏஜெண்ட் சொல்ல இவனும் நம்பி எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டிருந்தான்."

"அப்பதான், அவனோட தங்கச்சி லெட்டர் எழுதி வச்சிட்டு யாரோடயோ ஓடிப்போயிட்டா! ஒரு நாள் நீ பேசினியாமே... அவசரமா வெச்சிட்டதா சொன்னான்... அன்னிக்குதான்!"

"ரொம்ப உடைஞ்சு போயிட்டான்...

"அப்புறம் அதை விடப் பெரிய இடி ஒண்ணு அவன் தலையில விழுந்தது.

"அந்த ஏஜெண்ட் எல்லாரையும் ஏமாத்திட்டு பணத்தை சுருட்டிட்டு எங்கேயோ ஓடிட்டான்...

"அவனால அந்த அதிர்ச்சியைத் தாங்கவே முடியலை... பைத்தியம் புடிச்ச மாதிரி ஆயிட்டான்...

"அப்பதான் அந்தக் கொடுமை நடந்தது... அவங்கம்மாவுக்கு, மக ஓடிப்போன அவமானம், பணம் கட்டி

ஏமாந்தது மகன் உடைஞ்சு போனது, இதெல்லாம் தாங்க முடியலை...

"மறுநாளே ஹார்ட் அட்டாக்குல ராத்திரி தூக்கத்து லயே இறந்திட்டாங்க.

"நானும் அவன்கூடவே ஆறுதலாத் தங்கியிருந்தேன்... ஒரே சமயத்துல நேர்ந்த எல்லா இழப்பையும் அவனாலத் தாங்க முடியலை!"

"உனக்கு சொல்லலாம்னு கேட்டேன். உடனே என்னைத் தடுத்துட்டான்,... சிவிக்கு கல்யாணமாயிடுச்சி... அவ ளாவது நிம்மதியா இருக்கட்டும்னான்.

"அன்னிக்குதான் நான் தனியா உன்கிட்ட பேசினேன்... சுந்தரைப் பத்தி பேசறதுக்குள்ளே அவன் வந்துட்டான்.

"இனிமே நானே அவனைப் பத்தி பேசறேன்னு சொன் னேன்... அவனை எப்படியாவது சமாதானம் செஞ்சி உன் கூட சேத்துடணும்னு நினைச்சேன்.

"ஆனா... அன்னிக்கு மதியமே... அவன் தூக்குப் போட்டுட்டு இறந்துட்டான் சிவி!"

மணி உடைந்த குரலில் கூறியதும், நம்ப இயலாத வியப்பும் தவிப்புமாய் தத்தளித்தவள், மறு கணமே தாங்க முடியாத அதிர்ச்சியால் மயங்கிச் சரிந்தாள்.

உடனே ஓடி வந்து தாங்கிக் கொண்ட விக்டர், அருகிலிருந்த சோபாவில் அவளைக் கிடத்தினான்.

மேஜையிலிருந்த தண்ணீர் ஜாடியை எடுத்து வந்து முகத்தில் தெளித்தபோது, மெதுவாக விழிக்க ஆரம்பித் தாள் அவள்.

கண் விழித்து மணியைப் பார்த்ததுமே நிலைமையின் தீவிரத்தை உணர்ந்தவள் அப்படியே எழுந்து முகம் பொத்தி அழ ஆரம்பித்தாள்.



உணர்ச்சியற்ற விழிகளால் அவளையே ஊடுருவிய அவனுக்குள் சிறு சலனம்!

"சிவி! ப்ளீஸ்... அழாதே! நடந்தது நடந்துடிச்சி... தைரியமா இருக்கணும்! அவன்தான் கோழை மாதிரி அப்படி ஒரு முடிவெடுத்தான்னா, நீயுமா உடைஞ்சு போறது?" மெதுவாக ஆறுதல் படுத்தினான் மணி!

வெகு நேரம் கழித்து அவள் சிறிது சமாதானமாகி ஓய்ந்து போய் நிமிர, அவன் ஒரு கடிதத்தைப் பையி லிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"இது... உன் பேர் போட்டு சுந்தர் எழுதி வச்சிருந்த, லெட்டர்! படிச்சிப் பாரு" என்றான்.

நடுங்கும் விரல்களால் அதைப் பெற்றுக் கொண்டவள் மெதுவாகப் பிரித்தபோது நீர்த்திரை பார்வையை மறைத்தது.

இரு கைகளாலும் முகத்தை அழுந்தத் துடைத்து படிக்க ஆரம்பித்தபோது, மணி கூறிய விபரங்களே அதில் எழுத்தாய் வடிக்கப்பட்டிருந்தன.

வாழ்க்கையில் தான் சந்தித்த தோல்விகளும் ஏமாற்றங் களுமே தன்னை இந்தத் தற்கொலைக்கு தூண்டியதாக அதில் தெரிவித்திருந்தான்.

இறுதியாக ஒரு கோரிக்கை என்று, அவளையும் விக்டரையும் இந்த திருமணத்தை உண்மையாக்கி சந்தோஷமாக வாழும்படி வேண்டுகோள் விடுத்திருந்தான்.

அதைப் படித்ததும் ஒரு விம்மலுடன் அவள் பதற, கடிதம் கீழே விழுந்தது.

மெதுவாகக் குனிந்து அதை எடுத்து மடித்து அவ ளருகில் வைத்த விக்டர், மணியைத் தனியே அழைத்துச் சென்று பேசினான்.

மதியம் சாப்பிட்டுவிட்டு மணி ஊருக்குக் கிளம்ப, அறைக்குள் சென்று கதவைத் தாளிட்ட சிவி, மாலை வரை வெளியே வரவே இல்லை!

கண்ணீரிலேயே கரைந்தவளின் உலகமே இருட்டானதைப் போல்!

அன்று மாலையில் *சீக்கிரமே* வீட்டுக்கு வந்த விக்டர், யோசனையுடன் அவளுடைய அறைக் கதவைத் தட்டினான்.

உள்ளே வரும்போதே விசாரித்தபோது, மதியத்திலிருந்து அவள் கீழேயே வரவில்லை என்று ஆயாம்மா கூறியிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து இடையிலிருந்த அந்தக் கதவு திறக்கப்பட, கண்கள் சிவந்து இடுங்கியிருக்க, முகம் வீங்கி நின்றிருந்தாள் அவள்.

புரியாத ஏதோ ஓர் உணர்வு இதயத்தை கனக்கச் செய்ய, "நான் உள்ளே வரலாமா?" மெதுவாகக் கேட்டான் அவன்.

மெதுவாகத் தலையசைத்தபடி அவள் வழியை விட்டு விலக, உள்ளே வந்தவனது பார்வை, அவளையே ஊடுருவுவதாய்!

"சிவாத்மிகா! நடந்ததை மறக்கறது ரொம்பக் கஷ்டம் தான்... ஆனா என்ன செய்யறது... மறந்துதான் ஆகணும்! நீ இப்படி அழுதிட்டிருந்தா இங்கே வீட்டில இருக்கறவங்க நம்மைப் பத்தி என்ன நினைப்பாங்க?

"இல்லை... உங்க வீட்டிலிருந்து யாராவது வந்தாலும் கஷ்டம்தான்... என்ன காரணம் சொல்வே!

"இந்த இழப்பு நாம யாருமே எதிர்பார்க்காத ஒண்ணு! தாங்கிக்கறது ரொம்ப சிரமம்தான். எனக்குப் புரியுது!



அதனாலதான் நான் ஒரு முடிவெடுத்திருக்கேன்!" மெல்ல நிறுத்தினான்.

"இன்னிக்கு நைட் ப்ளைட்டில நாம ரெண்டு பேரும் கிளம்பி சென்னை போறோம். அங்கிருந்து ஒரு வார ட்ரிப்பா அந்தமான்ஸ்...

"அங்கே உன்னை யாருமே டிஸ்டர்ப் பண்ண மாட்டாங்க! எவ்வளவு அழணுமோ அழலாம்! உன் துக்கத்தை எல்லாம் மூட்டை கட்டி அங்கேயே கடல்லே கரைச்சிட்டு வந்துடணும் ஓகே!"

இலகுவான குரலில் அவன் கேட்க மரத்துப் போய் மிரட்சியுடன் விழித்தவள், "எல்லாரும் ஏதாவது தப்பா நினைச்சா? இப்படி இருக்கற சிச்சுவேஷன்லே என்னால எப்படி வர முடியும்?" புரியாமல் விழித்தபடிக் கேட்டாள்.

"சிவாத்மிகா! என்ன பேசறே? மத்தவங்களைப் பொறுத்தவரைக்கும் நாம ரெண்டு பேரும் கணவன் மனைவிதான்!"

"இது நம்ம ஹனிமூன் மாதிரின்னு சொன்னா யார் என்ன சொல்ல முடியும்?"

உடனே விதிர்த்துப் போய் எழுந்தவளை அமர வைத்தவன், "சிவாத்மிகா! ஒண்ணை நீ புரிஞ்சிக்கணும்! சுந்தர் விஷயம் உனக்கும் எனக்கும் மட்டும் தான் தெரியும்!

"நீ இப்படி திடீர்னு அழுதிட்டிருந்தா ஏன் என்னங்கிற வீண் சந்தேகம் எல்லாருக்கும் வரும்! அதை சமாளிக்கத் தான் இப்ப நாம கிளம்பறோம்!

"ஒரு வாரத்துல உன் மனசு கொஞ்சம் மாறலாம்... சமாதானமாகலாம்...

''மத்தவங்களைப் பொறுத்தவரைக்கும் தான், இது நம்ம ஹனிமூன்! உனக்கோ, ஒரு மனமாற்றம் தர்ற ட்ரிப்... எனக்கு ஒரு ரெஸ்ட் மாதிரி! அவ்வளவுதான்!''

இயல்பான குரலில் அவன் கூற, தனக்காக அவன் எவ்வளவு யோசித்திருக்கிறான் என்ற வியப்பு வருவதாய்!

''என்ன... போகலாமா?'' மெதுவாகக் கேட்டான்.

''ம்...'' என்றபடி சென்று தன் துணிகளை அடுக்க ஆரம்பித்தாள் அவள்.

உடனே வேதநாயகத்திற்கு போன் செய்து விபரம் கூறியவன்,

''முன்னாடியே சொல்லலைன்னு தப்பா நினைக்காதீங்க! திடீர்னு எனக்கு கொஞ்சம் வேலை ஃப்ரீயாச்சு! உடனே முடிவு பண்ணி டிக்கெட் புக் பண்ணி கிளம்பிட்டோம். ஒரு வாரம் தான்!'' என்றவன் கடாட்சத்திடமும் பேசினான்.

''அங்கிள்! நாங்க இன்னிக்கு அந்தமான்ஸ் போறோம்! நைட் ஃப்ளைட்ல சென்னை வந்து விடிகாலையிலேயே கிளம்பறதாலே ஹோட்டல்லே தங்கிடறோம். கண்டிப்பா சென்னைக்கு அடுத்த மாசம் ஒரு ட்ரிப் வரோம்'' என்று விபரம் கூறினான்.

''ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை! நீங்களும் ஹனிமூன் போகவே இல்லியே... போய் நல்லா என்ஜாய் பண்ணிட்டு வாங்க... சிவி இருக்காளா?''

உடனே போனை அவளிடம் கொடுத்தவன் கண் ஜாடையில் 'பேசு' என்றான்.

''அப்பா! நாங்க கிளம்பறோம்... அம்மா கிட்டே சொல்லிடுங்க'' என்றதுமே குரலிலிருந்த மாற்றத்தைக் கண்டுபிடித்து விட்டார் அவர்.



''என்னடா... குரலே சரியில்லை?''

அக்கறையுடன் கேட்டவரிடம் என்ன சொல்வதென்று புரியாமல் அவள் திகைத்து விழித்து,

''என் குரல்... அது வந்து...'' திணறினாள்.

உடனே அவளிடமிருந்த போனை வாங்கியவன்,

''அங்கிள்! நேத்து மழை பெய்ஞ்சுது இல்லியா அதிலே போய் நனைஞ்சிருக்கா... சிவியரா கோல்ட்! அதான் குரலே மாறிடுச்சி! மாத்திரையெல்லாம் எடுத்துட்டுதான் போறோம்... பை அங்கிள்!'' என்றான் இயல்பான குரலில்!

''சரி மாப்பிள்ளை! டேக் கேர்!'' என்றபடி போனை வைத்தார் அவர்.

பிறகு, இருவரும் கிளம்பி கோயம்புத்தூர் வந்ததும், அங்கிருந்து விமானத்தில் சென்னை சென்று ஹோட்டலில் தங்கியதும் ஒரு கனவு போலிருந்தது அவளுக்கு!

கட்டிலில் அவளைப் படுக்கச் சொல்லி விட்டு அந்த அறையிலிருந்த சோபாவில் அவன் உறங்க ஆரம்பித்து விட்டான்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு குரல் இசையாய் அவனை உசுப்ப கண் விழித்தால், எங்கிருக்கிறோம் என்றே தெரியவில்லை.

கண் விழித்தால் அந்த அறையும் பரிச்சயமின்றித் தெரிய, புரியாமல் அமர்ந்து எழுந்து அமர்ந்தபோது அறையிலிருந்த போனும் ஒலிக்க ஆரம்பித்தது.

உடனே உறக்கம் கலைந்து எழுந்த விக்டர், ரிசப்ஷனில் எழுப்பியதற்கு நன்றி கூறிவிட்டு, தன் செல்லில் ஒலித்துக் கொண்டிருந்த அலாரத்தையும் நிறுத்தினான்.

மறு கணமே அவளிடம் திரும்பியவன், ''நேரமாயி டுச்சி! அரை மணி நேரத்துல கிளம்பணும்! சீக்கிரம் குளிச்சி ரெடியாயிடு'' என்றபடி ஷேவிங் செய்ய ஆரம் பித்தான்.

பிறகு இருவருமாக் கிளம்பி ஏர்போர்ட்டுக்கு வந்து விமானத்தில் ஏறி அந்தமானிற்கு கிளம்பும்போதுதான் அவளுக்கு சிறிது உணர்வே வந்தது.

## 21

அந்தமானில் போர்ட் பிளேயரில் உள்ள விமான நிலையத்தில் இறங்கிய போது, ஊட்டிக்கு நேர் மாறாக நல்ல வெய்யிலே தெரிந்தது.

அவளிடம் திரும்பியவன், ''எல்லாரும் ஹனிமூனுக்கு குளிர்ப் பிரதேசத்துக்கு வருவாங்க. நாம என்னடான்னா அங்கேருந்து இங்கே வந்திருக்கோம்!'' சிறு முறுவலுடன் பகர்ந்தான்.

உணர்ச்சியற்ற விழிகளுடன் மெல்லத் தலையசைத்தவள், உடனே குனிந்து கொண்டாள்.

அவளுடைய உணர்வுகள் புரிய, பிறகு மௌனமாக வந்தவன், ரிசார்ட்டுக்கு வந்ததும் அவளை நன்றாக ஓய்வெடுக்கும்படிக் கூறினான்.

அது உயர்ரகக் காட்டேஜ் என்பதால் வரவேற்பறையும், படுக்கையறையும் பால்கனியுமாக அழகுற அமைக்கப் பட்டிருந்தது.

ஹாலில் அவன் தங்கிக் கொண்டு அவளை உள் அறையில் ஓய்வெடுக்கும்படிக் கூறினான்.



சாப்பிட்ட பிறகு பயணக் களைப்போ, இரவு சரியாக உறங்காததோ, இருவரும் அடித்துப் போட்டாற் போல் உறங்கி விட்டனர்.

மாலையில் முதலில் கண் விழித்தவன் ரூம் சர்வீஸை அழைத்து 'காபி' அனுப்பும்படிக் கூறினான்.

பிறகு ஹாலிலிருந்த பால்கனிக்குச் சென்றபோது அது நீண்ட வெராந்தாவாய் படுக்கையறையிலிருந்தும் வெளி வரும்படி அமைக்கப்பட்டிருப்பது புரிந்தது.

சிறிது நேரம் ஓய்வாக நின்று தூரத்தில் தெரிந்த கடலையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அமைதியாய் ஆர்ப்பரித்தபடி இருந்த கடல் ஏனோ சீறி வந்த சுனாமியை நினைவு படுத்தியது.

போன முறை அவன் நண்பர்களுடன் வந்ததற்கும் இந்த முறைக்கும், நிறைய வித்தியாசம் தெரிவது போல்!

பல இடங்கள் அழிந்து பண்பாட்டுத் தடயங்களை சுமந்திருப்பது புரிவதாய்!

உயர்ந்து நின்ற தென்னைகளில் முக்கால்வாசி உயரம் வரை நீர் நின்று வடிந்திருந்ததை அங்கு கொடியாய் துளிர்த்து இப்போது காய்ந்து தொங்கிய சருகுகள் உறுதிப் படுத்தின.

மனதிற்குள் சிறு சோக மேகம் மையம் கொண்டது.

இயற்கையின் மாயக்கரங்கள் மயிலிறகாய் வருடும் ரசவாதத்தையும், கொடிய அரக்கனாய் மாறி கபளீகரம் செய்யும் விந்தையையும், எண்ணியபடி மவுனமாக நின்றிருந்தவனை கதவு திறக்கும் ஓசை கலைத்தது.

மெதுவாகத் திரும்பினால், உறங்கி விழித்த முகமும் சிலும்பலாய் கலைந்த தலையுமாய், பழைய காலத்து ரவிவர்மாவின் ஓவியம் போல் நின்றிருந்தாள் சிவி!

"ஹாய்! சன் செட் பாரு. கடல் எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா?" அவளை அழைத்தான்.

எதிரே, அப்போதுதான் அஸ்தமனமாக எண்ணிய ஆதவன், தன் சிவந்த கரங்களில் கசிந்த செம்பஞ்சுக் குழம்பு வர்ணத்தால் கடலலைகளை சிவப்பாக்கிக் கொண்டிருந்தான்.

அந்த அழகில் மெய்மறந்து சிறிது நேரம் நின்றவள், "நான் போறேன்" என்றாள் தரையைப் பார்த்தபடி!

"ம்.. போ! எல்லா விஷயத்தையுமே என்கிட்டே கேட்டுதான் செய்யணும்னு இல்லை சிவாத்மிகா!

"இது உனக்கு ஒரு சேஞ்ச் வேணும்கிறதுக்காக நான் ஏற்பாடு செஞ்ச ஒரு ட்ரிப்!"

"இதிலே உன் விருப்பப்படி நீ இருக்கலாம்! எப்ப ஓய்வெடுக்கணும்னு தோணுதோ எடு! இயற்கையை ரசிக்கணும்னா இங்கே வந்து ரசி! மனசு தெளிஞ்சு ஊரை சுத்திப் பார்க்கணும்னா மட்டும் என்கிட்டே சொல்லு... போகலாம்!

"மத்தபடி மூணு வேளையும் சாப்பாட்டை அறைக் குள்ளேயே கொண்டு வரச் சொல்லி ரூம் சர்வீஸ் கிட்டே சொல்லிட்டேன். 'ஹனிமூன் கப்பிள்ஸ்.. டோண்ட் டிஸ்டர்ப்.' அப்படின்னு எல்லாக் காட்டேஜிக்கு வெளி யிலயும் போர்டு இருக்கறதால, நம்மை யாரும் தொந்தரவு செய்யவும் மாட்டாங்க! உன் இஷ்டப்படி நீ இருக்கலாம்...

"காபி வந்திடுச்சி! குடிச்சிட்டு ரெஸ்ட் எடு!



"இங்கே சீக்கிரமே இருட்டிடும்...' அதே மாதிரி காலையில அஞ்சு மணிக்கே வெயிலும் வந்துடும்!

"ஃப்ளாஸ்க்குல காபி இருக்கு... வா குடிக்கலாம்!" என்று அழைத்தான்.

பிறகு அவள் ஓய்வெடுக்கச் சென்றுவிட, வெளியே வந்து நின்றிருந்த போதுதான் சென்ற முறை நிகோபர் தீவுகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்தது நினைவு வந்தது.

இந்த முறை அந்தமான் சுற்றியுள்ள தீவுகளை மட்டுமாவது அவளுக்கு சுற்றிக் காட்ட வேண்டுமென்று தோன்றும்போதே, அவள் வருவாளாவென்ற சந்தேகமும் வருவதாய்!

லானில் போடப்பட்டிருந்த கல் பெஞ்சில் அமர்ந்து யோசித்தபோது, சிவியின் ப்ரச்னைக்கு என்ன முடி வெடுப்பதென்றே புரியவில்லை!

சுந்தரின் இந்த கோழைத்தனமான முடிவால் தாங்களிரு வரும் வெகுவாய் பாதிக்கப்பட்டிருப்பது மட்டும் புரிவ தாய்!

ஒரு வருடம் கழித்து மண விடுதலை கொடுத்து அவளை சுந்தரிடம் இணைத்து விடலாமென்ற திட்டமே இன்று தவிடு பொடியாய்!

அவள் எப்படித் தேறுவாள்... என்ன முடிவெடுப்பாள்...

இதில் தான் அவளுக்கு எப்படி உதவுவது... யோசிக்க யோசிக்க பெரும் குழப்பமும் எரிச்சலுமே மிஞ்சின!

அன்று முழுவதும் அப்படியே கழிய, மறுநாள் மதியம் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்தபிறகு மாலையானதும் பால்கனிக்குச் சென்றான்.

இரண்டு நாட்களாகியும் சிவியின் மனம் தேறவில்லை என்பது புரிந்தது.

இருவருக்குமே கஷ்டம்தான். யோசிக்காமல், ஏன் இந்த இக்கட்டில் மாட்டிக் கொண்டோம் என்று சலிப்பு வரும் போதே, தாயின் கடைசி விருப்பமும் நினைவிற்கு வர, தான் எப்படி உணர்கிறோமென்றே அவனுக்குத் தெரிய வில்லை.

மெதுவாக உள்ளே வந்தபோது, சோர்ந்த முகத்துடன் ஹாலில் அமர்ந்திருந்தாள் சிவி!

அவனைக் கண்டதும் நிமிர்ந்தவள்,

"சாரி! நான் அவசரப்பட்டு சுந்தரை நம்பி உங்களை இப்படி ஒரு பெரிய இக்கட்டுல மாட்டி விட்டுட்டே னோன்னு கஷ்டமா இருக்கு!" மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

"ம்... நானும் அதைப் பத்திதான் இவ்வளவு நேரம் யோசிச்சிட்டிருந்தேன்... இதுல உன் தப்பு என்ன இருக்கு. சுந்தர் இப்படிக் கோழையா ஒரு முடிவெடுப்பாருன்னு நாம எதிர்பார்க்கலையே..."

"ரொம்பக் கஷ்டமா இருக்கு! ப்ரச்னைகளாலே உயி ரையே மாய்க்கற அளவுக்கு இவ்வளவு திடமில்லாதவரா அவர் இருப்பாருன்னு நான் நினைக்கவே இல்லை" குமுறினாள்.

"எதையுமே அவங்கவங்க நிலையில இருந்து யோசிக்கணும்! சமீபத்துல ஒரு எழுத்தாளர் தன் மனைவி யோட பிரிவு தாங்காம தற்கொலை பண்ணிக்கிட்டாரு... ரொம்ப வருத்தமா இருந்தது!



"ஊருக்கெல்லாம் தீர்வு சொன்ன அவரால தன் ப்ரச்னைக்கு ஒரு தைரியமான முடிவெடுக்க முடியலை யேன்னு கவலைப்பட்டேன்!

"ஆனா, தனிமை, வறுமை, மனைவி மேல வெச் சிருந்த காதல் இதெல்லாம் ஒரு காரணமா இருந்திருக் கலாம்!" மெதுவாக நிறுத்தினான்.

"இல்லையே... அப்பவும் அவருக்காக நான் இருந் தேனே... என் நினைவு அவருக்கு வரவே இல்லையே... வேற யாரையாவது கல்யாணம் செஞ்சிக்கிட்டா, அதி லருந்து சுலபமா விடுபட முடியாதுன்னு தானே, பெண் களையே விரும்பாத உங்களை விரும்பறதா பொய் சொல்லி இந்த நாடகத்தையே நடத்தினேன்!

"நமக்காக ஒருத்தி இப்படி ஒரு முடிவெடுத்து காத்திருக்காளேங்கிற எண்ணமே அவருக்கு எப்படி வராமப் போச்சு."

ஒரு விம்மலுடன் முகம் மூடி அழ ஆரம்பித்தவளை, எப்படி சமாதானப்படுத்துவதென்ற யோசனையுடன் அவன் அசைவின்றி அமர்ந்திருந்தான்.

அவளை எப்படி இந்த இக்கட்டிலிருந்து விடு விப்பதென்ற யோசனை வரும்போதே, தன்னைப் பற்றி ஏன் நினைக்கவேயில்லை என்ற வியப்பும் எழுவதாய்!

தானும்தானே இதில் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இந்தத் திருமண பந்தத்திலிருந்து எப்படி வெளியே வரப் போகிறோமென்ற பயமின்றி, அவளுடைய கஷ்டத்தை மட்டும் யோசிக்கிறோமேவென்ற எண்ணமும், மேலோங் கியது.

வெகு நேரத்திற்குப் பிறகு சமாதானமாகித் தெளிந்து முகம் துடைத்து நிமிர்ந்தவளைப் பார்த்தால், பரிதாப மாய்!

''சாரி! நான் உங்களுக்கு ரொம்பத் தொல்லை குடுக்கறேன்! என்னால மேலமேல உங்களுக்குக் கஷ்டம் தான்!'' கம்மிய குரலில் வருந்தினாள்.

''கஷ்டம்தான்! ஆனா, ப்ரச்சனை வந்துடுச்சின்னா அதை எப்படித் தீர்க்கறதுன்னு பாக்காம, அதை எதிர் நோக்க முடியாம கண்ணீர் விடறவங்களை எனக்குப் பிடிக்காது.

''ஆனா, உன் நிலைமை எனக்குப் புரியுது.. அத னாலதான் பொறுமையாகக் காத்திருந்தேன்.

''இந்த ரெண்டு நாளா நீ நல்லா யோசிச்சிருப்பே! கொஞ்சமாவது தெளிவு வந்திருக்கும்! இனிமே என்ன செய்யலாம்கிற முடிவை நீதான் எடுக்கணும்'' அவளையே கூர்ந்தபடி கூறினான்.

சிறிது நேரம் தன் விரல்களையே பார்த்தபடி அமர்ந் திருந்தவள் மெதுவாக நிமிர்ந்தாள்,

''சுந்தரோட அத்தியாயம் என் வாழ்க்கையில முடிஞ்சு போச்சு! இப்ப இந்தத் திருமணத்தை எப்படியிருந்தாலும் பாட்டிக்காகவாவது நாம தொடர்ந்து தான் ஆகணும்!''

''பாட்டி... அப்புறமா நான் உங்களைத் தொந்தரவு பண்ண மாட்டேன்... நம்ம ரெண்டு பேருக்கும் ஒத்து வரலைன்னு சொல்லிப் பிரிஞ்சுடுவேன்.. அது வரைக்கும் நீங்க என்னைப் பொறுத்துக்கணும்'' மெல்லிய குரலில் இறைஞ்சினாள்.



உடனே நிமிர்ந்தவன், ''அதெல்லாம் சரி! ஒரு வேளை பாட்டிக்கு உடம்பு தேறி சுகமாயிட்டா?'' கூர்மையுடன் கேட்டான்.

சட்டென்று அதிர்ந்து போய் நிமிர்ந்தவள், ''நான்.. அதை யோசிக்கவேயில்லை. டாக்டர்ஸ்.. இன்னும் ஒரு மாசம்தான்னு.. சொல்லியிருக்காங்களே!'' கண்ணீர்த் துளிகள் விழியோரம் ஜனிக்க ஆரம்பித்தன.

''ம்.. பார்ப்போம். ஆனா, பாட்டிக்காக நீ உடனே பிரிய ணும்னு அவசியமில்லை! உனக்கு ஒரு வருஷம் டைம் இருக்கு!''

''அது வரைக்கும் என் மனைவியா.. நடிச்சாலும், ஜென்னியை நல்லாப் பாத்துப்பேன்னு நினைக்கிறேன்.. அதுதான் எனக்கு வேணும்!'' எங்கோ பார்த்தபடி கூறி னான்.

''தேங்க்யூ! தேங்க்யூ சோமச்! இப்படி ஒரு இக்கட்டில் நம்மளை மாட்டி வெச்சிட்டாளேன்னு கோபப்படாம பொறுமையாப் பேசறீங்களே... அதுவே எனக்குப் போதும்!''

''இந்த விஷயத்துல நீங்க என்ன முடிவெடுக்கறீங் களோ நான் அதுக்குக் கட்டுப்படறேன்!'' மெதுவாகக் கை கூப்பினாள்.

''ஹேய்! என்னாச்சு..? திடீர்னு, ஒரு தெய்வம் ரேஞ்சுக்கு என்னைக் கும்பிடறே? பி ப்ராக்டிகல்!''

''நாம எதிர்பார்க்காத பல விஷயங்கள் நடந்து போச்சு!''

''ஆனா, இப்ப அதை எப்படி ஹேண்டில் பண்றதுன்னு தான் நாம யோசிக்கணும்!''

"உங்க வீட்டைப் பொறுத்தவரைக்கும் இது உண்மையான கல்யாணம்.. அதை மாத்த வேண்டாம்!

"நம்ம ஒப்பந்தப்படி ஒரு வருஷம் நீ என் வீட்டிலேயே இருக்கலாம்! உனக்கு நான் எந்தத் தடையும் விதிக்க மாட்டேன்..."

"ஜென்னிக்கு ஒரு நல்ல ஃப்ரெண்டா இரு.. மத்தபடி ஒரு வருஷம் கழிச்சி உன் விருப்பம்! உனக்கு என்ன தோணுதோ அதை செய்!

"நீ.. எந்த நிமிஷம் விவாகரத்து கேட்டாலும், நான் தரத் தயாரா இருக்கேன்...

"இங்கே இருக்கற வரைக்கும் நீ நீயாவே இருக்கலாம்! உனக்கு விருப்பப்பட்ட கடவுளை வணங்கலாம்! போட்டோ ஏதும் வேணும்னா வாங்கி உன் ரூமிலே வெச்சிக்க!"

"வேற ஏதாவது தெரியணுமா?"

அவன் கேட்டவுடன், இல்லையெனத் தலையசைத்தவளின் விழிகளில், மெலிதாய் ஒரு நீர்க்கசிவு!

"ஹூம்! நான் உறுதியா நம்பின கந்தர் என்னைக் கை விட்டுட்டாரு! ஆனா, நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை.. நீங்க எனக்கு உதவ முன் வந்தீங்க...

"இப்பவும் எனக்காக இவ்வளவு செய்யறீங்க... இதுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை!

"கடவுளாப் பாத்துத்தான் உங்களை, அனுப்பி வெச்சிருக்காரு.. நான் உங்களை என்னிக்குமே மறக்க மாட்டேன்..." உணர்ச்சிகள் நிறைந்த குரலில் முடித்தாள்.



"சரி! எல்லாம் தான் பேசி முடிச்சாச்சே... இனியும் என்ன சோகம்? பி சியர்ஃபுல்! நாளைக்காவது ஊரை சுத்திப் பாக்கலாமா?" யோசனையுடன் கேட்டான்.

சிறு சோக முறுவலுடன் அவள் மெதுவாகத் தலையசைக்க,

"ஓகே! நாளைக்கு 'ராஸ் ஐலண்ட்' போகலாம். கைடுக்கு சொல்லிடறேன்" என்றான்.

## 22



மறுநாள் காலையில் டிபன் சாப்பிட்டு விட்டுக் கிளம்பியபோது, அவர்களுடன் ஒரு கைடும் உடன் வந்தார்.

பெரிய படகில் சென்று அந்தத் தீவில் இறங்கிய போது, அது பெரிய ஊராகவே காட்சியளித்தது.

ஆனால், நிறைய கட்டிடங்கள் சிதிலமடைந்து தெரிந்தன. குவார்ட்டர்ஸ் போன்று வீடுகள் ஒரே மாதிரி இருந்தன.

அங்கு வேலை செய்பவர்களுக்கான அரசாங்க வீடுகள் அவையென்று கைடு கூறினார்.

இளநீர் விற்குமிடத்திற்கு அழைத்துச் சென்றவரிடம், "உங்க பேரென்ன சார்?" என்று வினவினான் அவன்.

"என் பேரு ஐயம்பெருமாளுங்க!" என்று புன்னகைத்தபடி விலைபேசி இருவருக்கும் இளநீரை வாங்கிக் கொடுத்தார் அவர்.

நிறைய மான்களும் மயில்களும் அங்கு சுற்றித் திரிந்து கொண்டிருந்தன.

முதலில் இடிபாடுகளுடன் காணப்பட்ட ஒரு சர்ச்சிற்கு அவர்களை அழைத்துச் சென்றார்.

அங்கு சென்றதும் இயல்பாக அவன் சிலுவையிட்டுக் கொள்ள, அவளும் அதே போல் செய்தாள்.

எல்லாவற்றையும் ஆர்வத்துடன் ஹேண்டி கேமிராவில் படமெடுத்தபடி விக்டர் வர, அந்தத் தீவைப் பற்றி விளக்கியபடி வந்தார் ஐயம்பெருமாள்.

எல்லா இடங்களுமே சுனாமியால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்க, ரிப்பேர் வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

"சுனாமிக்கப்புறம் எங்க வாழ்க்கை முறையே மாறிப் போயிடுச்சி! எந்த நேரம் திரும்பவும் சுனாமி வந்திடு மோன்ற பயத்துல, கடலோரமா நாடோடி மாதிரி ஒரு வாழ்க்கையை வாழ்ந்திட்டிருக்கோம்!"

வருத்தத்துடன் கூறியவரையே பெரும் சோகத்துடன் பார்த்திருந்தவளுக்கு தன் கவலைகள் இப்போது குறைந்து தெரிவதாய்!

கடலோரத்தில் உயிர் பயத்துடன் வாழ்ந்து கொண் டிருக்கும் இவர்கள்தான் எவ்வளவு பாவமென்ற பரிதாப உணர்வு வந்தது.

மெல்லத் திரும்பி விக்டரைப்பார்த்த போது, அவனும் அந்த நிமிடம் அவளையே நோக்கிக் கொண்டிருந் தான்!

"என்ன.. உன் கஷ்டமெல்லாம் ஒண்ணுமே இல் லைன்னு தோணுதா? விரும்பினா மாதிரி வாழ முடி



யலையேன்னு நாம வருத்தப்படறோம்! நாளைக்கு உயிர் வாழ முடியுமான்ற பயம் இவங்களுக்கு! ஹூம்!"

ஒரு பெருமூச்சுடன் ஒற்றைப் புருவத்தைக் கேள்வி யாக உயர்த்தினான்.

அவனுடைய கேள்வி இலை மறை காயாய்ப் புரிய, தன் மனதில் தோன்றிய எண்ணங்களை இவன் எப்படிப் படித்தான் என்ற வியப்பு அவளுள்!

தன்னுடைய ப்ரச்னை ஒன்றுமே இல்லை என்பது போல் இதயம் இலவம் பஞ்சாய் லேசானது.

ஒரு பெரிய கடைத்தெருவும் அங்கிருக்க, "ஏதாவது வாங்கணுமாம்மா?" என்று வினவினார் ஐயம்பெருமாள்.

"இல்லை.. வேண்டாம்!"

அவள் மெதுவாக மறுக்க, "சார் ரொம்பக் குடுத்து வச்சவங்க... இங்கே வர பெண்கள் எல்லாருமே பஜார்லே பர்சேஸ்க்குன்னு நிறைய நேரம் நின்னுடுவாங்க! அம்மா வித்தியாசமானவங்க!" அவர் வியப்புடன் கூறினார்.

உடனே அவள் புறம் திரும்பியவன், "ம்.. நம்ம மேரேஜே ரொம்ப வித்தியாசம்தான். இல்லை!?" அடிக் குரலில் கேட்டான்.

அதற்கு என்ன பதில் கூறுவதென்று புரியாமல் அவள் விழிகளைத் தாழ்க்க, தோளைக் குலுக்கி இயற்கையில் பார்வையைப் பதித்தான் அவன்.

பிறகு ஒரு பாழடைந்த பாருக்கு அவர்களை அழைத்துச் சென்றார் அவர்.

அங்கு எல்லாமே பழமையைப் பறை சாற்றியபடியிருக்க, கல்பெஞ்ச்சுகளும், பாழடைந்த மேடையும் அவர்களைப் பழங்காலத்திற்கே அழைத்துச் சென்றன.

எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்து விட்டு படகில் திரும்பி வரும்போது இனம்புரியாத ஒரு தெம்பும் தெளிவும் கைவசப்பட்டன.

* * *

அன்று மாலையில் அந்தமான் ஜெயிலில் நடக்கும் லைட் ஷோவிற்கு இருவரும் சென்றிருந்தனர்.

இரவின் கருமை இருட்டில், சிறைச்சாலை அறைகளை வெளிச்சமிட்டுக் காட்டி, ஒவ்வொரு இடத்திலும் யார் தூக்கிடலிடப்பட்டார்கள்.. என்ன தண்டனைகள் வழங்கப்பட்டன என்று அறிவித்த போது, மனம் பாரமாய்!

அன்றிரவு, ஏனோ அவளால் சரியாகவே உறங்க முடியவில்லை.

மறுநாளைய விடியல் மேக மூட்டத்துடனிருக்க, ஊரை சுற்றிப்பார்க்காலாமென்று விக்டர் முடிவெடுத்தான்.

ஊட்டியைப் போலவே மலைப்பாங்குடன் சுற்றிலும் தோட்டங்கள், மலர்களுடன் வீடுகள் தெரிந்தன.

கடலோரங்களில் அழிந்து விட்ட தடயங்களை, செப்பனிட்டுக் கொண்டிருந்தனர்.

மதியம் அன்னபூர்ணா ஹோட்டலில் .சாப்பிட்டு விட்டு அறைக்கு வந்த போதும், சிவியிடம் ஒருவித இறுக்கமும் விலகலுமே தெரிந்தன.

மாலையானதும், காட்டேஜின் பின்புறமிருந்த கடற்கரைக்குச் சென்று தண்ணீரில் நின்றபோது, நீர் சலனமற்று அமைதியாகவே இருந்தது.



வெகுநேரம், நீரில் சுகமாய் துளைத்து நீந்தியவன், அமைதியாகக் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தவளை, கவனித்துவிட்டு ஒரு விதத் தீவிரத்துடன் அருகில் வந்தான்!

''என்னாச்சு! தண்ணியிலே வந்து கொஞ்ச நேரம் நிக்கலாமே! உடம்பையும் மனசையும் சுகமா வருடி, மசாஜ் பண்ற அலைகள் எவ்வளவு சுகம் தெரியுமா?'' உற்சாகத்துடன் அழைத்தான்.

''ஹும்! இங்கே என் உலகமே மூழ்கிட்டிருக்கு.. இதிலே எங்கே என்ஜாய் பண்றது? ப்ச்.''

ஒருவித விரக்தியுடன் கூறிவிட்டு எழுந்தவளைத் தடுத்தான் அவன்!

''ஒரு நிமிஷம்! ஏன் இப்படி உலகமே அழிஞ்ச போலை மாதிரி ஒரு துக்கம்.. ம்?'' ஆழ்ந்த குரலில் கேட்டான்.

''என் உலகம் இருட்டாத்தான் போயிடுச்சி.. நான் ஒண்ணு நினைச்சி செஞ்சது, இப்ப எனக்கே எதிரா முடிஞ்சிடுச்சி! உங்களை வேற தேவையில்லாம இதிலே மாட்டி விட்டுட்டோமேன்னு உறுத்தலா இருக்கு!''

''அதைப்பத்தி நானே கவலைப்படலை... ஒரு வருஷம் கழிச்சி பாத்துக்கலாமின்னு விட்டுட்டேன்! நீ எதுக்கு இவ்வளவு ரியாக்ட் பண்றே?'' சிறு எரிச்சலுடன் கேட்டான் விக்டர்.

''ஒருவேளை, நீங்க நம்புன ஒருத்தர் உங்களை ஏமாத்திட்டா உங்களால இயல்பா இருக்க முடியுமா? அந்த துரோகம் உங்களைப் பாதிக்காதா?'' கோபத்துடன் கேட்டாள்.

"பாதிக்கும் தான்! ஆனா உன்னை மாதிரி உடைஞ்சு போய் உக்காந்துடமாட்டேன்! மேலே என்ன செய்யலா மின்னு யோசிப்பேன்!"

"என்னால முடியலை! எவ்வளவுதான் கஷ்டம் வந் தாலும், தனக்காக ஒருத்தி காத்திட்டிருக்காளேன்ற நினைப்பு கொஞ்சமாவது சுந்தருக்கு இருந்திருக்கணும்."

"அவளுக்காகவாவது உயிர் வாழணும்கிற உத் வேகமும் அக்கறையும் வந்திருக்கணும்! அது இல்லாம போயிடுச்சே!" சினத்துடன் குமுறினாள்.

"அவ்வளவு அக்கறை இல்லாத ஒருத்தருக்காக நீ ஏன் இவ்வளவு வருத்தப்படறே? துக்கம் அனுஷ்டிச்சி உல கமே இருட்டாயிடுச்சின்னு கவலைப்படறே?" நக்கலாகக் கேட்டான்.

"நான் ஒண்ணும் சுந்தருக்காக அப்படிச் சொல்லலை!"

"அவன் வருவான்னு எதிர்பார்த்து, பாட்டிக்காக இப்படி ஒரு திட்டம் போட்டு, உங்களையும் அதிலே மாட்டி வச்சு, இப்ப என் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக் கிட்டு நிக்கிறேனே! அதைத்தான் சொன்னேன்.. என் உலகமே மூழ்கிட்டிருக்கு. இருட்டாயிடுச்சின்னு!"

அவள் முகத்தில் கடும் சீற்றமும், குரலில் விரக்தியும் வெறுப்பும் தெரிந்தன.

"அப்போ, சுந்தரோட காதலுக்காக, இப்ப நீ வேதனைப் பட்டுட்டு இல்லை. அப்படித்தானே?" கூர்மையுடன் கேட்டான்.



"ஆமாம். முதல்லே விபரம் கேள்விப்பட்ட உடனே, அவனை நினைச்சி அழுதது உண்மைதான்! ஆனா அப்புறம் அழுததெல்லாம் சுயபச்சாதாபத்தாலே!

"மனுஷங்களைப் புரிஞ்சிக்க முடியாம... ஒரு இனக் கவர்ச்சியை, காதல்னு நினைச்சி ஏமாந்து என் வாழ்க் கையையே பணயம் வெச்ச முட்டாள் தனத்தை நினைச் சித்தான்!" மூச்சு வாங்க நிறுத்தினாள்.

"அப்ப, அதிலிருந்து சுலபமா வெளியே வரலாமே! இப்படி சும்மா உம்முன்னு துக்கம் அனுஷ்டிக்காம, உன்னோட இறப்பு.. எனக்குள்ளே, எந்த பாதிப்பையும் ஏற்படுத்தலைன்னு நிமிர்ந்து நிக்க வேண்டியதுதானே!" ஏளனமாக வந்தது அவன் குரல்!

பதிலாக ஒன்றும் கூறாமல் திரும்பி, காட்டேஜை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் அவள்.

உதட்டோரம் யோசனையில் இறுகி விட, அவளையே தொடர்ந்தன அவன் விழிகள்!

## 23



மறுநாள் காலையில், வைப்பர் ஐலண்டுக்கு படகில் சென்றனர்.

நேற்றைய நினைவில், சிவியின் முகம் சுருங்கி யோசனையுடனிருக்க, விக்டரும் கண்டு கொள்ளவில்லை.

அந்தத் தீவில் சிதிலமடைந்து மீதமிருந்த சிறு ஜெயில் மண்டபத்தையும், அழிந்திருந்த கோட்டை

யினுள், உயரமான ஒரு இடத்திலிருந்த தூக்கு தண்டனை நிறைவேற்றும் இடத்தையும், சுற்றிப் பார்த்தனர்.

ஹோவென்ற ஏகாந்தத்துடன் தெரிந்த அந்தத் தீவு, அவனுள் பெரும் சூனிய சுழிப்பை ஏற்படுத்துவதாய்!

மவுனமே பாஷையாய், கைடின் வாய்மொழிகளே துணையாய், இருவரும் கடற்கரைக்கு வந்தபோது, அங்கிருந்த மரக்கூட்டத்தில் சிறிது இளைப்பாறி விட்டுச் செல்லலாமென்று விக்டர் கூறினான்.

கைடு, அவர்களிடம் சிறிதுநேரம் ஓய்வெடுத்து விட்டு வருவதாகக் கூறி விடைபெற்றுச் செல்ல, இருவரும் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தனர்.

வெயில் அடித்தாலும், காற்றின் தீண்டலால் வெப்பம் தாக்காமல் சுகமாக இருந்தது.. அந்த மதியப் பொழுது!

விழிகளை மணலில் பதித்து சோகச் சிற்பமாய் உறைந்து அமர்ந்திருந்தவளை, அவன் குரல் உசுப்பியது.

"என்ன... மோர்னிங் இன்னும் முடியலையா?" கிண்டலாக வந்தது அவன் குரல்!

"இல்லை.. முடிஞ்சிடுச்சி! என் வாழ்க்கையில நானே போட்டுக்கிட்ட ஒரு சிக்கல்லேருந்து எப்படி வெளி வரதுன்னு, இப்ப யோசிச்சிட்டிருக்கேன்!" விரக்தியுடன் மொழிந்தாள்.

"ஒண்ணு தெரியுமா? தீர்க்க முடியாத ப்ரச்சனைங்கிறது வாழ்க்கையில எதுவுமே இல்லை."

"வாழ்க்கையோட ரகசியமே, சோதனைகள் உங்களை சந்தித்த போது எப்படி நடந்து கொண்டீர்கள்..



அதிலிருந்து எப்படி மீளமுடிந்தது? இதுதான்! அதுதான் வெற்றி... அதுதான் உங்களின் உயர்வு!" அப்படின்னு ஒரு அறிஞர் சொன்னவரிகள், எனக்கு ரொம்பப் பிடிக்கும்!

"இப்போ உன் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டிய கட்டத்துல நீ இருக்கே? என்ன செய்யப் போறே?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

உடனே வேதனையுடன் நிமிர்ந்தவள், "தெரியலை! என்ன பண்றதுன்னும் புரியலை.. நாங்க எல்லாருமே சொகுசாவே வாழ்ந்தவங்க... உங்க குடும்பமும் அப்படித்தான்! வாழ்க்கை சில நேரங்கள்லே திடீர்னு மாறிப் போறப்போ.. நம்மால அதை ஏத்துக்க முடியறதில்லை!" மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

"நான் வேணா சொகுசா இருந்திருக்கலாம்... ஆனா எங்கப்பா, அம்மாவோட வாழ்க்கை அப்படி இல்லை" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

"ஏன்...? அங்கிள்... ஒரு புரொபசரா இருந்து ரிடையர் ஆனவர்... ஆன்ட்டியும் முன்னாடி ஒரு ஜர்னலிஸ்டா வேலை பாத்திட்டிருந்ததா, என்கிட்டே சொல்லியிருக்காங்க.. லவ் மேரேஜ் வேற! அருமையா ஒரே ஒரு பிள்ளை!"

"இதை விட வேறென்ன வேணும்? அவங்க வாழ்க்கையில சோகம்னா, என்னால நம்பவே முடியலை!"

"ம்.. தேங்க்யூ ஃபார் யுவர் காம்ப்ளிமென்ட், என்னைப் பத்தி அருமையான ஒருத்தன்னு சொன்னதுக்கு!"

"ஆனா, நீ நினைக்கிற மாதிரி மலர்ப்பாதையில்லே, அவங்க கடந்து வந்தது...!" சட்டென்று நிறுத்தினான்.

அவளுக்குள், எதுவோ உடைவது போல்!

அவர்களுடைய வாழ்க்கையில் விக்டர் கூறுவதைப் போன்று அப்படி என்ன ரகசியம் இருக்க முடியும் என்ற ஆவல் அதிகமாய்!

"விக்டர்.. ப்ளீஸ்! அது என்னன்னு என்கிட்டே ஷேர் பண்ணிக்க முடியுமா?"

சிறிது நேரம் அங்கு கனத்த மௌனமே நிலவ, பனைமரங்களின் அசைவில் எழுந்த சப்தமும், கடலலைகளின் ஆர்ப்பரிப்பும் மட்டுமே கேட்டன.

அவனுக்குத்தான் பெரும் தவிப்பாய்.. அவன் துயர் துடைக்கும் வேட்கையும் வருவதாய்!

மெதுவாகத் தொண்டையைச் செருமியவன், கடலையே பார்த்தபடிப் பேச ஆரம்பித்தான்.

அவனுக்குள் நினைவலைகள் பொங்கிப் பிரவகிப்பதை செவ்வரியோடிச் சிவந்த அவன் விழிகள் அறிவிப்பதாய்!

## 24



விக்டருடைய தந்தை சாலமன், கல்லூரியில் படிப்பை முடித்துவிட்டு, சொந்த ஊருக்குத் திரும்பியிருந்த நேரமது!

அவருடைய தந்தை, விக்டரின் தாத்தா டேனியல், அந்த ஊரில் பெரிய மனிதர்!



ஊருக்கே நியாயம் வழங்கக் கூடிய ஒரு நிலையில் இருந்தார் அவர்!

அதனாலேயே, சில பாதிக்கப்பட்டவர்களால் அந்த ஊரில் அவருக்குப் பெரிய எதிர்ப்பும் இருந்தது... எதிராக ஒரு கோஷ்டியுமிருந்தனர்.

ஒருநாள், ஊரில் நடந்த ஒரு தகராறில் வாய்ச்சண்டை முற்றி, தன்னை அடிக்க வந்தவனை டேனியல் பிடித்துத் தள்ள, குடிபோதையிலிருந்த அவன், உடனே இறந்து விட்டான்.

அப்போது விபரமறிந்து சாலமன் அங்கு ஓடி வர, எல்லாமே முடிந்து போலீஸும் வந்திருந்தது.

அவர்கள் டேனியலைக் கைது செய்யும் போதே, எதிர்க்கோஷ்டியின் தலைவன் ஜான், சாலமனும் சேர்ந்தே இந்தக் கொலையை செய்ததாகப் போலீஸிடம் மாட்டி விட்டு விட்டான்.

தன் மகளை சாலமனுக்கு திருமணம் செய்து கொடுத்து பரம்பரைப் பகையை முடித்துக் கொள்ளலாமென்று போன மாதம் சென்று கேட்டபோது, சாலமனும் டேனியலும் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

சமயம் பார்த்துக் காத்திருந்தவன், அந்த வன்மத்தில் இப்போது பழி வாங்கிவிட்டான்.

பிறகு, இருவரும் சிறையிலிருக்க, கோர்ட்டில் கேஸ் நடக்க ஆரம்பித்தது.

சாலமனுடைய நண்பன் பசுபதியே அவர்களுக்காக வாதாடினார்.

ஜான் கோர்ட்டில் பொய் சாட்சி கூற, கொலை செய்த குற்றத்திற்காக டேனியலுக்கு ஏழு வருடங்களும், அதற்கு துணையிருந்ததாகக் கூறி, சாலமனுக்கு ஐந்து வருடமும் சிறைத்தண்டனை வழங்கினர்.

இருவரும் சிறையிலிருந்த போது, அங்கு சிறைச் சாலை சூப்பரின்டெண்டாக இருந்த சரவணன் என்பவ ருக்கு, அவன் மேல் பெரும் பரிதாபம் வந்தது.

பி.எஸ்.சி கணிதத்தில் கோல்ட் மெடலிஸ்டாகத் தேறியவன், இப்படி சிறையில் கஷ்டப்படுகிறானே என்ற எண்ணத்தில் ஒரு நாள் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

அவன் முழு விபரமும் கூற, பதைத்துப் போனார் அவர்.

ஒரு நிரபராதி தண்டனை அனுபவிப்பதோடு, அவனுடைய எதிர்காலமும் பாதிக்கப்படுவதை, அவரால் பார்த்துக் கொண்டு நமக்கென்னவென்று இருக்க முடியவில்லை.

உடனே அரசாங்கத்திடம் மனுப்போட்டு அனுமதி வாங்கினார்.

சிறையிலிருந்தே தக்க பாதுகாப்புடன் அவன் கல் லூரிக்கு சென்று வர ஏற்பாடுகள் செய்தார்.

அவரே அவனுடைய படிப்பு செலவையும் ஏற்க, சாலமனுடைய படிப்பு இடையறாது தொடர்ந்தது.

அப்போது இதைக் கேள்விப்பட்டு அவரைப் பேட்டி எடுக்க வந்தவர்தான் கவிதா.

ஒரு பத்திரிகையில் ரிப்போர்ட்டராகப் பணிபுரிந்த அவர், சரவணனுடைய சேவையையும், சாலமனுடைய



உண்மைக் கதையையும் பேட்டி எடுத்து, பத்திரிகையில் தொடராக எழுத, அது பெரும் வரவேற்பைப் பெற்றது.

பிறகு, அவர் படிப்பை முடிக்க, நன்னடத்தை காரண மாக சீக்கிரமாகவே விடுதலை செய்யப்பட்டார்.

எம்.எஸ்சியில் கோல்ட்மெடல் வாங்கித் தேறிய சாலமன் வேலையில் சேர்ந்தார்.

ஆனால், மறுமாதமே, எதிர்பாராத விதமாக ஜெயிலி லேயே மஞ்சள் காமாலையால் இறந்துவிட்டார் டேனி யல்!

அந்தத் துக்கத்திலிருந்தவரைத் தேற்றிய கவிதா அவருக்கு எல்லாவற்றிலும் துணை நிற்க, இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பியதால், திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர்.

பிறகு எம்ஃபில்லும் முடித்து விட்டு ஊரிலிருந்த சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டு, சாலமன் சென் னைக்கே வந்து கவிதாவை மணந்து செட்டிலாக முடிவு செய்தார்.

கவிதாவின் குடும்பம், அவர் ஒரு கிறிஸ்துவரை மணப்பதை ஏற்க மறுத்து, முழுதாக ஒதுக்கி விட்டனர்.

அவனுடைய தந்தை தனக்கு பெண் என்று ஒருவர் இல்லையென்று முழுக்குப் போட்டு விட்டார்.

சாலமனுக்கும் உறவுகள் இல்லாத நிலை!

கவிதாவும் தனியாளாக்கப்பட, இருவருக்கும் ஜெயில் சூப்பரின்டெண்ட் சரவணனே முன்னின்று திருமணம் செய்து வைத்தார்.

ஜெயிலுக்கு சென்று வந்தவரென்ற காரணத்தினா லேயே, உறவுகள் ஒதுங்கின.

பிறகு, சரவணனுடைய மகன் ராஜேந்திரனும் சால மனும் நெருங்கிய நண்பர்களாகிப் போக, இரு குடும்பமும் நட்புடன் இணைந்து விட்டனர்.

சரவணன் மேல், தான் வைத்திருந்த மதிப்பையும் நன்றியுணர்வையும் சாலமன் இறுதி வரை மறந்ததே யில்லை!

இறந்தபோன தன் சொந்தத் தந்தையாகவே அவரைக் கருதி வந்தார்.

எல்லா விபரங்களையும் அறிந்திருந்ததால் விக்டருக் கும், ராஜேந்திரனுடைய மகன் முரளிக்கும், அடுத்த ஜெனரேஷனிலும் இனிய நட்பு தொடர ஆரம்பித்தது.

சிறு வயதிலிருந்தே இருவரும் ஒன்றாகவே வளர்ந் தனர்.

சாலமன் கல்லூரியில் பேராசிரியராய் இருந்து, பி.ஹெச்டி பெற்று துறைத்தலைவராய் உயர்ந்த போது தான், சரவணன் மரணமடைந்தார்.

ஒரு தந்தையை, வழிகாட்டியை, தெய்வத்தை இழந்தது போல் மிகவும் துடித்துப் போனார் சாலமன்.

அதிலிருந்து அவர் வெளி வரவே வெகு நாட்களாயின.

அப்போது, ராஜேந்திரன் தான் அவரைத் தேற்றியாக வேண்டிய ஒரு நிலை!

பிறகு ராஜேந்திரனின் மனைவியும் இறக்க, கவிதாவே முரளிக்குத் தாயாகி திருமணத்திற்கு பெண் தேடினார்.



பிறகு, முரளிக்குத் திருமணம் நடக்க, விக்டர் அப் போது பிலானியில் பி.டெக். படித்துக் கொண்டிருந்தான்.

முரளியின் மனைவி மல்லிகாவும் அனைவரையும் புரிந்து கொண்டு குடும்பத்தில் ஒருவளாக இணைந்தாள்.

இரு குடும்பங்களும் அன்பால் இணை பிரியாமல் பிணைந்திருக்க, அப்போதுதான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றார் சாலமன்.

உடனே கவிதாவின் நெடுநாளைய விருப்பத்தை, ஊட்டியில் ஒரு எஸ்டேட்டை வாங்கி அதில் செட்டிலாகி நிறைவேற்றினார் அவர்.

அந்த வருடமே விக்டர் படிப்பை முடித்து விட்டு சென்னையில் ஒரு கம்பெனியை நிறுவினான்.

மூன்று வருடங்களாக குழந்தை இல்லாதிருந்த நிலையில் மல்லிகாவும் கருவுற்றாள்.

குடும்பமே மகிழ, இடையில் மருத்துவப் பரி சோதனைக்காக அவள் மருத்துவரிடம் சென்றபோதுதான், அந்த அதிர்ச்சி இடியென அனைவரையும் தாக்கியது.

அவள் ஒரு எய்ட்ஸ் நோயாளி என்று, மருத்துவ அறிக்கை கூற அனைவரும் உடைந்து போயினர்.

அவளோ, தனக்கு எதுவுமே தெரியாதென்றும், தான் பரிசுத்தமானவளென்றும் அழ, முரளியோ பைத்தியம் பிடித்தவனைப் போலானான்.

விக்டர் அவனைத் தேற்றினாலும், தாங்க முடியாமல், ஒரு நாள் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டான்.

மனைவி, தன்னை ஏமாற்றி விட்டதாகவும் அவளா லேயே தான் ஒரு எய்ட்ஸ் நோயாளியாகி விட்டதால், இனி வாழ விருப்பமில்லையென்றும் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தான்.

ராஜேந்திரனும் மருமகளை வெறுத்து அனுப்பி விட்டார்.

விக்டர்தான், உடனே மருத்துவரை அணுகினான்.

யார் தவறு செய்திருந்தாலும் பிறக்கப் போவது அவனுடைய நண்பனின் குழந்தை...!

அதனால், குழந்தை கருவிலிருக்கும் போதே பாதுகாப் பாகப் போட வேண்டிய ஊசிகளையும், மருந்துகளையும் மல்லிகாவை வற்புறுத்திப் போட வைத்தான்.

அவளை ஒரு இல்லத்தினரிடம் பாதுகாப்பாக ஒப் படைத்த போது தான் அவனுடைய தாய்க்கு உடல் நிலை சரியில்லாமல் போனது.

பிறகு சாலமனும் கவிதாவும் எதிர்பாராமல் இறக்க, ஒருநாள், மல்லிகாவிடமிருந்து விக்டருக்கு அழைப்பு வந்தது.

அப்போது, அவன் ஊட்டிக்கு வந்து செட்டிலாகி சில மாதங்களாகியிருந்தன.

குழந்தை பிறந்து விட்டதாகவும், அவனை உடனே சந்திக்க வேண்டுமென்றும், அவள் அழைத்திருந்தாள்.

அன்றே கிளம்பி சென்னைக்குச் சென்றான் அவன்.

ஆனால், மருத்துவமனைக்கு சென்றபோது, அவள் உயிர் பிரிந்திருந்தது.



அநாதை போல் அவள் இறந்திருக்க, அழகாய் ஒரு பெண் குழந்தை அவனை எதிர்நோக்கிக் காத்திருந்தது.

உறவுகளும், எய்ட்ஸ் நோயாளி என்று அவளை ஒதுக்கிவிட்டதால், இல்லத்துப் பெண்மணி ஒருவர் மட்டும் அவளுடன் துணையிருந்தார்.

மல்லிகா, தன் குழந்தையை விக்டரிடம் ஒப்படைத்து விடும்படி கூறியதாக டாக்டரும், அந்தப் பெண்மணியும் கூறினர்.

உடனே, அவளுடைய ஈமச்சடங்குகளை முடித்து விட்டு, ஊட்டிக்கு வந்தவன், அந்தக் குழந்தைக்கு ஒரு ஆயாவையும் நியமித்து விட்டான்.

அந்த வாரமே அவளை முறையாகத் தத்தெடுத்துக் கொண்டான்.

அவளுக்கு, ஜென்னி என்று பெயரிட்டு வளர்த்தும் வருகிறான்.


ராஜேந்திரனிடம் சென்று குழந்தையைக் காட்டிய போது, அவர் மருமகள் மேலிருந்த வெறுப்பில், குழந் தையைப் பார்க்கவே மறுத்துவிட்டார்.

தன்னுடன் வந்து இருக்கும்படி அவன் அழைத்த போதும், அவர் ஒத்துக் கொள்ளவில்லை.

இப்போதும், சென்னையில் தனியாகத்தான் இருக் கிறார்.

தன் தந்தைக்கு சரவணன் செய்த உதவிக்காகவும், தன் நண்பன் முரளிக்காகவும், இரு குடும்பத்தினரிடையே இருந்த உயரிய நட்பின் காரணமாகவும்,அவன் ஜென் னியை வளர்த்து வருகிறான்.

## 25



விக்டர், எல்லாவற்றையும் கூறி முடித்தபோது, வானம் சோகமாகி இருட்ட ஆரம்பித்திருந்தது.

காற்றில் கூட சோர்வுடன் ஒரு இறுக்கம் கலந்திருப்பது போல்!

''சாரி! அங்கிளோட கதையைக் கேட்டா ரொம்ப கஷ்டமா இருக்கு! அவ்வளவு பெரிய கஷ்டத்திலிருந்து மீண்டு, படிச்சி, வாழ்க்கையில எவ்வளவு பெரிய லட்சியத்தோட உயர்ந்திருக்காங்க.. பிரமிப்பா இருக்கு!''

''ஆன்ட்டியும், அவங்களுக்கு எல்லா விதத்திலயும் ரொம்ப உதவியா இருந்திருக்கணும்! அதான், இவ்வளவு சாதிக்க முடிஞ்சிருக்கு...''

''ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாடியும் ஒரு பெண் இருப்பாள்ங்கிற பழமொழி உண்மைதான்! ரொம்பப் பெருமையா ஃபீல் பண்றேன்'' உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினாள்.

''ம்! நீ சொல்றதும் சரிதான்! அவங்க ரெண்டு பேருமே ஒரு லட்சியத் தம்பதிகளாத்தான் வாழ்ந்தாங்க! அதான், மரணத்தால் கூட அவங்களைப் பிரிக்க முடியலை...'' அவன் குரல் பெரிதும் கம்மியிருந்தது.

முதன்முதலாக அவன் வேதனைப்படுவதைக் கண்டு, அவள் மனம் பதறியது.

அவனுக்கு ஒரு கஷ்டம், வேதனை என்றவுடனே, அதை எப்படியாவது போக்கி விட வேண்டுமென்ற வேட்கையும் வருவதாய்!



''கவலைப்படாதீங்க! ஒவ்வொரு மனுஷனையும் தன்னால நேரில வந்து கவனிக்க முடியாதுன்னு தான் கடவுள் உறவுகளைப் படைக்கிறதா பாட்டி சொல்லுவாங்க.''

''முதல்லே... உங்களுக்காக கருணையும் பாசமும் நிறைஞ்ச ஆன்ட்டியை அனுப்பினார். எதிர்காலத்துக்கு.. உங்களை நேசிக்கிற அன்பா கவனிச்சிக்கற ஒரு மனைவியையும் அவரே கொடுப்பாரு.'' தன்னையறியாமலே உளறிவிட்டாள்.

''ஹூம்! தேங்க்யூ! ஆனா அந்த மனைவியா என்னால உங்க கூட வர முடியாதுன்னு சொல்றே... அப்படித்தானே?'' கூர்மையுடன் கேட்டான்.

சட்டென்று விதிர்த்துப் போனது சிவிக்கு!

யாரோ முகத்திலறைந்தாற்போன்ற ஒரு வலி இதயத்தில் எழுந்தது.

''சாரி! நான்.. நம்மைப்பத்தி.. இப்ப நமக்குள்ளே இருக்கற ரிலேஷன்ஷிப்பைப் பத்தியே ஒரு நிமிஷம் மறந்திட்டேன்...

''மனசு முழுக்க சாலமன் அங்கிளோட பால்யத்துக்குப் போயிடுச்சி! அதிலிருந்து வெளியே வரவே மனசில்லை...

''எவ்வளவு மன தைரியம் இருந்திருந்தா, அங்கிள் எல்லாத்தையும் இயல்பான புன்னகையோடக் கடந்து, கடைசியில இவ்வளவு உயர்ந்த நிலைக்கு வந்திருக்கணும்!

''அவங்க வாழ்க்கை எல்லாருக்குமே ஒரு பாடம் மாதிரி!

''அதிலிருந்து நாம நிறைய கத்துக்கணும்.'' பெருமூச்சுடன் முடித்தான்.

''ம்.. அதையெல்லாம் நினைச்சா, ஒரு பெரிய கனவு மாதிரி இருக்கும்!

''ப்ச்.. மல்லிகாவைப் பாத்தப்புறம் அவ்வளவு அமைதியா இருந்த ஒரு பொண்ணு இப்படின்னு தெரிஞ்சப்புறம், அதுவும் முரளியோட மரணத்துக்கப்புறம் ரொம்பவே வெறுத்துப் போச்சு!

''எனக்கு இன்னொரு நண்பன் இருந்தான்! அவனுக்கும் கல்யாணமாச்சி! பொண்ணு 'ஐ.டி.' ஃபீல்டில இருந்தா!

''நல்லாப் போயிட்டிருந்த அவங்க வாழ்க்கையை அவளோட தவறான பழக்க வழக்கங்கள் அடியோட மாத்திடுச்சி!''

''நிறைய ஆண் நண்பர்கள், டிஸ்கொதே, க்ளப்புக்குப் போறது, கணவனை மதிக்காத ஒரு குணம்னு நிறையவே மாறிட்டா அந்தப் பொண்ணு!

''அவனால அதை ஜீரணிக்கவே முடியலை.. தொடர்ந்து குடிக்க ஆரம்பிச்சி இப்ப ஒரு அடிக்டாவே ஆயிட்டான்.''

''ஒரு தடவை தற்கொலைக்கு முயற்சி பண்ணி காப்பாத்தப்பட்டு, இப்போ ஒரு ரீஹேபிலிடேஷன் சென்டர்லே ட்ரீட்மெண்ட்டுல இருக்கான்!

''எனக்கு ஏன் பெண்கள்னா வெறுப்புன்னு இப்பப் புரியுதா? நான் சந்திச்ச பெண்கள் எல்லாருமே மோசமானவங்களாத்தான் இருந்திருக்காங்க!



''அதனாலதான், என் வாழ்க்கையை ஒரு பெண் கையில ஒப்படைக்கிற முட்டாள்தனத்தை நான் செய்யறதா இல்லை!''

வெகுநாட்களாக இதயத்துக்குள் தேக்கி, வைக்கப்பட்டிருந்த எண்ணங்கள் காட்டாறாய்ப் பெருகி வந்தன.

## 26



பிறகு கடந்த படகுப் பயணம் முழுவதும், இருவரையுமே, கனத்த மௌனமும், பலத்த யோசனையுமே ஆக்கிரமித்திருந்தன.

காட்டேஜிற்கு வந்த பிறகு, அறைக்குள் சென்றவளுக்குள் பெரும் மாற்றம் நிகழ்ந்திருந்ததை அவன் அறியவில்லை.

அன்றைய மாலைப்பொழுது அவரவர் யோசனையில் தனிமையிலேயே கழிந்தது.

இரவு சாப்பாட்டிற்குப் பிறகு, விக்டர் மட்டும் தனிமைத் தவமாய் பால்கனியில் நின்று, நிலவொளியில் தங்க ஜரிகையிழைகளாக மின்னிய கடலை ரசித்துக் கொண்டிருந்தான்.

அலைகள், மெதுவாக வந்து கரை தொட்டுச் சென்றாலும், பகலுக்கு இப்போது கடல்மட்டம் அதிகரித்திருப்பது புரிவதாய்!

பவுர்ணமி சமயமென்பதால் அப்படி இருக்குமென்று கைடு கூறியதை எண்ணியபடி நின்றிருந்தவனுக்குள்,

புதையலாய்த் தோண்டியெடுத்த பழைய நினைவுகளின் பாதிப்புகள் அதிகமாய்!

வலம்புரி சங்கிற்குள் ஒலிக்கும் பேரிரைச்சலாய், மனதிற்குள் நினைவோசைகளின் தளும்பல்கள்!

அறையிலிருந்த சிவியின் மனதிலும் அதே யோசனை!

எவ்வளவு இரக்க சிந்தனையும் மனித நேயமும் இருந் திருந்தால், ஜென்னியின் தாயைப் பற்றி அறிந்திருந்த போதும் அவளை வளர்க்க முன் வந்திருப்பான் என்று, விக்டரின் மேல் பெரும் மதிப்பும் மரியாதையும் புதிதாய் ஜனித்திருந்தன!

சாலமனுடைய வாழ்க்கை பெரும் பாடமாகியிருக்க, கவிதாவின் உயர்ந்த உள்ளமும் புரிந்தன.

விக்டருக்கு எந்த விதத்திலாவது உதவி செய்ய வேண்டுமென்று எண்ணும்போதே, ஜென்னியை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்ற அவனது கோரிக்கை நினைவு வருவதாய்!

அவன் வீட்டில் இருக்கும் இந்த ஒரு வருட காலத்தில், பெண்களைப் பற்றிய அவனுடைய தவறான அபிப் ராயத்தை மாற்றி விட வேண்டுமென்ற வேட்கையும் தீவிரமும் அவளுள் எழுந்தன.

பாட்டியின் உடல்நிலைக்காகவே சம்மதித்திருந் தாலும், தனக்கு இக்கட்டான ஒரு நேரத்தில் உதவி செய்தவனுக்கு, தான் பெரிதும் கடன் பட்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள் அவள்.

ஒரு முடிவுடன் உறங்க ஆரம்பித்தவளை உறக்கம் கண்ணாமூச்சியாடியபடித் தழுவியது.

* * *



மறுநாளைய விடியல்.. இருவருக்குமே இனிதான ஒன்றாய்!

கரு மேகங்கள் விலகி, சூரியனின் ஒளிக் கீற்றாய் சிவியின் மனதில் சிறு வெளிச்சம் படரத் துவங்கி யிருந்தது.

விக்டரும், இது வரை ஆழ்மனதில் அடைகாத்து வந்திருந்த துக்க உணர்வுகளை முதன்முதலாகப் பகிர்ந்து கொண்டதில், நெஞ்சம் லேசாகியிருந்தான்.

மனதில் பொங்கிய உற்சாகத்தோடு, அவள் வெளியே பால்கனிக்கு வந்தபோது, பகலவன் உதயமாகி, கதகதப் பான சூட்டை கடல் மேல் உற்சாகமாய் தூவிக் கொண் டிருந்தான்.

அந்தமான் வந்ததிலிருந்து நேற்று வரை, எதையுமே உணர முடியாத மரத்துப்போன மனநிலையிலிருந்த வளுக்குள், இன்று புது உற்சாகமும், ரசனையும் கை கோர்க்க ஆரம்பித்திருந்தன.

அந்த ரிசார்ட்டை சுற்றித் தெரிந்த புல்வெளியையும் தோட்டத்தையும் ஆழ்ந்து ரசித்தவள், சூரிய ஒளிபட்டு வெள்ளி மணிச் சலங்கைகளாய் தெறித்து விழும் அலைத் துளிகளை சாதகப்பறவையாய் எண்ணங்களில் உள் வாங்க ஆரம்பித்தாள்.

அந்த மோன நிலையில் திளைத்துக் கொண்டிருந்த போதுதான், கதவு திறக்கும் ஒலி கேட்டுத் திரும்பி னாள்.

இரவு உடையுடன் விக்டர் வெளியே வர, 'குட்மார்னிங் விக்டர்!' தன்னுடைய இயல்பான புன்னகையுடன் வரவேற்றாள்.

உடனே, ஒற்றைப் புருவம் உயர்த்தி தன் வியப்பை வெளியிட்டவன், ''குட்மார்னிங்....'' என்றான் சோம்பலாக!

''இன்னிக்கும் நாம வெளியே போறோமா?''

அவள் ஆவலுடன் விசாரிக்க, அவளிடம் தெரிந்த மாற்றம், அவனுள் பெரும் வியப்பைத் தூண்டுவதாய்!

''என்னாச்சு? இன்னிக்கு ஃபுல் ஃபார்மிலே இருக்க மாதிரி தெரியுது?'' கண்கள் இடுங்கக் கேட்டான்.

''ம்! நேத்து என் நண்பர் ஒருத்தர் விக்டர்னு பேரு! அவரோட பேசிட்டிருந்ததாலே வந்த தெளிவுன்னு நினைக்கிறேன்'' குறும்பு கசிந்தது அவள் குரலில்!

''ஓ!'' போலியாய் வியந்தவன், ''எனி வே தேங்க்யூ'' என்றான் உதட்டோர வளைவுடன்!

சூரிய ஒளி பட்டு மின்னிய முகமும், கலைந்து காற்றில் அலை பாய்ந்த சிகையும், இரவு உடையிலும் கம்பீரம் தொலைக்காது அவன் நின்றிருந்த விதமும், அவளுக்கு ஒரு போர் வீரனின் சிற்பத்தை நினைவுபடுத்தின.

முதன்முதலாக தலை முதல் கால் வரை அவனை ஆராய்ந்தவள், ஒருவித விதிர்ப்புடன் விழிகளைத் தழைத்தாள்.

''என்ன.. எவ்வளவு மார்க்? பாஸ்தானே?''

கூர்மையுடன் வந்த கேள்வி, அவள் உணர்வுகளை அவன் புரிந்து கொண்டானென்பதை உணர்த்தியது.

அதற்கு பதில் கூற மனமின்றி, ''விக்டர் ஜென்னிக்கு 'ஹெச்.ஐ.வி.' டெஸ்ட் பண்ணியாச்சா? அவளுக்கு அந்த



வைரஸ் இல்லையே?'' உண்மையான ஆதங்கத்துடன் கேட்டாள்.

''இல்லை! ஏன்... பயமாருக்கா? அப்படியே இருந்தாலும் 'ஹெச்.ஐ.வி.' கூட இருக்கறதால பரவாது.''

அவன் முடிப்பதற்குள் அவள் இடைமறித்தாள்.

''எனக்கும் தெரியும்.. ரத்தம் மூலமாத்தான் பரவும்னு! நான் அதற்காக பயந்து கேக்கலை! குழந்தை பாவமாச் சேன்னு கேட்டேன்.''

''மல்லிகா வயித்துல ஜென்னி இருக்கும் போதே, முறையான மருத்துவ சிகிச்சை எடுத்திட்டதால குழந்தை 'ஹெச்.ஐ.வி.' வைரஸால பாதிக்கப்படலை.'' அவன் ஒரு பெருமூச்சுடன் முடித்தான்.

''தேங்க் காட்! சொசைட்டியில இந்த அவேர்னஸ் ரொம்ப குறைச்சலா இருக்கு! ''எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி முகாம்''களை கிராமங்கள்லே எல்லாம் ஏற்படுத்தி, அதைத் தடுக்க முயற்சி செய்யணும்!''

''இப்படி எல்லாருமே சொல்லிட்டுப் போயிட்டிருந்தா நடக்காது.. முதல்லே நாம ஏதாவது முயற்சி செய்யணும்!''

''ஏன்... நான் ரெடி! மலை வாழ் மக்கள் கிட்டே இதைப் பத்தி ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கலாமே? நம்ம எஸ்டேட் தொழிலாளர்கள்கிட்டே கூட அதை செய்யலாம்!'' ஆர்வத்துடன் நிறுத்தினாள்.

''நானும் அதான் யோசிச்சிட்டிருக்கேன்! பாப்போம்! முதல்லே கலெக்டர்கிட்டே பேசி ஒரு முடிவு செய்யலாம்! இப்ப இருக்கற கலெக்டர் கூட, அப்பாவுக்கு நல்ல

நண்பர்தான்! பேசிப் பாப்போம்!'' தீவிர பாவத்துடன் முடித்தான்.

## 27

அன்று இருவருமாகக் கிளம்பி ஐயம்பெருமாளின் துணையுடன் ''நார்த்பே'' ஐலண்டுக்குச் சென்றனர்.

அங்கு சென்றவுடன், உற்சாகமும், துள்ளலுமாய் அந்தத் தீவை சுற்றிப் பார்த்தாள் சிவி!

கடல்நீர், அழகிய நீல நிறத்தில் கண்ணாடி போல் அடி ஆழம் வரை பிரதிபலிக்க, தரையிலிருந்த பவளப் பாறைகள் அழகாய் கண்சிமிட்டின.

''ஓ! இந்தக் கடல் எவ்வளவு அழகா இருக்கு... இல்லை விக்டர்? ட்ரான்ஸ்பரெண்ட்டா கடலோட அடி ஆழத்தில தெரியற எல்லாத்தையும் பாக்கற அனுபவம் எவ்வளவு அற்புதமா இருக்கு?''

இரு கன்னங்களிலும் கைகளைப் பதித்து துள்ளலுடன் ரசித்து ஆர்ப்பரித்தவளை, ஓரக்கண்ணால் வியப்புடன் நோக்கினான் அவன்.

அவளிடம், நிறைய மாற்றங்கள் வந்திருப்பதையும், பழைய இயல்பு நிலைக்கு அவள் திரும்பியிருப்பதையும், உணர முடிவதாய்!

''ஆமாம்! ரொம்ப அழகுதான்! ஆனா, நான் கல்லூரி நாட்கள்லே வந்தது.

''இப்ப சுனாமிக்கப்புறம் நிறைய அழிஞ்சிருக்கு!



''இனியாவது இந்த இயற்கை தன்னோட அழிவு சீற்றத்தை நிறுத்தணும்!''

ஒரு பெருமூச்சுடன் கூறியவனுடைய விழிகளில், சிறு வலி தெரிவது போல்!

தீவிற்குள் தூரத்திலிருந்த சிறு லைட் ஹவுஸும், அந்தத் தீவின் அழகும், அவளை மிகவும் கவர்ந்தன.

கடலின் ஆழத்தையும், ரகசியங்களையும் ரசித்தபடி, அங்கேயே இருந்து விடலாமென்று தோன்றியது!

வெகு நேரம் அந்தத் தீவிலேயே சுற்றியவர்கள், படகில் திரும்பும்போது அவளிடம், ''இவ்வளவு ரசனையுள்ளவ... புத்திசாலி.. சுந்தர் மாதிரி ஒரு ஆள்கிட்டே காதல் அது இதுன்னு எப்படி மயங்கினேன்னுதான், ரொம்ப ஆச்சர்யமா இருக்கு!''

உணர்ச்சியற்ற விழிகளுடன் அவளையே கூர்மையாய் ஊடுருவியபடிக் கூறினான்.

உடனே, அவ்வளவு நேரம் பிரகாசமாகத் தெரிந்த உலகமே, இருண்டு போனதைப் போன்ற ஒரு உணர்வு அவளுக்கு!

சட்டென்று முகம் வாடிவிட, ''சுந்தரும் நல்லவர்தான்! ஆனா எதார்த்தவாதி இல்லை.. அவ்வளவுதான்!'' கூறி விட்டு திரும்பிக் கொண்டவள் பிறகு அவனிடம் பேசவே இல்லை.''

அன்றைய இரவு, இருவருக்குமே ஏகாந்த இரவாய்!

நாளை மதியம் ஊருக்குக் கிளம்ப வேண்டும்!

உறக்கம் வராதிருந்த நிசப்தத் தனிமையில், தன் எதிர் காலத்தைப் பற்றி யோசித்தபடிப் படுத்திருந்தாள் அவள்.

இந்த ஒரு மாதத்தில்... தன் வாழ்வில்தான் எவ்வளவு மாற்றங்கள்...!

''ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இன்றியமையாத தருணமாகிய திருமணம் என்ற ஒன்றை, எப்படி ஒரு வருட ஒப்பந்தமாக ஏற்கத் துணிந்தேன்?''

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல், சுந்தரை எப்படி நம்பினேன்.

பல வினாக்கள் அவளுள் முகிழ்க்க ஆரம்பித்தன.

இதயம்... சிறகு சிதைந்த பறவையாய் துடித்தது.

ஆனால் எதற்குமே விடை தெரியாமல் அவள் உறங்கத் துவங்குகையில், நேரம் நடுநிசியைக் கடந்திருந்தது.

வானில் நிலவு மட்டுமே சாட்சியாய் தனித்து பவனி வந்தது.

மறுநாள் காலையில் ஒன்றாக டிபன் சாப்பிட்ட போதும், விக்டர், தனக்குள் இறுகி நட்புணர்வைத் தொலைத்திருந்தான்.

அவளும் மௌனமாகவே இருக்க, ஊடலின் உட்பொருளாய் அங்கு வார்த்தைகளற்ற நிசப்தமே இருவருக்கும் துணையாய்!

மதியம் ஏர்போர்ட்டிற்குக் கிளம்பியபோது, அவளுக்குத்தான் அந்த அற்புதத் தீவை விட்டுச் செல்லவே மனமில்லை.



# 28

அன்றிரவு, சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு வந்து இறங்கிய போதுதான், அந்த அதிர்ச்சிச் செய்தியை செல்போன் கூறியது.

மணி அடித்ததும் எடுத்துப் பேச ஆரம்பித்தவனுடைய முகம், சட்டென்று கவலையாக மாற, என்ன விஷயம் என்பது போல் தவிப்புடன் அவனை ஏறிட்டாள் அவள்.

''சரி... கோயம்புத்தூர் வந்துட்டோம்... நேரா அங்கே வந்துடறோம்'' என்றவன், அவளிடம் செல்லைக் கொடுத்தான்.

சிவமுருகன்தான் பேசினார். ''சிவி... பாட்டி... நம்மையெல்லாம் விட்டுட்டு..'' அதற்கு மேல் அவரால் பேச இயலவில்லை.

''நாங்க வரோம் சித்தப்பா...'' என்றபடி போனை அணைத்தவள், மறுகணமே ஒரு விம்மலுடன் அவன் மார்பில் சாய்ந்து விட்டாள்.

உடனே அவளை ஒரு குழந்தையைப் போல் அணைத்து வருடி ஆறுதல் படுத்தியவன், அப்படியே அழைத்துச் சென்று காரில் ஏற்றினான்.

பிறகு வழி முழுவதும் விசும்பலுடன் கண்ணீர் விட்டவளை, அவனுடைய மெல்லிய தேறுதல் வார்த்தைகள், பெரிதும் இதப்படுத்தின.

தாத்தாவின் பங்களாவிற்குச் சென்றபோது, ஒரே கூட்டமாக இருக்க, விபரமறிந்து, நண்பர்களும் உறவினர்களும் வர ஆரம்பித்திருப்பது புரிவதாய்!

உள்ளிருந்து ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்ட உஷாவைத் தேற்றும் பொறுப்பு, அவளுடைய தாயிற்று.

அழகிய கண்ணாடிப் பேழையில் கம்பீரம் தொலைக் காது சயனித்திருந்தவரைப் பார்த்தபோது, இவருக்காகத் தானே இத்தனை பொய்கள்... நாடகங்கள் என்ற விரக்தி யும், வேதனையும் வருவதாய்!

அதிகாலையில், கடாட்சமும் மாலதியும் சென்னையி லிருந்து வந்து விட்டனர்.

விக்டர், வீட்டு மாப்பிள்ளையாய், இறுதிக்காரியத் திற்குத் தேவையான எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டான்.

உறவினர்களுக்குத் தெரிவிப்பது.. சாப்பாட்டிற்கு கேட்டரிங் சர்வீஸ்யிக்கு சொல்வது.. ஷாமியானா, நாற்காலிகள், மொர்ஸிவேனுக்கு சொல்வது என்று அனைத்து ஏற்பாடுகளையும் அவனே செய்தான்.

கோதைநாயகியின் இறுதிக் காரியங்கள் முடிந்து எல்லோரும் சென்றதும், குடும்பத்தில் நெருங்கிய உறவுகள் மட்டுமே மீதமிருந்தனர்.

அப்போது அங்கு வந்த விக்டரின் கைகளை, நன்றி யுடன் பற்றிக் கொண்டார் கடாட்சம்.

''ரொம்பத் தேங்க்ஸ் மாப்பிள்ளை! எங்களால எதுவுமே முடியாம நாங்க துக்கத்துல ஒய்ஞ்சு போயிருந்தப்ப, எல்லா காரியத்தையும் நீங்களே எடுத்து செஞ்சிருக்கீங்க... எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை!'' என்றபடி தழுதழுத்தார்.



''இதிலே என்ன அங்கிள் இருக்குது? எனக்கு ஒரு கஷ்டம்னா நீங்க செய்ய மாட்டீங்களா? அதுமாதிரித் தான்...! இதைப்போய் பெரிசா ஏன் எடுத்துக்கறீங்க?''

இயல்பாகக் கூறியவனிடம் ஒரு 'செக்'கை நீட்டினார் சிவமுருகன்.

''இதை மாட்டேன்னு சொல்லாம வாங்கிக்கணும்! எவ்வளவு செலவாயிருக்கும்னு சரியாத் தெரியலை! அப்பாதான் குடுக்க சொன்னாங்க'' என்றபடி அளித் தார்.

''இல்லை! இதுக்கெல்லாம் போய் ஏன் கணக்குப் பாக்கறீங்க. சாரி.. நான் வாங்கிக்க மாட்டேன் அங்கிள்!'' அவன் பிடிவாதமாக மறுத்தான்.

உடனே சிவியை அழைத்தவர், ''சிவிம்மா! மாப் பிள்ளைகிட்ட கொஞ்சம் எடுத்து சொல்லு... இந்த மாதிரி இறுதிக்காரியமெல்லாம் நாங்க தான் செய்யணும்! வாங்கிக்க சொல்லும்மா'' மெதுவாகக் கூறினார்.

என்ன செய்வதென்று புரியாமல் அவள் விழிக்க, ''நான் கிளம்பறேன்... நீ வேணா காரியம் எல்லாம் முடியற வரைக்கும் இங்கே தங்கிட்டு வா!


''தாத்தாவுக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்கும்'' என்றபடி விக்டர் விடைபெற்றான்.

''அப்போ.. செக்...?''

அவள் தடுமாற, ''ம்.. அது அவங்ககிட்டயே இருக் கட்டும்.. அப்புறம் வாங்கிக்கறேன்!'' தலையைக் குலுக் கியபடி கூறிவிட்டு அனைவரிடமும் விடைபெற் றான்.

உடனே அந்த 'செக்'கை சிவியிடம் அளித்து விட்டார் சிவமுருகன்.

## 29



ஏனோ, அன்றிரவு உறக்கமே வராமல், விக்டருடைய பெருந்தன்மையும், அக்கறையுமே மனதில் வந்து, அவளைப் பெரிதும் இம்சித்தன.

அந்தக் குடும்பத்தில் ஒருவன் போல், இயல்பாக எல்லாக் காரியங்களிலும் பங்கேற்று, பொறுப்புடன் அனைத்தையும் கவனித்தவனுக்கு, தான் இதுவரை நன்றி என்ற ஒரு வார்த்தையைக் கூடக் கூறவில்லையே என்ற உறுத்தல் எழுவதாய்!

அவனுடைய மனித நேயமும், நற்குணங்களும் விசுவரூபமெடுக்க, முதன் முதலாக அவன் மேல் ஒரு வித மதிப்பும், மரியாதையும் வந்தன.

வெகு நேரம் அவனைப் பற்றியே யோசித்தவளை, அவனுடைய வித்தியாசமான பரிணாமங்கள் மிகவும் ஈர்த்தன.

ஜென்னியிடம் காட்டுகின்ற எதிர்பார்ப்பில்லாத அன்பிலாகட்டும்.. சிவியிடம் முதலில் வெளிப்படுத்திய வெறுப்பு உணர்விலாகட்டும்... பாட்டியின் இறப்பிற்கு உதவிய நற்பண்புகளிலாகட்டும்.. நட்பிற்காவும், நன்றிக்காகவும், உயிரையே கொடுக்கின்ற ஒரு இனிய பண்பிலாகட்டும்.. எல்லாவற்றிலுமே உயர்ந்து தெரிந்தான் அவன்.



மெல்ல உறக்கம் அவளைத் தழுவியபோது, மனமெங்கும் அவனே நிறைந்திருந்தான்.

* * *

ஒரு வாரம்.. எல்லா உறவுகளும் இணைந்திருப்பதிலும், ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறுவதிலும், பழைய கதைகளைப் பேசி இறந்த காலத்தைப் புரட்டிப் பார்த்திலும் வேகமாகக் கழிந்தது.

தினமும், மாலையில் எஸ்டேட் வேலைகள் முடிந்தவுடன், அவர்களின் வீட்டிற்கு வருவதை, விக்டர் வழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.

வீட்டிற்கு வந்தவுடனே, முதலில் தாத்தாவைப் பார்த்துவிட்டுத்தான், மற்றவர்களிடம் வருவான் அவன்.

வயதான காலத்தில் துணையை இழந்து தவிப்பவரிடம், அவனுக்கு பெரும் பரிதாபம் வருவதாய்!

ஒரு நாள் அப்படி வந்த போதுதான், சிவி அவனிடம் ஒரு கோரிக்கை வைத்தாள்.

''நாளைக்கு வரும்போது ஜென்னியையும் கூட அழைச்சிட்டு வரீங்களா?'' ஆவலுடன் கேட்டாள்.

''ம்.. வரலாம்! ஆனா, நீ இங்கே ரிலாக்ஸ்டா இருக்கறப்ப, அவளை வேற கவனிக்கணுமே?'' சிரமமாச்சே!

''மாப்பிள்ளை! சிரமமெல்லாம் ஒண்ணும் இல்லை! எங்களுக்கும் ஒரு சேஞ்சா இருக்கும். அதான்!'' என்றார் கடாட்சம்!

''சரி மாமா! நாளைக்கு அழைச்சிட்டு வரேன்!'' என்றவன் எல்லோரிடமும் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பிய போது, எப்போதும் போல் கார்வரை வழியனுப்ப வந்தாள் சிவி.

காரில் ஏறும் முன்பு திரும்பியவன், "என்ன.. ஏதாவது சொல்லணுமா? என் முகத்தையே பாத்துப் பாத்து தயங்கிட்டு இருந்த மாதிரித் தெரிஞ்சுது.. அதான் கேட்டேன்!" அவளையே கூர்ந்தபடிக் கேட்டான்.

"ம்.. ரொம்ப தேங்க்ஸ்!"

தயக்கத்துடன் மெதுவாக முணுமுணுத்தவளிடம், "எதுக்கு?" எனக் கேட்டான் அவன்.

"எல்லாத்துக்கும்...!"

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவள் பகர, அவளுடைய உணர்வுகள் அவனுக்குப் புரிந்தன.

உடனே அவன் முகம் சுருங்கி இறுகியதைப் போல்!

பிறகு "வெல்கம்!" என்றபடித் தோளைக் குலுக்கியவன், வேகமாகக் காரில் ஏறி சென்று விட்டான்.

"ஏன் அவனுடைய முகம் சட்டென்று மாறியது...? உடனே வேகமாகக் காரில் ஏறிச் சென்று விட்டானே...?" பல குழப்ப வினாக்களுடன் அவள் இதயம் அனிச்ச மலராய் கூம்பியது.

தான் ஏதோ தவறு செய்து விட்டது போல ஒருவிதக் குற்ற உணர்வும் அவளை ஆக்ரமிக்க, அது என்னவென்று அவளுக்கே புரியவில்லை!

இதயம்.. புறாவின் சிறகாய் சடசடத்தது!

"அக்கா!"வென்ற குரலோடு ஓடி வந்து அணைத்துக் கொண்ட சுஜயின் குரலில் அவளுடைய நினைவுலகம் கலைந்தது.

"மாமா போயிட்டாராக்கா? நானும் உன்னோட வெளியே வந்து 'பை' சொல்றேன்னா, அம்மா திட்டறாங்க" என்றான் கோபத்துடன்.



"சரி.. நாளைக்கு நாம ரெண்டு பேருமா வந்து 'பை' சொல்லலாம்... என்ன?" என்றபடி அவனை அணைத்துக் கொண்டாள்.

அவர்களிருவரும் தனிமையில் பேச வழிவகுத்து விட்டு, ஒதுங்கி நின்ற பெரியவர்களின் விருப்பம் புரிவதாய்!

ஆதர்சத் தம்பதிகளாய் தங்களை எண்ணிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு உண்மை தெரிந்தால் என்ன வாகும் என்று நினைக்கும் போதே, உடல் பயத்தில் சிலிர்த்தது.

"சுஜய்! நீ உள்ளே போ! நான் கொஞ்ச நேரம் தோட்டத்திலே வாக்கிங் போயிட்டு வரேன்."

அவனை அனுப்பி விட்டு லானில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள்.

மனதில் நூல்கண்டு சிக்கலாய் குழப்பங்கள்!

'இந்த ஒரு வருடம் கழித்து தன் வாழ்க்கையை எப்படித் தொடரப் போகிறோம்... தன் வீட்டில் உண்மையை எப்போது சொல்வது...?' போன்ற இமாலயக் கேள்விகளுக்கு, அவளிடம் விடைதான் இல்லை.

தோட்டத்திலிருந்த கருங்கல் பெஞ்சில் அமர்ந்த போது, சுந்தரின் நினைவுகள் இப்போதெல்லாம் அதிகம் தன்னைத் தாக்காததும் புரிவதாய்!

நெஞ்சம், ஒருவிதப் பக்குவத்தோடு அவன் இறப்பை ஏற்றுக்கொண்டு விட, தன் காதல் நிஜமா.. இனக்கவர்ச்சியாவென்ற சந்தேகமும் வருவதாய்!

திடீரென்று, குளிர்க்காற்று சரசமாய் முகம் தீண்ட, தான் அங்கு அரைமணி நேரமாய் அமர்ந்திருப்பது, அப்போதுதான் உரைத்தது!

ஒரு பெருமூச்சுடன் எழுந்தபோது பக்கவாட்டில் அவளையே பார்த்தபடி நின்றிருந்தாள் மாலதி.

''என்ன சிவி? இவ்வளவு பெரிய பெருமூச்சு? மாப்பிள்ளை நினைப்பா? ஹனிமூன் முடிஞ்சி நீங்க வரும்போதே இப்படி ஆயிடுச்சி!''

''எனக்குப் புரியுது! புதுசாக் கல்யாணம் ஆனவங் களுக்கு பிரிவுன்றதே பெரிய கொடுமைதான்! பேசாம நாளைக்கு மாப்பிள்ளையோட நீ கிளம்பு! அடுத்த வாரம் காரியத்துக்கு முதல் நாள் வந்தாப் போதும்'' அக்கறை யுடன் கூறினார்.

அவருடைய எண்ண ஓட்டம் புரிந்து விதிர்ப்புடன் நிமிர்ந்தவள், ''அதெல்லாம் ஒண்ணும் வேணாம்மா! நான்..... எல்லாம் முடிஞ்சப்புறமே போறேன்!'' மெதுவாக முணுமுணுத்தாள்.

இருவரும் திரும்பி உள்ளே வந்தபோது, இந்த விஷ யத்தை அவர் இப்படியே விட்டு விடுவாரென்று அவள் நினைத்தது பொய்த்துப் போவதாய்!

## 30



மறுநாள் காலையிலேயே, ஜென் னியை அவன் அழைத்துவர, அவள் சிவியிடம் தாவி இறுக்க கட்டிக் கொண்டாள்.



இப்போது பாசத்தையும் மீறி, அந்தக் குழந்தையின் மேல் பரிதாபமும், பரிவும் அவளுள் நிறைந்தன.

அன்று முழுவதும், ஜென்னி எல்லோரிடமும் நன் றாகப் பழகி ஒட்டிக் கொள்ள, பொழுது இறக்கை கட்டிப் பறந்து சென்றது.

அன்று மாலையில் அழைத்துப்போக வந்த விக்டரிடம் ஜென்னி இங்கேயே இருக்கட்டும் என்று அனைவரும் கேட்க, அவன் பார்வை அவளிடம் நிலைத்தது.

''ப்ளீஸ்! அவ இங்கேயே இருக்கட்டுமே! எங்க எல் லாருக்குமே.. இப்ப இருக்கற சூழ்நிலைக்கு... நல்ல சேஞ்சா இருக்கு...'' மெல்ல யாசித்தாள்.

''எனக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை! இவ, ரொம்ப ப்ராப்ளம் பண்ணினா அழைச்சிட்டு போயிடு றேன்.''

''அதெல்லாம் எதுவும் செய்யமாட்டா? இவ எங்க எல் லார்கிட்டயும் அப்படி ஒட்டிக்கிட்டா மாப்பிள்ளை! குழந் தையும் தெய்வமும் கொண்டாடுற இடத்துலம்பாங்க! அப்பாவுக்கும் பொழுது நல்லாப் போகுது!'' பெருமை யுடன் சிலாகித்தார் கடாட்சம்.

''ஓகே! உங்களால முடியும்னா, அவ இங்கே இருக் கட்டும்! நான் யாரையும் தொந்தரவு செய்ய விரும்பற தில்லை! இது முழுக்க முழுக்க என்னோட கமிட் மெண்ட்!''

அவன் இயல்பாகக் கூற, இடைமறித்தார் மாலதி.

''அதெப்படி மாப்பிள்ளை? சிவி உங்க ஒய்ஃப்! உங்க கடமைகள்லே அவளுக்கும் பங்கு இருக்கே!''

''அப்படியா?'' போலி வியப்புடன் கேட்டபடி அவளிடம் திரும்பினான் அவன்.

அவள் தடுமாற, ''என்ன மாப்பிள்ளை இப்படிக் கேக்கறீங்க? நேத்து, சிவி பாவம்,, ரொம்ப நேரம் தோட்டத்துலே உங்க நினைப்பாவே தனியா உக்காந்து யோசிச்சிட்டு இருந்தா!

''நான் தான் சமாதானம் செஞ்சு அழைச்சிட்டுப் போனேன்! வேணும்னா, உங்க வீட்டுக்குப் போயிட்டு காரியத்துக்கு முதல் நாள் வான்னு கூட சொன்னேன்'' பெருமையுடன் முடித்தார் மாலதி.

சிறு முறுவலுடன் அதை ஏற்றவன், தாத்தாவிடம் பேசிவிட்டு விடைபெறும் போது, சிவியும் கூடவே சென்றாள்.

காரில் ஏறி அமர்ந்தவுடன், ''தேங்க்யூ சிவாத்மிகா! உங்க அம்மா அப்பாவுக்கு சந்தேகம் வராம இயல்பா, நல்லா நடிச்சதுக்கு!

''பரவாயில்லையே... இப்பல்லாம் உனக்கும் என்னாட்டம் நல்லா நடிக்க வருது போலருக்கே!'' கிண்டலாக மொழிந்து விட்டு காரைக் கிளப்பிச் சென்றான்.

பதில் கூறாமல் அவன் சென்ற வழியையே பார்த்திருந்தவளுக்கு, தான் நடிக்கவில்லையென்று கூற வேண்டும் போல்!

* * *

மறுதினமே, ஜென்னிக்கு வேண்டிய துணிகளை டிரைவரிடம் அனுப்பி வைத்திருந்தான் அவன்.

மாலையில் அவன் வரும்போது, ஜென்னி, சுஜய், அருண் மூவரும் வேதநாயகத்தின் அறையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.



சிவி தாத்தாவுடன் பேசியபடி அவர்களை கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவனைக் கண்டதும் உற்சாகத் துள்ளலுடன் அனை வரும் வரவேற்க, டிபன் காபி எடுத்து வர எழுந்தவளைத் தடுத்தான் அவன்.

''வேண்டாம்! மீட்டிங்கிலே டிபன் காபி எல்லாம் ஆயிடுச்சி,, வயிறு ஃபுல்லா இருக்கு!'' என்றான்.

''என்ன இருந்தாலும் ஒரு மனைவிக்கு தான் கணவன் மேல அக்கறை இருக்க முடியும்... பசி தெரியும் பாத்தீங்களா என் பேத்தியை!''

''இதுவரைக்கும் நாங்க பாத்து பாத்து அவளுக்கு எல்லாம் செஞ்சிட்டிருந்தோம்! இப்ப என்னடான்னா அவ உங்களை ஓடி ஓடி கவனிக்கறா!''

அவர் பெருமிதத்துடன் பேத்தியையே பார்த்தபடிக் கூற அவள் விழிகளோ, தர்ம சங்கடத்துடன் தழைந்தன.

பிறகு, அவளும் உடன் இருக்கவே, அன்று கலெக்டரை சந்தித்ததைப் பற்றி, வேதநாயகத்திடம் பேச ஆரம்பித்தான்.

''தாத்தா! நம்ம மலை வாழ் மக்கள் கிட்டே எய்ட்ஸ் பத்தின ஒரு அவேர்னஸே இல்லை! அதனால கலெக்டர் கிட்டே இன்னிக்குக் காலையில பேசிட்டு வந்தேன்...

''நம்ம ஏரியாவுலே ஒரு ''எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி'' முகாம் ஒண்ணு நடத்த ஏற்பாடு செய்யும்படிக் கேட்டிருக்கேன்.. அவரும் பாக்கறதா சொல்லியிருக்காரு.

''நம்ம தேயிலைத் தொழிலாளர்களையெல்லாம் வரச் சொல்லி சர்க்குலர் விட்டுடலாம். வார விடுமுறை நாள் மாதிரிதான் ஏற்பாடு செய்யணும்.

''பக்கத்துல இருக்கற மலை வாழ் மக்களுக்கும் நோட்டீஸ் அடிச்சி விநியோகம் செஞ்சிடலாம்!

''ஒரு விழிப்புணர்வை, பாதுகாப்புணர்வை, எய்ட்ஸ் வைரஸாலே என்ன என்ன பாதிப்புகள் வரும்... வரும் முன் காப்பது எப்படின்னு புரிய வைக்கனும்!'' ஒருவித தீவிரத்துடன் முடித்தான்.

''ரொம்ப நல்லது மாப்பிள்ளை! கட்டாயம் செய்ங்க! இது மாதிரிப் பொது நலத் தொண்டுகளை எடுத்து செய்யத்தான் இப்ப ஆள் கிடையாது.''

''நிச்சயமா செய்ய வேண்டிய ஒரு நல்ல விஷயம் இது! பாமர மக்களுக்குப் புரியாத விஷயத்தை இது மாதிரி எடுத்து சொல்லித்தான் புரிய வைக்கனும்! நான் ஏதாவது இதிலே செய்ய முடியுமா?'' ஆர்வத்துடன் கேட்டார்.

''எஸ்டேட் முதலாளின்ற முறையில உங்ககிட்டயும் அபிப்ராயம் கேட்டு லெட்டர் வரும்! நீங்க கையெழுத்துப் போட்டு அனுப்பினாப் போதும்!''

''அது சரி! இதிலே என் பேத்தியையும் சேத்துக்கங்க! அவளுக்கும், இதுமாதிரி பொது நலத் தொண்டுலயெல்லாம் ரொம்ப ஆர்வம் உண்டு!''

''ம்! அவகிட்டயும் இது பத்திப் பேசியிருக்கேன். ஹெல்ப் பண்றதா சொல்லியிருக்கா!'' ஆர்வத்துடன் அவன் பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்தவளை, ஓரக்கண்ணால் அளவிட்டபடிக் கூறினான்.

அன்றிரவு, விக்டரை சாப்பிட்டு விட்டுத் தான் செல்ல வேண்டுமென்று அனைவரும் வற்புறுத்த, அவனும் தங்கிவிட்டான்.



இரவு சாப்பிட்ட பிறகு, அவன் கிளம்பிச் செல்ல, தன்னை விட்டு முதன்முறையாக ஏதோ ஒன்று நீங்கிச் செல்வதைப் போல் உணர்ந்தாள் அவள்.

## 31



கோதைநாயகியின் காரியங்கள் முடிந்து அனைவரும் ஊருக்குக் கிளம்ப, சிவியும் விக்டரின் வீட்டிற்குச் செல்லக் கிளம்பினாள்.

அன்று மாலையில், ஜென்னியுடன் அவளையும் அழைத்து செல்ல வந்திருந்தவளிடம் அனைவருமே நன்றி கூறினர்.

அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்ட வேத நாயகம், ''ரொம்ப நன்றிப்பா! புதுசா கல்யாணமாகியிருந்தாலும், மனைவியைப் பிரிஞ்சி இருக்கறதைப் பொருட்படுத்தாம, இத்தனை நாள் சிவியை இங்கே விட்டு வெச்சிருந்தீங்களே... உங்களுக்கு நான் என்ன சொல்லி என் நன்றியைத் தெரிவிக்கிறது?'' குரல் கம்மிவிடத் தழுதழுத்தார்.

''இதெல்லாம் பெரிய விஷயமா என்ன? நீங்க எல்லாரும் ரொம்ப வருத்தத்துல இருந்தீங்க.. அதான்! உங்க பேத்தியோட இருந்தா மனசுக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்குமேன்னு தான் இருக்க சொன்னேன்!''

இயல்பாகக் கூறியவனையே பெருமிதத்துடன் பார்த்தவர், ''அந்த 'செக்'கை சிவிகிட்ட கொடுத்திருக்கேன். மறுக்காம வாங்கிக்கனும்'' என்றார் உரிமையுடன்!

மறுக்க முடியாமல் தலையசைத்துவிட்டு அனைவரிடமும் விடைபெற்றவனுடன் இதயம் கனக்கக் கிளம்பினாள் அவள்.

* * *

வாழ்க்கை, தன் போக்கில் செல்கின்ற காட்டாறாய் விரையத் துவங்கியது.

விக்டரைப் பற்றிய எண்ண மாற்றங்கள், அவளுக்குள் நேச விதைகளை விதைக்க ஆரம்பித்திருந்தன.

ஜென்னி அவளிடம் மேலும் ஒட்டிக் கொள்ள, அந்தக் குழந்தை தன் வாழ்வில் ஒரு அங்கமாகி விட்டதை உணர ஆரம்பித்தாள் சிவி!

அவள் இப்போதெல்லாம் சிறிது ஓய்ந்தாற் போலிருப்பதை கவனித்த விக்டர், மாலை வேளைகளில், அவளை வெளியே எங்காவது அழைத்துச் செல்வதை, பழக்கமாக்கிக் கொண்டான்.

சில நாட்களில் க்ளப்புக்கு சென்று இருவரும் 'ஷட்டில் காக்' விளையாடுவார்கள்.

வீட்டிலேயே, இப்போதெல்லாம் இருவரும் கார்ட்ஸ், செஸ், சைனீஸ் செக்கர்ஸ், என்று விளையாட ஆரம்பிக்க, பொழுதும் விரைவாகச் சென்று விடும்!

சில நேரங்களில் அவள் ஓய்வாக அமர்ந்து ஹோம் தியேட்டர் அறையில் பாடல்களைக் கேட்டபடி ஓய்வாக அமர்ந்திருப்பாள்.

தினமும், காலை நேரங்களில் இருவரும் வாக்கிங் செல்ல ஆரம்பித்திருந்தனர்.

அவன் எஸ்டேட் அலுவலகத்திற்கு சென்ற பிறகு, மதிய நேரங்கள், ஜென்னியுடனும், ஏதாவது புது



வகையான சமையலை சமைப்பதிலும் விரைந்து சென்று விடும்.

மதியம் ஓய்வெடுத்துவிட்டு, எழுந்து தயாராகி ஜென்னியுடன் விளையாடியபடி விக்டருக்காகக் காத்திருப்பாள்.

மனதிற்குள் புது விதமான தவிப்பு அவஸ்தையாய் பரவி இம்சை செய்யும்.

அவன் வந்தவுடன், பொழுது இனிமையாகப் பறந்து விடும்!

இப்போதெல்லாம் வாழ்க்கை, இனிமையையும், வசந்தத்தையும் கைவசப்படுத்த ஆரம்பித்திருந்தது.

* * *

ஒரு நாள் விடியலில், அவளுடைய அறைக் கதவு மெதுவாகத் தட்டப்பட்டது.

உறக்கம் தொலைக்காத இமைகளை மெல்லப் பிரித்தவள், சோம்பலுடன் எழுந்தாள்.

கதவைத் திறந்தால், அங்கு விக்டர் நின்றிருந்தான்.

"என்ன.. தூக்கம் கலையலையா? இன்னிக்குக் காலையிலே நாம மலைவாழ் மக்களைப் பாக்கப் போகணும்னு சொல்லியிருந்தேனே! சீக்கிரம் ரெடியாயிடுறியா?"

"ம்.. சாரி.. மறந்துட்டேன்.. அஞ்சு நிமிஷத்திலே ரெடியாயிடறேன்" என்றபடி ஓடினாள்.

மின்னல் வேகத்தில் தயாராகி புத்தம் புதிய சுரிதாரணிந்து வெளியே வந்தவளைக் கண்டதும், ஒற்றைப் புருவத்தை வியப்பாய் உயர்த்தினான் அவன்.

"என்ன.. ராக்கெட் வேகத்துல வந்திட்டே? ப்ச்... பெண்கள் எல்லாரும் இந்த விஷயத்துல ரொம்ப

ஸ்லோன்னு கேள்விப்பட்டிருக்கேன்.. அதைப் பொய் யாக்கிட்டியே? ப்ச்."

"ஏன்.. பெண்கள்னா அப்படி ஒரு தப்பு அபிப்ராயம்? ஓ! பெண்கள் விஷயத்துல அவ்வளவு அனுபவமோ?" குறும்புடன் கேட்டபடி, அவள் உடன் வந்தாள்.

"அய்யோ! ஆளை விடும்மா! பெண்களுக்கும் எனக் கும் எப்பவுமே தூரம் அதிகம்! இதெல்லாம் ஃப்ரெண்ட்ஸ் சொன்னது!" தோளைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கினான்.

பிறகு இருவருமாகக் கிளம்பி மலை வாழ் மக்களின் வசிப்பிடத்திற்கு சென்றனர்.

கை நிறைய கற்றை நோட்டீஸுடன் இறங்கிய போது, பலர் அவனை அடையாளம் கண்டு ஓடி வந்தனர்.

"வாங்கய்யா... வாங்கம்மா" என்று பாசத்துடன் வர வேற்றனர்.

"விக்டர் ஐயா! நல்லாருக்கீங்களா? அப்படியே பெரி யய்யாவோட உதவுற குணத்தை ஆண்டவன் உங்களுக் கும் குடுத்திருக்காரே... ரொம்ப சந்தோஷமா இருக் குய்யா!" என்றபடி வரவேற்றார் ஒருவர்.

"போன தடவை, தடுப்பூசி முகாம் நடந்தப்ப ஐயா வந்தாங்க.. அப்ப பாத்தது! இவங்க எல்லாரும் எஸ்டேட் ஆபீஸிலே வந்து உங்களைப் பாத்திடறாங்க. எனக்கு வயசாயிடுச்சா, கண் பார்வை மங்கிடுச்சி! எங்கேயும் போக முடியலை." ஒரு முதியவர் வாஞ்சையுடன் புலம்பி னார்.

"வாங்கய்யா! எங்க புள்ளைங்க படிக்க ஏற்பாடு செஞ்சதுக்கு ரொம்ப நன்றிய்யா! உங்கப்பா ஆரம்பிச்சி



வெச்சாலும், நீங்க அதை இன்னும் விடாம தொடர்ந்து செய்யறதுக்கு நன்றிங்கய்யா!"

ஒரு பெண் கையெடுத்துக் கும்பிட, புரியாமல் அவள் விழித்தாள்.

"நன்றிம்மா! நீங்களும் ஐயாவோட சேர்ந்துஎங்களைப் பாக்க வந்ததுல ரொம்ப சந்தோஷம்!" அவளைப் பரிவுடன் அழைத்துச் சென்று அமர வைத்தனர்.

அவளுக்கு எதுவுமே புரியவில்லை.

இதுதான், அவனுடைய முதல் சமூக சேவை முயற்சி என்று அவள் நினைத்திருக்க, அந்த மலையக மக்களுக்கு அவன் முன்பே அறிமுகமானவனாக இருந்தான்.

இருவருமாக ஒவ்வொரு குடிலாகச் சென்று 'எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்' பற்றிய விபரம் கூறி, அனை வரையும் பங்கு பெறும்படி அழைத்தனர்.

* * *

பிறகு, இருவரும் கிளம்பியபோது, அந்த மக்களின் தலைவர் அவனை நன்றியுடன் வணங்கினார்.

"பெரியம்மாவும் இப்படித்தான்... அய்யாவோடவே வருவாங்க... எல்லா உதவியும் செய்வாங்க! நல்ல மனசு அவங்களுக்கு! அதே மாதிரி மருமகளும் அமைஞ்சிருக் காங்க" பெருமையுடன் பூரிப்பும் அவர் விழிகளில் கசிந்தன.

"சரி.. நாங்க கிளம்பறோம்! எல்லாரையும் திரட்டி முகா முக்கு அழைச்சிட்டு வர வேண்டியது உங்க பொறுப்பு!" என்றபடி அவரிடம் விடைபெற்றான் விக்டர்.

காரில் வரும்போது அடக்க முடியாமல் கேட்டு விட் டாள் அவள்.

"அங்கிளும், ஆன்ட்டியும் இங்கே அடிக்கடி வருவாங்களா? எல்லாருக்கும் நல்லாத் தெரியுது?" வியப்புடன் வினவினாள்.

"ம்! இங்கே வந்தப்புறம், அப்பாவுக்கு சும்மா இருக்க முடியலை! அவரு ஓய்வா இருந்து நான் பாத்ததில்லை.... அவரோட கவனம் முழுக்க இந்த மலைவாழ் மக்கள் மேல திரும்பிடுச்சி!"

"அப்பதான், அப்பாவோட ஃப்ரெண்ட் இங்கே டிஸ்ட்ரிக்ட் கலெக்டரா மாற்றலாகி வந்திருக்காங்க! உடனே அவர்கிட்டே மனு கொடுத்து ஒரு ஹாஸ்பிடலை இங்கே ஆரம்பிக்க ஏற்பாடு செஞ்சிட்டாங்க! அந்த நன்றியை இவங்க யாருமே மறக்கலை!"

"அப்பாவும், அம்மாவும் மாசாமாசம் இவங்களை நேரில் சந்திச்சு, குறைகளைக் கேட்டு, தங்களாலே முடிஞ்ச உதவிகளைச் செய்யறது பழக்கம்!"

"கலெக்டர் அங்கிள் மூலமா, அப்பா இவங்களுக்கு பல சலுகைகளை செஞ்சு தந்திருக்காங்க...

"ஒரு சங்கம் அமைச்சு, அதுக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து, அவர் மூலம் குறைகளை எல்லாம் கலக்டர்கிட்ட மனுவாகக் குடுக்கவும் ஏற்பாடு பண்ணி விட்டாங்க!


"சின்னதா ஒரு ஸ்கூலும் ஆரம்பிச்சி வச்சாங்க!"

"அவங்க உயிரோட இருந்திருந்தா, இன்னும் நிறைய செஞ்சிருப்பாங்க! இப்ப.. என்னால முடிஞ்ச சின்னச் சின்ன உதவிகளை மட்டும் நான் செய்யறேன்" ஒரு பெருமூச்சுடன் முடித்தான்.

பெற்றோரின் நினைவில், அவன் முகம் சிறிது சுருங்கி விட, சட்டென்று கனத்துப்போனது அவன் இதயம்!



## 32



மறு வாரம், மருத்துவமனை வளாகத்திலேயே "எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி முகாம்" நடந்தது.

காலையிலேயே விக்டரும் சிவியும், அங்கு சென்றுவிட்டனர்.

எல்லோருக்கும் ரத்தப்பரிசோதனை முடித்து, எய்ட்ஸை தடுப்பது எப்படி என்றும் எய்ட்ஸினால் உண்டாகும் தீமைகளையும், மருத்துவர்கள் மலையக மக்களிடம் எடுத்துரைத்தனர்.

சிவமுருகனும், பாமாவும் கூட இடையில் வந்து பார்த்து, உதவி விட்டுச் சென்றனர்.

மலையக மக்களை ஒழுங்கு படுத்தி வரிசையாக நிற்க வைப்பதிலும், ரத்தம் செலுத்துமிடத்திலும், பிறகு மீட்டிங்கிலும் என்று தேனியைப் போல் சுறுசுறுப்பாக இயங்கியபடி அனைத்துக் காரியங்களிலும் உதவிக் கொண்டிருந்தாள் சிவி!

அவளது சுறுசுறுப்பையும், ஈடுபாட்டையும் மனிதநேயத்தையும், கவனித்தபடி, அவளையே சில கணங்கள் பார்வையால் தொடர்ந்தான் விக்டர்.

எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்து அனைவரும் கிளம்பும் வரை, ஒரு மரத்தடியில் போடப்பட்டிருந்த நாற்காலியில் ஓய்வாக அமர்ந்திருந்தாள் அவள்.

அப்போது, தயக்கத்துடன் அவளருகில் வந்தாள் ஒரு வயதான மூதாட்டி.

"அம்மா! என் பேரு செல்வி! உங்களை பாக்குறப்ப எனக்கு செத்துப் போன நம்ம பெரியம்மா ஞாபகம்தான் வருது!"

"அவங்க எங்களுக்கு செஞ்சிருக்கிற உதவிங்களை சொல்லி மாளாது!

"எல்லாத்துக்கும் நாங்க மலை ஏறி இறங்கி ரொம்ப தூரம் போயிட்டிருந்தோம்மா! பெரிய அய்யா வந்தப்புறம் தான் எல்லாமே மாறிச்சு...

"பிள்ளைங்க படிக்க பள்ளிக்கூடம்.. உடம்பு சரியில்லைன்னா உடனே காமிக்க ஆஸ்பத்திரி.. ஏதாவது குறைங்கன்னா போய் சொல்ல ஒரு சங்கம்னு, இருந்த ரெண்டு வருஷத்துலே மகராசன் எவ்வளவோ செஞ்சாரு!

"காலன் அவரை சீக்கிரமே எடுத்துக்கிட்டான்... அம்மாவும் அவரோடவே போயிட்டாங்க! நல்லவங்களுக்கு இந்த மலையில இடமில்லையோ?

"வயசான என்னை மாதிரிக் கிழவிங்க அல்லாடிட்டிருக்கோம்... அவனுக்கு கண்ணு தெரியலை! ம்...

"நல்லவேளை.. சின்னய்யாவும் அதே மாதிரி தர்ம சிந்தனையோட, எங்களுக்கு உதவுற நல்ல குணத்தோட இங்கே வந்து சேர்ந்தாங்க...

"இப்ப எல்லாமே அவங்கதான் பாத்துக்கிறாங்க! ஜீப்பில கூட இங்கே வரது கஷ்டம்கிறதால, குதிரையிலதான் வருவாங்க!

"மகாலெஷ்மி.. நீங்களும் அவங்களோட தரும காரியங்களுக்குத் துணையா நிக்கறதைப் பாத்தா, பெருமையா இருக்கு தாயி! நீங்க நீடுழி வாழணும்!"

உச்சந்தலைக்கு மேல் கை வைத்து ஆசிர்வதித்து விட்டு, இரு கன்னங்களையும் வருடி முத்தமிட்டார்.

ஏனோ, அவளுடைய விழிகள் மெல்லக் கசிந்தன. "நான் இன்னும் பத்து மாதங்கள் மட்டுமே விக்டருடன் துணையிருப்பேன்" என்று எப்படி அவரிடம் கூறுவது?



அதை நினைக்கும் போதே, புயலில் சிக்கிய பட்டமாய், உள்ளம் படபடத்தது.

"எங்க, சின்னய்யா, அந்த வானம் மாதிரி விசாலமான மனசு கொண்டவரு! அவரோட முயற்சியாலதான், போன தடவை தடுப்பூசி போட வந்தாங்க.. இப்ப என்னவோ பொம்பளை சீக்காமே அதுக்கு மருத்துவம் செய்ய வந்திருக்காங்கன்னு என் மகன் கடம்பன்... இந்த மலைக் கூட்டத்துக்குத் தலைவன்... அவன் சொன்னான்.

"நான் எதுக்கு இங்கே? உங்களைப் பார்க்கணுமின்னு தான் வந்தேன் மகராசி! இந்தாங்க" என்றபடி ஒரு பொட்டலத்தை நீட்டினார்.

"என்னது?"

யோசனையுடன் கேட்டவளிடம், "எங்கம்மா பரம்பரையா வெச்சிருந்த மாணிக்கக் கல்லு! ரொம்ப ஜாதிக்கல்லுன்னு சொல்லுவாரு எங்க ஐயன்!"

"இதை உங்களுக்குக் குடுக்கணுமின்னு தோணிச்சி! ரொம்ப ஒசந்ததை எல்லாம் தெய்வத்துக்குதானே குடுக்கணும் தாயி!" கூறிவிட்டு அவள் மடியில் வைத்துக் கும்பிட்டார்.

சட்டென்று, உடலில் இனம்புரியா சிலிர்ப்பும், விழியோரம் கண்ணீரும், ஒருங்கே ஜனித்தன.

பரவசத்தில் நடுங்கும் விரல்களுடன் அதைப் பிரித்த போது, உள்ளே ஒரு பெரிய சிவப்பு நிறக் கல், வாத்சல்யத்துடன் ஒளி வீசிக் கொண்டிருந்தது.

அதைப் பார்க்கும் போதே அதன் மதிப்பு தெரிய, "ப்ளீஸ்! இது எனக்கு வேண்டாம்" பதட்டத்துடன் மறுத்தாள்.

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது தாயி! பெரியம் மாவுக்கு குடுக்கணுமின்னு தேடி எடுத்து வச்சிருந்தேன்.. அவங்களுக்குத் தான் குடுப்பினை இல்லை!''

''இது உங்களுக்குன்னு அந்த சாமி முடிவு செஞ்சிருக் கப்ப, அதை யாரு மாத்த முடியும்?'' உருக்கத்துடன் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார்.

அப்போது, விக்டர் அங்கு வந்து விட்டான்!

''என்ன? பாட்டிம்மா என்ன சொல்றாங்க?'' கேட்டபடி வந்து அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

''நீங்க ரெண்டுபேரும், நூறு வருசம் சேர்ந்து வாழ்ந்து பிள்ளைங்களைப் பெத்து ஒத்துமையா இருக்கணும்யா அதான் அம்மாகிட்டே சொல்லிட்டிருந்தேன்! நான் வரேங்கய்யா!''

கும்பிட்டு விட்டு மெதுவாகக் கம்பை ஊன்றிக் கொண்டு நடந்து சென்றார்.

''விக்டர்! அந்தம்மா எனக்கு இந்த 'ரூபி'யை கிஃப்டாக் குடுத்தாங்க... இதை ஆன்ட்டிக்கு குடுக்கணும்னு நினைச்சிருந்தாங்களாம்!''

''அதுக்குள்ளே... சரி.. இது உங்களுக்குதான் சொந்தம்... இந்தாங்க!'' அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்கி ஆராய்ந்தவன், ''நல்ல ஜாதி ரூபி மாதிரி இருக்கு! நீயே வச்சுக்க.. உனக்குத் தானே குடுத்தாங்க!'' திருப்பிக் கொடுத்தான்.

''இல்லை! நான்.. உங்க மனைவின்னு நினைச்சி குடுத்திட்டாங்க! நம்ம கல்யாணம் பொய்யின்னு அவங் களுக்குத் தெரியாது பாவம்!'' சட்டென்று அவள் முகம் இறுகியது.



''சிவாத்மிகா! அது நம்ம ரெண்டு பேருக்குள்ளே இருக் கிற ரகசிய ஒப்பந்தம்! இப்படி சத்தம் போட்டு, ஊருக்கே அதை அறிவிச்சிடுவே போலருக்கு!'' அடிக்குரலில் சீறினான்.

உடனே தன் தவறை உணர்ந்து உதட்டைக் கடித்த வள், ''சரி...'' என்றபடி எழுந்து விலகிச் சென்றாள்.

அவனிடமிருந்து பிரிந்து செல்லும்போது, இந்த ரூபியை அங்கேயே வைத்து விட்டுச் சென்று விட வேண்டுமென்று எண்ணும்போதே, ஏதோ ஒரு இனம் புரியா வேதனை இதயத்தை சூழ்வதாய்!

பிரிவெனும் பெரும் துயர், பெரிதும் ஆட்டிப் படைப்ப தாய்!

ஜென்னியைப் பிரிந்து செல்லப் போகிறோமென்ற எண்ணமே கசப்பதாக சமாதானம் செய்து கொண்ட வளுக்கு, ஆழ்மனதின் அபிலாஷைகள் புரியவில்லை.

## 33

மறு வாரத்தில் ஒரு நாள், தாத் தாவைப் பார்க்க சென்றிருந்த போது, சஜய் இருவரையும் விடவேயில்லை.

'ஷட்டில் காக்' விளையாடலா மென்று கூறி வற்புறுத்த மூவருமாக் ஒரு முடிவெடுத்து அணி அமைத்து விளையாடினர்.

சஜயும், அவளும் ஒரு புறமிருக்க, இருவரையும் தனி ஒருவனாகவே, விக்டர் சாமர்த்தியமாக எதிர் கொண்டு வென்றான்.

அப்போதுதான், சுந்தரின் நினைவு வந்தது அவளுக்கு.

ஒருமுறை, ஃப்ரெண்ட்ஸ் எல்லோருமாக ஒரு நண்பனின் வீட்டிற்கு பர்த்டே பார்ட்டிக்கு சென்றிருந்தனர்.

அங்கு அவன் சிறு பிள்ளைகளுக்கு இணையாக விளையாட, "என்ன சிவி இது.. நீ சின்னக் குழந்தையா என்ன? இப்படி சின்னப் பசங்களுக்கு சரிசமமா ஆட்டம் போட்டா எனக்குப் பிடிக்கலை!" முகத்தை தூக்கி வைத்தபடி அவன் ஒதுங்க, அவள் சமாதானம் செய்தது ஞாபகம் வருவதாய்!

சட்டென்று ஒலித்த குரலால் கலைந்தாள் அவள்.

"போதும் அங்கிள்! எப்படியும் நீங்கதான் ஜெயிக்கறீங்க!" சலுகையாகச் சிணுங்கிய சுஜய் திடீரென்று நினைவு வந்தாற்போல் கேட்டான்.

"என்க்கா! நீ அங்கிள்கிட்டே "ஹார்ஸ் ரைடிங்" கத்துக்கலாம் இல்லை! எனக்கும் ஆசையா இருக்கு! எங்க ரெண்டு பேருக்கும் நீங்களே கத்துத் தரீங்களா அங்கிள்?" அவனிடம் முடித்தான்.

அவள் மறுக்கும் முன்பே, "ஓ யெஸ்! நீங்க விரும்பினா எனக்கு ஓகேதான்! வீக் எண்டுல நீ நம்ம வீட்டுக்கு வந்துடு."

"என்னோட ஹார்ஸ் 'ஹேரி'யிலேயே ட்ரெயினிங் வச்சுக்கலாம்" கூறிவிட்டு தோளைக் குலுக்கியபடி முறுவலித்தான்.

"ஊஹூம்... நான் கத்துக்கலை! சுஜய்க்கு வேணா ட்ரெயினிங் குடுங்க."

அவசரமாக மறுத்தவளையே இடுங்கிய கண்களால் ஏறிட்டவன், "ஏன்.. பயமா? நான் என்ன உன்னைக் கடிச்சா திங்கப்போறேன்... ஹார்ஸ் ரைடிங்தானே?" ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.



"அதில்லை..எனக்கு இண்ட்ரெஸ்ட் இல்லை!"

மெல்லிய குரலில் அவள் மறுக்க, "சிவி அக்கா! ஏன் பொய் சொல்றே? அன்னிக்கு அங்கிள் ஹார்ஸ் ரைடிங் போனப்ப நீ என்ன சொன்னே? உனக்கும் "ஹார்ஸ் ரைடிங்" கத்துக்க ஆசைன்னுதானே?" உண்மையைப் போட்டு உடைத்துவிட்டான் சுஜய்!

"ஏன் சிவி! மாப்பிள்ளைகிட்ட தானே கத்துக்கப் போறே.. ஆசைப்பட்டா செஞ்சிடணும்" பாமாதான் பரிந்து வந்தார்.

தயக்கத்துடன் 'சரி'யென்று தலையசைத்தவளை நோக்கியவனுக்குள், மௌனச் சிரிப்பு, மையம் கொள்வதாய்!

அவனிடம் இரு ஜாதிக் குதிரைகள் இருந்தன.

ஒன்று அவனுடைய சொந்த உபயோகத்திற்கு என்று அவன் மட்டுமே பயன்படுத்தும் கருப்புக் குதிரை. அதற்கு "ஹேடன்" என்று பெயர்!

இன்னொரு வெள்ளைக் குதிரை தான் 'ஹேரி!' அந்தக் குதிரையில் தான் இருவருக்குமே பயிற்சி தருவதாகக் கூறியிருந்தான்.

அந்த வாரக் கடைசியிலேயே சுஜய் வந்துவிட, "ஹேரி"யின் மேல் அவனை ஏற்றி, முதலில் கற்றுக் கொடுத்தான் அவன்.

பிறகு அவனையும் அழைத்தவன், சிவியை குதிரை மேல் லாவகமாக ஏற்றி விட்டான்.

முதன் முதலாக ஒரு ஆணின் தொடுகை அவளுள் சிறு சலனத்தை ஏற்படுத்த, தர்மசங்கடத்துடன் அமர்ந்திருந்தாள் அவள்.

மெதுவாக, எப்படி அமர்வது.. எப்படி குதிரையை செலுத்துவது என்று கற்றுத் தந்தவன், லகானைப்

பிடித்தபடி மெதுவாக 'ஹேரி'யை நடக்க விட்டுக் கூடவே நடந்து வந்தான்.

முதல் நாள் பயந்தாலும், விரைவிலேயே கற்றுக் கொண்டு விட்டாள் அவள்.

தினமும், மாலையில் பின்புற லானிலேயே அவன் பழக்கி விட, இப்போது தனியாக ஓட்டத் துவங்கி யிருந்தாள்.

அன்று, வெளியில் சென்று வரலாமென்று கூறி அவளை குதிரை மேல் ஏற்றி விட்டவன், தானும் தாவி ஏறிப் பின்னால் அமர்ந்தபோது, விதிர்த்துப் போய் விட் டாள் அவள்.

''இல்லை! நான் மட்டும் போறேன். நீங்க எதுக்கு...?'' மேலே தொடர முடியாமல் தடுமாறினாள்.

''சிவாத்மிகா! இப்ப நான் உன்னோட கோச்... அவ் வளவுதான்! அதுக்கு மேல எந்த எண்ணமும் எனக்குக் கிடையாது... மைண்ட் இட்!''

அவன் குரலில் கடும் சீற்றம் தெரிய, அவளால்தான் அவனுடைய அருகாமையைத் தாங்க இயலாது போயிற்று!

அவளைச் சுற்றி வலிமையுடன் நீண்ட கரங்களையும், அது தனக்குள் ஏற்படுத்திய பாதிப்பையும், அவளால் அன்றிரவு வரை மறக்க முடியவில்லை.

முதன்முதலில் ஒரு ஆணின் நெருக்கமான தொடு கைக்குள் சிறைப்பட்டிருந்தவளுக்குள்.. தொட்டாற் சுருங்கியாய் பல மாற்றங்கள்!

சுழலில் சிக்கிய படகாய் இதயம் துடிக்க, தன் உணர்வு களின் ஊஞ்சலாட்டத்தை அவளாலேயே கட்டுப்படுத்த முடியவில்லை.



மறுநாள், அவனுடன் கிளம்பும் போதே, தயக்கமாய்!

ஆனால், அவளுடைய உணர்வுகளைப் புரிந்தவன் போல, அன்று அவளை ஓட்டவிட்டு, ஹேடனில் ஏறிப் பின் தொடர்ந்தான்.

அவள், எந்த விதத் தடங்கலுமின்றி இயல்பாக, ஓட்டிவிட்டுத் திரும்பியபோது, ''வெல்டன் சிவாத்மிகா! 'ஹேரி' இப்ப உனக்கு ஒரு பெட் டாக் மாதிரி ஆயிட்டான் இல்லை!'' என்றபடி ஹேரியை வாஞ்சையுடன் வருடிக் கொடுத்தான்.

'ஹேரி'யும், இப்போதெல்லாம் அவளைக் கண்டதும் காலை சிறிது உயர்த்திக் கனைத்து தன் வரவேற்பையும் அன்பையும் தெரிவிக்க ஆரம்பித்திருந்தது.

''ஹார்ஸ் ரைடிங்'' என்பது மனதிற்கு எவ்வளவு உற்சாகம் தருகின்ற விஷயம் என்பதை சமீபகாலமாக உணரத் துவங்கியிருந்தாள் அவள்.

* * *

ஒருநாள், ''பெண்கள்னா தைரியமா இருக்கணும்! ஆனா, மல்லிகா மாதிரி வேற மாதிரிப் போற துணிச்சல் மட்டும் இருக்கக் கூடாது.''

''இனிமே நீ என்னை எதிர்பார்க்க வேண்டாம்! தனியாவே போகலாம்! 'ஹேரி' ரொம்ப சாப்ட்! ஹேடன் மாதிரி முரட்டுக் குதிரை இல்லை. இவனை ஹேண்டில் பண்றது ரொம்ப ஈஸி!'' சிறுமுறுவலுடன் முடித்தான்.

''தேங்க்யூ! என்னோட பால்ய கால விருப்பத்துல ஒண்ணு இது! அதை நிறைவேத்தி வச்சதுக்கு ரொம்ப தேங்க்ஸ்!''

நன்றியுடன் மகிழ்ச்சியும் கலவையாய்த் தெரிந்தன அவள் குரலில்!

மின்மினிகள் சிதறுவதைப் போல், புன்னகை சிந்தின.. அவள் இதழ்கள்.

''ஓ.. வெல்கம்!'' என்றவன் ஒரு சிறிய தலையசைப்புடன் உள்ளே சென்றான்.

உடனே ஏனோ சுந்தரின் ஞாபகங்கள்தான் அவளுள் அணிவகுத்தன.

ஒருமுறை, நண்பர்கள் அனைவருமாக பீச்சிற்கு சென்றிருந்தனர்.

அவள் 'ஹார்ஸ் ரைடிங்' செல்ல ஆசைப்பட, உடனே தடுத்தான் அவன்.

''சிவி! எனக்குப் பிடிக்காது! பெண்களுக்குன்னு சில பண்பாடு இருக்கு! ஆம்பிளை மாதிரி குதிரை ஓட்டறது... கார் ரேஸ் போறது... இதெல்லாம் எனக்குப் பிடிக்காது.''

''ஏன்...?''

''பொண்ணுங்கன்னா மென்மையா இருக்கணும்! ஆண்கள்தான் வீரமா, அட்வென்ச்சரஸா இருக்கணும், சாகசமெல்லாம் செய்யணும்! நீ ஒரு பூ மாதிரி மென்மையா இருக்கணும் சிவி.''

அவன் கூறிய வார்த்தைகள் நினைவில் மிதந்தன.

## 34



மறுநாளே, கரஸ்பாண்டன்ஸில் எம்.எஸ்சி கணிதம் பயில்வதற்கான அப்ளிகேஷனுடன் அவளைத் தேடி வந்தான் அவன்.

''இந்தா! இது நீ மேல எம்.எஸ்சி மேத்ஸ் 'கரெஸ்'லே படிக்கிறதுக்காக நான் வாங்கிட்டு வந்த அப்ளிகேஷன்!



ஃபில் அப் பண்ணிடு! நாளைக்கே அனுப்பிடலாம்'' என்றான் இயல்பாக.

அவளுக்குத்தான், என்ன பேசுவதென்றே தெரியவில்லை!

தனக்காக யோசித்து அவன் செய்கின்ற ஒவ்வொரு செயலும், அவளைப் பெரிதும் பலவீனப்படுத்துவதாய்!

இதை எதிர்பார்க்காததால், விழிகள் கசிய, ''தேங்க்யூ'' என்றபடி அதைப் பெற்றுக் கொண்டாள்.

''வெல்கம்!''

''இதை நான் எதிர்பார்க்கலை.''

மெதுவாக முணுமுணுத்தவளிடம், ''இங்கேருந்து நீ போனப்புறம், உனக்குன்னு ஒரு நல்ல எதிர்காலம் வேணும்னு தோணுச்சி! அது படிப்பா மட்டும்தான் இருக்க முடியும்னு நான் நினைச்சேன்! அதான்!'' கூறிவிட்டு விலகிச் சென்றான்.

'இங்கிருந்து போவதா? எப்படிப் போவேன்... இந்த அருமையான கூடு... பாசம் மிக்க மனிதர்கள்.. ஜென்னி.. எல்லாவற்றிற்கும் மேல் விக்டர். அந்த மனிதனைப் பற்றி என்னுள் நிறைந்திருக்கும் அற்புதப் பதிவுகள், எல்லோரையும் விட்டு எப்படிப் பிரிவேன்!'

பிரிவுத் துயர் இப்போதே துரத்த, ஆயிரம் தேனிக்கள் ஒன்றாக சூழ்ந்து கொட்டியதைப் போன்ற ஒரு வித வலி, அவளைச் சூழ்வதாய்!

இது எதையுமே அறியாமல், ஸ்டடி ரூமில் அமர்ந்து எஸ்டேட் அக்கௌண்ட்சை சரி பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

* * *

அன்றிரவு, யோசித்த போதுதான், சுந்தருக்கும் அவனுக்குமுள்ள மலையளவு வித்தியாசம் புரிவதாய்!

குழந்தைகளுடன் குழந்தையாய் விளையாடுவதும், வேலை நேரத்தில் கம்பீரமாய் மாறிவிடுவதும் என்று விக்டரின் பரிணாமங்கள் பெரும் பிரமிப்பை ஏற்படுத்தின.

ஜென்னியை ஒரு தந்தையின் ஸ்தானத்தில் பொறுமையாய் கவனிப்பது... சுஜய் அருணுக்கு இணையாக விளையாடுவது... அவளுக்கு ஹார்ஸ் ரைடிங் பிடிக்குமென்றதுமே எந்தவிதமான ஆட்சேபணையுமின்றி உற்சாகத்துடன் கற்றுத் தந்தது.. மனிதநேயம் மிகுந்தவனாய் பாட்டியின் இழப்பில் நடந்து கொண்டது... இப்போது மேலே படிப்பதற்கும், அவளுடைய வளமையான எதிர்காலத்துக்கும் வழிவகை செய்தது.. எல்லாமே அவளுள் பெரும் சிலிர்ப்பை ஏற்படுத்தின.

மனம் எங்கோ தாவியது!

சுந்தர்... தன் காரியம் மட்டுமே முக்கியம் என்றிருப்பவன்!

அவன், எப்போதுமே குழந்தைகளிடம் பொறுமையின்றி சிடுசிடுப்பதை அவள் அறிந்திருக்கிறாள்.

அவர்களுடன் விளையாடலாம் என்றால், 'நீ என்ன சின்னக் குழந்தையா..?' என அதட்டுவான்.

ஒருநாள், அவள் மேலே படிக்க வேண்டுமென்ற தன் விருப்பத்தை தெரிவித்த போது கூட, உடனே சுந்தர் அவளை அடக்கியது, இன்று நடந்ததைப்போல் ஞாபகம் வந்தது.

"சிவி! எனக்கு என் மனைவி வீட்டில இருக்கணும்...!"



"பெண்கள் வேலைக்கு போறது.. "கேரீர் வுமன்னு" விமன்ஸ் லிப் பேசறது.. சாதனைப் பெண்மணிகளாகறது.. இதிலெல்லாம் சுத்தமா உடன்பாடு கிடையாது!"

"அதனால உன்னோட மேல் படிப்பு ஆசையை இன்னியோட மூட்டை கட்டி வச்சிடு!" உறுதியாகக் கூறியதும் நினைவடுக்குகளில் கசிந்தன.

மலைச்சாரலில் நிறையும் பனிச்சாரலாய்... மனதைப் பெரும் மாறுதல் இதமாய் நனைக்க, சிப்பிக்குள் முத்தைப் போல அதை இதயத்துக்குள் பாதுகாக்க ஆரம்பித்தாள் அவள்.

## 35

நாட்கள்.. காற்றின் வேகத்துடன் கடக்க, இப்போதெல்லாம் அவளுக்கும், விக்டருக்குமிடையே இனிய நட்புணர்வு அழுத்தமாய் பின்னப்பட்டிருந்தது.

காலையில் எழுந்து வாக்கிங் செல்பவர்கள், பிறகு சாப்பாட்டு மேஜையை ஒரு அரட்டை அரங்கமாகவே மாற்றி விடுவது வழக்கமாயிற்று!

கலைத்துறை, அரசியல், சினிமா, மலையக மக்கள் என்று ஏதோ ஒரு டாபிக் கிடைத்துவிடும்.

அவன் எஸ்டேட் அலுவலகம் கிளம்பியவுடன் ஜென்னியும், சமையலும் தான் அவளுக்குத் துணை!

மதியம், அவன் வரவையும், தன்னுடைய சமையலின் ருசியைப் பற்றி அவன் கூறப்போகும் பாராட்டையும் எதிர்பார்த்து, ஆவலுடன் காத்திருப்பாள்.

அவன் வந்ததும் சாப்பாட்டு மேஜையே களை கட்டி விடும்.

சாப்பாடு நன்றாக இருந்தால், மனம் திறந்து பாராட்டுபவன், உப்பு, காரம் தூக்கல் என்றால், அதையும் குறை கூறிவிடுவான்.

மதியம், தூக்கம் வராத நேரங்களில் பாடங்களைப் படிப்பாள் அவள்.

மாலையில், இருவருமாக ஷட்டில், செஸ், கேரம் என்று எதையாவது விளையாடுவார்கள்.

பிறகு அவள் படிக்கச் செல்ல, அவன், தன் வேலை களில் ஆழ்ந்து விடுவான்.

இரவு சாப்பாடு ஒன்பது மணிக்கு முடிய, பிறகு படுத் தால் காலையில் ரொட்டீனாகி விடும்!

இப்போதெல்லாம், வாரம் ஒரு முறையாவது இரு வருமாக குதிரைகளில் சென்று மலையக மக்களின் நலம் விசாரிப்பதை வழக்கமாகிக் கொண்டிருந்தனர்.

அவனில்லாத நிமிடங்கள்... விலகிச் சென்றிருந்த நேரங்கள், சிவியைத் தவிப்புறச் செய்வதாய்!

அவன் வரும் வழியை எதிர்நோக்கி, இப்போதெல்லாம் ஒரு வித இனம் புரியாத அலைப்புறுதலுடன் காத் திருக்கத் துவங்கினாள் அவள்.

சுந்தரின் முகமூடி கிழிந்ததும்... விக்டரின் விசுவரூபப் பரிணாமங்கள் உணரப்பட்டதும், அவளுடைய மாற்றத் திற்கு முக்கிய காரணங்களாய் அமைந்து விட்டன.

ஆனால், அவனோ எந்த வித ஒட்டுதலும் விகல் பமுமின்றி, வெகு இயல்பாக அவளிடம் பழகி வந்தான்.

* * *



விக்டர், ஒருமுறை, லயன்ஸ் கிளப் விழாவிற்கு அவளையும் அழைத்துச் சென்றிருந்தான்.

விழா முடிந்து எல்லோரும் சாப்பிடச் செல்லும்போது, அவனை ஒரு கரம் தடுத்து நிறுத்தியது.

திரும்பினால், மேல்நாட்டு கலாச்சாரம் தோற்று விடும்போல் நவீன உடையணிந்து ஒரு அழகிய பெண் நின்றிருந்தாள்.

''ஹலோ! ஐயம் ஜோத்ஸ்னா! உங்களுக்கு பக்கத்து எஸ்டேட்தான்!'' என்றபோது, முன்பே ஒருமுறை அவளைப் பார்த்த நினைவு வருவதாய்!

மெல்லிய குரலில் ''ஹாய்..'' என்றபோது, ''ம்! எனக்கு உங்க மேல ரொம்பக் கோபம்!'' என்றாள் அவள் சுட்டு விரலால் எச்சரித்தபடி!

ஒன்றும் புரியாமல் இவன் நிமிர, ''யு ஆர் ஸோ லக்கி! இந்த விசுவாமித்திரரை எத்தனையோ மேனகைகள் அசைச்சுப் பார்த்தாங்க!

''என்னடா! நம்ப புராணக் கதையெல்லாம் சொல்றா ளேன்னு பாக்கறீங்களா? நானும் நிறைய தமிழ் சினிமா பாத்திருக்கேனே! ஆனா, உங்க தலைவர் அசரலையே! கல்யாணமே வேண்டாம்.. பெண்களே பிடிக்காதுன்னு ஒரு பெரிய வேலியைத் தன்னை சுத்திப்போட்டுட்டு ஸ்ட்ரிக்டா இருந்தாரு!

''அப்படி என்னதான் உங்ககிட்டே பாத்தாரோ.. அப்படியே மயங்கிப் போய் தன் வாழ்க்கையையே உங்ககிட்டே ஒப்படைச்சிட்டாராமே! கேள்விப்பட்டேன்!

"நேத்துதான் ஊரிலிருந்து வந்தேன்... எனிவே கங்கிராட்ஸ்!" பெரும் வருத்தத்துடன் வாழ்த்தினாள்.

பிறகு மெதுவாகக் குனிந்து, "நான் கூட விக்டர் மேல பயங்கரமா க்ரேஸா இருந்தேன் ஒரு காலத்துல! ஆனா, அவரை நெருங்கக் கூட முடியலை!

"தன்னை சுத்தி ஒரு நெருப்பு வளையத்தோட வாழற ஆண்களை நான் பாத்ததேயில்லை!

"பெரும்பாலானவங்க, பெண்களை.. அதுவும் அழகான பெண்களைப் பாத்தா அவ்வளவுதான்... பயலாஜிகல் அட்ராக்ஷனோ என்னவோ தெரியலை! ரொம்ப ஈர்க்கப்பட்டுடுவாங்க!

"ஆனா! நான் சந்திச்ச ஆண்கள்லே ரொம்ப வித்தியாசமான, கம்பீரமான ஒருத்தர் விக்டர்தான்!

"ஐ அடோர் ஹிம்.. அட்மையர் ஹிம்.. அஃப் கோர்ஸ் ஐ லைக் ஹிம்!

"ம்... ம்... அவர்தான் மறுத்திட்டாரு... நேராக் கேட்டுக் கூட, என் வாழ்க்கையில ஒரு பெண்ணுக்கு இடமே இல்லைன்னுட்டாரு!

"உடனே, கோபமாக் கிளம்பி மேல் படிப்புக்கு ஃபாரின் போயிட்டேன்! இம்மெச்சூர்டு டெசிஷன்!"

"அங்கே போனப்புறம்தான் தெரிஞ்சுது லைஃப்லே சாதிக்க எவ்வளவோ இருக்குன்னு! பயந்துடாதீங்க! இப்ப எனக்கு விக்டர் ஒரு நல்ல ஃப்ரெண்ட் மட்டும்தான்!

"ஆனா, இப்படி ஒரு கேரக்டரை எங்கேருந்தோ வந்து தட்டிட்டுப் போயிட்டீங்களே, அதான் கொஞ்சம் பொறாமையோட பேசிட்டேன்.. ஜஸ்ட் ஃபார் ஃபன்!"



இயல்பாக தோளைக் குலுக்கியபடி வெளிப்படையாக அவள் பேசிய விதம், சிவியைப் பெரிதும் ஈர்ப்பதாய்!

ஏனோ, அவளை சீண்ட வேண்டும் போல்!

சிறு குறும்புடன், "நௌ ஹி இஸ் மைன்! இப்பவும் ட்ரை பண்ணிடாதீங்க... அப்புறம் நான் பெரிய அவதாரம் எடுத்துருவேன்.. விட்டுத் தர மாட்டேன்... பீ கேர்ஃபுல்!" போலியாக ஒற்றை விரலால் எச்சரித்தாள்.

அப்போது அங்கு வந்த விக்டர், "ஹாய் ஜோத்ஸ்னா! என்ன.. என் ஒய்ஃப் உங்களை என்னவோ மிரட்டிட்டு இருக்கா" கூர்மையுடன் விசாரித்தான்.

"ஹாய் விக்டர்! ஹௌ ஆர் யூ?"

"ம்.. ஃபைன் ஜோத்ஸ்னா!"

"எனக்கு உங்க மேல முன்னாடி இருந்த 'க்ரஷ்'ஷை சொன்னேன்.

"உடனே உங்க ஒய்ஃப் என்னை மிரட்டறாங்க! இப்ப விக்டர் எனக்கு உரிமையானவர்.. அவரை யாருக்காகவும் விட்டுத்தரமாட்டேன்... ட்ரை பண்ணாதீங்கன்னு! அடிச்சிருவாங்க போலருக்கு" கூறிவிட்டு சப்தமாய் நகைத்தாள்.

"ம்... ம்..." என்றபடி சிவியையே ஒரு கணம் ஆழ்ந்து ஊடுருவியவன், "அவ ரொம்ப பொஸஸிவ்! நான் யாராவது பொண்ணுங்ககிட்டே பேசினாக் கூட அவளுக்குப் பிடிக்காது! அப்படித்தானே சிமி?" உலர்ந்த குரலில் கேட்டான்.

சட்டென்று நிமிர்ந்தவளுக்குள், 'சிமி' என்ற அழைப்பு சிலிர்ப்பாய் ஊடுருவுவதாய்!

முதன் முறையாக, ஒரு மலரைத் தீண்டும் வெண் பனிக் காற்றாய்!

அவனுடைய பார்வை, அவள் பதிலுக்காகக் காத் திருப்பது போல் தெரிந்தாலும், முகம் உணர்ச்சியைத் தொலைத்திருந்தது.

உடனே 'ஆமாம்' என்பது போல ஒப்புதலாகத் தலை யசைத்து சிரித்தாள் அவள்.

## 36



பிறகு, சிறிது நேரம் பேசிக் கொண் டிருந்துவிட்டு ஜோத்ஸ்னா விடை பெற்றாள்.

உடனே அவளிடம் குனிந்தவன், "தேங்க்யூ சிவாத் மிகா! என்னை விட்டுக் குடுக்காம பேசி நடிச்சதுக்கு! இப்படித்தான் இருக்கணும்!"

"இப்பல்லாம் என்னை மாதிரியே நீயும் நல்லா நடிக்கக் கத்துக்கிட்டே.. வெல்டன்! நான் எப்படி நடிச்சேன்னு சொல்ல மாட்டியா?" அடிக்குரலில் கேட்டான்.

மனம் விதிர்த்துப் போனது.

"நான் நடிக்கவில்லை... உன்னை விட்டுத் தர முடியாதென்று, என் ஆழ்மனதிலிருந்ததைத் தான் கூறினேன்..." என்று கூற வேண்டும் போல் ஒரு பரி தவிப்பு!

முதன்முதலாக, ஒரு மாபெரும் உண்மையை உணர்ந்த சிலிர்ப்பும், குளிர்ச்சியும் அவளுள் பரவின.



தான், அவனை விரும்ப ஆரம்பித்து விட்டதை உணர்ந்த முதல் கணம், கோடி மலர்கள் மேலே சொரிந்த ஒரு உணர்வு!

இதயத்துக்குள் ஏதோ ஒன்று புதிதாய் புஷ்பிக்க, அந்த உணர்வை விவரிக்க வார்த்தைகளின்றிப் போயின.

"என்ன? நான் கேட்டதுக்கு பதிலே காணோம்! நீ ரொம்பத் தேறிட்டே! நிஜமான மனைவி மாதிரி கௌண்ட்டர் எல்லாம் குடுத்திருக்கே! நான் எப்படி நடிச்சேன்... சொல்லு!"

அவன் குரல் அவளைக் கலைத்தது.. அவளுடைய நேச நினைவுகளும் உடனே கலைந்தன.

மெதுவாகத் தலையசைத்து ஆமோதித்தவளுக்கு, மூச்சு முட்டுவதைப் போல் ஒரு உணர்வு!

நேச இழைகளால் கோர்க்கப்பட்டு, அன்பெனும் தறியில் நெய்யப்படுவதே வாழ்க்கை என்பதை அவன் என்றாவது புரிந்து கொள்வனாவென்ற தவிப்பு அவ ளிடம்!

"சிமி..." என்ற அவனுடைய அழைப்பு மழைச்சார லாய்!

"சரி.. வா.. சாப்பிடலாம்!" என்று ஆசைக் கணவன் வேடத்துடன் அவளை விக்டர் அழைத்து செல்ல, இதயம் மெல்ல சுருங்கியது.

"இதுவே, உண்மையாக இருந்தால்..." ஏக்கம் சுமந்த மனதுடன் அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

இப்போதும், அவன் பெண்கள் என்றாலே பிடிக்காத ரிஷ்யசிருங்கராகவே இருப்பது புரிவதாய்!

இன்று.. எதற்காகவும் அவனை விட்டுத் தர முடியா தென்பது.. தெள்ளத் தெளிவாய்ப் புரிய, சிலிர்த்தது.

சுற்றிலும், பல வண்ணப் பட்டாம்பூச்சிகள் கூட்டமாய் தன்னைத் தீண்டிச் சென்ற உணர்வு!

''மனதில் மீண்டும் மீண்டும் காதல் மலருமா? ஒரு முறையுடன் வறண்டு விட இதயம் பாலைவன மில்லையே!'' குழப்பமாய் பல எண்ணங்கள் உலா வரத் துவங்க, விக்டரின் கம்பீரக் குரல் அவளைக் கலைத்தது.

''என்ன? தட்டை கையில வச்சிட்டு அதையே வேடிக்கை பாத்திட்டிருக்கே! சாப்பிடற ஐடியாவே இல்லையா?''

''சாப்பாட்டை எடுத்துட்டு வந்துதான் தரமுடியும்... ஊட்டியெல்லாம் விட முடியாது... என்னதான் ஆசைக் கணவன் வேஷத்துல நடிச்சாலும்!''

முணுமுணுப்பாய் காதோரம் வருடிய அவனுடைய வார்த்தைகள்... குத்தீட்டிகளாய் உள்ளே நுழைய, விதிர்த்து நிமிர்ந்தாள்.

அங்கு, கேலியாக சிரித்த அவனுடைய விழிகள்.. அவளுடைய இதயப் பூட்டை உடைக்கும் சாவியாய்!

நெஞ்ச ஆற்றில், மௌனக் கரை உடைத்து வெளியே வந்து விடுவோம் என்று, நேச அலைகள் பயமுறுத்தின.

சட்டென்று விலகிச் சென்று தனிமையான ஒரு இடத்தில் அமர்ந்தாள் அவள்.

இதயம் மௌனமாய் மறுகியது!

நினைவலைகள் நெருப்பில் குளித்தன.



அந்தக் குளிரிலும், தகிப்பாய் ஒருவித வெப்பம் பரவ, உடல் கதகதப்பாய்!

அவளையே தொடர்ந்த விக்டரின் பார்வையில் விசித்திரமான ஒரு இறுக்க உணர்வு!

# 37

ஒரு நாள், மாலையில் விக்டரைத் தேடி யாரோ வந்திருப்பதாக, ஜோசப் தாத்தா அவளிடம் வந்து கூறினார்.

விக்டர், எஸ்டேட் அலுவலகத் திற்குச் சென்றிருந்தான்.

வாசலுக்கு சென்றபோது, ஒரு இளைஞன் நின்றிருக்க, விசாரித்தால் விக்டரின் நண்பன் என்று தெரிந்தது.

அவனை உள்ளே அழைத்துச் சென்று வரவேற்பறை யில் அமர வைத்தாள் சிவி!

''பை தி பை ஐயம் கார்த்திக்! விக்டரோட ஃப்ரெண்ட்! ஸ்டேட்ஸிலேருந்து போன வாரம்தான் வந்தேன்! உங்க கல்யாணம் பத்தி அப்பதான் கேள்விப்பட்டேன்... கங்கிராட்ஸ்!'' கை குலுக்கி வாழ்த்தினான்.

''தேங்க்யூ! ஒரு நிமிஷம் இருங்க. அவருக்கு போன் பண்ணி சொல்லிடறேன்...'' என்றபடி விக்டருக்கு போன் செய்தாள்.

அவன் உடனே வருவதாகக் கூற, கேக்கும், டிபனும் எடுத்து வந்து கொடுத்து உபசரித்தபடி பேசிக் கொண் டிருந்தாள்.

அவனும், விக்டரும், ஜென்னியின் தந்தை முரளியும், நெருங்கிய நண்பர்களென்று கூறினான் அவன்.

''நானும் முரளியும், ஒரு செட்! முரளியாலதான் எனக்கு விக்டர் நண்பனாக் கிடைச்சான்.. ப்ச்.. முரளியோட கல்யாணம் எனக்கு தெரியாது.. அவன் இறந்தது மட்டும் தெரியும்! அப்ப என்னால வரமுடியலை.''

''அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி நான் ஃபாரின் போனப்புறம் டச்சே விட்டுப் போச்சு! இப்பதான் வரேன்!''

''வந்தவுடனே பல விஷயங்கள் கேள்விப்பட்டேன், உடனே விக்டரைப் பார்க்கணும்னு தோணிச்சி!'' ஒரு பெருமூச்சுடன் முடித்தான்.

''டிபன் சாப்பிடுங்க! அவர் இப்ப வந்திடுவாரு.'' அவள் கூறும்போதே, ஆயாம்மா ஜென்னியுடன் அங்கு வந்தார்.

அவளிடம் தாவிய குழந்தையையே ஒரு கணம் கவலையுடன் நோக்கியவன், ''இவதான் முரளியோட குழந்தையா?'' என்றபடி தூக்கிக் கொண்டான்.

அவன் பாசத்துடன் குழந்தையை வருடி முத்தமிடும் போதே விக்டர் வந்துவிட்டான்.

''கார்த்திக்! வாட் எ ப்ளசண்ட் சர்ப்ரைஸ்!'' என்றபடி நண்பனை அணைத்துக் கொண்டான்.

''எவ்வளவு நாளாச்சு! எங்களையெல்லாம் மறந்திட்டே இல்லை?''

''இல்லை விக்டர்.. மறக்கலை! ஆனா, உங்களோட 'டச்' வெச்சிருந்தேன்னா இந்தப் பெரிய இழப்புகளை.. ப்ரச்னைகளைத் தவிர்த்திருக்கலாம்!''



குற்றவுணர்ச்சி மிகுதியாகத் தெரிந்தது அவன் குரலில்!

''நீ என்ன சொல்றே கார்த்திக்?'' புரியாமல் கேட்டான் விக்டர்.

''நான் ஸ்டேட்ஸில இருந்தப்ப தான், முரளி இறந்தது ஒரு நண்பன் மூலமா தெரிய வந்தது... வருத்தம் தெரிவிச்சி அங்கிளுக்கு ஒரு லெட்டர் மட்டும் அனுப்பினேன்.''

''ஆனா இங்கே வந்தப்புறம் தான் தெரிஞ்சுது எல்லா விஷயமும்! நான் தப்புப் பண்ணிட்டேன் விக்டர்!'' முகத்தை மூடிக் கொண்டு குமுறினான்.

''ஏய்... என்னாச்சு? ஏன் இப்படி வருத்தப்படறே?'' என்றபடித் தன் ஸ்டடி ரூமிற்கு அவனை அழைத்துச் சென்றான்.

சிவி, இங்கிதத்துடன் ஜென்னியைத் தூக்கிக் கொண்டு தோட்டத்திற்கு சென்று விளையாட ஆரம்பித்தாள்.

## 38

அறைக்குள் சென்ற பிறகு, கார்த்திக்கின் உணர்வுகள் மடை திறந்த வெள்ளம் போலாயின.

''விக்டர்! இந்தக் குழந்தையைப் பாத்தா ரொம்ப உறுத்துதுடா! முரளிக்கு எய்ட்ஸ் இருந்தது முன்னாடியே எனக்குத் தெரியும்!''

அவன் நிறுத்தியவுடன், அதிர்ச்சியுடன் நிமிர்ந்தான் விக்டர்.

"நீ என்ன சொல்றே கார்த்திக்?" விழிகள் கூர்மையுடன் இடுங்கின.

அதற்குள் கதவு மெலிதாகத் தட்டப்பட்டு, டிபன் காபியுடன் வந்தாள் சிவி!

அவள் அதை வைத்து விட்டு கதவை மூடிச் செல்ல, கார்த்திக் தொடர்ந்தான்.

"விக்டர்! நான் ஃபாரின் போறதுக்கு முன்னாடி எனக்கு இரண்யா ஆபரேஷன் நடந்தது தெரியுமா? அப்ப... ஃப்ரெண்ட்ஸை எல்லாம் ரத்தம் குடுக்கக் கூப்பிட்டிருந்தேன்!"

"அப்போ, நீ பிலானியில படிச்சிட்டிருந்தே. எங்களுக்கு ஜூனியராச்சே நீ!"

"முரளியும் வந்தான்! அவனோட ரத்தத்தை பரிசோதனை செஞ்சப்ப தான், அவனுக்கு எய்ட்ஸ் இருக்கிறது தெரிய வந்திருக்கு!"

"டாக்டர் என்கிட்டே ஆபரேஷன் முடிஞ்சப்புறம் தான் சொன்னாரு! முரளியை மட்டும் ரத்தம் எடுத்துக்காம திருப்பி அனுப்பிட்டதா சொல்லி வருத்தப்பட்டாரு!"

"அப்போதான் அவன் ரொம்ப நல்லவனாச்சே எந்த தப்புக்கும் போகாதவனாச்சேன்னு கவலையா டாக்டர் கிட்டே விசாரிச்சேன்! என்னால முடியலை."

"அவரும் அதைத்தான் ஜாடைமாடையா முரளிகிட்ட விசாரிச்சிருக்காரு! காலேஜ் டைமிலே ஒரு தடவை



அவனுக்கு ஆக்சிடெண்ட் நடந்து ப்ளட் ஏத்தினதா அவன் சொல்லியிருக்கான்."

"அப்பதான் தப்பு நடந்திருக்கணும்! பெரிய ஹாஸ்பிடல்னாலும் சரியா பரிசோதிக்கப்படாத ரத்தம் செலுத்தப்பட்டதால தான் இப்படி வந்திருக்கணும்னு வருத்தப்பட்டாரு."

"முரளிக்கு இது எதுவுமே தெரியாது பாவம்! அதை அவன்கிட்டே சொல்ற பொறுப்பை என்கிட்டே அவர் ஒப்படைச்சாரு!"

"நான் ரொம்பத் தயங்கினேன்! பயந்தேன். ஊருக்கு கிளம்பறதுக்கு முன்னாடி முரளியோட அம்மாகிட்டே மட்டும் சொன்னேன்!"

"அவங்க பாத்துப்பாங்கன்ற நம்பிக்கையில ஸ்டேட்ஸ் போயிட்டேன்... ஆனா மறுநாளே அவங்கம்மா ஹார்ட் அட்டாக்குல இறந்த உண்மை எனக்குத் தெரியாது!"

"இப்போ, வந்தவுடனே போய் ராஜேந்திரன் அங்கிளைப் பாத்தப்பதான், எல்லா உண்மையும் தெரிஞ்சது."

"ராஜேந்திரன் அங்கிள் வேற மாதிரி சொன்னாரு! யாருக்குமே உண்மை தெரியாததாலே, தன் மருமகளை சந்தேகப்பட்டுட்டதாவும், முரளியும் மனைவி மேல இருந்த வெறுப்புல தற்கொலை செஞ்சிக்கிட்டதாவும் சொன்னப்ப, நான் ஆடிப்போயிட்டேன்!"

"அப்புறம், நான் தான் எல்லா உண்மையும் சொன்னேன்...

"அவருக்குப் பெரிய அதிர்ச்சி! உடைஞ்சி போயிட்டாரு!

"என்கிட்டே நீ ஒரு வார்த்தை சொல்லியிருந்தா, என் மனைவியையும் காப்பாத்தியிருக்கலாம்.. முரளிக்கும் ட்ரீட்மெண்ட் குடுத்திருக்கலாம்.. அந்தப் பொண்ணு மல்லிகாவோட வாழ்க்கையும் அழியாமப் பாத்திருக்கலாமேன்னு அழுதாரு!"

"எல்லாமே நான் பண்ணின தப்போன்னு ரொம்ப உறுத்த ஆரம்பிச்சது! உங்க யார்கிட்டயாவது நான் உண்மையை சொல்லியிருக்கலாம்!"

"அவங்கம்மா கிட்டதான் சொல்லிட்டமேன்னு நான் போயிட்டேன்! இது மாதிரி நடக்கும்னு யாருக்குத் தெரியும்! கடவுளே!" ஓய்ந்து போய் முடித்தான்.

"ப்ச்! நான் கூட அந்தப் பொண்ணைத்தான் தப்பா நினைச்சேன்... நான் என்ன... எல்லாருமே நினைச்சோம்.. பாவம் அந்தப் பொண்ணு!"

ஒரு பெருமூச்சுடன் ஓய்ந்து அமர்ந்தவன், உடனே திரும்பினான்.

"அங்கிள், வேற என்ன சொன்னாரு?" கார்த்திக்கிடம் கேட்டான்.

"அவரோட பேத்தி... வாரிசு, உன்கிட்டே வளர்றதா சொன்னாரு! அடுத்த வாரம் அவளுக்கு ஃபர்ஸ்ட் பர்த்டே வருதாமே! அதுக்கு வரேன்னாரு!"

"அதுக்கப்புறம் அவளைத் தானே வளர்க்கப் போறதாக் கூட சொன்னாரு! உன்கிட்டே பேசறேன்னாரு!"

"நான் போய் முதல்லே எல்லா உண்மையையும் சொல்லிடறேன்... அப்புறமா பேசுங்கன்னு சொன்



னேன்! சாரி விக்டர்!" குற்றவுணர்வில் குறுகிப்போனான் அவன்."

"ஓ! ஜென்னி..." உணர்ச்சி வசப்பட்டவனால் அதற்கு மேல் எதுவுமே பேச முடியவில்லை.

ஒரு தந்தையைப் போல் அவளைப் பரிவும், பாசமுமாக வளர்த்தவனால் இந்தப் பிரிவை எப்படித் தாங்க முடியுமென்ற பெரும் வேதனை ஆட்படுத்துவதாய்!

அவனுடைய உணர்வுகள் கார்த்திக்கிற்குப் புரிந்தன.

பிறகு, பேச்சு திசைமாற, வெகு நேரம் கழித்து இருவரும் வெளியே வந்த போது, சிவி சமையலறையில் இருந்தாள்.

விருந்தாளிக்கென ஸ்பெஷலாக இடியாப்பமும், பணியாரமும் செய்து கொண்டிருந்தாள்.

விக்டர் குளித்து விட்டு உடைமாற்றி வரும் வரை ஜென்னியிடம் விளையாடிக் கொண்டிருந்தான் அவன்.

பிறகு சாப்பிட்டு விட்டு அவன் கிளம்ப, அன்றிரவு அவனை அழைத்தான் விக்டர்.

"உன் கூடக் கொஞ்சம் பேசணும்!" தயக்கத்துடன் அழைத்தான்.

## 39



இருவருமாகத் தோட்டத்திற்குச் சென்று கார்டன் பெஞ்சில் அமர்ந்த போது, இரவுக் கம்பளத்தில் நிலவின் ஒளி, தங்க ஜரிகை இழைகளை நெய்திருந்தது.

சிறு மௌனத்திற்கு பிறகு, பேச ஆரம்பித்தவனது குரல், பெரிதும் கம்மியிருந்தது.

கார்த்திக் தன்னிடம் கூறியதை அப்படியே அவளிடம் பகர்ந்தவன்.. பெரும் வேதனையிலிருப்பது, அவன் குரலிலேயே தெரிவதாய்!

"நாங்க எல்லாருமே மல்லிகாவைத்தான் தப்பா நினைச்சிட்டோம்.. இப்பதான் புரியுது!"

"எங்கேயோ ஒரு ஹாஸ்பிடல்லே தெரியாம நடந்த ஒரு தப்பு, எவ்வளவு ப்ரச்சனைகளுக்கு காரணமாகியிருக்குன்னு நினைக்கும் போதே கஷ்டமா இருக்கு!"

"ப்ச்.. ராஜேந்திரன் அங்கிள், ஜென்னியை அவரோடவே அழைச்சிட்டுப் போய் வளர்க்கிறதா சொல்லியிருக்காராம்!"

"இவளை.. எப்படிப் பிரியறதுன்னும் புரியலை, அவருக்கும் வேற யாருமே இல்லை! நான் மறுக்கவும் முடியாது! இவதான் அவருக்குன்னு இருக்கற ஒரே வாரிசு.. பிடிப்பு எல்லாமே! ஹும்!"

ஒரு பெருமூச்சுடன் முடித்தவனையே பரிவுடன் நோக்கியவளுக்கு, அவனுடைய உணர்வுகள் புரிந்தன.

உடனே, அவனை அணைத்து சமாதானம் செய்ய வேண்டுமென்று நெஞ்சம் விழைந்தது.

'அவனுடைய துக்கங்களை எப்படியாவது குறைத்து விடு ஆண்டவா!' என்ற இறைஞ்சினாள்.

அவனுக்காகப் பெரிதும் பரிதவித்தவளால், ஜென்னியை எப்படிப் பிரியப்போகிறோமென்றும் புரியவில்லை.



பெரும் தவிப்பும், அலைப்புறுதலுமாய் அவள் உறங்கவே வெகுநேரமாயிற்று.

* * *

மறுநாளிலிருந்தே, விக்டரிடமும் ஏதோ ஒரு மாற்றம் தெரிவது போல்!

அமைதியும் பலத்த யோசனையுமாய் ஒதுங்கியே இருந்தான் அவன்.

இரண்டு நாட்கள் கழித்தும், அவனிடம் எந்த மாற்றமும் தெரியாததால், ஜென்னியுடைய முதல் பிறந்த நாளுக்காக எல்லா ஏற்பாடுகளையும் அவளே செய்யத் துவங்கிவிட்டாள்.

பாமாவிடம் பேசி ரகசியமாகவே எல்லாவற்றையும் செய்தாள்.

வருடா வருடம் சுஜயின் பிறந்தநாளைக் கொண்டாடி, அங்குள்ள எஸ்டேட் அதிபர்களை அழைத்து விருந்து கொடுப்பது சிவமுருகனின் வழக்கமென்பது, அவளுக்குத் தெரியும்.

பிறந்த நாளுக்கென, கேக்கும், இனிப்புகளுக்கும், பாமாவும் அவளுமாகச் சேர்ந்துஆர்டர் செய்துவிட்டனர்.

கேடரிங் சர்வீஸுக்கும் சிவமுருகனே ஏற்பாடு செய்துவிட்டார்.

ஹாலில் ஃபங்ஷனை நடத்திவிட்டு, லானில் பஃபே முறையில் உணவைப் பரிமாறலாமென முடிவு செய்தனர்.

ஷாமியானாவுக்கும், நாற்காலிகளுக்கும், ஏஜென்டிடம் கூறிவிட்டனர்.

இடையில் ஒருநாள், தாத்தா வீட்டிற்கு சென்று வருவதாகக் கூறிச் சென்றாள் அவள்.

அன்றே, பிறந்த நாளுக்குத் தேவையான, பலூன், தோரணங்கள், கலர் பேப்பர்கள், ஜென்னிக்கு அழகிய பார்ட்டி உடை, வருகிற குழந்தைகளுக்குத் தேவையான பரிசுப் பொருட்கள், கேம்ஸ் என எல்லாவற்றையும் பாமாவின் உதவியுடன் வாங்கி வந்து தாத்தாவின் வீட்டிலேயே வைத்துவிட்டாள்.


எல்லோரையும் போனில் அழைப்பதென்று முடிவா யிற்று!

கடாட்சத்தையும் போனிலேயே அழைத்து விட்டு, கார்த்திக் அளித்திருந்த தொலைபேசி எண் மூலமாகத் தொடர்பு கொண்டு, அவனையும் அழைத்தாள்.

பிறகு அவனிடமே நம்பர் வாங்கி ராஜேந்திரனிடம் பேசியபோது, அவர் குழந்தையின் பிறந்த நாளுக்கு கட்டாயம் வருவதாகத் தெரிவித்தார்.

எல்லாவற்றையும் விக்டர் அறியாமலே ரகசியமாகச் செய்து முடித்தவள், அவனுக்கு இது ஒரு இனிய சர்ப்ரை ஸாகவே இருக்கு வேண்டுமென எண்ணினாள்.

## 40



பிறந்த நாளுக்கு முதல் நாள், அவளை அழைத்தான் விக்டர்.

"சிவாத்மிகா! நாளைக்கு ஜென்னி யோட பர்த்டே! வீட்டில சிம்ப்பிளா கேக் வெட்டிக் கொண்டாடிடலாம்! தாத்தா வீட்டில மட்டும் எல்



லாரையும் கூப்பிடு! ராஜேந்திரன் அங்கிளும், கார்த்திக் கும் நாளைக்கு வராங்க!"

"உங்க ஃப்ரெண்ட்ஸ்...?"

அவள் கேள்வியாக நோக்க, "அதெல்லாம் கிராண்டா ஏற்பாடு செய்யணும்.. எனக்கு, இப்ப இருக்கற மூடுல அதெல்லாம் முடியாது! சிம்ப்பிளாப் போதும்!" முடிவாகக் கூறிவிட்டு வெளியே சென்று விட்டான்.

டெலிபோன் டைரக்டரியிலிருந்து சில எண்களைத் தொடர்பு கொண்டு, அவனுடைய நண்பர்களையும் அழைத்தாள் அவள்.

* * *

மறுநாள் காலையிலேயே ராஜேந்திரனும், கார்த்திக்கும் வந்துவிட்டனர்.

குழந்தைக்கு வாழ்த்து சொல்லி, புதிய உடை ஒன்றை அணிவித்து எடுத்து வந்து, அவரிடம் கொடுத்தாள் அவள்.

மிகுந்த உணர்ச்சிப் பெருக்குடன் பேத்தியை அவர் அணைத்துக் கொள்ள, விக்டரும் அவரையே கவனித்த படி அமர்ந்திருந்தான்!

"ரொம்ப தேங்க்ஸ் விக்டர்! என் வாரிசைப் பாதுகாத்து அருமையா வளத்து பொக்கிஷமா என் கையிலக் குடுத்திருக்கே! ரொம்ப நன்றிப்பா!" உணர்ச்சிப் பெருக் குடன் உரைத்தார்.

"இதிலென்ன அங்கிள் இருக்கு? சரவணன் தாத்தா எங்க குடும்பத்துக்கு செய்ததை விடவா? அப்பாவும் நானும் உங்க குடும்பத்துக்கு எவ்வளவோ கடன் பட் டிருக்கோம்!"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை! சாலமன் கிட்டே நியாயம் இருந்தது.. அதோட, உழைப்பு, விடாமுயற்சி, எல்லாமே நிறைஞ்ச பெரிய லட்சியத்தோட இருந்த தாலேதான், எல்லாத்தையுமே சாதிக்க முடிஞ்சது!

"ஆனா, நீ செஞ்ச உதவி பெரிசப்பா, மல்லிகாவை தப்பா நினைச்சி, நானும் அவ குடும்பமுமே ஒதுக்கினப்ப, அவளை ஒரு இல்லத்துல சேர்த்து முறையான மருத்துவ சிகிச்சையும் அளிச்சு, குழந்தையையும் தத்தெடுத்து வளத்துட்டு வரியே... இதுக்கு நான்தான் நன்றிக் கடன் பட்டிருக்கேன்!"

"கார்த்திக் சொன்னப்புறம்தான் எல்லா உண்மையும் தெரிஞ்சுது... ரொம்பக் கஷ்டமா இருந்தது.. என்னை மன்னிச்சிடுப்பா! தப்பு பண்ணிட்டேன். என் பேத்தியை என் கூட அனுப்புவியா விக்டர்?"

கலங்கிய விழிகளுடன் இறைஞ்சியவரை ஆதரவாக அணைத்துக் கொண்டான் அவன்.

பிறகு, "ரொம்பக் கஷ்டம்தான் அங்கிள்! ஆனா, அவ உங்களோட இருக்கறது தானே நியாயம். நான் எப்படி அதை மறுக்க முடியும்?" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தி னான்.

"சாரி விக்டர்! இப்பதான் எனக்கு தனிமையே உறைக்குது... ரொம்பக் கொடுமையா இருக்கு! ஜென்னியைப் பாத்துக்கறதுக்கு ஒரு நர்ஸை தனியா அப் பாயிண்ட் பண்ணிடலாம்னு இருக்கேன்!"

"வீட்டிலதான் சமையலுக்கு, மத்த வேலைங்களுக் கெல்லாம் ஆளுங்க இருக்காங்களே! அதான்! ஜென்னி



வந்தப்புறம் தான், நம்ம வீடே ஒரு சொர்க்கமா மாறப் போகுது" அபூர்வ மின்னல்கள் அவர் விழிகளில் தெறித் தன.

வயதான காலத்தில், அவரைப் பார்க்கப் பெரும் பரிதாபமாக இருந்தது அவனுக்கு!

ஜென்னியும், ஏனோ அவரிடம் உடனே ஒட்டிக் கொண்டாள்.

அது இதமாக இருந்தாலும், அவளைப் பிரிய வேண் டுமே என்ற தவிப்பும் நெருடலாய்!

பிறகு அனைவரும் டிபன் சாப்பிட, பொழுது விரைய ஆரம்பித்தது.

வாசலில் ஏதோ சப்தம் கேட்க, விரைந்தால் பாமாவும், சுஜயும், உதவிக்கென்று வனஜாவும் வந்திருந்தனர்.

"வாங்க சித்தி.. ஹாய் சுஜய்.. வா வனஜா!" என மூவரையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

கடாட்சமும், மாலதியும் மதியம் வந்து விடுவதாகக் கூறியிருந்தனர்.

அன்று, எஸ்டேட் அலுவலகத்திற்குச் செல்லாமல், கார்த்திக்குடனும், ராஜேந்திரனுடனும் பேசிக் கொண் டிருந்த விக்டர் உற்சாகத்துடன் அவர்களை வரவேற் றான்.

"ஹாய் அங்கிள்! ஜென்னி பர்த்டேக்கு ஹெல்ப் பண் ணலாம்ன்னு வந்திட்டேன்" குதூகலத்துடன் ஆர்ப்பரித் தான் சுஜய்!

"யு ஆர் மோஸ்ட் வெல்கம்!" என்றபடி அவனை அணைத்துக் கொண்டான் விக்டர்.

பின்னாலேயே டிரைவரும், வனஜாவும் எடுத்து வந்த பெரிய பார்சல்களை கவனித்தவன், என்னவென்பது போல் திரும்பி, கேள்வியாக சிவியை நோக்கினான்.

உடனே, பாமா முந்திக் கொண்டார்.

''மாப்பிள்ளை! உங்களுக்கே தெரியாம கிராண்டா இந்த பர்த்டேயை செலிபரேட் பண்ணனும்னு சிவி ஆசைப்பட்டா!''

''இங்கே அவளுக்கு அவ்வளவாப் பழக்கமில்லையா? 'சுஜய் பர்த்டே'க்கு பண்ற மாதிரி, நாங்க ரெண்டு பேருமா சேர்ந்து எல்லா ஏற்பாடுமே செஞ்சிட்டோம்.''

''இதெல்லாம் என்ன? யாரை எல்லாம் கூப்பிட்டிருக் கீங்க?'' வியப்புடன் வினவினான்.

''நம்ம அசோசியேஷன் க்ளப் மெம்பர்கள் எல்லாரை யும் நேத்தே போனிலே கூப்பிட்டுட்டோம்! அத்தானும் அக்காவும் கூட சென்னையிலிருந்து கிளம்பிட்டாங்க.. உங்க ஃப்ரெண்ட்ஸ் சிலரை கூப்பிட்டிருக்கறதா சிவி சொன்னா!''

ஒரு கணம் அவளையே பிரமிப்புடன், ஏறிட்டவன் மெல்ல அவளருகில் வந்தான்.

''தேங்க்யூ சோ மச் சிமி! என்ன ஏற்பாடெல்லாம் செஞ்சிருக்கேன்னு சொன்னா, நானும் தெரிஞ்சிப்பேன் இல்லையா?'' மென் குரலில் கேட்டான்.

சிவிக்கோ மரத்திலிருந்த அத்தனை குல்மொஹர் மலர் களும் ஒரே நேரத்தில் மேலே சொரிந்தது போல் ஒரு அற்புத உணர்வு!

உடனே, அவள் எல்லா ஏற்பாடுகளையும் பற்றி விவரிக்க, அவனுடைய முகத்தில் எல்லையில்லாத சந்தோஷம் தெரிவதாய்!



ராஜேந்திரனும் பிரமிப்புடன் அவள் கூறுவதைக் கேட்டுவிட்டு, ''தேங்க்ஸ்மா! அவளோட அம்மா இருந் தாக் கூட பாத்துப்பாத்து இவ்வளவு செஞ்சிருப்பாளான்னு தெரியலை!'' நெக்குருகிப் போனார்.

பிறகு, லானில் ஷாமியானா போடப்பட்டு, மேஜை, நாற்காலிகள் போடப்பட்டன.

பஃபே முறையில் உணவுகளை அடுக்கி வைக்கத் தனியாக மேஜைகள் அலங்கரிக்கப்பட்டன.

கேடரிங் சர்வீஸ் செய்பவர்களே, தட்டு, டம்ளர், கப், தண்ணீர், டிஷ்யூஸ் என்று எல்லாவற்றையும் எடுத்து வந்து விடுவதாகக் கூறியிருந்தனர்.

பின்புறமிருந்த தோட்டத்தில் பிள்ளைகளுக்கு கேம்ஸ், கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடானது.

எல்லாவற்றையும் பாமாவும், வனஜாவும் பார்த்துக் கொள்வதாகக் கூறினர்... அதற்கான ஏற்பாடுகளிலும் இறங்கினர்!

சுஜயும், கார்த்திக்கும் பரிசுப் பொருட்களை, எந்த எந்த விளையாட்டுகளுக்கு என்று தனியே பிரித்து வைக்கும் வேலையில் ஆழ்ந்தனர்.

ராஜேந்திரனோ, பேத்தியை மடியை விட்டு இறக்கவே யில்லை!

ஒவ்வொருவரும் அவரவர் வேலையில் ஆழ்ந்திருக்க, வியப்பும், பெருமையுமாய் அவளையே தொடர்ந்த விக்டரின் பார்வையை, சிவி கவனிக்கவேயில்லை!

தேனீ போல் சுறுசுறுப்பாக, மாலையில் பார்ட்டிக்கான வேலைகளில் எடுபட்டிருந்தாள் அவள்.

மெதுவாக அவளருகில் வந்தவன், ''என்ன மெனு சொல்லியிருக்கே சிமி?'' ஆர்வமாக விசாரித்தான்.

அவள் எல்லாவற்றையும் கூற, ''ஸ்டார்ட்டரா சூப் சொல்லிடலாமா? இப்ப போன் பண்ணினா ஆர்டர் எடுத்துப்பாங்களா?'' அவளிடம் கேட்டான்.

''வேண்டாம்! சூப்பும் சொல்லியாச்சு! டெசர்ட்டும் ஆர்டர் பண்ணிட்டோம்! குட்டிப்பசங்களுக்கு சாக்லேட் பார் கூட கேக்கோடவே சேத்து ஆர்டர் செஞ்சிட்டேன்'' சிறு முறுவலுடன் முடித்தாள்.

''ஓ! எவ்வளவு விஷயம் நடந்திருக்கு இந்த வீட்டுலே? எனக்குத் தெரியாம பெரிய பார்ட்டிக்கே அரேன்ஞ் பண்ணியிருக்கே! இட்ஸ் அமேசிங் சிமி! ஐயம் கிரேட்ஃபுல் டு யூ!''

கலவையான உணர்ச்சிகள், அவன் குரலில் பெருமிதத்துடன் கசிந்தன.

''அதெல்லாம் வேண்டாம்! ஜென்னியை எனக்கும் பிடிக்கும்! உங்களுக்கு ப்ளசண்ட் சர்ப்ரைஸ் தரணும்னு தான் எதுவுமே சொல்லலை!'' கூச்சத்துடன் மொழிந்தாள்.

* * *

மதிய சாப்பாட்டிற்குப் பிறகு ஹாலை அலங்கரிக்கும் வேலையில் அனைவரும் ஈடுபட்டனர்.

பலூன்கள், கலர் பேப்பர்கள், ஜிகினாத் தோரணங்களென்று ஹாலே அழகுற மிளிர ஆரம்பித்தது.

நடுவில் பெரிய மேசையும் வைத்து, அதையும் அலங்கரித்தனர்.



மாலை ஆறு மணிக்கு கேக் வெட்டும் வைபவமும், பிறகு குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

எட்டு மணிக்கு மேல் 'டின்னர்' என்று முடிவாகியிருந்தது.

தோட்டத்தில் வண்ண விளக்குகளை ஆட்கள் மரங்களில் தோரணமாய் பொருத்திக் கொண்டிருந்தனர்.

அனைவரும் உற்சாகத்துடன் பங்கேற்க, சிவி பம்பரமாய் சுழல எல்லா வேலையும் முடிந்த போது மணி நான்காகி விட்டது.

உடனே, உடை மாற்றித் தயாராவதற்காக அனைவரும் சென்றனர்.

அழகிய டிசைனர் சேலையில் தயாரான சிவி, ஜென்னியைத் தேடிச் சென்றாள்.

மதியம் தூங்கி எழுந்து சத்து மாவுக் கஞ்சியை சாப்பிட்டு விட்டு பிறந்தநாள் பார்ட்டிக்கு தயாராகிக் கொண்டிருந்தாள் ஜென்னி!

ஆயாம்மாவும், வனஜாவும் அவளை அலங்கரிக்க, பார்ட்டி உடையில் ஒரு குட்டி தேவதையைப் போலிருந்தாள் அவள்.

அப்போது, அங்கு வந்த பாமா, ''சிவி! கேக் வந்துடுச்சி! டேபிள்லே செட் பண்ணிட்டிருக்காங்க.. மாப்பிள்ளை உன்னைத் தேடறாரு.. போ! இங்கே நான் பாத்துக்கறேன்'' என்று அவளை அனுப்பினார்.

# 41



ஹாலுக்கு வந்தபோது, சாண்டிலியரின் ஒளிர்தலிலும், வண்ணத் தோரணங்களாலும், பிற அலங்காரங்களாலும் ஹாலே, தேவலோகம் போல் காட்சியளித்தது.

பெரிய மிக்கி மவுஸின் உருவத்துடன், மேசையில் கேக் தயாராக வைக்கப்பட்டிருந்தது.

கார்த்திக்கும், சுஜயும் அங்கு நின்றிருக்க, விக்டரைத் தான் காணவில்லை!

அவளின் விழித் தேடுதலை உணர்ந்த கார்த்திக், "விக்டர் ட்ரெஸ் மாத்தப் போயிருக்கான்மா! இப்ப வந்துடுவான். நீ ரொம்ப அற்புதமான பொண்ணு சிவி! உன் நல்ல மனசுக்கு எந்தக் குறையும் வரக்கூடாது!" நிறைந்த மனதுடன் வாழ்த்தினான்.

அப்போது விக்டரும் அங்கு வந்து விட, அழகிய சந்தன நிற சில்க் ஷெர்வாணியில், மாப்பிள்ளை போல அம்சமாக இருந்தான்.

அவனுடைய கம்பீரத்தையும், ஆண்மை மிளிர ஒரு போர்க் குதிரையின் லாவகத்துடன் படிகளில் இறங்கி வந்த ஸ்டைலையும் மிகவும் ரசித்தாள் அவள்.

"கேக்கை ரொம்ப ரசனையோட ஆர்டர் பண்ணியிருக்கே... ஜென்னியோட ட்ரெஸ்சும் ரொம்ப அழகா இருக்கு! ஒவ்வொண்ணையும் பாத்து பாத்து செஞ்சதுனால எல்லாமே பர்ஃபெக்டா அமைஞ்சிருக்கு! தேங்க்ஸ் எ லாட் சிவி!"

ஆழ்ந்த அடிக்குரலில் அவளிடம் கூறியவன், "வா! வாசல்லே நின்னு வரவங்களை ரிசீவ் பண்ணுவோம்!



இங்கே கார்த்திக்கும், மத்தவங்களும் எல்லாம் பாத்துப் பாங்க!" என்று அவளை அழைத்துச் சென்றான்.

அப்போதுதான் கடாட்சமும், மாலதியும் தாத்தாவும், சிவமுருகனும் வர, அவர்களை பாமாவிடம் ஒப்படைத்தான்.

ஐந்தரை மணியிலிருந்து ஒவ்வொருவராக வர ஆரம்பித்து விட, ஆறுமணிக்கு கேக் வெட்டும் நேரத்திற்கு, அழைத்தவர்கள் அனைவருமே வந்து விட்டனர்.

தேவதை போலிருந்த ஜென்னியை அவன் தூக்கி வர, இருவரும் நடுவில் நிற்க, ராஜேந்திரன் மறுபுறம் நின்று கொண்டார்.

பெரும் உற்சாகப் பாடலுடன் கேக் வெட்டப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

பிறகு அனைவரும் தோட்டத்தில் ஒன்று கூட, சிறு பிள்ளைகளுக்காக, ம்யூசிகல் சேர், பாசிங் தி பார்சல், தம்போலா, ரன்னிங் ரேஸ் என்று ஒவ்வொன்றாக நடத்தப்பட்டது.

வெற்றி பெற்ற எல்லாக் குழந்தைகளுக்கும் பரிசுகளை ராஜேந்திரன் அளிக்க, விழாவே கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது.

தோட்டத்தை சுற்றியிருந்த மரங்களில் பல வண்ண சீரியல் லைட்கள், ஜெகஜ் ஜோதியாய் மின்னிக் கொண்டிருந்தன!

வார்க்கப்பட்ட சுவர்ண சிற்பமாய் துருதுருவென அலைந்து கொண்டிருந்தாள் சிவி!

மறுபுற லானில் கேடரிங் சர்வீஸ் ஆட்கள், சமையல் இடங்களை தயாராக எடுத்து வைக்க ஆரம்பித்தனர்.

எங்கிருந்தோ ஒலித்த மெல்லிய குழலோசையுடன், சாப்பாட்டின் நறுமணமும் இணைந்து, காற்றில் மிதந்து, அனைவரையும் ஈர்த்தன.

குழந்தைகளுக்கான போட்டிகள் முடிவுறும் நேரத்தில், பெரியவர்கள் சாப்பிட ஆரம்பித்தனர்.

பாமாவும், மாலதியும் போட்டிகள் முடிந்தவுடன், வந்தவர்களை கவனிக்க ஆரம்பித்தனர்.

பம்பரமாகச் சுழன்று அனைவரையும் தனித்தனியாக விசாரித்தபடி வந்து கொண்டிருந்த சிவியை இரு கண்கள் மெச்சுதலும், ரசனையுமாய் நோக்கியதை அவள் அறியவில்லை!

பிறகு குழந்தைகள் அனைவருக்குமே சிறு சிறு பரிசுகள் வழங்கப்பட, அங்கு உற்சாகம் கரை புரண்டோடியது.

எல்லாம் நிறைவாக முடிய, வந்திருந்த அனைவருமே, சிவியை மனதாரப் பாராட்டி விடைபெற்றனர்.

தாத்தாவும், சிவமுருகனும், கடாட்சமும், மாலதியும் பாமாவுடன் கிளம்பிவிட, அவர்களிடம் கேக், ஸ்வீட்ஸ் என்று எல்லாவற்றையும் கொடுத்து அனுப்பிவிட்டுத் திரும்பினால், மணி பன்னிரெண்டாகியிருந்தது.

ஜென்னியும் ராஜேந்திரனும் பத்து மணிக்கே உறங்கச் சென்று விட கார்த்திக்கும் விக்டரும், சில வேலையாட்களுமே மீதமிருந்தனர்.

"சிமி! நீ ரொம்ப டயர்டா இருப்பே! இதை எல்லாம் ஆட்கள் கிளியர் பண்ணிடுவாங்க! போய்ப் படு!" என்று வற்புறுத்தி அவளை அனுப்பி வைத்தான் விக்டர்.

அந்த அசதியிலும் அவனுடைய "சிமி..." என்ற அழைப்பு.. இதயத்தில் ஆழப்பதிவதாய்!

உடை மாற்றிவிட்டு ஒய்ந்து போய் படுத்தவள், அறைக் கதவைக் கூட மூடவில்லை!



ஒரு மணிக்கு, எல்லோரையும் அனுப்பிவிட்டு அறைக்குள் வந்த விக்டரை, திறந்திருந்த மற்றொரு கதவு எதிர்கொள்வதாய்!

மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்த போது, இரவு விளக்கின் மெல்லிய ஒளியில், சிறு குழந்தையைப் போல் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள் சிவி!

ஒரு ஏஞ்சலைப் போல்.. கள்ளம் கபடமற்ற முகத்துடன், தனை மறந்து உறங்கும் போதும் எழிலாய், அழகுக் குவியலாய் சயனித்திருந்தவளை அவன் விழிகள் வியப்புடன் ரசித்தன.

முதன் முறையாக, ஒரு பெண்ணினால் ஈர்க்கப்படுவதை உணர்ந்து தலையைக் குலுக்கி அதை விலக்கியவன், உடனே கதவை சாத்திவிட்டு விலகிச் சென்றான்.

## 42

மறுநாளே, ராஜேந்திரனும் கார்த்திக்கும் குழந்தையை அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தனர்.

அன்று முழுவதும், ஜென்னியுடனே அவள் சுற்றிக் கொண்டிருக்க, விக்டரும் சிறிது நேரம் எஸ்டேட் அலுவலகத்திற்குச் சென்று விட்டுத் திரும்பி விட்டான்.

பிரிவுத்துயர் இருவரையுமே வாட்ட, மௌனமெனும் கூட்டுக்குள் இருவருமே மறுகியிருந்தனர்.

குழந்தைக்கு தேவையான, அவளுடைய பொருட்களையெல்லாம், ஆயாம்மாவின் உதவியுடன் அடுக்கி வைத்தாள் சிவி!

அவர்களுடன், ஆயாம்மாவையும் அனுப்புவதற்கு விக்டர் ஏற்பாடுகள் செய்திருந்தான்.

நேரம் செல்லச் செல்ல, சிவியால், ஜென்னியைப் பிரிவதென்பதையே ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் கிளம்ப வேண்டும்!

ஒரு முடிவுடன் மெதுவாக, ராஜேந்திரனின் அறைக்குச் சென்றாள்.

"அங்கிள்! நான் ஒண்ணு கேட்கலாமா?"

தன் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தவர், வாஞ்சையுடன் நிமிர்ந்தார்.

"சொல்லும்மா சிவி! என்கிட்ட என்ன தயக்கம். நான் உன் அப்பா மாதிரிம்மா!"

"அந்த உரிமையிலதான் கேக்கறேன் அங்கிள்! பேசாம, ஜென்னியோட நீங்களும் எங்களோடவே இருந்திடுங்களேன்!" மெல்லிய குரலில் கூறினாள்.

"சிவி! எதையுமே ப்ராக்டிகலா யோசிக்கணும்மா! நீ ரொம்ப புத்திசாலி.. உனக்குப் புரியும்! எனக்கு வேற யாருமே இல்லை! இவ மட்டும்தான்!"

"எல்லாரையும் இழந்து நின்ன ஒரு நேரத்துல, இவங்கம்மாவைத் தப்பா நினைச்சி, ஜென்னியையே வெறுத்திருந்தவன்தான் நான்!

"ஆனா, உண்மை தெரிஞ்சு நான் தெளிஞ்சப்ப, குழந்தையில்லாம எனக்கு வாழ்க்கையே இல்லைன்னு புரிஞ்சிக்கிட்டேன்!

"இவதான், எனக்கு கடைசி காலத்துல ஒரு பற்றுக் கோடு மாதிரி! இவளை விடவும் முடியாது.. என்னால இங்கே இருக்கவும் முடியாதுன்றதை நீ புரிஞ்சிக்கணும்மா!



"எனக்கப்புறம், எல்லா உரிமையும் உங்களுக்குத் தானே.. கொஞ்ச நாள் தான்!

"எனக்கும் உங்க கஷ்டம் புரியுது! நீ கேட்டுட்டே.. விக்டர் மனசுக்குள்ளே வெச்சி மறுகிட்டிருக்கான்.. பாவம்!"

"இவ அம்மா இருந்தாக் கூட இவ்வளவு அழகா இந்த முதல் பிறந்தநாளைக் கொண்டாடியிருப்பாளோ என்னவோ? தெரியலை!

"ஒரு தாயாவே நீ மாறியிருக்கே... அது ரொம்பக் கஷ்டம்...! கணவரோட எல்லாக் காரியங்களிலேயும் பங்கெடுத்துக்கறது சுலபம்..."

"ஆனா, இப்படி ஒரு பாரத்தை எந்தப் பெண்ணுமே சுமக்க மாட்டா! நீ செஞ்சிருக்கே! ஹேட்ஸ் ஆஃப் டு யூ!

"இனிமேயும் அந்தக் கஷ்டம் உனக்கு வேண்டாம்மா. விக்டரோட பாரத்தை நீ சுமந்து ஜெயிச்சும் காட்டியிருக்கே..."

அதற்குள் இடைமறித்தாள் அவள்.

"எனக்கு அதெல்லாம் கஷ்டமில்லை அங்கிள்! அவளை விட்டுப் பிரியறதுதான் வேதனையா இருக்கு!" அவள் குரல் கம்மியிருந்தது.

"இல்லைம்மா! இது கொஞ்ச நாளைக்குத்தான்! உனக்குன்னு ஒரு குழந்தை வந்தப்புறம், எல்லாமே மறந்துடும்! காட் ப்ளெஸ் யூ.. இன்னொரு குட்டி ஜென்னி சீக்கிரமே இந்த வீட்டுக்கு வரப்போறா!"

''இல்லை அங்கிள்... அதுக்கு சான்ஸே..''

அவள் முணுமுணுப்பான குரலில் முடிப்பதற்குள், விக்டரின் ஆழ்ந்த குரல் இடையிட்டது.

''சாரி அங்கிள்! அவ ஜென்னி மேல இருந்த பாசத்துல புரியாம சொல்றா.. நீங்க அழைச்சிட்டுப் போங்க.. அவ உங்ககிட்ட... உங்களுக்குத் துணையா வளர்றதுதான் சரி!'' என்றவன், கண்கள் இடுங்க அவளிடம் திரும்பினான்.

தன்னுடைய தவறும், தங்களுடைய திருமண நாடகத்தை வெளிச்சமிட்டுக் காட்டுவது போல் தான் பேசிவிட்டோமோவென்ற விதிர்ப்பும், அவளை உறை நிலைக்கு கொண்டு சென்றிருந்தன.

''சிமி! அங்கிள் கிளம்பட்டும்.. என் கூடக் கொஞ்சம் வா!''

அடிக்குரலில் சீறியவன், வேகமான நடையுடன், தன் ஸ்டடி ரூமிற்குள் நுழைந்தான்.

இதயம் உலர்ந்து போய், வாய் வரை வந்து துடிக்க, மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

அறைக்குள் சென்ற கதவை மூடியதும், ரௌத்ரமாக அவளிடம் திரும்பினான் அவன்.

''ஏய்! உன் மனசுல நீ என்ன நினைச்சிட்டிருக்கே! அங்கிள் உன்னைப் பத்திப் பெருமையாப் பேசினப்ப எனக்கே சந்தோஷமா இருந்தது. அதை எல்லாம் ஒரு நொடியில கெடுத்திட்டியே!'' சீற்றத்துடன் இரைந்தான்.

''சாரி.. நான்...'' தவிப்புடன் திணறும் போதே, இடியாய் முழங்கத் துவங்கினான் அவன்.



''இதோ பார்! போனாப் போகுதுன்னு உனக்காக இந்த நாடகத்துக்கு நான் ஒத்துக்கிட்டேன்! ஆனா, ஒரு விஷயத்தை எடுத்துக்கிட்டோம்னா, அதை முழுசா செஞ்சு முடிக்கணும்! இப்படி அரைகுறையா விடறது.. ரகசியத்தை மத்தவங்க கிட்டே போட்டு உடைக்கிறதெல்லாம் எனக்குப் பிடிக்காது...


''நீ சொல்ல வந்ததை அங்கிள் புரிஞ்சிட்டிருந்தார்னா, எனக்கு அதனால எந்த பாதகமுமில்லை! உனக்குத்தான் நஷ்டம்!''

''ஒரு வருஷம் உனக்கு டைம் குடுத்திருக்கேன்.. அதுக்கப்புறம் உன் இஷ்டம்...! இப்பவே இந்த உறவை முறிச்சிட்டு நீ போறதா இருந்தாலும், நான் தயார்தான்!''

அவளுடைய உயிர் வேர் வரை பிடுங்கப்படுவதாய்!

துடித்துப்போன அவள், பதில் பேசுவதற்குள் அறைக் கதவு தட்டப்பட்டது.

## 43



கதவைத் திறந்தால், கார்த்திக் தான் நின்றிருந்தான்!

''நாங்க கிளம்பறோம் விக்டர்! ஃப்ளைட் ஆறு மணிக்குன்னாலும், கோயம்புத்தூர் போய் சேரணுமே! ட்ராப்பிக்லே மாட்டிட்டா கஷ்டம்! அதான்'' சிறு தயக்கத்துடன் கூறினான்.

அவனுடைய குற்றவுணர்வு இன்னும் அவனைவிட்டு நீங்கவில்லையென்பது புரிவதாய்!

"நானும் வரேன்! உங்களை ஃப்ளைட் ஏத்திட்டு அப்படியே கோயம்புத்தூரிலே ஒரு வேலை இருக்கு... அதையும் முடிச்சிடறேன்!" என்றபடி கிளம்பினான்.

சிவி, தானும் வருகிறேன் என்று அவனிடம் கூற வேண்டும் போல் தவித்தாள்.

ஆனால், அவனுடைய இறுகிய முகமும், ஒதுக்கமும் அவளை வாய்மூடி மௌனியாக்கின.

ஜென்னி, பிரியாவிடை பெற்றுக் கிளம்பும் போது, விழியோரங்களில் நீர் துளிர்க்க, பாசத்துடன் அணைத்து முத்தமிட்டாள் சிவி.

ஆயாம்மாவும் வருத்தத்துடன் கிளம்ப, அனைவருக்கும் விடை கொடுத்தாள்.

"சிவி; நாங்க கிளம்பறோம்மா! உன்னை என்னால மறக்கவே முடியாது... இந்த ஆறு மாசமா ஜென்னிக்கு ஒரு தாயாவே நீ இருந்திருக்கே!"

"ம்... நீங்க ரெண்டு பேரும் அடிக்கடி சென்னைக்கு வரணும்... நானும் இவளை சம்மர்லே இங்கே அழைச்சிட்டு வரேன்!"

வாஞ்சையுடன் அவளுடைய தலையைக் கோதி விடைபெற்றார்.

அவர்கள் கிளம்பி, கார் கண்களை விட்டு மறைந்ததும், ஏனோ விழியோரங்களில் கண்ணீர் ஜனிக்க, மனம் கனத்துப் போனது!

அது ஜென்னியின் பிரிவிற்கா.. இல்லை விக்டரின் கோபத்தினாலாவென்பது புரியவில்லை.

ஹோம் தியேட்டரில் அமர்ந்து மென்மையான பாடல்களை சிடியில் போட்டு கேட்க ஆரம்பித்தவள், அப்படியே சாய்ந்து உறங்கிவிட்டாள்.



நேற்றைய அலுப்பும், சரியாக உறங்காதிருந்ததும் சேர்ந்து விட, ஓய்ந்து போயிருந்தாள்.

* * *

யாரோ அழைக்கின்ற ஒலி அவளை உசுப்பி எழுப்ப, உறக்கம் கலைந்து நிமிர்ந்தால், சமையல் செய்யும் மரியாதான் எதிரே நின்றிருந்தார்.

"சிவிம்மா! உங்களைக் கேட்டு வீட்டிலிருந்து போன் பண்ணியிருந்தாங்க! வந்து பாத்தா, நீங்க தூங்கிட்டிருந்தீங்க!

"மணி இப்ப ஏழரைம்மா! அதான் எழுப்பினேன்.. வாங்க.. ஒண்ணுமே குடிக்கலை. ஏதாவது சாப்பிடுங்க... பாமாம்மா கூடப் பேசுங்க" கனிவுடன் அழைத்தார்.

"ஓ காட்! நான்கு மணி நேரமாகவா அடித்து போட்டாற்போல் உறங்கியிருக்கிறேன்?" சிவி, பதறி எழுந்து ஹாலுக்குச் சென்று பாமாவிடம் பேசினாள்.

இடையிலேயே, காபியைக் கலந்து எடுத்து வந்து கொடுத்தார் மரியா... கூடவே பிஸ்கட்டும் கேக்கும் வந்தன!

சாப்பிட்டுக் கொண்டே பேசி முடித்து நன்றி கூறி வைத்தவள், தன் அறைக்குச் சென்று அலுப்புப் போக வெந்நீரில் குளித்துவிட்டு வரும்போது, மணி எட்டரையென்றது சுவர்க் கடிகாரம்!

விக்டர் இன்னும் ஏன் வரவில்லை? அவன் கிளம்பும் போது மூன்று மணியிருக்குமே.. உள்ளத்தில் பல கேள்விகள்!

ஆனால், அவனோ வக்கீலின் அலுவலகத்திலிருந்து அப்போதுதான் கிளம்பி வந்து கொண்டிருந்தான்.

வரும் வழி முழுவதும், சிமியைப் பற்றிய எண்ணங்களே அவனை ஆக்ரமித்திருக்க, முதன் முறையாக எதிலோ தோற்றுப் போன ஒரு உணர்வு அவனிடம்!

இதயம் சோககீதம் பாட, அது ஜென்னிக்காகவா... இல்லை சிமிக்காகவாவென்று புரியவில்லை.

பிரிவுகள்... முதன் முதலாய் அவனுள் வேதனையையும், பாரத்தையும் அறிமுகப்படுத்தின.

முதலில், தாய், தந்தை.. இப்போது ஜென்னி... நாளை சிமி!

ஏதோ, ஒருவித இனம் புரியா உணர்வுடன் வீடு வந்து சேர்ந்தான் அவன்.

## 44



பங்களாவில், கீழே எங்குமே சிமி இல்லை.. மரியாவிடம் பால் மட்டும் போதுமென்று வாங்கிப் பருகி விட்டு மாடிக்கு வந்தபோது, சிட் அவுட்டில் வெளிச்சம் தெரிந்தது.

இதயத்தில் இரும்புக் குண்டொன்று பலமாய் அழுத்த, புதிதாய் ஒரு பாரம்!

ஒரு பெருமூச்சுடன், ப்ரீஃப் கேஸிலிருந்து வக்கீல் நோட்டீஸை எடுத்துக் கொண்டு சிட் அவுட்டின் கதவைத் திறந்து வெளியே வந்தான் அவன்.

எங்கோ பார்த்தபடி, சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தாள் சிமி.

அவனைக் கண்டதும், வேகமாக எழுந்தவள், ''வந்துட்டீங்களா? என்ன இன்னும் காணோமேன்னு உக்காந்திருந்



தேன்! ஜென்னி இல்லாம...'' சட்டென்று அவள் குரல் தடைப்பட்டது.

''ம்.. இனிமே உனக்கு அந்தக் கஷ்டமே தெரியாது! இந்தா!'' ஒரு கவரை அவளிடம் நீட்டினான்.

ஒன்றும் புரியாமல் அதை வாங்கியவள், பிரித்த போது, உடல் முழுவதும் விதிர்த்து, விழிகள் தெறித்து விடும் போல் விரிந்தன!

''இது.. நான்...''

சட்டென்று கலங்கிய விழிகளுடன் நிமிர்ந்தவளால், எதையுமே நம்பமுடியவில்லை!

வானவில் உடைந்தது போல்.. நிலவு உதிர்ந்தது போல், அவளுடைய சிரிப்பு சிதைந்து உறைந்தது.

இறுக்கமாய், அழுத்தமான காலடிகளுடன் விலகிச் சென்றவனைப் பின் தொடர்ந்து, அவனுடைய அறைக்குள் சென்றாள் அவள்.

கால்கள் தொய்ந்து விடும்போலப் பின்னலிட்டன.

''இப்போ.. இந்த டைவர்ஸ் நோட்டீஸுக்கு என்ன அவசரம்?'' நடுங்கும் குரலில் கேட்டாள்.

அடைமழையில் நடுங்கும் சிறு தளிராய் அவள் நிலை!

''எனக்கு ஒண்ணும் அவசரமில்லை.. உனக்குத்தான்! அதான், ஜென்னியை அனுப்பிட்டு, உடனே என் வக்கீலைப் பாத்து இதுக்கு ஏற்பாடு செஞ்சேன்...'' அழுத்தமாக வந்தது அவன் குரல்!

''நான் எப்ப சொன்னேன்...? நீங்க தானே ஒரு வருஷம் போகட்டும்னு...''

முடிக்கவும் முடியாமல், அவன் முடிவை ஏற்கவும் முடியாமல் தடுமாறினாள்.

"ஆமாம்! சொன்னேன்... ஆனா, இப்ப அதுக்கு அவசியமில்லையே.. ஜென்னியும் போயிட்டா.. உங்க பாட்டியும் இறந்திட்டாங்க!"

"நாம ரெண்டு பேரும் எதுக்காக இந்த ஒப்பந்தத்தை ஏத்துக்கிட்டோமோ... அதுக்கே அர்த்தமில்லாமப் போயிடுச்சி..."

"இனிமே எதுக்கு இந்தப் பொய்யான ஒரு பந்தத்தை நீடிக்கணும்? ம்...?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

அவன் எய்த வார்த்தை அம்புகள், இதயத்தில் தைத்து வலியை ஏற்படுத்த, துவண்டு விழுந்தன உணர்வுகள்!

"அப்போ.. இத்தனை நாள் நான் இங்கே இருந்ததை.. நமக்கு நடந்த கல்யாணத்தைப் பொய்யின்னு சொல்றீங்களா?" ஜென்னிக்காக மட்டும்தான் என்னை பொறுத்துக் கிட்டீங்களா?" அவள் குரல் நடுங்கியது.

"நான் சொல்லலை! நீதான் மதியம் அங்கிள் கிட்டே சொன்னே...! முழுசா சொல்லி முடிக்கிறதுக்குள்ளே, நல்ல வேளை நான் தடுத்திட்டேன்."

"அவருக்கு சந்தேகம் வந்ததான்னு எனக்குத் தெரியாது.. ஆனா, ஒவ்வொரு தடவையும் பொய் சொல்லி.. அதுக்காக நாடகமாடி... எனக்கு அலுத்துடிச்சி!"

"எதுக்கு ரெண்டு பேருக்குமே இந்தக் கஷ்டம்! அதான், இதை ஒரு முடிவுக்கு கொண்டு வந்திடலாமின்னு நினைச்சேன்..."

"நீ, நாளைக்கே உங்க வீட்டுக்குப் போகலாம்! ஆறு மாசத்துல டைவர்ஸ் கிடைச்சிடும்.. அப்புறம் உன் இஷ்டப்படி சந்தோஷமா இருக்கலாம்!"



"இல்லை.. என்னால முடியாது! நான் போகமாட்டேன்!" தன்னையறியாமலே உரக்கக் கத்திவிட்டாள் அவள்.

உயிருக்குள் தணியாத வேட்கையாய்.. தகிப்பாய் எரிய ஆரம்பித்தது.. பெரும் நெருப்பு!

உடனே அவனுடைய கண்கள் கூர்மையுடன் இடுங்கின.

ஒரு வேங்கையின் மூர்க்கத்துடன் ஜொலித்து மின்னின.

"அப்படின்னா என்ன அர்த்தம்? ஏன்... உனக்கு பணம் ஏதும் வேணுமா?" கூர்மையுடன் கேட்டான்.

அவன் குரலில், ஏதோ ஒரு புரியாத உணர்வும் வேகமும்!

உடனே வெகுண்டு நிமிர்ந்தாள் அவள்.

"சே! பணமா...? யாருக்கு வேணும் உங்க பணம்! என்கிட்ட இல்லாததா? இப்படிப் பேச உங்களுக்கு வெக்கமா இல்லை?" சீற்றத்துடன் கேட்டாள்.

"நான் ஏன் வெக்கப்படணும்? இந்த நாடகத்தை நடத்த சொன்னவ நீ! ஆரம்பிச்சு வச்சவ நீ!"

"உன் சுயநலத்துக்காக என்னையும் இதிலே சேத்துக் கிட்டே! எல்லாமே முடிஞ்சிடுச்சி... இப்பவும் நீ விரும்பிக் கேட்டதைத்தான் நான் குடுத்திருக்கேன்! இல்லைன்னு சொல்லு பார்ப்போம்!"

அவளையே கூர்ந்தபடிக் கூறிவிட்டுத் திரும்பிக் கொண்டவனின் கண்களில், சிறு வலி தெரிவது போல்!

மேகங்களிடையே ஒளிரும் மின்னல் கீற்றாய் அந்த ஒற்றைப் பார்வையின் அர்த்தம்.. யானை பலம் தருவதாய்!

ஒரு ஆழ்ந்த மூச்செடுத்து, தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவள், ஒரு முடிவுடன் நிமிர்ந்தாள்.

மனதிற்குள் மெல்லிய ஊஞ்சலாட்டமாய்.. சிறு நம்பிக்கை!

''இதை நான் விரும்பலைன்னா? இந்த வீட்டை விட்டுப் போக மாட்டேன்னா?'' கேட்டு விட்டாள்.

அந்தக் கணம், ஒரு பூ விழுந்தால் கூடக் கேட்குமளவு, அசாத்திய மௌனம் அங்கு!

சட்டென்று திரும்பியவனுடைய விழிகளில் செவ்வரி கள் கோடுகளாய்!

ஆழ மூச்செடுத்து விட்டவனுடைய கரங்கள் மூடி இறுகின!

புருவங்கள் நெறிய அவளையே கூர்ந்தவன், ''இதுக்கு என்ன அர்த்தம்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' உலர்ந்த குரலில் வினவினான்.


எங்கோ ஒரு ஒற்றைக்குயில்... தீனமாய்க் கூவியது!

''ம்.. நான்.. உங்களை விரும்ப ஆரம்பிச்சிட்டேன்னு அர்த்தம்! உங்களை விட்டு எங்கேயும் போக விரும் பலைன்னு அர்த்தம்... எந்த நாளிலேயும் பிரியமாட் டேன்னு அர்த்தம்... போதுமா?''

தன் உள்ளத்தை.. இதயக் கூட்டில் புதைந்த ரக சியத்தை வெளியிட்டு விட்டு அப்படியே சரிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.



## 45



மறுகணமே, அவனுடைய உலகம் இயங்காது நின்றது.

நம்ப இயலாத கனவொன்று நிஜ மானதைப் போன்ற அதிர்ச்சியும், வியப்புமாய் அவளையே ஒரு கணம் ஏறிட்டவன், வேகமாக அவளருகில் வந்தான்.

இதயப்பூவில், நறுமணமும், பெரும் விகசிப்பும்...!

"ப்ளீஸ் சிமி! முதல்லே அழறதை நிறுத்து! இதை நான் நம்பமாட்டேன்... பொய் சொல்லாதே! நீ சொன்னது உண்மையா.. இல்லை உணர்ச்சி வசப்பட்டு உளர்றியா? எனக்குத் தெரிஞ்சாகணும்!'' மென்குரலில் கேட்டான்.

அவன் விழிகளில், ஏதோ ஒரு வித தவிப்பும், அலைப் புறுதலும் தெரிவதாய்!

சட்டென நிமிர்ந்தவளின் கன்னங்களில், அருவியாய் கண்ணீர்த் தடங்கள்!

ஆனாலும் அந்த விழிகள் அவனிடம் எதையோ யாசித்தன!

''நான் உளர்றேனா? இப்பதான் முதன் முதலா, சென்சி பிளாப் பேச ஆரம்பிச்சிருக்கேன்! உண்மையா, இனக் கவர்ச்சியில்லாம காதலிக்க ஆரம்பிச்சிருக்கேன். நீங்க என்னை நேசிக்கலைன்றது எனக்குத் தெரியும்! உங் களுக்கு பெண்களைப் பிடிக்காதுன்றதும் தான்! ஆனா, நான் உங்களை விரும்பறதை யாராலயும் தடுக்கமுடி யாது!'' ஆவேசமாகக் கூறினாள்.

உடனே, அந்த டைவர்ஸ் பேப்பரையும் கிழித்தெறிந் தாள்.

திடீரென்று, அவன் முகத்தில் கோடி சூர்யப் பிரகாசம்!

உதட்டோரங்கள் குறுஞ்சிரிப்புடன் விரிய, சிறிது நேரம் அவளையே பார்த்திருந்தான் விக்டர்.

''ம்...! நான் உன்னை நேசிக்கலைன்னு யார் உன்கிட்ட பொய் சொன்னது?''

ஆழமாய் வந்த அவனுடைய குரல், அவளுடைய இதயத்திற்குள் பனிச்சாரலாய்ப் பரவ, பிரமிப்பும் பரி தவிப்புமாய் எழுந்தாள்.

பசித்தவனுக்கு முன்பு, விருந்தே கிட்டியது போல், அவள் கண்களில் ஒரு மின்னல்!

திடீரென்று, அவன் விழிகளில் பெரும் குறும்பு கசிந்தது.

''நீங்க.. இப்ப.. பொய் சொல்லலையே?'' சிவி தவிப்பும் கண்ணீருமாய்க் கேட்டாள்.

''இல்லை...'' என்று தலையசைத்த மறுகணமே, அவனுடைய கரங்கள், இரண்டும் உயர்ந்து, அவள் புறம் நீண்டன.

'இது நிஜமா.. இல்லை கனவா?' மரத்துப்போன மனக்கிளையில் வேகமாகத் துளிர்த்தன, நேசத் தளிர்கள்!

படரக் கிளை தேடும் கொடியாய், அவன் மார்பில் ஓடிச் சென்று சரண் புகுந்தாள் அவள்.

ஒரு குழந்தையைப் போல் அவளை ஏந்தியவனுக்குள், வாழ்க்கை எவ்வளவு அழகானதென்பது புரிவதாய்!

இனி வரும் நாட்கள், வசந்தமாகப் போவதையும் இதயம் உணர்வதாய்!



அழகாய்க் கூம்பியிருந்த ட்யூலிப் இதழ்கள்.. மென்மையாய் முத்தமிட்ட உணர்வு!

அவள் விழிகளில் ஆனந்த அருவி ஆறாய்ப் பெருக, மெதுவாக முகம் நிமிர்த்தி, அவள் விழிகளை மென்மையாகத் துடைத்தான் அவன்.

அந்த மெல்லிய தீண்டல், அவள் உயிரையும் இசைப்பதாய்!

அவனுடைய அன்புக்கரத்தில் சிறைப்பட்டிருப்பது, பெரும் வரமாய்த் தோன்ற, அப்படியே மார்பில் சாய்ந்து கொண்டாள் அவள்.

ஏனோ, தனக்குரிய இடத்திற்கு வந்த இதம் பரவியது அவளுள்!

ஆனால், அவனிடம் கேட்க நிறைய கேள்விகள் இருந்தன.

பாலையாய் வறண்டு, மீண்டும் மலரத் துவங்கிய நெஞ்சிற்குள்... யாழின் மீட்டலாய் அவனுடைய இதயத் துடிப்பு!

மெதுவாக நிமிர்ந்தவளின் நெற்றியை மெல்ல வருடி இதழ் பதித்தவன், "என்ன? நிறைய கேக்கணுமா? ரொம்ப ஆச்சர்யமா இருக்கா... நம்பமுடியலை, இல்லை?'' குறும்புடன் கேட்டான்.

''ஆமாம்! நீங்க, என்னை விரும்பறதை ஏன் என்கிட்ட சொல்லலை...?'' சிவி சலுகையாகச் சிணுங்கினாள்.

''ம்.. உடனே நீ என்னை விட்டுப் பிரிஞ்சி போயி, கோபத்துல டைவர்ஸ் கேட்டுட்டேனா என்ன செய்யறதுன்ற பயம்தான்!''

மௌனச்சிரிப்பில் அவன் உடல் குலுங்கியது.


எத்தனையோ தடைகளைக் கடந்து, சிகரம் தொட்ட நிம்மதி தெரிந்தது அவனிடம்!

உதட்டோர செல்ல சுழிப்புடன், "ரொம்ப பயம்தான்!" என்றவளை வேகமாக இழுத்து, மூச்சு முட்ட அணைத்தான் அவன்!

பிறகு, நாணத்துடன் மெதுவாக விலகியவள், "ப்ளீஸ்! உங்களுக்குத்தான் பெண்கள்னாலே பிடிக்காதே! எப்படி என்னை...?" வியப்புடன் கேட்டாள்.

ஒருகணம் கண்களை இறுக மூடிக் கனவுலகிற்குள் நுழைந்தவன், உணர்ச்சிகள் நிறைந்த குரலில் மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

## 46



கம்பீரமான ஆழ்ந்த அவன் குரல்... ஒரு வீணையின் ராகமாய் அவளுக்குள் பதிவதாய்!

"முதல்லே உன்னைப் பாத்து நான் கோபப்பட்டது.. எல்லாப் பெண்களை மாதிரித்தானே நீயும் இருப்பேன்னு கணிச்சதெல்லாம் உண்மைதான்!"

"சரியா சொல்லணும்னா, உங்க வீட்டில் எல்லாரையும் சாப்பிடக் கூப்பிட்டிருந்தமே, அப்போதான் முதல் மாற்றமே!

"முன்னாடி, அம்மா என்கிட்டே போனிலே ஒண்ணு சொன்னாங்க! அவங்களுக்கு மருமகளா, இங்கே பக்கத்து எஸ்டேட் பொண்ணு ஒருத்தியை தேர்ந்தெடுத்திருக்



கறதாகவும், ரொம்ப அருமையானவன்னும் சொன்னாங்க!"

"வேற மதம்கிறதால எப்படிப் பேசறதுன்னு தெரியலை., ரொம்ப அழகு, அற்புதமான பொண்ணுன்னு சொன்னாங்க!"

"ஆனா, அன்னிக்கு உங்க பாட்டி சொன்னப்புறம்தான், அது நீன்னு புரிஞ்சுது! உடனே மனசுல ஒரு சின்ன சலனம்!"

உடனே விலகியவள், "அப்பவேவா?" நம்ப இயலாமல் தலைசரித்துக் கேட்டாள்.

"ஆமாம்! அங்கேதான் அம்மா பொய் சொல்லிட்டாங்க... ஏமாந்திட்டாங்கன்னு நினைக்கிறேன்..."

குறும்புடன் அவன் முடிப்பதற்குள், "ஏய்..." என்றபடி செல்லமாக அவன் மார்பில் குத்தி விட்டு, மெல்ல அவன் தோளில் சாய்ந்து, "அப்புறம்...?" என்றாள்.

"ஆரம்பத்திலிருந்து வருவோம்.. நீ என்கிட்டப் பேசினே! நான் கோபப்பட்டு அறைஞ்சேன்...

"முதல்லே உங்க தாத்தா வந்தாரு! பாட்டியை பத்தி சொன்னவுடனே அம்மா ஞாபகம்தான் வந்தது.. அதான் உடனே உன்னை வரச் சொன்னேன்! நீ சொன்ன பொய்யை நான் மறுக்கலை!

"அப்புறம் நீ வந்தே! சுந்தரைப் பத்தி சொன்னப்ப, எனக்குள்ளே ஒரு பக்கம் நிம்மதியும், மறுபக்கம் புரியாத ஒரு உணர்வும் வந்தது... என்னன்னே தெரியலை... ஒத்துக்கிட்டேன்....

''உங்க வீட்டுக்கு போனோம்.. கல்யாணம் பத்திப் பேசும்போதே நீ கலங்கினப்ப, உன் இஷ்டப்படியே எல்லாம் செய்யச் சொன்னேன்!

''அதுக்கப்புறம் ஒரு நாள் உங்க வீட்டுக்கு வந்தப்போ, சின்னக் குழந்தை மாதிரி நீ ஷட்டில் விளையாடிட்டிருந்தே!

''நான் பார்த்த மாடர்ன் பொண்ணுங்களோட, அலட்டல், ஈகோ, ஆண்களைப் பாத்தா வேற மாதிரி பிஹேவ் பண்றதுன்ற எந்த பந்தாவும் இல்லாம, நீ இயல்பா இருந்ததே என்னைக் கவர்ந்தது...

''கல்யாணத்துக்கப்புறம், நீ ஜென்னிகிட்டே, உயிரா பாசமா இருந்தது வேற என்னை ஈர்த்திடுச்சி...

''பிறரின் மகிழ்ச்சியை விரும்பி நடந்துக்கற இதயம், எப்போதுமே தவறு செய்யாதுன்னு படிச்சிருக்கேன்... அதை உன்கிட்ட பாத்தேன்...

''அப்போதான் மணி வந்தாரு.. சுந்தரோட கோழைத்தனமான முடிவைப் பத்தி சொன்னாரு! நீ உடைஞ்சு போனதைப் பாத்து நானும் ஆடிப் போயிட்டேன்...

''உன்னை.. உன் சோகத்தை மாத்தறதுக்காகத்தான் அந்தமான் ட்ரிப்பே அரேஞ்ச் பண்ணினேன்...

''இங்கே இருந்தா நீ அழுதிட்டே இருப்பே.. தேவையில்லாத கேள்விகள், குழப்பங்கள் வருமே.. அதான்!

''ஆனா அப்பவும், உனக்காகத்தான் உன்னை எப்படி சமாதானப்படுத்தறதுன்னு தான் யோசிச்சேனே ஒழிய, நான் இதிலேருந்து எப்படி விடுபட்டுப் போறேன்னு ஒரு முறை கூட யோசிக்கவேயில்லை!



''அந்தமானிலே, உன்னைப் பத்தி நீயறியாமலே வாட்ச் பண்ணி நிறையத் தெரிஞ்சிக்கிட்டேன்... அப்பதான் எனக்குள்ளே சின்னதா ஒரு சலனம்!

''அப்போதான், நீ பிரிவைப் பத்திப் பேசினே! மனசுக்குள்ளே சின்னதா ஒரு வலி! உடனே, நானாவே நம்ம ஒப்பந்தத்தை ஒரு வருஷத்துக்கு நீடிச்சேன்...

''ஊருக்கு வந்தோம்.. பாட்டி இறந்தாங்க... நீ அழுதது‌ம், சோர்ந்து போயிருந்ததும் என்னை ரொம்பவே பாதிச்சுது... உன்னை அங்கேயே இருக்க சொன்னேன்!

''அப்புறம், எய்ட்ஸ் முகாமிலே பிரிவு பத்தி பேசிய போது ரொம்பக் கோபம் வந்தது.. நம்ம கல்யாணம் பொய்யின்னு திரும்பி திரும்பி நீ சொன்னப்ப என்னால தாங்கவே முடியலை.. கோபப்பட்டேன்.

''மாணிக்கக் கல்லை திருப்பித் தந்தப்பவும் அப்படித்தான்! ஆனா, எல்லாவிதத்திலயும் நீ எனக்கு ரொம்ப உதவியா இருந்தே! அதுவும் என்னை இளக வச்சிது!

''ஊரிலிருந்து கார்த்திக் வந்து உண்மையை சொன்னப்ப, மல்லிகா மேல நான் வச்சிருந்த தப்பான எண்ணமும் மாறிச்சு! பெண்கள் எல்லாருமே மோசமானவங்க இல்லைன்னு உணர்ந்தேன்...

''ஜோத்ஸ்னா கிட்ட நீ கோபப்பட்டப்ப, என்னையறியாமலே ஒரு நப்பாசை! நீ உண்மை சொல்லியிருப்பியோன்னு!

''ஹார்ஸ் ரைடிங் போனப்ப, என்னோட உக்கார நீ தயக்கம் காட்டினப்பதான், தாங்க முடியாத கோபம் வந்தது... நீ என்னை விலக்கி நிறுத்தறியோன்ற கோபம்!''

''ஆனா, ஜென்னிக்காக நீ ஏற்பாடு செஞ்ச பார்ட்டி, என்னைத் தலைகீழாப் புரட்டிப் போட்டுடுச்சி...

''நேத்து பார்ட்டியிலயும் நீ விலகி விலகிப் போனே... அப்புறம், ராஜேந்திரன் அங்கிள்கிட்டே பேசும் போது, நமக்கு குழந்தை பிறக்க சான்ஸே இல்லைன்னு சொல்ல வந்தே.. நான் குறுக்கே புகுந்து தடுத்திட்டேன்!

''மனசு முழுக்கத் தீயா எரிஞ்சது அப்பதான்! என்னை நான் உணர ஆரம்பிச்சு கொஞ்ச நாளாச்சு! ஆனா, நீ என்னைப் புரிஞ்சுக்கலையே.. இந்தக் கல்யாணம் பொய்யின்ற எண்ணம், இன்னும் உன் மனசுலே ஆழமாகப் பதிஞ்சிருக்கேன்ற கோபமும் எரிச்சலும்தான், உன்னைத் தனியாக் கூப்பிட்டுத் திட்டினேன்!

''அந்தக் கோபத்துலதான் உடனே வக்கீலைப் பாத்து எல்லா ஏற்பாடும் செஞ்சேன்!

''அப்பக்கூட, இந்த டைவர்ஸ் நோட்டீஸை அவசரப் பட்டு ரெடி பண்ணிட்டமோன்ற உறுத்தலோட தான் வந்தேன்...

''இந்த மாதிரி நான் தவிச்சி நின்னது.. அப்பா அம்மா இறந்தப்புறம், இப்பதான்!

''ஆனா, உனக்கு விருப்பமில்லாததை செய்யச் சொல்லவும் எனக்கு மனசில்லை! உன்னோட சந்தோஷமும், நிம்மதியும் எனக்கு முக்கியமாப் பட்டுது!

''என்னையே நான் வெறுத்த நிமிஷம் அது! உனக்காகத்தான்.. என்னையே கன்ட்ரோல் பண்ணிட்டு இதை உன் கையிலக் குடுத்தேன்!'' ஒரு பெருமூச்சுடன் முடித்தான்.



தன் இதயக் கருவறையில் காதல் கருவுற்ற நேரத்தை அவனாலேயே சரிவரக் கணிக்க முடியவில்லை!

உடனே, அவனை வேகமாக அணைத்து முகத்தில் முத்த மழை பொழித்தவளுக்குள், பெரிய பாரம் விலகிய நிம்மதியும், உலகையே வசப்படுத்திய பெருமிதமும்!

என் ஆதாரம் நீதான் என்ற வெளிச்சச் சுடர்.. அவன் விழிகளில்!

''ஏய்.. என்ன? உன் மனசு மாறினதைப் பத்தி நீயும் சொல்ல மாட்டியா?'' ஏக்கத்துடன் கேட்டான் விக்டர்.

''ஆனா, கொஞ்சம் சீக்கிரம் சொல்றியா? எனக்கு நிறைய வேலையிருக்கு!'' கண்சிமிட்டியபடிக் கூறினாள்.

''ம்.. நிச்சயமா! முதல்லே ரொம்பக் கோபக்காரரா, முசுடாத்தான் நீங்க எனக்கு அறிமுகமானீங்க!

''அப்புறம்.. என் ப்ரச்சனையை உங்ககிட்டே கொண்டு வந்தப்பதான்.. ஜென்னியைப் பத்தி தெரிஞ்சுது.. உங்க மனித நேயமும், நட்புக்கு நீங்க குடுக்கற மரியாதையும் புரிஞ்சுது.''

''எனக்காக நீங்க நடிக்க ஒத்துக்கிட்டதுமே உங்கமேல புதுசா ஒரு வித மதிப்பும் மரியாதையும் வந்தது.

''இங்கே, நீங்க என்னை எந்தக் குறையுமில்லாமல் பாத்துக்கிட்டீங்க! ஜென்னி கிட்ட நீங்க காட்டின பாசம், உங்க உண்மையான குணத்தை, கண்ணாடியா வெளிப் படுத்துச்சி!

''அப்புறம்தான், மணி வந்தாரு.. சுந்தரைப் பத்தித் தெரிஞ்சவுடனே, முதல்லே வருத்தம்.. அப்புறம் கோபம்..

பின்னாடி சுயபச்சாதாபம்தான் வந்தது... அதுவே சுந்தர் மேல வெறுப்பாவும் மாறிச்சு!''

''அவரும் நம்ம கல்யாணத்தை நிஜமாக்கி உங்களோட சேர்ந்து வாழ சொல்லி லெட்டர்ல எழுதியிருந்தாரு. என்னால, அவர் செஞ்ச நம்பிக்கை துரோகத்தை ஏத்துக்கவே முடியலை.. ஜீரணிக்கவும் முடியலை!''

சிறிது நேரம், மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.

பிறகு, ''நாம அந்தமானுக்குப் போனோம்! எனக்காகவே அங்கே போனது... அங்கே நீங்க என் மேல காட்டின பரிவு.. எல்லாத்துக்கும் மேல உங்க அப்பாவோட வாழ்க்கை பத்தின ரகசியம்.. இப்படி எல்லாமே என் மனசை மாத்திடுச்சி.. பெரும் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் மீட்டுத் தந்தது..

''உங்களுக்கு எந்த விதத்திலயாவது உதவணும்.. ஜென்னியை அன்பா பாத்துக்கணும்.. பெண்களைப் பத்தின உங்க அபிப்ராயத்தை மாத்தணும், அப்படின்னு முடிவு செஞ்சேன்!

''நாம திரும்பி வந்தப்புறம் பாட்டி இறந்தப்ப, நீங்க நடந்துக்கிட்ட விதம், மனித நேயத்தோட எங்க வீட்டுல ஒருத்தரா நின்னு பல காரியங்களை அனாயாசமா செஞ்சு முடிச்சது, இதெல்லாம் என் மனசுல ஆழமாப் பதிஞ்சுது...

''என் மனசு முழுக்க நீங்காம நீங்க நிறைஞ்சது அப்ப தான்!

''அப்புறம், மலைவாழ் மக்களைப் பார்க்க என்னை அழைச்சிட்டுப் போனீங்களே... அன்னிக்குத்தான் உங்க நிஜ முகத்தை நான் பார்த்தேன்.. பரவசப்பட்டேன்... நீங்க எவ்வளவு உயர்ந்தவருன்னு புரிஞ்சுக்கிட்டேன்.''



''அப்புறம்.. எய்ட்ஸ் முகாமிலே அந்தப்பாட்டி எனக்கு மாணிக்கக் கல்லை பரிசாக் குடுத்தப்ப ரொம்ப உறுத்திச்சி... எனக்கு சொந்தமில்லையே இதுன்னு, ஏக்கம் கலந்த பொறாமையிலதான் அப்படிப் பேசினேன்,

''ஆனா, அப்ப எனக்கே சரியாப் புரியலை! அப்புறமா, நீங்க சுஜயோட இயல்பா விளையாடினது.. எனக்கு ஹார்ஸ் ரைடிங் கத்துத் தரேன்னு சொன்னது எல்லாமே எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது.

''ஹார்ஸ் ரைடிங் கத்துத் தந்தப்ப என்னை ஒட்டி உட்கார்ந்து ரெண்டு பக்கமும் பிடிச்சி அணைச்சி சொல்லித் தந்தப்ப, என்னையே நான் இழந்தேன்... என்னால கண்ட்ரோல் பண்ணிக்கவே முடியலை.. அதான் கோபப்பட்டேன்...

''அப்புறம் என்னை எம்.எஸ்சி சேத்தீங்க! எனக்காகவே யோசிச்சி, நீங்க செஞ்ச ஒவ்வொரு விஷயமும் என்னை உருக வெச்சிது...

''அப்பதான் சுந்தருக்கும் உங்களுக்குமுள்ள வித்தியாசமே உரைச்சிது.

''அவரால குழந்தைகளோட இயல்பா இருக்கவே முடியாது.. தான், தன் சுயநலமின்னு இருந்தவரு அவரு!

''ஹார்ஸ் ரைடிங் கத்துக்கறது, மேலே படிக்கறதெல்லாம் அவருக்குப் பிடிக்காத விஷயங்கள்.. பெண்கள் சாதனைப் பெண்களாகறதை விரும்பாத ஒருத்தர்.....

''அப்பதான், எனக்கு உங்களுக்கும், அவருக்கும் இடையில் இருந்த மலையளவு வித்தியாசம் புரிஞ்சுது...''

"இன்னொன்று தெரியுமா? நாங்க இங்கே ஊருக்கு வரும்போதே, "எங்க வீட்டு ராஜகுமாரியை, எந்த அரச குமாரன் வந்து குதிரையில தூக்கிட்டுப் போகப் போறா னோன்னு உஷா அத்தை சொன்னாங்க.. இப்பதான் புரியுது அது உண்மைன்னு!"

"ம்.. தேங்க்யூ!" உல்லாசமாகக் கூறினான் விக்டர்.

"எதுக்கு...?"

"என்னை அரசகுமாரனாக்கினதுக்கு?"

"ஓ! அப்புறம்..."

"அன்னிக்கு, பார்ட்டியில ஜோத்ஸ்னா பேசியதும் உண்மையா மனசாரத்தான், நான் உங்களை விட்டுத் தரமுடியாது... 'யூ ஆர் மைன்'னு சொன்னேன். அப்பத் தான், முழுசா என் மனசையும் நான் புரிஞ்சிக்கிட்டேன்."

மீண்டும், "தேங்க்யூ..." என்றவன், மெல்லக் குனிந்து அவளுடைய பட்டு இதழ்களைத் தன் வசமாக்கிக் கொண் டான்.

முன்பு வர்ணங்களாய் தனித்திருந்தவர்கள்... இன்று வானவில்லாய் இணைந்தனர்!

சிறிது நேரம் கழித்து வெட்கம் கலந்த ஊடலுடன் விலகியவள், "என்னைக் கொஞ்சம் பேச விடுங்களேன்" என்றாள் செல்லச் சிணுங்கலுடன்!

"ம்.. விட்டா விடிய விடியப் பேசுவே போலருக்கே! இன்னும் ஒரு நிமிஷம்தான் டைம் உனக்கு!" குறும்புடன் நிபந்தனை விதித்தான் அவன்.



"ம்! அதையெல்லாம் நடிப்புன்னு நினைச்சே நீங்க பாராட்டினப்ப, எனக்கு இயலாமையில அப்படி ஒரு கோபம் வரும்! ஆனா அடக்கிப்பேன்!

"ஆனா, சிமின்னு நீங்க அழைச்சப்ப, எனக்குள்ளே ஒரு நந்தவனமே மலர்ந்ததுதான் உண்மை!

"உடனே, அதுவும் நடிப்பாச்சேன்னு மனசு வறண்டு போயிடும். பெண்களையே பிடிக்காத ஒரு சாமியாரை எப்படி மாத்தப் போறோமோன்னு பயம்மா இருக்கும்!

"ஆனா,எப்படியாவது என் மனசை நாம பிரியப்போற தருணத்துல, ஒரு வருஷம் கழிச்சாவது, உங்களுக்கு புரிய வச்சிடணும்கிற முடிவோட நான் இருந்தப்ப தான் நீங்க இந்த நோட்டுகளைத் தந்தீங்க..."

"போதும்.. ஒரு நிமிஷம் ஆயிடுச்சி... இனிமே என் னாலத் தாங்கமுடியாது!"

உல்லாசமாகக் கூறியபடி அவளைத் தன்னுடைய வளாக்கிக் கொண்டான் விக்டர்.

அவனுடைய ஏக்கப் பார்வைக்கும், தணியாத அன் பிற்கும், தன்னையே தத்தது அந்தப் பெண்மை!

வெட்கமும், வேட்கையும், அங்கு இணைந்து கண்ணா மூச்சி ஆடத் துவங்கின.

ஒரு போதும் கைகளுக்குள் அடக்க முடியாத அக்கினியாய்.... தன்னுடன் இணைபவற்றையெல்லாம் தன்னைப் போலவே மாற்றிவிடும் நெருப்பாய்.. பெரும் தகிப்பாய் ஒருவித வெப்பம் அவளை சூழத் தொடங்கு வதாய்!

அதை, மெல்ல மெல்லக் குளிரச் செய்து தன் ஆதிக்கத்தை வன்மையுடன் பதித்தது... அவளின் நேசத் தீண்டல்!

அங்கு, கரையில்லாக் கடலாய்.. தடையறாப் பெருக்காய் ஓடியது காதல்!

பனிச்சிகரத்தின் சில்லென்ற சிலிர்ப்பை... இதயத்துக்குள் உணர ஆரம்பித்தான் விக்டர்!

எங்கோ ஜனித்து.. எங்கோ மொட்டு விட்டு... எங்கோ மலர்ந்தாலும், இன்று அவன் தோளில் மாலையாய் அந்த மலர்!

பெண்மையெனும் மகாசக்தியின் புதிய மந்திரத்தில்.. இனிய மயக்கத்தில் தன்னையே இழந்து கொண்டிருந்தவனுக்குள்.. நீங்காது நிறைந்தவளாய்.. எங்கும் நிறை பொற்கூடராய் சிமி!

தோட்டத்தில்... ஏதோ ஒரு இனம் புரியா உற்சாகத்தின் தாக்குதலால், மெல்லத் தலையாட்டிய படி, அழகிய மலர்களை உதிர்த்துக் கொண்டிருந்தது... இளம் வயலட் பூக்கள் நிறைந்த அந்த மரம்!

ஆகாய மேகங்கள்.. ஆசைத் தூறல்களால் பூமியை ஆசீர்வதிக்க ஆரம்பித்தன!